


19

புது எழுத்து

oudhuezuthu@gmail.com

சா. தேவதாஸ்
விஜயராகவன்
மோகனரவிச்சந்திரன்

ஆசிரியர் மனோன்மணி

புகழுரையில் வாசிப்பும் புனைவும்

- லோசா





புது எழுத்து

2/205, அண்ணா நகர்,

காவேரிப்பட்டிணம் - 635 112,

கிருஷ்ணகிரி மாவட்டம், செல் 90421 58667

மின்னஞ்சல் : **pudhuezuthu@gmail.com**

19
2011
பங்குனி

புது எழுத்து

நவீன படைப்பிலக்கியத்திற்கான சிறுபத்திரிகை



ஆசிரியர்
மனோன்மணி
பதிப்பாசிரியர்
இரா. சுகவனம்

வடிவமைப்பும் ஒளி அச்சும்
ஏ.எஸ்.கனிஷ்க் பிரிண்டர்ஸ், போலீஸ் குவார்டர்ஸ் எதிரில்,
துர்கைஅம்மன் கோவில்அருகில், கிருஷ்ணகிரி-1. செல் 97915 77886

தனி இதழ் விலை ரூ.60/- ஆண்டு சந்தா ரூ.200/-

அனைத்து தொடர்புகளுக்கும்
புது எழுத்து
2/205, அண்ணா நகர், காவேரிப்பட்டிணம் - 635 112,
கிருஷ்ணகிரி மாவட்டம், செல் 90421 58667
மின்னஞ்சல் : pudhuezuthu@gmail.com

சல்மான் ருஷ்டி

தமிழில் **விஜயராகவன்**

தழல் பறவையின் கூடு

> இந்தப் பெண்களை என்னதான் செய்வது? அவர்கள் மிக லகுவாக எரிகிறார்கள். நீங்கள் திரும்பினால் போதும் அந்தப்பக்கம் எரிந்து விடுகிறார்கள்.
>
> - சல்மான் ருஷ்டி

> எப்படி உடல்கள், வேறு உடல்களாக, மாறுகிறது என்பதை சொல்ல நான் இப்போது தயாராகவுள்ளேன்.
>
> - ஓவிட், வளர்சிதை மாற்றம், டெட் ஹியூஸ்ஸின் மொழிபெயர்ப்பில்

அது ஒரு தட்டையான, வறண்ட, உஷ்ணப்பிரதேசம் பலதடவை பொய்த்துப் போன மழையால் வறட்சி வென்றுவிட்டதாக சொல்வார்கள். அங்கு வாழ்பவர்கள் சமவெளி மனிதர்கள், கால்நடை விவசாயிகள், ஆனால் அவர்களது கால்நடைகள் அவர்களை விட்டு விலகி, தடுமாறியபடி தென்திசை நோக்கி இடம் பெயர்ந்து நீர்தேடி அலைந்தன. கால்நடைகளின் கொம்பு துருத்திய, ஒட்டி உலர்ந்த மண்டை ஓடுகள் பார்ப்பதற்கு நெடுஞ்சாலை அறிவிப்பு கல்கள் போல் தோற்றமளித்தன.

மேற்கு புறம் தண்ணீர் இருந்தாலும், அது குடிப்பதற்கு லாயக்கற்ற உப்பு நீர், பின்பு இந்த சதுப்பும் கூட வறண்டது. காய்ந்த தட்டையான நிலப்பரப்பில் செத்தை செடிகள் காற்றில் உருண்டன. நிலத்தில் உருவான வெடிப்புகள் ஒரு வளர்ந்த மனிதனை விழுங்கும் அளவு இருந்தன.

ஒரு விவசாயி சாவதற்கு மிக நேர்த்தியான வழியாக இது இருந்தது-அவனது நிலமே அவனை விழுங்குவதுதான்.

பெண்கள் இம்முறையில் இறப்பதில்லை. தீப்பிடித்து எரிந்துதான் சாவார்கள்.

நினைவு தெரிந்த காலத்தில், இங்கு ஒரு அடர்ந்த காடு இருந்தது என மேன்மை தாங்கிய மகாராஜா தனது அமெரிக்க புதுமனைவியிடம் சொல்லியவாறு, தனது மாளிகையை நோக்கி சொகுசு காரில் சென்றார். அந்தக் காட்டில் அபூர்வமான புலி ஒன்று வாழ்ந்தது. அது உப்பைப் போல் வெளுப்பாகவும், முறுக்காகவும், சிறியதாகவும் இருந்தது. மேலும் பாடும் பறவைகள், பல்வேறு வகைகள் அப்பறவைகளின் கூடுகளே இசையால் ஆனது போல் நிறைந்திருந்தன. அரை நூற்றாண்டுக்கு முன் இவரது தகப்பனார். இதே காட்டு வழி செல்லும் போது அப்பறவைகளின் இசையோடு தானும் பாடி செல்வார், அதோடு புலிகளும் சேர்ந்திசைக்குமாம். ஆனால் தற்போது இவரது தகப்பனாரும் இறந்து போய், புலிகளும் இல்லாமலாயின. பறவைகளும் போய் அழிந்துபட்டன ஒன்றே ஒன்றைத் தவிர. அந்தப் பறவையும் பாடுவதேயில்லை. காடழிந்து போனதால்

அப்பறவை தனது கூட்டை ஒரு ரகசியமான இடத்தில் அமைத்துக் கொண்டது. அது ஒரு தழல் பறவை என தனது புது மனைவியிடம் அவர் கிசுகிசுத்தார். அவளோ ஒரு பெருநகரத்தின் குழந்தை, கன்னித்தன்மையில்லாத வெளிநாட்டவள். இந்த நாடகபாணி கதையை கேட்டு சிரித்தாள். தனது நீண்ட மின்னும் மஞ்சள் நிற கேசத்தினை ஆட்டி சிரித்தாள். அவளது மஞ்சள் நிற தேகம் நெருப்பாக ஜொலித்தது.

தற்போது இளவரசர்கள் இல்லை. அரசு பலகாலத்திற்கு முன்பே இம்முறையை ஒழித்துவிட்டது. தற்போது அரச குல ஆட்சி முறை ஒரு கற்பனைக் கதையாக, பிரபுத்துவ காலக்கட்டத்தில் நடந்த ஒரு தேவதைக் கதைபோல், வழக்கொழிந்து போனது.

அவர்களது அரசகுல அடையாளங்களும், சிறப்பு சலுகைகளும் மறுக்கப்பட்டன. நம்மேல் அவர்கள் செலுத்திவந்த அதிகாரம் இல்லாமலானது. இவ்விடத்தில் இளவரசர், சாதாரண திரு. மகாராஜ் ஆனார். அவர் ஒரு பன்முகத்தன்மை படைத்த மனிதர். அவரது நகரத்து அரண்மனை சூதாட்ட விடுதியாக மாறியது. அதே சமயம் அவர் நாட்டின் சாபக்கேடான ஊழல் முதலிய விஷயங்களை களைய அமைக்கப்பட்ட குழுவின் தலைவராகவும் விளங்கினார். தனது இளமைக் காலத்தில் மிகச்சிறந்த விளையாட்டு வீரராக திகழ்ந்தார். ஆனால் ஓய்வுக்குப்பின் விளையாட்டிற்கெல்லாம் நேரமில்லாமல் போனது. சுற்றுப்புற சூழல் கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று தனது இடப்பகுதியின் வறட்சியைப் போக்க ஆராய்ந்து வந்தார். ஆனால் தற்போது சொகுசு காரில் தனது ஊரக கோட்டை மாளிகையை நோக்கி சென்று கொண்டிருக்கும் திரு. மகராஜ் அங்கு விலை மதிப்புள்ள, நீரை கண்காட்சிக்காக மட்டும் நீர் ஊற்றாக எப்போதும் ஊற்றும்படியும் வைத்திருந்தார். அங்கு அவர் தனது நூலகத்தில் சேர்த்து வைத்திருந்த பழங்கால சுவடிகளும், புத்தகங்களும் சுற்றுவட்டாரத்திலேயே மிகவும் அருமை பெருமை வாய்ந்ததாகும். ஆனாலும் தனது வட்டாரத்தின் தொலைக்காட்சி ஒளிபரப்பும் உரிமையையும் பெற்றிருந்தார். இதனால் யார் புதிய டிஷ் இணைத்தாலும் அதன் மூலம் இலாபம் சம்பாதித்தார். திரு. மகராஜின் பல காதல் லீலைகளைப் போல அவரது வியாபார வருமானங்களைப் பற்றிய விவரங்களும் மங்கலாக தெளிவற்றிருந்தன.

இங்கு ஒரு கல் உடைக்கும் இடமுள்ளது. கார் இங்கு நிற்கிறது. ஆண்களும், பெண்களும் கடப்பாறைகளும் தகரசட்டிகளும் வைத்திருந்தவர்கள் திரு. மகராஜைக் கண்டவுடன் குனிந்து வணக்கம் செலுத்துகிறார்கள். இதைப் பார்த்த அமெரிக்கப் புதுப்பெண் உள்ளுணர்வால் தான் உண்மை உறைக்காத வேறு ஒரு காலக்கட்டத்திற்கு வந்ததை உணர்ந்தாள். இங்கு திரு. மகராஜ் இன்றும் இளவரசர்தான், அவள் அவருடைய இளவரசிதான். அவளுக்கு, ஏதோ ஒரு கதையில் புகுந்து கொண்டது போலும், அவளே வார்த்தைகளாக ஒரு காய்ந்த வரண்ட காகித பக்கத்தில் தவழ்வதாகவும், அவளே அந்த காகிதமாக ஆனதாகவும், அந்த காகித பக்கத்தில் அவளது கதை எழுத உள்ளதாகவும் அப்போது இரக்கமற்ற உஷ்ணகாற்று ஒன்று வீச அவளின் உடலே பாப்பிரைஸ் தண்டாகவும், அட்டையாகவும், அவளது ஆன்மாவே காகிதமாகவும் மாறியது. இது மிகவும் சூடாக உள்ளது. அவள் நடுங்கினாள்.

அது கல் உடைக்கும் தளமில்லை. அது ஒரு நீர்த்தேக்கம். பஞ்சத்தாலும் வறட்சியாலும் அடிப்பட்ட விவசாயிகளை திரு. மகராஜ் பணிக்கமர்த்தி இந்த நீர் தேக்கத்தை உருவாக்கினார். இதனால் அவர்களுக்கு வேலையும், மேலதிகமாக நம்பிக்கையும் கொடுத்துள்ளதாக தனது புதுமணப்பெண்ணிடம் தெரிவித்தார். அவள் மறுத்து தலையசைத்தாள். அந்த பெரும் பள்ளம் ஏகதேமாக நிரம்பியிருந்தது. ஆனால் கொடுமையான விதிவசத்தால், கலங்கலான, உப்பு பற்று நிறைந்த, மனதினாலும், கால்நடைகளும் உபயோகப்படுத்த முடியாத நீரால் நிறைந்திருந்தது.

எதிர்மறையான அந்த நீர் தேக்கத்தை சேர்ந்த பெண்கள் தீயின் பல நிறங்களில் உடையணிந்திருந்தார்கள். மொழியின் சரளத்தால், குருடாகப் பட்ட முட்டாள்கள் மட்டுமே, தீயின் நிறம் சிவப்பு மற்றும் பொன்நிறம் என நினைப்பார்கள். நெருப்பு அதன் விசனம் தோய்ந்த விளிம்புகளில் நீல நிறமாகவும், அதன் பொறுக்காத நெஞ்சப் பகுதிகளில் பச்சையாகவும், சில சமயங்களில் வெள்ளையாகவும் ஏன் அதன் ஆங்காரத்தில் கருப்பாகவும் கூட இருக்கும்.

சிவப்பும் பொன்னிறமும் கொண்ட புடவை அணிந்த, ஒரு முட்டாள் பெண் நேற்று தண்ணீர் வற்றிய பள்ளத்தில் நெருப்பு பற்றி எரிந்து போனதாக திரு. மகராஜிடம் அந்த வேலையாட்கள் கூறினார்கள். அவள் எரிந்து கொண்டிருந்த போது அவர்கள் எல்லோரும் மேட்டிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தனர். அவள் நமஸ்கரிப்பது போல் கைகளை அசைத்தாள். ஆண்கள் தங்களின் ஆண்மையின் உணர்வால் அவளது விதியின் முடிவை உணர்ந்தார்கள். அங்கிருந்த பெண்கள், அவர்களின் பெண்கள், கூடக்குரலிட்டு ஓலமிட்டனர்.

அந்தப் பெண் எரிந்து முடிந்த போது அங்கு ஒன்றுமேயில்லை. எலும்புத் துணுக்கோ, சதையோ எதுவும் மிஞ்சவில்லை. அவள் ஒரு காகிதத்தைப் போல எரிந்து, காற்றின் மூலம் ஒன்றுமில்லாமலாகி வானமேகினாள்.

இப்பகுதி மனிதர்களுக்கு, பெண்கள் சுத்தமாக எரிந்து போவது பற்றி ஏதும் செய்ய முடியாத ஒரு ஆச்சரியமே மிஞ்சியது. அவர்கள் மிக லகுவாக எரிகிறார்கள். என்னதான் செய்வது? நீங்கள் திரும்பினால் போதும், அந்தப் பக்கம் எரிந்து விடுகிறார்கள். இரு பாலருக்கும் உள்ள வித்தியாசமாக கூட இருக்கலாம் போலிருக்கிறது என ஆண்கள் சொன்னார்கள். ஆண்கள் பூமியைப் போல தாங்கிக் கொள்ளும் மனப்பான்மையும், உறுதியும் கொண்டிருந்தார்கள். ஆனால் பெண்களோ, சலன புத்தியுடனும், நிதான மற்றும் இவ்வுலக வாழ்விற்கு நீண்ட ஆயுளற்றும், சடாரென்று ஒரு புகைக் கோளத்தில் எந்த விவரணையுமில்லாமல் மறைந்து போகிறார்கள். இதை உஷ்ணத்தில், அவர்கள் வெயிலில் அதிக நேரம் வெளியில் இருந்தால் என்னவெல்லாம் நடக்குமோ நாங்கள் அவர்களை வீட்டிற்குள்ளே இருக்க சொல்கிறோம். அபாயத்திலிருந்து அவர்களை காக்க, ஆனால் பெண்கள் எப்படி பட்டவர்கள் என்பதுதான் உங்களுக்கு தெரியுமே. அது அவர்களின் விதி, அவர்களின் இயல்பு.

பதவிசான பெண்கள் கூட கனன்று கொண்டிருக்கும் இதயம் படைத்தவர்களாக இருந்தார்கள் என திரு. மகராஜ் தனது மனைவியிடம் முணுமுணுத்தவாறு, காரில் சென்று கொண்டிருந்தார். இவ்வாறு அவர் பேசுவது தனக்கு பிடிக்கவில்லை என அவள் கூறினாள். அவள் வாழ்வில் நவீனத்துவத்தை கடைபிடிப்பவள். இவ்வாறு தனது பெண்மையை பொதுவான பார்வையாகவும்,

மட்டமான கொட்டடியில் அடைப்பதையும், விளையாட்டாக கூட ஏற்க மறுப்பதாக சொன்னாள். அவர் இதைக் கேட்டு புன்னகையுடன் தலை சாய்த்து மன்னிப்பு கேட்டார். தீச்சுடர்தான் தீச்சுடர்தான் நான் தான் சரியாக நடந்து கொள்ள வேண்டும் என நினைத்து கொண்டார்.

ஆம் அப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என அவள் ஆணையிட்டுவிட்டு, வசதியாக அவர்மேல் சாய்ந்து கொண்டாள். அவரது நரைத்த தாடி அவள் நெற்றியை வருடிக் கொடுத்தது.

அவள் பெரும் பணக்காரி எனவும் வயதான, குண்டு நிஜாம் போல் பணம் படைத்தவள் என வதந்தி அவளுக்கு முன் புகைந்து கொண்டு போயிற்று. இந்த நிஜாமானவர் தனது பிறந்த நாட்களில் ஏராளமான நகை நட்டுகளை அணிந்து, இந்த நகைகள் அணிவதற்காகவே பல்வேறு வரிகளை மக்கள் மேல் சுமத்துவார். மக்கள் நிஜாமின் விருந்தைக் கண்டே அஞ்சி நடுங்குவார்கள். பிரமாண்டமான அல்வாவும் ஆளுயர ஜெல்லி இனிப்பும், இமய மலை போல உயர்ந்த குல்பியும் நிஜாமின் வயிற்றுக்குள் சென்று கொண்டேயிருக்கும். அங்கு நிறைந்திருக்கும் உணவு, தங்களின் உக்கிராணத்திலிருந்து எடுக்கப்பட்டது என்பதையும், நிஜாம் அஜீரணம் வருமளவிற்கு உண்டு ஏப்பமிடுவதை காண்கையில், தங்கள் குழந்தைகளின் பசியேப்பமும், பசி ஓலமும் நினைவுக்கு வரும். நிஜாமின் பெருந்தீனி தங்களது பஞ்சம் என்பதை உணர்ந்திருந்தனர் மக்கள்.

ஆம், இதைப்போலவே பெரும் பணக்காரி என வதந்தி பரபரத்தது. அவளது தந்தை ஒரு கிழக்கு ஐரோப்பிய அகற்றப்பட்ட ராஜ பரம்பரை எனவும், ஒவ்வொரு வருடமும் தனது முக்கியமான பணியாளர்களை தனிவிமானத்தில் அழைத்துக் கொண்டு தனது பழைய சமஸ்தானத்திற்கு சென்று, அங்குள்ள கால நதிக்கரையில் நான்குநாள் கோல்ப் பந்தய விளையாட்டை அரங்கேற்றுவார் என்றும், அந்த பந்தயத்தில் வென்ற வெற்றி வீரனை, கடவுள் போல சிரித்துகொண்டே சர்வசாதாரணமாக வேலையிலிருந்து துச்சமாக தூக்கியெறிவார் எனவும் அந்த வீரன் நம்பிக்கை அழிந்து கால நதிக்கரையிலேயே உழன்று அந்நதியிலேயே சாவன் ஒரு பந்தைப்போல.

அவள் பணம் படைத்தவள். அவள் ஒரு விளை நிலம், அவள் மகன்களை பெற்றெடுப்பாள், மழையையும் கொண்டு வருவாள்.

இல்லை அவள் ஏழை எனவும் வதந்தி மின்னியது. அவளது தாய் ஒரு வேசி, இவர் பிறந்த போது தகப்பன் தூக்கு போட்டு செத்து போனார். வேசிக்கு பிறந்த இவளே ஒரு காய்ந்த நிலம் எனவும், கட்டுக்கடங்காத ஐந்து எனவும், வறட்சி அவளது உடலில் உள்ளது எனவும், அந்த சாபத்தால் அவள் ஒரு மலடி எனவும், அதனால்தான் இங்கு வந்து, இங்குள்ள பழுப்பு நிறமுள்ள குழந்தைகளை அவர்களது விட்டிலிருந்து திருடிக்கொண்டு அவற்றை கண்ணாடி போத்தல்களை கொண்டு போஷிக்கவும் (ஏனெனில் அவளது மார்புகள் பாலின்றி வற்றிப் போனதால்) எண்ணியிருந்தாள்.

திரு. மகராஜ் உலக முழுவதும் தேடி, தங்களது வாழ்வை ஒளிரச் செய்யும், ஒரு அதிசய நகையை தேடிக் கொண்டு வந்துள்ளார். திரு. மகராஜ் பாவத்தில் சிக்கிக்கொண்டு, தங்கள் வாழ்வை அழிக்கக்கூடிய நாசத்தை தனது மாளிகைக்கு கூட்டி வந்துள்ளார். அவர் ஒரு மஞ்சள் மயிர்காரியிடம் மாட்டிக் கொண்டுவிட்டார்

இப்படியாக அவளைப்பற்றிய அனுமானங்களும், கதைகளும் மக்கள் கூடுமிடமெல்லாம் பேசலாயிற்று. அரண்மனையை நோக்கி செல்லும்போது அவளுக்கே, தான் ஒரு கதைக்குள் போவது போல் தோன்றியது. அவளது உயர்ந்த நகரத்தில் அவளது நண்பர்கள் பலர் பல கதைகளை சொல்லியிருக்கிறார்கள். அவளைப் போல் பல பெண்கள், வெள்ளைத் தோலும், மஞ்சள் முடியும் கொண்டவர்கள், இருண்ட நிறக் காதலர்களை காதலித்து மனமுடைந்தார்கள் என. அவருடன் போக வேண்டாம். அவருடன் படுத்துவிட்டாயானால் அவர் உன்னை மதிக்கமாட்டார். அவர் உன்னைப் போன்ற பெண்ணை மனைவியாக நினைக்க மாட்டார். உன்னுடைய வித்தியாசதன்மை உற்சாகத்தை ஏற்படுத்தும், ஆனால் உனது இதயத்தை உடைத்து விடுவார்.

அவர் மணப்பெண் என அழைத்தாலும், அவள் அவருடைய மனைவியல்ல. இதுவரையில் அவள் எந்தவித பயத்தையும் உணரவில்லை.

வெறுமையின் வாசல் போல், ஒரு சிதிலமடைந்த நுழைவாயில் ஒன்று நாட்டுப்புறத்தில் இருக்கிறது. செத்துப்போன பல மரங்களில் கடைசியாக ஒரே ஒரு மரம் மட்டும் பட்டுப்போய் கொண்டிருந்தது. அம்மரத்தின் வெளித்தெரிந்த வேர்கள், இறந்து கிடக்கும் ராட்சதனின் கைகளைப் போல தோற்றமளித்தது. கல்யாண ஊர்வலத்தை பார்த்து சொகுசு கார் நிதானித்து ஊர்ந்தது. தலைப்பாகை அணிந்திருந்த மணமகனை அவள் காரிலிருந்தபடியே பார்த்தாள். மணமகன் இளமையானவனோ, துடிப்பு மிக்கவனோ அல்ல, தோல் சுருங்கிய, நரைத்த வயதான கிழவனாக இருந்தான். இது ஏதோ ஒரு அமர காதலாக இருக்க வேண்டும். சூழல்களால் காலத்தே மணமுடிக்க முடியாமல் போயிருக்கலாம். தற்போது எங்கோ அந்த வயதான மணப்பெண் திருமணத்திற்கு தயாராக இருக்கலாம். கடைசியாக சந்தோஷ முடிவிற்கு அவர்களது காதல் வந்துள்ளது போலும் என வாய்விட்டு பேசிவிட்டாள். இதைக் கேட்ட திரு. மகராஜ் புன்னகைத்துக் கொண்டே மறுத்தார். மாப்பிள்ளையின் மணப்பெண் ஒரு இளம் கன்னிப்பெண், தூரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் உள்ளார்.

ஏன் ஒரு அழகான இளம் பெண் வயதான முட்டாளை மணக்க விழைகிறார்?

திரு. மகராஜ் தோளை குலுக்கியவாறே, கிழவன் குறைந்த வரதட்சணைக்கு சம்மதித்திருக்கலாம், ஒருவர் பல பெண்களை பெற்றிருந்தால் இதெல்லாம் சகஜம். மேலும் கிழவனுக்கு அவனது நீண்ட ஆயுள்காலத்தில் இது போல பல வரதட்சணைக்கு இடமுண்டு என்றார்.

கொம்பும், குழலும் அவளிருந்த பக்கம் நாரசமான இசையை முழங்கின. பறை சத்தம் பீரங்கி வெடித்தது போல ஒலித்தது. அவளிருந்த கார் ஜன்னல் பக்கம் திருநங்கை நடனக்காரர்கள் அவளைப் பார்த்து கெக்கலி கொட்டி சத்தமிட்டனர். ஒய் அமெரிக்கா, அரே எப்படி இருக்கே பங்காளி? வாரே வா அந்த சமாச்சாரத்தை ஆட்டு பார்க்கலாம் என பலவாறு கூக்குரலிட்டனர். திடீரென அவள் பீதியடைந்தாள். கார் டிரைவரைப் பார்த்து வேகமாக போ எனக் கட்டளையிட கார் வேகம் பிடித்து திருமண கோஷ்டி மீதி புழுதியை வாரியிரைத்தவாறே சென்றது. திரு. மகராஜ் அமைதியே உருவானவராக அமர்ந்திருந்ததை பார்த்து, தன்னைப் பார்த்தே கோபம் கொண்டாள்.

மன்னித்துக் கொள்ளுங்கள், என முணுமுணுத்தாள். இது ஒன்றுமில்லை, இந்த உஷ்ணம்தான்.

அமெரிக்கா முன் ஒரு காலத்தில், இவர்கள் இருவரும் சாலையிலிருந்து முன்னூறு அடி உயரத்தில் உள்ள விடுதியில் இந்திய மதிய உணவை உண்டு கொண்டே அமெரிக்கா அவர்கள் உணவருந்திய மேசை அங்கிருந்தபடி பார்க்க ஏற்ப அமைந்திருந்ததால், சுற்றுபுற பசுமையான பூங்காவின் செழுமையை ரசித்தார்கள். இந்த வறண்ட நிலப்பரப்பிலிருந்து கொண்டு அதை நினைத்து பார்க்கும் பொழுது அசிங்கமாக தோன்றியது. எனது நாடு உங்களது போலத்தானிருக்கும் என அவர் கொஞ்சினார். கொந்தளிக்கும் பெரிய; கடவுள்களால் நிறைந்த நாடு, நீங்கள் பேசும் உடைந்த ஆங்கிலம் போன்றே நாங்களும் எங்கள் மட்டமான ஆங்கிலத்தைப் பேசுவோம். நீங்கள் ரோமன்கள் ஆவதற்கு முன்பு காலனி மக்களாகத்தானிருந்தீர்கள். எங்களது துரைமார்களும் உங்களவர்களும் ஒருவரே. நீங்கள் துரைமார்களை எங்களுக்கு முன்பே தோற்கடித்துவிட்டீர்கள். அதனால் எங்களைவிட அதிக பணம் படைத்தவர்களாக இருக்கிறீர்கள். மற்றபடி நாம் எல்லா வகையிலும் ஒத்துதான் இருக்கிறோம். உங்கள் தெருமுக்குகளிலும், அதே குப்பை, அதே பரபரப்பு, அதே உடனடித் தன்மை, என்றார். உடனடியாக அவளுக்கு, இவர் என்ன சொல்கிறார் என புரிந்தது. அதாவது அவளுக்கு புரிந்திராத இடத்திலிருந்து அவர் வருவதையும், அவருடைய மொழியை தேர்வதும், குறிப்புகளை புரிந்து தெளிவதும், மிகவும் கடினம் என உணர்ந்தாள். இதன் பிரமாண்டமும், மர்மமும் அவளது ஆழமான தேவையை கிளறி, அவளை படுத்தி எடுத்தது.

அவள் அமெரிக்க பெண்ணாக இருந்ததால், அவர் பணத்தைப் பற்றி அவளிடம் பேசினார். பழைய பாதுகாக்கப்பட்ட பொது உடைமை தத்துவம், இத்தனைக் காலமாக பொருளாதாரத்தை இழுத்துபிடித்துக் கொண்டிருந்தது நீங்கியதனால் நம்மிடம் மட்டும் சரியான கருத்திருந்தால் மிகப் பெரும் பணம் பண்ண முடியும். இளவரசராக இருந்தும் பொருளாதாரப் போட்டியில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டிதான் உள்ளது. அவரிடம் பல திட்டங்களை இருந்தது. அவருக்கும், பொருளாதார குழுக்கள் அடங்கிய வட்டங்களில் பணத்தையும் பொருளாதார திட்டங்களையும் செயல்படுத்தி வெற்றி காண்பதில், விற்பன்னர் என பெயர் இருந்தது.

அவள் மழையை கொண்டு வருபவள்தான். இளவரசரை அவள் ஒபரா இசைக் கச்சேரிக்கு அழைத்துச் சென்றாள். சிறந்த உயரிய வார்த்தைகள் புரிய முடியாமல், இசைக் கோர்வையாக காதில் விழுந்த போது அவள் எப்போதும் போல் உணர்ச்சியின் உச்சத்தை அடைந்தாள். பின்பு அவரை வீட்டிற்கு அழைத்து சென்று மயக்கினாள். அவளது நகரம், அவளது மேடை, அவள் இளமையாகவும், ஆணித்தரமாகவுமிருந்ததால், அவர்களிருவரும் கலவி புரிய ஆரம்பித்தனர். தான் தனது வேர்களை விட்டு விலகி தானறிந்த எல்லாவற்றையும் உதறித்தள்ளிவிடப் போவதை உணர்ந்த, அவளது முயக்கத்தின் இயக்கம் மிக மூர்க்கமானது. அவரது உடலே தானறியாத பாதையின் பூட்டிய கதவு எனவும் ஆகவே அந்த கதவை உடைத்தெறிய எண்ணியது போல் இயங்கினாள்.

எல்லாமே சிறப்பாக இருக்கும் என நினைக்காதே, என அவர் அவளிடம் எச்சரித்தார். மிகக் கொடுமையான வறட்சி நிலவி வருகிறது என்றார்.

துரதிர்ஷ்ட வசமாக அவரது அரண்மனை சகிக்க முடியாதபடி நாற்றமடித்து கொண்டும், உதிர்ந்து கொண்டுமிருந்தது. அவளது அறையில் கிழிந்த திரை சீலைகளும் படுக்கை நைந்தும் போயிருந்தது. அறையின் சுவற்றில் அலங்கார சித்திரமாக தம்பதியினரின் பாலுணர்வு புணர்வுகள் வரையப்பட்டிருந்தன. அவர்கள் தனது கனவனின் மூதாதைகளா? அப்படி பிடிவாதக்கார வியாபாரியிடம் வாங்கிய மொத்த சரக்கில் மிஞ்சிய படங்களா? என தெரியவில்லை. இருண்ட தாழ்வாரங்களிலிருந்து சத்தமான இசை ஒலித்துக் கொண்டிருந்தது. ஆனால் அது எங்கிருந்து வருகிறது என அறியமுடியவில்லை. பார்த்துக் கொண்டிருக்கும் போது பல நிழல்கள் ஓடி மறைந்தன. அவர் அவளை தனது அரண்மனையில் அமர்த்திவிட்டு எந்த விவரணையும் சொல்லாமல் காணாமல் போனார். தானே அந்த அரண்மனையில் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

அன்று இரவு அவள் தனியாக உறங்கினாள். தலைக்கு மேல் மின்விசிறி சூடான வெப்பக்காற்றை வீசியது. காற்று சுடுநீர் போல் தகித்தது. அவளால் தனது வீட்டை நினைக்காமல் இருக்க முடியவில்லை. அங்கே குளிர்பதன இயந்திரத்தையும் இரவில் ஓயாமல் ஒலிக்கும் சங்கொலிகளும் நிஜத்தை நிதர்சனமாக்கும் பெரும் கட்டிடக் காட்டிற்குள் திருப்திக்குள் கற்பனா மனோ ராஜ்ஜியம் தலைதூக்குவது சிரமம். நமது கேளிக்கைகள் எல்லாம் சிறப்பு வாய்ந்த பிரமாண்டங்களாகவே இருக்கின்றன. ஏனெனில் இருண்ட திரையரங்குகளுக்கு வெளியேவும், புத்தகங்களின் பக்கங்களுக்கு அப்பாலும், கோதிக் இசையின் இரைச்சலுக்கு பின்னும் தினசரி நிதர்சனம் நம்மை தப்பிக்க விடாமல் சர்வ வல்லமையுடன் பிடித்து வைத்துள்ளது. நாம் வேறு பல பரிமாணங்களைப் பற்றியும், பித்து பிடித்த மறைபொருள்களைப் பற்றியும், நிழல் உலகம் பற்றியும் கனவுகாண்கிறோம். ஏனென்றால் நாம் விழிக்கும் போது நிஜம் அதன் பெரும் பிடியில் நம்மை இறுக்கிக் கொள்கிறது. நம்மால் பொருளியலின் தொடுவானத்திற்கு அப்பால் பார்க்க முடிவதில்லை. ஆனால் இங்கோ, கரப்பான் பூச்சிகளுக்கு பயந்து கொண்டு வரண்ட காற்றின் பிடியில், உங்களது எல்லா எல்லைகளும் நொறுங்கிறது. அபாயத்தின் சாத்தியம் புதுப்பிக்கப்படுகிறது.

அவளால் சுலபமாக அழ முடிவதில்லை. ஆனாலும் அவள் உடல் குலுங்கியது. வறண்ட கண்ணீரை வடித்தபடியே தூங்கினாள். அவள் விழித்தபோது நடனக்காரர்களின் சத்தமும், மேளச் சத்தமும் கேட்டது.

அரண்மனை முற்றத்தில், முதிய மற்றும் இளைய பெண்களும், இளைஞர்களும் கூடினர். மேளக்காரனின் லயத்திற்கு ஏற்ப பெண்கள் ஒசிந்தாடினர். அவர்கள் கால் வளைத்து, கைகளால் ஒருவரை ஒருவர் இணைத்துக் கொண்டு கண்கள் ஒளிர, முடுக்கப்பட்ட போர் படையினரைப் போல் குளுமையான கல் தளத்தில் நடனமாடினர். (இளங்காலை நேரமாதலால் அரண்மனை முற்றம் நிழலோடியிருந்தது. அந்த கல் தளத்திற்கு இன்னும் சூரியன் உஷ்ணத்தை கொடுக்கவில்லை)

நடனமாடுபவர்களின் முன்பு உயர்ந்த உருவமாகவும், நேர் கொண்ட முதுகும் உடைய பெண்மணி தான் திரு. மகராஜின் சகோதரி. நடனக்காரர்களை இயக்கிக் கொண்டிருந்தவளும் அவளே. அறுபது வயதுக்கு மேல் ஆகி இருந்தாலும், அந்த மாகாணத்திலேயே சிறந்த நடனமணி. செல்வி. மகராஜ்

புதுமணப்பெண்ணைப் பார்த்ததும் எந்தவித அங்கீகரிப்பும் செய்யவில்லை. தற்போது அவள் நடனக்காரர்களின் தலைவி. அசைவே பிரதானம்.

நடனம் முடிந்தபின் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். திரு. மகராஜின் பெண்கள், சகோதரியும் அமெரிக்கனும்.

என் செய்து கொண்டிருக்கிறீர்கள்?

தழல் பறவையை சாந்தப்படுத்த, நடனமாடுகிறோம்.

தழல் பறவையா (அவளுக்கு லிங்கன் மையத்தில் கேட்ட ஸ்ட்ராவின்ஸ்கி ஞாபகத்திற்கு வந்தது)

செல்வி மகராஜ் தலையசைத்து, ஆம் எப்போதும் பாடாத பறவைதான். அதன் கூடு ரகசிய இடத்தில் உள்ளது, அதன் தீய சிறகுகள் பெண்களைத் தீண்டினால், நாம் எரிவோம், என்றாள்.

அப்படியெல்லாம் ஒரு பறவை இருக்காது. இது பழம் பாட்டிகளின் கதையாகும்.

இங்கு பழம் பாட்டிகளின் கதையெல்லாம் இல்லை. அந்தோ பழம் பாட்டிகளே இங்கு இல்லை!

அகன்ற தோள்களில் பூவேலைப்பாடு செய்த மேலங்கியும் தலைப்பாகையும் அணிந்து திரு. மகராஜ் உள் நுழைந்தார். ஆண்மையின் உருவமாகவும், அழகாகவும் வெற்றிகரமாக மன்னிப்பு கேட்டுக் கொண்டும் வந்தார். அவள் வேறு காலக்கட்டத்து பெண்மணிப்போல வெடுவெடுப்பாக அனுகினாள். அவர் கெஞ்சலாக சமாதானம் செய்தார். அவளுக்கான வரவேற்பை ஏற்பாடு செய்ய சென்றிருந்ததாகவும், அவள் இந்த வரவேற்றை விரும்புவாள் என நினைத்ததாகவும் கூறினார்.

என்ன வரவேற்பு?

பொறுத்திருந்து பார்.

வாடையடிக்கும் அரண்மனைக்கு அப்பால் உள்ள பாலைவெளியில் திரு. மகராஜ் ஒரு கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். நட்சத்திரங்களுக்கு கீழே நிலவொளியில் இஸ்வஹானிலிருந்தும், ஷிராசிலிருந்தும் கொணரப்பட்ட பெரும் கம்பளங்களில் நடந்து வந்து சுற்றுப்புற பெரிய மனிதர்கள் அவளை வரவேற்றார்கள். அருமையான இசைக் கலைஞர்கள் தங்களின் சோகமயமான புல்லாங்குழலின் மோன இசையையும், கதகதக்கும் தந்த வாத்தியமும் புராதனமான மற்றும் மிகவும் புதுமையான காதல் பாடல்களை பாடினர். அந்த நிலப்பரப்பின் மிகச் சுவையான உணவு வகைகளை அவளுக்கு சுவைக்க கொடுத்து மகிழ்வித்தனர். சுற்றுபுறத்தில் அவள் மிகவும் பெயர்பெற்ற பிரமுகராக உருவெடுத்தாள். பக்கத்து மாநிலத்தின் ஆளுநர், உங்களது கணவரை எங்கள் மாநிலத்திற்கு வர வரவேற்றிருக்கிறேன். ஆனால் உங்களது அழகான மனைவியை அழைத்து வரவில்லையெனில் நீங்கள் வரவேண்டாம் என சொல்லி வெடிச் சிரிப்பு சிரித்தார். இன்னொரு முன்னாள் இளவரசர், தனது அரண்மனை பெட்டகத்தில் உள்ள கலைப்பொக்கிஷங்களை அவளுக்கு காட்ட விரும்பினார். திருமதி. ஒனாசிஸ்க்கு தவிர நான் வேறு யாருக்கும் இந்த கலைப் படைப்புகளை காட்டியதில்லை. உங்களுக்காக இந்த படைப்புகளை எனது பூங்காவில் ஜாக்கிலினிற்கு பரப்பியது போல் காட்டத் தயார் என்றார்.

நிலவொளி இருக்கும்வரை, நடனமும், பாட்டும், குதிரை பந்தயமும், ஒட்டக பந்தயமும் நடந்தன. பட்டாசு வாண வேடிக்கைகளும் அவர்களின்

தலைகளுக்கு மேல் ஒளிர்ந்தன. திரு. மகராஜின் மேல் ஈஷிக்கொண்டே அவள் எனக்காக ஒரு மாயாஜால ராஜ்ஜியத்தையே ஏற்படுத்தி இருக்கிறீர்கள். இப்படித்தான் ஒவ்வொரு இரவும் நீங்கள் ஓய்வெடுப்பீர்களா? என குறும்பாக கேட்டாள். முன்பு அவர் தன்னுடன் இல்லாததைக் கூட அவள் மன்னித்துவிட்டாள்.

அவர் உடல் இருகுவதை அவள் உணர்ந்தாள். அவரது வார்த்தைகளில் விரக்தி வழிவதைப் புரிந்து கொண்டாள். அவர் நீதான் இதற்கு காரணம், இந்த பாழடைந்த பகுதியில் இப்பெரும் மாயை உருவாக்கியவள் நீதான். ஒட்டகங்களும், குதிரைகளும் உணவு வகைகள் கூட தூரப்பிரதேசங்களிலிருந்து கொண்டு வரப்பட்டன. உனது சந்தோஷத்திற்காக நாங்கள் பட்டினி கிடக்கிறோம். நாங்கள் இப்படி வாழ்வதாக நீ எப்படி கற்பனை செய்துக்கொண்டாய்,? உன்னை மகிழ்விக்க நாங்கள் மேலும் கடனாளியாகின்றோம். நாங்கள் பிழைக்க கனவு காண்கின்றோம். இந்த அராபிய இரவு ஒரு அமெரிக்க கனவு ஆகும் என்றார்.

நான் ஒன்றும் உங்களிடம் கேட்கவில்லையே, இந்த குறிப்பிடத்தக்க பெருவிருந்தும், பெருந்தீனியும் எனது தவறல்லவே, உங்களது கொடும் பேச்சும், குற்றச்சாட்டும் எரிச்சலூட்டுகிறது என்றாள்.

அவர் மிகவும் குடித்திருந்ததால், உண்மைகளை பேசலானார். சக்தியின் காலடியில் எங்களது பிரார்த்தனை மழையை உருவாக்குபவளே, மழையை கொண்டு வா என்றார்.

பணத்தைத் தானே குறிப்பிடுகிறீர்கள்.

வேறு என்ன? அதை தவிர வேறு ஏது?

நான் காதல் என நினைத்தேன். என்றாள்.

முழு நிலவு அன்றைக்கு போல் என்றுமே அழகாக இருந்ததில்லை. அன்றைய இசையைப் போல் இனிமையான இசையை எப்போதும் கேட்டதில்லை. எந்த இரவும் அன்று போல் கொடூரமாக இருந்ததில்லை. நான் உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும், என்றாள்.

அவள் கருவுற்றிருந்தாள். உறவுகளை துண்டித்துக் கொள்ள நினைத்தாள். இணைப்பு பாலத்தையும், படகுகளையும் எரித்து விட கனவு கண்டாள். அவளுக்கு மிகவும் பிடித்த திரைப்படத்தை கனவு கண்டாள். அத்திரைப்படத்தில் ஒருவன் தனது பரம்பரை கிராமத்திற்கு வருவான். எப்படியோ அவள் காலத்தால் சுழன்று தனது தகப்பனின் இளமைக்காலத்துக்கு சென்றுவிடுகிறான். கிராமத்திலிருந்து தப்பிக்க எண்ணி புகை வண்டி நிலையத்திற்கு வந்தால், அங்கு தண்டவாளங்களே மறைந்து போயிருக்கும். அவன் வீடு செல்ல வழியே இருக்காது. இந்த இடத்தில் படம் முடியும்.

கனவுகளிலிருந்து விழித்தெழுந்தபோது, வியர்த்து வழிந்ததால், அவள் போர்த்தியிருந்த போர்வையெல்லாம் ஈரமாகியது. தகிக்கும் படுக்கையறையில் அவளது படுக்கைக்கு அருகில் ஒரு பெண்மணி ஒருத்தி அமர்ந்திருந்ததைக் கண்டு தனது ஈரப்போர்வையை போர்த்திக் கொண்டு தனது நிர்வாணத்தை மறைத்துக் கொண்டாள். செல்வி. மகராஜ் தான் புன்னகைத்தபடியே உன் உடல் நல்ல உறுதி வய்ந்தது தான், இளமை வாய்ந்தது. மற்றபடி என்னைப் போல் இல்லாமலில்லை என்றாள்.

அவரை விட்டு விட்டு நான் போயிருக்க வேண்டும். இன்போது என்ன செய்வதென்று தெரியவில்லை.

செல்வி. மகராஜ் தலையை குலுக்கினாள். கிராமத்தில் ஆண் குழந்தைதான் பிறக்கும். அதனால் இந்த வறட்சி மறையும் என பேசிக்கொள்வதாகவும், மூடநம்பிக்கைதான் ஆனால் அவர் உன்னை போக விடமாட்டார். பின்பு நீ போவாயானால் குழந்தையை அவர் வைத்துக் கொள்வார் என விவரித்தாள்.

அதையும் தான் பார்த்துக்கொள்ளலாம், என வெடித்தாள். கோபப்படும் போது அவள் குரல் கரகரப்படைந்து, அவளுக்கே பிடிக்காமல் போகும். அவளது மனக்கண்ணில் கதை தன்னை சுற்றி இறுகுவதையும் தான் கதையினுள் சிக்கி இருப்பதையும் கண்டு இதிலிருந்து வெளிசெல்ல சரியான, வழியையோ அல்லது மோசமான வழியையோ கண்டாக வேண்டும் என நினைத்தாள். செயலற்று இருப்பதுதான் தவறு. உஷ்ணத்தால் மண்டை குழம்புவதோ, அடக்கப்பட்டவன் போல் அடங்கிப் போவதோ கூடாது. காதல் முன்பு பல தவறுகளை செய்ய வைத்துள்ளது. தற்போது அவள் தனது மூளையை உபயோகிப்பாள்.

மெதுவாக, வாரங்கள் பல கழியும் போது, அவளுக்கு தெரிய ஆரம்பித்தது. நகரத்தில் உள்ள அவரது அரண்மனையை சூதாட்ட விடுதியாக அவர் சொந்தமாக நடத்தவில்லை. நம்பத் தகுதியில்லாத பயங்கரமான மனிதர்களுடன், ஒரு முட்டாள் தனமான ஒப்பந்தம் செய்து வைத்திருந்தார். மிகக் குறைந்த வாடகைப் பணமே அவர்கள் கொடுத்தார்கள். மிகச் சிறிய எழுத்தில் எழுதி இருந்த ஒப்பந்த விதிகளின்படி குறிப்பிட்ட சிறப்பு நாட்களில் திரு. மகராஜ் காக்காய் பிடிக்கும் சிரிப்புடன் சூதாட்ட மேசைகளை சுற்றி வந்து சூதாடுபவர்களை மகிழ்விப்பதுடன், அந்த சூதாட்ட விடுதிக்கு ஒரு மரியாதையையும் உருவாக்கி கொடுக்க வேண்டிய கட்டாயத்திலிருந்தார். தொலைக்காட்சி டிஷ் வியாபாரம் இதைவிட பரவாயில்லைதான். ஆனால் இந்த நாட்டுப்புற அரண்மனை, அதில் வரும் வருமானத்தையெல்லாம் விழுங்கித் தொலைத்தது. டிஷ் வியாபாரத்தை விட பெரும் வியாபாரம் இருந்தால் கூட அதையெல்லாம் இந்த பாழடைந்த அரண்மனையை நிர்வகிக்கவே சரியாக போகும்.

வயதறிய முடியாத நிலையில் அந்த பழமையான அரண்மனை இருந்தது. சற்றேறக்குறைய அறுநூறு வருடங்களாவது இருக்கும். மின் வசதியும், ஜன்னல்களும், மர ஜாமான்களும் பலவிடங்களில் இல்லாமலிருந்தது. குளிர்காலத்தில் குளிராகவும், வெயில் காலத்தில் உஷ்ணமாகவும் மழை வந்தால் மாளிகையில் உள்ள பெரும்பாலான பெரும் அறைகள் வெள்ளக்காடாகவும் மாறும். அவர்களிடமிருப்பதெல்லாம் அரண்மனை நீர் ஊற்று ஒன்றுதான் வற்றாதது. விடிவதற்கு முன்னால் மாளிகையின் பாழடைந்த வவ்வால்கள் தொங்கும். பின் பகுதியின் ஓரத்தில் வரிசையாக கிராமத்தவர்கள் வறட்சியினால் கோபமுற்றும், தங்கள் அவமானத்தை மறைத்துக் கொண்டும் இருட்டின் மறைவிலிருந்து கொண்டு தங்கள் குடங்களில் நீர் நிரப்பி செல்வர். அந்த தாகமுற்ற மனித வரிசைக்குப்பின்னால் அமானுஷ்யமான எரிந்த, கருத்த கொத்தவால் சுவர் நிற்கிறது. சில ஆங்கில வார்த்தைகளே அறிந்த கிராம பெண், இந்த எரிந்த கோட்டை முன்பு இளவரசரின் வாசஸ்தலமாக இருந்ததாகவும், பெரும் புதையல்களும், உயிர்களும் எரிந்து சாம்பலானதாகவும் சொன்னாள்.

எப்போது இது நடந்தது?

வெகு காலத்திற்கு முன்.

திரு மகராஜின் விரக்தியை தற்போது அவள் புரிந்து கொண்டாள். செல்வி மகராஜ் அவளிடம் கூறினாள். மற்றொரு இளவரசி தனது கணவனின் வாரிசானவள் எங்களைவிட வறியவளாதலால் சமீபத்தில் நெருப்பை குடித்து வாழ்வை முடித்துக் கொண்டாள். தனது பரம்பரை வைரங்களை நுனுக்கி கோப்பையில் போட்டு விழுங்கிப் போய் சேர்ந்தாள்.

திரு. மகராஜின் அமெரிக்க விஜயத்தின் போது அவர் தன்னை ஒரு புதுமை விரும்பி போலவும் செயற்கையான நாகரீகவாதியாகவும் ஒரு மாயையை உருவாக்கி கொண்டதினால், அவள் மனதில் இடம் பிடித்து வென்றார். நவீன மனிதனைப் போல பேசக் கற்றுக் கொண்டாலும் அவருக்கு உண்மையில் நிகழ்காலத்தை எதிர்கொள்ளத் திராணியில்லை. அவரது உலகறியா தன்மை, பஞ்சவறட்சி, இந்த சரித்திரங்களால் அவளது மனமாற்றம், போன்றவைதான் திரு. மகராஜின் சறுக்கலாக வடிவெடுத்தன. கிரீஸ் நாட்டில் ஒலிம்பிக் போட்டிகளில் வென்ற பந்தயவீரன் தனது சொந்த ஊரில் உயர் பதவி வகிக்கும் நிலைக்கு உயர்வான். ஆனால் திரு. மகராஜோ தனது வீட்டைப் போலவே துருப்பிடித்து போயிருக்கிறார். அவளது அறை சொகுசின் உச்சத்திலிருந்தது போல் காட்சியளித்தது. மெதுவாக சுழலும் மின்விசிறி, ஜன்னல்களில் பொருத்தப்பட்ட கண்ணாடிகள், சில நேரங்களில் இணைப்பு கிடைக்கும் தொலைபேசி, அவளது மடிக்கணினிக்கு எப்போதாவது இணைப்பு கிடைக்கும் மோடெம் வசதி, மற்றும் மின் இணைப்பு போன்றவை தனது கடந்த கால வாழ்வோடு இணைந்த கிரகத்திற்கு தொடர்பு ஏற்படுத்தி கொடுத்து உதவியது.

அவர் தனது அறைக்கு அழைத்து செல்ல அவமானப்பட்டதால் அவளைக் கூட்டி செல்லவேயில்லை.

தனது வயிற்றில் வளரும் உயிரை உணர்ந்த பின், அவள் அவரை மன்னிக்க விரும்பினாள். அவரது கடந்த காலத்திலிருந்து காப்பாற்றி, உருமாறிக்கொண்டே இருக்கும், தனது நிகழ்காலத்திற்கு கொண்டு வர அவளால் முடிந்த அளவிற்கு உதவுவாள். அவளே அமெரிக்கா அவள் மழையை கொண்டு வருவாள்.

வியர்வையுடனும், நிர்வாணமாகவும் அவள் படுத்திருக்கும் போது அடிக்கடி விழித்தெழுவாள். அப்பொழுதெல்லாம் செல்வி. மகராஜ் அருகில் அமர்ந்தபடியே ஆம் நடன மங்கையை போன்றே அருமையான உடல், இது மிக நன்றாக எரியும் என முணுமுணுப்பாள்.

என்னைத் தொடாதே (அவள் பதறினாள்)

எல்லா மணப்பெண்களும் தூரதேசத்திலிருந்தே, இங்கு கொண்டு வரப்படுகிறார்கள். நமது ஆண்கள் வரதட்சணையே செலவழித்த பின் தழல் பறவை வரும்.

என்னை மிரட்டாதே (மனக்கலவரமடைந்தாள்)

எத்தனை மணமகள்களை அவர் மணந்துள்ளார் என உனக்கு தெரியுமா?

மனக்குழப்பமுற்றும், கோபமாகவும், மிரண்டு போயும், அவள் அவரை கேள்வி கேட்டாள். இது உண்மையா? இதனால்தான் உங்களது சகோதரி திருமணம் செய்து கொள்ளாமல் தனது பாதுகாப்பில் கிராமத்தில் உள்ள முதிர்கன்னிகளையெல்லாம் காப்பாற்றி வருகிறாளா? கணவனை ஏற்க அஞ்சி

முடிவுற்ற நடன வகுப்பில் ஆடிவரும் வாழ்நாள் கன்னிகள். அதனால்தான் இப்படியிருக்கிறார்களா?

உங்களது மணப்பெண்களை எரிப்பது உண்மையா?

எனது பயித்தியக்கார சகோதரி ஏதாவது உளறியிருப்பாள் என அவர் சிரித்தார். உனது அறையில் உன் உடல் தழுவி, நீரையும் நெருப்பையும் பற்றியும், பெண்மையின் அழகையும் ஆண்மையின் மர்மத்தைப் பற்றியும் மந்திரப் பறவையைப் பற்றியும் இறப்பின் குறியீடாக அப்பறவை இருப்பதையும் சொல்லியிருப்பாள் என நினைக்கிறேன் என்றார்.

இல்லை, அவள் கவனமாக நினைவு கூர்ந்தாள். தழல் பறவையைப் பற்றி முதலில் கூறியது நீங்கள்தான்.

திரு. மகராஜ் அவளை தனது சகோதரியின் நடன வகுப்பிற்கு கடுங்கோபத்துடன் அழைத்துச் சென்றார். அவரைப் பார்த்த உடன் சலங்கை அணிந்த நடனமணிகள் ஆட்டத்தை நிறுத்தினர். நீங்கள் எல்லாம் எதற்காக வந்திருக்கிறீர்கள் எனது மனைவியிடம் கூறுங்கள், நீங்கள் அகதிகளா, அல்லது மாணவர்களா? நாங்கள் எல்லாம் நடனம் படிக்க வந்த மாணவிகள் ஐயா. நீங்கள் பயத்தினால் தான் இங்கிருக்கிறீர்களா? ஓ, தயை கூறுங்கள்! ஐயா, நாங்கள் ஒன்றும் பயந்து கொண்டு இங்கு வரவில்லை. அவரது கேள்விகள் உரத்த குரலில் தொடர்ந்து கொண்டே இருக்கும் போதும், அவரது பார்வைமட்டும் தனது சகோதரியின் கண்களையே பார்த்துக்கொண்டிருந்தது. செல்வி மகராஜ் அமைதியாகவும், நிமிர்ந்தும் நின்றிருந்தாள்.

அவரது கடைசி கேள்வி அவளிடம் கேட்கப்பட்டது. எத்தனை மணப்பெண்கள் எனக்கு? எத்தனை என நீ சொன்னாய்? சகோதரனும் சகோதரியும் பார்வையால் ஒரு துவந்த யுத்தத்தில் ஈடுபட்டார்கள். ஒருவரிடம் மற்றவர் ஒரு முடிவிலா கைதி சித்திரத்திற்கு வெளியேயும் கால முடிவில்லாமலும், இவள்தான் முதல் மணமகள் என முதலில் கண்களை தாழ்த்தியபடி செல்வி. மகராஜ் கூறினாள்.

தனது மனைவியை நோக்கி, கைகளை விரித்தபடி முடிந்ததா, நீயே எல்லாவற்றையும் காதார கேட்டுக் கொண்டாய் இனிமேல் கட்டுக் கதைகள் வேண்டாம் என்றார்.

சூரியனின் உஷ்ணம் சித்தத்தை கலங்கடித்தது. சோனி மாடுகள் காய்ந்த புல்வெளிகளில் செத்து விழுந்தன. சில நாட்கள் மஞ்சள் மேகங்களால் வானம் நிறைந்தது. மேற்குப் புறமுள்ள சதுப்பு நிலத்தின் மேல் மேகங்கள் தொங்குவதைப் போல் நிறைந்தன. விகாரமான அந்த மஞ்சள் நிற மழை கூட வரவேற்பை பெறும்தான். ஆனால் அம்மழை கூட பெய்யவில்லை.

எல்லோரிடமிருந்தும் கெட்ட வாடை விசியது. அனைவரது மூக்கக் காற்றிலும், பூச்சி வாடையும், செத்த பூனையின் வாடையும், பாம்புகளின் வாடையும், தவளை வாசனையும் விசியது. எல்லோரது வியர்வையும், கனமாகவும், துர்நாற்றமடிப்பதாகவுமிருந்தது.

அவளது முயற்சிகளையும் மீறி உஷ்ணம் அவளை மயங்க வைத்தது. வயிற்றில் குழந்தை வளர்ந்து கொண்டிருந்தது. திருமதி. மகராஜின் நடன மணிகள், கதவுகள், ஜன்னல்களை மூட சமயத்தில் மறந்து விடுகின்றனர். அவர்கள் ஒருவருக்கொருவரின் உடல்களில் பலவித வர்ணங்களையும் காட்டுத்தனமான

சித்திரங்களையும் வரைந்து கொண்டிருப்பதை அங்கிங்குமாக பார்க்க முடிந்தது. ஒருவர் மேல் ஒருவர் ஆலிங்கம் செய்து உறவுக் கொள்வதும் தெரிந்தது.

அவள் கர்ப்பிணியாக இருப்பதால் திரு. மகராஜ் அவளிடம் வருவதில்லை. வரவும் மாட்டார். ஆனால் எல்லா இரவுகளிலும் செல்வி மகராஜ் வருவாள். அவளது நடன வகுப்பில் சகோதரனின் சண்டைக்கு பின் பேசுவதை குறைத்துக் கொண்டாள். அவளது படுக்கைக்கு அருகே அமர மட்டும் கேட்பாள். சில சமயங்களில் மென்மையாக தொடுவாள். அதை திரு. மகராஜின் அமெரிக்க மனைவியும் அனுமதிப்பாள்.

அவளது உடல் நலம் பாதிக்கப்பட்டது. சுரத்தால் நடுக்கமும், சில சமயம் அதிக வியர்வையும் வழியலாயிற்று. அவளது மலம், இளகிய களிமண் போல் போனது. அரண்மனை நீர் ஊற்றுதான் நீர் வரட்சியிலிருந்தும் துரித மரணத்திலிருந்தும் அவளைக் காப்பாற்றியது. செல்வி. மகராஜ் அவளுக்கு சிசுருஷைகள் செய்து அவளுக்கு தேவையான தாது உப்புகளையும் போஷாக்கையும் ஊட்டினாள். விபரம் தெரியாத வயதான வைத்தியன் ஒருவன்தான் அந்த பகுதியில் இருந்தான். அவனால் ஒரு உபயோகமுமில்லை. குழந்தை ஆபத்தான நிலையில் உள்ளதை இரு பெண்களும் உணர்ந்தனர்.

இந்த நோய் பிடித்த, நீண்ட இரவுகளில், அறுபது வயதைக் கடந்த நடனக்காரி அமைதியாகவும் மெதுவாகவும் பேசலானாள்.

இங்கு பயப்படக்கூடிய ஏதோ ஒன்று நடந்துள்ளது. திருப்பப்படவே முடியாத மாற்றம். ஆரம்பத்தில் நாங்கள் அதை கவனிக்காததால் கடைசியில் அதை எதிர்க்கொள்ளவே முடியாமல் போயிற்று. பின் புதிய வழிமுறைகளை ஏற்படுத்திக் கொள்ளாததால், ஆண்களுக்கும் பெண்களுக்கும் நடுவில் முத்தாய்ப்பான பிளவு உண்டானது. ஆண்கள் மழையின்மையை கண்டு பயப்படுவதாக கூறுவதும், பெண்கள் நெருப்பின் இருப்பைக் கண்டு பயப்படுவதும் இது தான் ஏதோ ஒன்று எங்களிடமிருந்து பாய்ந்து வெளிவருகிறது. தற்போது அதை அடக்குவது கடினம்.

இங்கே முன்னொரு காலத்தில் பெரும் இளவரசர் ஆண்டு வந்தார். அவர் தான் கடைசியான பெரும் அரசர் எனக் கூட கூறலாம். அவரைப்பற்றி சொல்லும்போது எல்லாமும் பிரமாண்டமாகவும், புராண காலத்து பெருமையுமாக இருக்கும். அவர் உலகத்திலேயே மிக அழகான இளவரசர். அவர் மிகச் சிறந்த ஆடல் அழகியாகவும், எவரையும் மயக்கக் கூடிய அழகும் படைத்த பெண்ணை மணந்தார். அவர்களுக்கு ஒரு பையனும் ஒரு பெண்ணுமாக இரு குழந்தைகள் பிறந்தனர். வயதானதால் இளவரசருக்கு பார்வை மங்கி வலுக்குறைந்தது. ஆனால் நடனக்காரியான மனைவியின் அழகு குறையவேயில்லை. அவள் ஐம்பது வயதில் இருபத்தி ஒன்று வயதுக் குமரியைப் போல் தோற்றமளித்தாள். இளவரசரின் வயதேற வயதேற அவருக்கு அவளுடைய கவர்ச்சி கொடுத்த ஊக்கம் குறைந்து அங்கே பொறாமை தலை தூக்கியது.

(செல்வி. மகராஜ் தோளை குலுக்கியபடி கதையின் முடிவிற்கு வந்தாள்)

கோட்டை எரிந்து போனது. இருவரும் இறந்து போனார்கள். இளவரசருக்கு தன் மனைவி பல காதலர்கள் வைத்திருந்ததாக சந்தேகம். ஆனால் அப்படி ஏதும் கிடையாது. சேவகர்களின் பராமரிப்பில் குழந்தைகள் வளர்ந்தார்கள். பெண் குழந்தை நடனக்காரியாகவும் மகன் விளையாட்டு வீரனாகவும் வளர்ந்தனர். இறந்து போன பழைய இளவரசர் தனது தனியாத ஆங்காரத்தால் ஒரு பெரும் பறவையாக மாறியதாகவும் அப்பறவை தீப்பிழம்புகளால் ஆனது எனவும் அதுவே இளவரசியை எரித்தது என்றும் சொல்லிக் கொண்டார்கள். இப்போதும் அப்பறவை, கணவர்களின் கொடூரமான கட்டளைக்கு இணங்கி பிற பெண்களை எரிக்க வந்து கொண்டுதானிருக்கிறது என கிராமத்தவர்கள் பேசிக் கொள்கிறார்கள்.

அது சரி, நீ என்ன சொல்கிறாய்? என கட்டிலில் படுத்திருந்த நோயாளியான அவள் கேட்டாள்.

எங்களை பார்த்து பரிதாபப்பட வேண்டாம் என செல்வி மகாராஜ் கூறினாள். இயற்கைக்கு விரோதமான ஒன்றை உண்மையில்லாத ஒன்று என தப்பான அர்த்தம் கொள்ள வேண்டாம். நாங்கள் உருவகங்களிடையே சிக்கியுள்ளோம். அது எங்களை சிதைத்து எங்களது வாழ்வின் அர்த்தத்தை வெளிக்காட்டுகிறது.

அவளது நோய் விலகி, குழந்தையும் சீராக வயிற்றில் வளர துவங்கியது. திரைச்சீலை விலகியது போல் அவளுக்கு ஆரோக்கியம் பளிச்சிட தொடங்கியது. பழையபடியே சிந்திக்கத் தொடங்கினாள். தான் உண்மையில் அறியமுடியாத இந்த மனிதருடன் இந்திர ஜாலம் நிறைந்த இந்த இடத்திலும் இருக்க முடியாது. குழந்தையை அவளே வைத்துக் கொள்வாள். நகரத்திற்கு சென்று அங்கிருந்து அமெரிக்காவிற்கு பறப்பாள். குழந்தை பிறந்த பிறகு நடப்பது நடக்கட்டும். அவளுக்கு தகப்பனைத் தடுக்கும் எண்ணமில்லை. அவர் வந்து குழந்தையை பார்க்கலாம்.

எப்பொழுது வேண்டுமானாலும் வரபோக, கிழக்கே குழந்தையை கூட்டிக் கொண்டு போய்வரக் கூட அனுமதிப்பாள். குழந்தை இரண்டு கலாச்சாரத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும் என விரும்பினாள் போதும். வளர்ந்தவர்களை போல் நடந்து கொள்ள வேண்டும். அவள் திரு. மகராஜிற்கு பொருளாதார ரீதியான அறிவுரைகளைக் கூட தொடரக்கூடும், ஏன் முடியாது? அது அவளின் தொழில் அல்லவா. அவளது இம் முடிவை செல்வி. மகராஜிடம் சொல்லிய போது அடி விழுந்தது போல் அவள் துடித்தாள்.

ஆழ்ந்த இரவின் நடுவே, நமது அமெரிக்கன் ஏதோ கூச்சல் குழப்பத்தை கேட்டு விழித்தெழுந்தாள். அரண்மனையின் வராண்டாக்களிலும் முன் வாசலிலும் சத்தம் நிலவியது. உடையணிந்து அங்கே சென்று பார்த்தாள். பலவகையான வாகனங்கள் அங்கே அணிவகுத்து நின்றிருந்தது. துருப்பிடித்த பஸ் பல லொடபட்டா ரக்ஸ், ஒரு புதிய ஜப்பானிய ஆள் ஏற்று வாகனம் திறந்த லாரி, இருப்பை மறைக்கக்கூடிய வகையில் வர்ணம் பூசப்பட்ட ஜீப் போன்ற பலவகையான வாகனங்களில் செல்வி. மகராஜின் பெண்கள், கோபத்துடனும், பாடிக் கொண்டும் நெரிசலாக நின்று கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரின் கைகளிலும் வீட்டில் உபயோகிக்கும் தடிகள், தோட்ட பொருட்கள், சமையல் கத்தி போன்ற ஆயுதங்கள் இருந்தன. அவர்களுக்கு எல்லாம் தலைமையாக செல்வி. மகராஜ் ஜீப்பில் அமர்ந்து சத்தமாக எல்லோரையும் அவசரப்படுத்திக் கொண்டிருந்தாள்.

இங்கே என்ன நடக்கிறது?

உனக்கு இது அவசியமில்லை. உனக்கு தேவதைக் கதைகளில் தான் நம்பிக்கையில்லையே, நீ உனது ஊருக்கு போகப் போகிறாய்.

நான் உங்களுடன் வருகிறேன்.

செல்வி. மகராஜ் ஜீப்பை முரட்டுத்தனமாக ஓட்டினாள். மோசமான பாதையில் விளக்கில்லாமலே விரைவாக ஓட்டினாள். பலதரப்பட்ட வாகன அணிவகுப்பும் அவள் பின் தொடர்ந்தது. அவர்கள் அனைவரும் உருகி வழியும் முழு நிலவின் வெளிச்சத்தில் விரைந்தனர்.

அவர்களுக்கு முன் சிதிலமடைந்த கல் நுழைவாயில், வெறுமையின் வாசல் பட்டுப்போன மரத்தருகே நின்று கொண்டிருந்தது. அணிவகுப்பு அங்கே

இறங்கி அக்கல் வாசல்வழியே வழிந்தோடியது. வாகனங்களின் விளக்குகள் அணைத்தும் போடப்பட்டு ஒளியூட்டப்பட்டது. நடனமணிகள் அனைவரும் அந்த கல் வாசல் ஒன்றுதான்அதற்கு அப்பால் விரவி கிடந்த வெட்டவெளிக்கு வழி என்பதைப் போலும். இதுவே மற்றொரு உலகத்திற்கு வழி என்பதைப் போலும் ஓடினார்கள். அமெரிக்கன் இறங்கி அந்த வாசல் வழியாக சென்ற போது மறுபடியும் அவளுக்கு அதே நினைப்பு வந்தது. கண்ணுக்கு தெரியாத ஜவ்வு வழியே வருவதைப் போரவும், பார்க்கும் கண்ணாடி வழியாக வேறு ஒரு உண்மையை பார்ப்பதைப் போலவும், புதினம் போலவும் உணர்ந்தாள்.

மோட்டார் வாகனங்களின் வெளிச்சத்தில் அங்கு ஒரு நாடகம் அரங்கேறிக்கொண்டிருந்தது. அந்த கிழ மணமகனை உங்களுக்கு ஞாபகம் வருகிறதா, தனது இளம் மணப் பொண்ணைப் பார்க்க ஊர்வலமாக சென்று கொண்டிருந்தானே, நினைவிருக்கிறதா? தற்போது அவன் இங்கு கொலை வெறியுடனும், குற்றத்துடனும் நின்று கொண்டிருந்தான். அவனது இளம் மனைவி ஒன்றும் புரியாமல் அப்பாவியாக அவனருகில் நின்று கொண்டிருந்தாள்.

இவர்களுக்கு பின் புறத்திலே கிராமத்தின் ஆண்கள் நின்றிருந்தார்கள்.

சந்தோஷமற்ற இந்த தம்பதிகளை திரு. மகராஜ் விசாரித்துக் கொண்டிருந்தார்.

சந்தோஷமற்ற இந்த நாடக தருணத்தில், பெண்கள் கூக்குரலிட்டு கொண்டு ஓடி வந்தவர்கள், திரு. மகராஜின் தோற்றத்தை கண்டு திகைத்து நின்றனர். சகோதரி தனது சகோதரனை பார்த்து முறைத்தாள். விளக்கு வெளிச்சத்தில் உடன் பிறப்புகளின் முகங்கள் வெண்மையாகவும், மஞ்சளாகவும், சிவப்பாகவும் ஜொலித்தது. அவர்கள் அமெரிக்கனுக்கு புரியாத பாஷையில் பேசினார்கள். மொழி தெரியாத ஓபெரா இசைக்கச்சேரி போல இருந்தது அது. அவர்களது சைகைகளிலிருந்து அவர்கள் சொல்ல வருவதை புரிந்து கொள்ள வேண்டியிருந்தது. அவர்களது உடல், மொழி தமது எண்ணங்களிலிருந்து வருவதால் ஒவ்வொரு வார்த்தையையும் இவளால் புரிந்து கொள்ள முடிந்தது. செல்வி. மகராஜ் தனது சகோதரனை நோக்கி, எது நமது பெற்றோரால் தொடங்கப்பட்டதோ அது இப்போது நிறுத்தப்பட வேண்டும் என கட்டளையிட்டாள். அதற்கு பதிலாக, அந்த பதில் அந்த பாழடைந்த கல்வாசலுக்கு அப்பால் உள்ள உலகம் புரிந்து கொள்ளவே முடியாத வகையில் இருந்தது. அவர் பதில் பேச பேச அவரது உடல் தீப்பிழம்பாக மாற, உடலிலிருந்து சிறகுகள் வெடித்து கிளம்பின. கண்கள் கனலை கக்க, தழல் பறவையின் மூச்சு செல்வி. மகராஜை கரிக்கட்டையாக எரித்தது. அவளை எரித்து முடித்துவிட்டு கிழவனின் கதறும் இளம் மனைவி பக்கம் பார்வையை திருப்பியது.

அவரது பதில் காற்றில் மிதந்து நின்றது. நான் தான் தழல் பறவையின் கூடு.

செல்வி. மகராஜ் எரிவதைக் கண்ட அவளது ஆழத்தில் ஏதோ ஒன்று கழன்று கைவிலங்கு உடைந்ததைப் போலவும், பொறுமையின் எல்லையை கடந்தது போலவும் உணர்ந்தாள். ஒரு பேரலையைப் போல் திரு. மகராஜ் மேல் பாய்ந்தாள். பொறுக்க முடியாமல் அவளைப் பின்தொடர்ந்து நடனக்காரிகளும் அவர் மேல் விழுந்தனர். அவளது உடல் எல்லை கடந்து ஆழிப் பேரலையாக

கொட்டியது. தாங்க முடியாத எடை கொண்ட அவளது மழை நெருப்பை பறவையையும் அதன் கூட்டையும் மூழ்கடித்தது. இவற்றை மூழ்கடித்தோடல்லாமல் வரட்சி நிலவிய பூமியை முழுவதுமாக ஆக்கிரமித்தது. அதன் வெள்ளப் பெருக்கில் மிருகங்களையும், மரம் கொடிகளை ஆண்களையும் அடித்து சென்று இந்த பயங்கரப்பிரதேசத்தை சுத்தப் படுத்தியது. வாழ்வின் பண்டைய கொடூரங்களிலிருந்து புனிதப்படுத்தியது.

நேற்றிரவு சமஸ்தானத்தில் எதிர்பாராமல் பெய்த பெருமழையால் பெருத்த உயிர் சேதம் ஏற்பட்டுள்ளது. வரட்சியை நீக்குமளவிற்கு பெய்த இந்த மழையால் இந்த பகுதியே வெள்ளக்காடாக மாறியுள்ளது. இறந்தவர்களில் முன்னாள் இளவரசர் திரு. ட மகாராஜ் மற்றும் அவரது சகோதரியும் இவர் மிகச்சிறந்த சாஸ்திரிய நடனக்கலைஞர் ஆவார்கள் என அஞ்சப்படுகின்றது. திரு மகாராஜின் நிச்சயிக்கப்பட்ட மனைவி, அமெரிக்க பெண் உயிர் பிழைத்ததாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இப்போது கடலுக்கு மேலே, அவள் தனது ஊருக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறாள். பிரபஞ்சம் பழைய உருவத்திற்கே திரும்புகிறது. ஆனால் அவளது உருவம் மாறியிருக்கிறது. திரு மகாராஜின் குழந்தை அமெரிக்காவில் பிறக்கும். தனது மேடிட்ட வயிற்றை வருடிக் கொடுக்கிறாள். அவளே நெருப்பும் நீருமாக சேர்கிறாள்.



சபரிநாதன் கவிதைகள்

உலகம் தட்டையானது

அப்படியாக ஒரு விலக்கப்பட்ட கனியைப் பொறுக்கிப்போட்டு
ஆனைக்கும் மூடனுக்கும் இடையில் ஒரு போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது
அதாவதானது இந்த உலகை யார் முதலில் சுற்றி வருகிறார்களோ அவர்களுக்கே இந்த
பிரிக்கவொண்ணாத ஒரு தனிக்கனியாக்கும்.
எப்போதோ ஓடத்துவங்கிவிட்டது மூடன்
இன்னொரு அடியை எடுத்து வைத்த ஆனை சிற்றோடையைக் கடந்து
அண்ணாந்து பார்க்காமலேயே மலையில் ஏறியது கணத்தில்
காலிடறி ஒரு பட்டுப்பொந்துக்குள் விழுந்துவிட்டது
காயமேதும் இல்லையெனினும் அது பொந்திலின்று மீள அடியெடுக்குந்தோறும்
அப்பொந்து ஆழமானது வேகவேகமாக அது வெளியேறத் துடித்தது
விரக்தியில் களைத்தபோது மூடனின் குறுவாய்நகைப்பே அதை வெளியேறத் தூண்டும்.
பொந்திற்குள் சுற்றிச் சுற்றிப் புலம்பிக்கொண்டிருந்த ஒரு நாள்
பூமிக்கடியில் விழுந்த ஓட்டை வழியே நழுவியது ஆனை.
உலகம் தட்டையாகிவிட்டதை அறியாத அந்த அப்பாவி மூடனோ
வியர்க்க விறுவிறுக்க ஓடிக்கொண்டிருக்கிறது தொடுவானத்தைத் தாண்டி
அந்தரத்தில் சரிந்து கொண்டிருக்கும் ஆனையை
விறுவிறுவெனக் கடந்து போகிறான் வெய்யவன்
நேரம் அதிகாலை ஐந்தாகிவிட்டதே போய்ச்சேரவேண்டும் மறுமுனைக்கு
அன்றிரவு பூமியில் வெட்டுக்கிளிமழை பெய்தது.

(இதழியல் விமர்சகர் தாமஸ் ஃப்ரீட்மேனுக்கு)

சிகப்புநிற ஸ்கார்ஃப் அணிந்த பெண்

வாயைப் பொத்திக்கொண்டு சிரிக்கும்
சிகப்பு நிற ஸ்கார்ஃப் அணிந்த பெண்
கடைசிவரை தன் பற்களை காட்டவேயில்லை எனக்கு
பைக்கட்டைச் சுமந்தவாறு பழுதடைந்த சைக்கிளை நிறுத்திவிட்டு
கைநிறைய மழைக்காலங்களோடு நின்றிருந்த போது
சிகப்பு நிற ஸ்கார்ஃப் அணிந்த பெண் என்னிடம் வந்தாள்
நான் அன்று பள்ளிக்கூடம் போகும் எண்ணத்தைக் கைவிட்டேன்

முதலில் விதிகளற்ற ஒரு விளையாட்டை விளையாடினோம்
பின் அவள் ஊதிஊதி குடித்துக்கொண்டிருந்த தேநீருக்காக
நான் வெற்றுக்கோப்பையை நுகர்ந்துகொண்டிருந்தேன்
சொல்பேச்சுக்கேட்காத சகோதரனைப்பற்றியும் காதுகேளாத் தனது பாட்டியைக் குறித்தும்
மிகவும் வருந்தினாள் பாவம்
நான் புத்தகங்களைக் குறைகூற விரும்பவில்லை
ஒரு எரிகல் விழுந்த பள்ளமாய் என் உள்ளங்கைகள் ஆகஆக
நாங்களிருவரும் சிதறித்தீர்த்த நிமிடங்களைச் சேர்த்தடுக்கினால்
எனது மிகச்சிறிய கடிகாரம் ததும்பும்
சிகப்பு நிற ஸ்கார்ஃப் அணிந்த பெண் ஒரு பேதை அவளுக்கு ஏமாற்றத் தெரியாது

இரண்டு விரல்களை நீட்டி ஒன்றைத் தொடச்சொன்னாள்
என் செவிட்டுக்கைகள் அசையவேயில்லை
துணிவற்ற நான் நின்றேன் நீர் தளும்ப

சிகப்பு நிற ஸ்கார்ஃப் அணிந்த பெண்ணைச் சொல்லிக் குற்றமில்லை
அவள் ஈரமான காலுறைகளை தன் சின்னஞ்சிறு ஷூவிற்குள் திணித்து
எடுத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினாள்
சூரியகாந்திப் புஞ்சைக்கும் மக்காச்சோளக்காட்டிற்குமிடையே
மெலிந்த கல்தேவாலயத்தின் அருகில் கூன் விழுந்த ஒரு மரப்பாலத்தில்
அவள் கால் பாவிய கணம்
நான் அந்த ஓவியத்திலிருந்து வெளியேற்றப்பட்டேன்
(அது எத்தனை கொடியது என்பதை உங்களுக்கு எப்படிச் சொல்வேன்)
ஒரு கோடு இரண்டு சிறைகளை உருவாக்குகிறது அவ்வளவுதான்

9 போல் சுருண்டமர்ந்து முகம்புதைந்து அழுதுகொண்டிருந்தபோது
நொடி முள்ளைப் போலக் கடந்து போனாள்
அடுக்கடுக்காக இரு நீளக்கரேகைகளிடையே அவள் வீடு ஒதுங்கிக்கொண்டது
அதிகாலை சோளக்காட்டில் மணிகொத்த வரும் பறவைகளுக்காக
அவள் எழுப்பும் விதவிதமான ஒலிகள்
இந்த ஓவியத்தில் நுண்திற்றல்களை வரைகிறது

சிகப்பு நிற ஸ்கார்ஃப் அணிந்த பெண் சூது வாது அறியாதவள்
கடைசிவரை தன் பற்களை காட்டவேயில்லை என்றாலும்
அவளுக்கு ஏமாற்றத்தெரியாது அவள் என்னிடம் பொய் சொல்லவில்லை

ஒரு மழைப்பூச்சியை அறிதல்

பழைய அலமாரியிலிருந்தெடுத்த
ஒரு தத்துவப் புத்தகத்தினடியில்
நசுங்கிக் காய்ந்திருந்தது மழைப்பூச்சியொன்று
அருகே சென்று பார்த்த போது தான் அதற்கு ஒரு
மண்டை இருப்பது தெரிந்தது அதில் இரண்டு உணர்கொம்புகள் நீண்டிருந்தன
அதன்கீழே இரண்டு பொடி கன்னங்கருவிழிகள்
வரிவரியாயிருந்த அதன் இரைப்பை புடைத்த பொற்பொதி போலிருந்தது
நான் சற்றும் எதிர்பார்த்திராதது
அதற்கு தன் உடலைப் போல் இருமடங்கு நீளமான சிறகுகள் இருக்குமென்று
ஒளிகொள் சிறகுகள்
நின்ற பார்வை அகலும்
கணத்தில் காண்கிறேன்
அதற்கு உயிர் இருக்கிறது

எனை நீங்கள்

என்னை சுலபமாய் உறங்கவைத்துவிடலாம்
அம்மா தன் வெதுவெதுப்பான வெறுங்கைகளாலேயே உறங்கவைத்திருக்கிறாள்
என்னை சிரத்தையில்லாமல் சிரிக்கவைத்துவிடலாம்
புகைப்பிடிக்கும் குரங்குகளைக் கண்டு வயிறுவலிக்கச் சிரித்திருக்கிறேன்
என்னை எளிதில் ஏமாற்றிவிடலாம்
நாலணாவிற்கு ஆரஞ்சு மிட்டாய் வாங்கித்தந்து தாத்தா ஏமாற்றியிருக்கிறார்

எனை நீங்கள் வெகுசுலபமாய் உறங்கவைத்திருக்கலாம்
எனை நீங்கள் சிரத்தையில்லாமல் சிரிக்கவைத்திருக்கலாம்
எனை நீங்கள் மிக எளிதாய் ஏமாற்றியிருக்கலாம்
எனை நீங்கள் காப்பாற்றியிருக்கலாம்.

முஹமத் தார்விஷ்

தமிழில்

லும்பி

சிர்ஹான் உணவு விடுதியில் தனது காபியை அருந்துகிறான்

அவர்கள் வந்து சேர்கிறார்கள்
கடல் நமது கதவுகள்.
மழை நம்மை வியப்பில் ஆழ்த்தியது
கடவுளைத்தவிர ஒரு கடவுள் இல்லை
அந்த மழை நம்மை வியப்பில் ஆழ்த்தியது. அந்தத் தோட்டாக்களும்
இந்த நிலம் இங்கே ஒரு கம்பளமாக இருக்கிறது.
அவர்கள் வந்து சேர்கிறார்கள் தொடர்ந்து

நீ அந்த நாளை அறியமாட்டாய்
உன்னால் சொல்ல முடியாது அந்த நிறத்தை.
அன்றி அந்தச் சுவையை, அன்றி அந்தக் குரலை.
அந்த வடிவத்தையும் நீ அறிய மாட்டாய்.
சிர்ஹான் பிறந்திருக்கிறான், சிர்ஹான் வளர்கிறான்.
அவன் மது அருந்தி உளறுகிறான்
அவன் தன்னைக் கொலையாளியை வரைகிறான், பிறகு ஓவியத்தை அழிக்கிறான்.
அவன் தன்னைக் கொல்பவனை கொல்கிறான் அவனது முழு வடிவைக் கண்டவுடன்

சிர்ஹான் தனது உடையின் கை பகுதியின் மேல் எழுதுகிறான்
நினைவு ஒரு பறவையின் அலகை எழுப்பி
கலிலியின் கோதுமையை உண்கிறது

எது அன்பாக இருந்தது?
கைகள் வெளிப்படையாக இருந்தன.
விலங்குகளும் சிறைச்சாலைகளும் உருவாக.
நாடுகடத்தல்கள் பிறக்கின்றன.
நாங்கள் உன் பெயரைப் போர்த்தியிருக்கிறோம்
மக்களாக இருந்து இப்போது கற்களாகியிருக்கிறோம்
நீங்கள் ஒரு நாடாக இருந்து இப்போது காற்றாயிருக்கிறீர்கள்
பழைய கைவிலங்குகள் வெட்கிய ரோஜாக்களின் கைக்காப்புகளாக இருக்கின்றன
பழைய கைவிலங்குகள் கன்னிமையுடன் இச்சையாக
இந்த புதிய நாடுகடத்தலில்

உங்களது பாலை அருந்திவிட்டதாகக் கூறும்போது சிர்ஹான் பொய்யுரைக்கிறான்
சிர்ஹான் ஒரு கப்பலின் சமையலறையில் வளர்ந்தான்
அது எப்போதும் உங்கள் கடற்கரைகளைத் தொட்டதில்லை.

உன் பெயர் என்ன?
மறந்துவிட்டேன்
உன் தந்தையின் பெயர் என்ன?
மறந்துவிட்டேன்
சரி அம்மாவின் பெயர்?
மறந்துவிட்டேன்
நேற்றிரவு உறங்கினாயா?
முடிவற்ற உறக்கம் கொண்டேன்
கனவு கண்டாயா?
கண்டேன்

திடீரென அவன் அழுதான்?
ஏன் அருந்தினீர்கள் நீங்கள் கள்ளத்தனமாக
ஏசுவின் ரணங்களிலிருந்து கடத்திய எண்ணெயை?

நாம் பார்த்தோம் அவனது கைகள் பிச்சையெடுப்பதை
நாம் பார்த்தோம் அவன் விலங்குகளால் வானத்தை அளப்பதை
நிலங்கள் தங்களது மக்களை மாற்றுகின்றன.
நட்சத்திரங்கள் பரவுகின்றன குமிழிகள் போல

அவன் பாடினான்,
நமது தலைமுறை முடிந்தும் மடிந்தும் விட்டது
கொலைகாரர்கள் கலவி கொண்டார்கள் பலியானவர்கள் பெருக்குகிறார்கள் நம்மை
உதிரம் போன்ற தண்ணீர்
எதிரிகளை மணந்த தாய்மார்கள்
நாம் கேட்டோம் 'உணவு'
அது எதிரொலித்தது, 'போர்'
நாம் கேட்டோம் 'வீடு'
அது எதிரொலித்தது 'போர்'
நாம் கேட்டோம் 'தடித்த தோளுடைய ஆரஞ்சு'
அது எதிரொலித்தது 'போர்'
அந்த நாள் முதல் நாம் அளந்தோம் ஆகாயங்களை பூட்டப்படும் விலங்குகளால்

கப்பலின் சமையலறைகளிலிருந்து சிர்ஹான் சிரிக்கிறான்.
அவன் கொண்டிருந்த ஒரு பயணியைத் தொலைத்தும்விட்டான்
தொலைவிலிருக்கின்றன நாசரேத்திற்கு இட்டுச் செல்லும் எல்லா நிலங்களும்
எல்லா நிலங்களும் தொலைவிலேயே இருக்கின்றன நாசரேத்தைத் தவிர.

அவனிடம் பாடல்கள் பேசுகின்றன, விடுமுறை நாட்கள் கவலைப்படுத்துகின்றன அவனை
காபியின் மணம் புவியியலாக மணக்கிறது
அவர்கள் உங்களை நாடுகடத்தினார்கள்
அவர்கள் உங்களைக் கொன்றார்கள்
உங்கள் தந்தை பிரதிகளுக்குப் பின்னால் மறைந்தார்
பிறகு வெளிப்படுவதைப் பார்த்தோம்
அந்த காபியின் மணமானது ஒரு இளகிய கரமாக இருக்கிறது
அந்த காபியின் மணமானது உன்னைக் உயர்த்தும் ஒரு குரலாக இருக்கிறது
அந்தக் காபியின் மணமானது சலசலக்கும் ஓர் ஓசையாக இருக்கிறது
அது பொழியும் போது இடைவழியில் தண்ணீரைப்போல

சிர்ஹான் அறிந்திருக்கிறான் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை
அல்லது பெண்களை. அவன் வைத்திருக்கிறான் ஒரு வழி இந்தக் கடலைக் கடக்க
மற்றும் ஒரு வழி உள்ளே நுழைவதற்கு
அவன் தனது காயத்தைத் தேடும் ஒரு நிலவை இரகசியமாக இருக்கிறான்
காபியின் மணம் புவியியலாக மணக்கிறது
அவன் தனது காபியை அருந்தி கனவு காண்கிறான்.

நீங்கள் இங்கே பிறந்திருக்கிறீர்கள். இப்போதும் இங்கே வாழ்கிறீர்கள்
உங்களது நகரம் உறங்குவதில்லை. நிலைத்த பெயர்களையும் கொண்டிருக்கவில்லை
வீதிகள் குடியிருப்பவர்களை மாற்றுகின்றன
கல்லறைகள் நினைவில் நுழைவதைப் போலத் தங்களது இடங்களைவிட்டு நீங்குகின்றன



சுவற்றின் மேல் மேடையில் ஆடைகளையும் கவர்ச்சியாட்டக் கலைஞர்களின்
கால்களுக்கிடையே
உங்களது போர் இரண்டு போர்களாக நடக்கிறது
உங்களது போர் இரண்டு போர்களாக நடக்கிறது

சிர்ஹான்
கொலை செய்தாயா?
சிர்ஹான் அமைதியாக இருந்தான்
அவன் தனது காபியை அருந்தி கனவு காண்கிறான்
எல்லைகள் அற்ற ஒரு வரைபடத்தை அவன் வரைகிறான்
அவன் பூட்டப்படும் விலங்குகளால் பூமியை அளக்கிறான்
அவன் தன்னைக் கொல்லும் கொலைகாரனின் படத்தை வரைகிறான்
சுக்கல்களாக கிழித்தெறிகிறான்
பிறகு கொல்கிறான் அது தனது இறுதி வடிவத்தை எட்டியவுடன்

(கலிலி - இது இஸ்ரேலின் வடக்கே உள்ள யூதர்களின் நான்கு புனித நகரங்களில் இரண்டைக் கொண்டுள்ள நிலப்பகுதி. இயேசு கிறிஸ்துவின் சிறார் பருவ பூமி. மேலுமவர் மிக அதிக தேவசபைகளை நிறுவிய இடம்)

இளஞ்சேரல்

சிபெல்ட்

1 [illegible]

2 [illegible]

3 [illegible]

4 [illegible]

பொன் இளவேனில் கவிதைகள்

அதீத உணர்த்துதல்கள்

மிக சுவையாக
ஒவ்வொரு நிமிடமும்
விஷயங்கள் நமக்குள்
இறங்கிக் கொண்டுதான் இருக்கிறது.
மௌனித்த புனிதங்களோடு
கொஞ்சிக் கொண்டிருக்கும் அதன்
நிறக் குணங்கள்
அழகானவையாகத்தான் இருக்கின்றன
அதன் பரிவுகளும் தான்
வேறு என்ன சொல்ல
அதன் அதீத உணர்த்துதல்களை
உள்ளார ரசிக்கிறோம்
நம்மை வருடிக் கொண்டிருக்கும்
புறங்களின் அகலங்கள்
பிரியத்தின் ஒன்றுதல்களால்
இதங்கள் குறையில்லாமல்
சுரந்து கொண்டு தான் இருக்கின்றன
ஒருபோதும் நாம் அறிய நேர்வதில்லை
துளி விஷத்தை
எப்படி நமக்குள் பாய்ச்சுவது என
காத்துக் கொண்டிருக்கும்
அதன் தீவிரத்தை

கல்லாகினேன்

ஒரு சொல்லை
உயரத்தில் எறிகிறோம்
அது வெளிச்சங்களோடு
உயரத்திலிருந்து இறங்கி
நம்மிடமே சேருகிறது

ஒரு தோல்வியை
உயரத்தில் எறிகிறோம்
அது உயரத்தை அடைந்து பின்
நம்மிடம் வந்து சேருகிறது

ஒரு ஏமாற்றத்தை
உயரத்தை நோக்கி
வலுவாக எறிந்து விட்டு திரும்புகிறேன்
அது எனக்கும் முன்னே
நடந்து கொண்டிருக்கிறது
கல்லாகினேன் நான்

மதுவின் கணங்கள்

தொல்லையை அறுத்து இறங்கும் மதுவை
ஆட்கொள்கிறது
சூழ்ந்து கொண்ட இருப்பு

எல்லா சரசங்களையும்
வேரோடு அழித்து நிலைக்க முடியாத மது
தோற்றுவிட்ட பொழுது

அது தோல்வியை ஒப்புக் கொண்டதற்கிணங்க
வெறுமனே மெலிதான கிறுகிறுப்போடு மட்டும்
தன் பலத்தை இழந்து விடுகிறது

மற்றும்
தான் பின்னடைந்து விட்டதை
ஏற்றுக் கொண்டதை போல
சில நிமிடங்களில்
தடயங்களில்லாது தானே மரித்துக் கொள்கிறது.

திரும்புகிறேன்

கீழாக
இறுதியாய்
உறவை எறிந்து
மிதித்து அவிக்கும் நெருப்பென
நசுக்கும் தொடர்புகளை
உயிர்த்து எழாது
முழுதும்
அழித்துவிட்டு
திரும்புகிறேன்

இந்தப் பாதை
நீண்டு கொண்டே செல்கிறது
புகையைப் போல
தொடர்ந்து

வணிகக் கலாச்சாரமும் மக்கள் நலனும்

லாவண்யா

காசுபக்தியும் தேசபக்தியும்

இந்தியனாயிரு, இந்தியப் பொருட்களை வாங்கு. 1980களில் இப்படி ஒரு விளம்பரம் பேருந்துகளில் ரயில்களில் ரயில் நிலையங்களில் வைக்கப்பட்டிருந்தது. தேசபக்தி விளம்பரம்போல் மாயத்தோற்றம் கொண்ட இந்த விளம்பரம் வணிகத் தேசீயத்தின் குரல் என்பதைக் கண்டறிய வெகுநேரம் பிடிக்கவில்லை. இந்தியன் என்பதற்காக இந்தியப் பொருட்களை வாங்குவதற்காக விற்பனை பொருட்கள் ஏதும் குறைந்த விலைக்கு தரப்பட்டதா? உயர்தரப் பொருட்கள் இந்தியர்களுக்கு மட்டும் விற்கப்பட்டதா? இவ்விரு கேள்விகளுக்கும் ஒரே பதில்தான் இல்லை. உயர்தர பொருட்களை (Export Quality) விற்க அயல்நாட்டுச் சந்தை, தரம் குறைந்த பொருட்களை விற்க இந்தியச் சந்தையென்பதுதான் நுகர் பொருட்கள் தயாரிப்புக் கம்பெனிகள் கடைப்பிடித்த வணிக உத்தி. இந்தியச் சந்தையிலும் அதிக லாபம் பார்க்க உருவாக்கப்பட்ட கோஷம்தான் இந்தியனாயிரு, இந்தியப் பொருட்களை வாங்கு என்பது. இப்படியொரு விசித்திர தேசபக்தியிலுருகிய வணிக வர்க்கம் 1990களில் தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் என்ற சொற்களை அப்போதைய நிதியமைச்சர் மன்மோகன்சிங் என்ற மாஜி உலக வங்கி அதிகாரி முத்து உதிர்த்ததும் இந்தியாவுக்கான சர்வரோக நிவாரணியை மன்மோகன் சிங் என்ற டாக்டர் கண்டுபிடித்துவிட்டதாக ஒரு பிரமையை ஊடகங்கள் பரப்பின. அப்படியானால் இந்திய கம்பெனி வணிகர்களின் தேசபக்தி என்னவாயிற்று? முதலில் காசுபக்தி, முடிவும் காசுபக்திதான். தேசபக்தி கறிவேப்பிலைதான்.

1942ல் வெள்ளையனே வெளியேறு எனக் கோஷமிட்டவர்கள் 1992ல் வெள்ளையர்களின் வணிகப் படையெடுப்புக்கு சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்றார்கள். சமதர்மப்பாணி சமுதாயக் கனவுகள் கங்கையில் கரைக்கப்பட்டன.

இப்போது ஆரட்சியாளர்களோ வணிக வர்க்கமோ இந்தியனாயிரு, இந்தியப் பொருட்களை வாங்கு என தயாரிப்பதில்லை. என்ன காரணம்? கூட்டுத் தயாரிப்பு தொழில் நுட்ப இறக்குமதி. பேடண்ட் உரிமைகள் ஃப்ராஞ்சைஸ் உத்திகளில் பன்னாட்டு கம்பெனிகளும் இந்நாட்டுக் கம்பெனிகளும் இரண்டறக் கலந்துவிட்டார்கள். அதுவே காரணம்.

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்று பாட்டாளி மக்கள் குரலெழுப்பினால் அது தேசவிரோதம். வணிகக் கம்பெனிகளும் ஊடகங்களும் கண்டனம் செய்தன. இந்திய வணிகக் கம்பெனிகள் பன்னாட்டுக் கம்பெனிகளுடன் ஒன்றுபட்டால் அது உலகசுபிட்சம். தேசநலன். இந்த நிலைப்பாட்டை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். வணிகர்களின் சர்வதேசீயமும் உலகமயமாதலும், வணிகத் தேசீயமும் தேசமென்கிற பெரும்பான்மை மக்களைச் சார்ந்தது அல்ல. வணிக நலன் மட்டுமே சார்ந்தது.

பொதுவிடங்களும் வணிக ஆக்கிரமிப்புகளும்

பொதுவிடமென்பது சமூகவெளி (Social Space) இந்தச் சமூகவெளி ஒரு சமுதாயத்தின் பெரும்பான்மை மக்களின் நலனுக்கான உரிமையுள்ள வெளி. அது குப்பனின் நலனுக்கும் சுப்பனின் நலனுக்கும் பயன்படவேண்டும். ஆனால் நடைமுறையில் என்ன நிகழ்கிறது?

ஒரு பேருந்து நிலையத்தை எடுத்துக்கொள்வோம். அங்கே என்னென்ன வசதிகள் உள்ளன என்பது குறித்த தகவல்கள் உண்டா? எத்தனை பேருந்து நிலையங்களில் பாதுகாப்பறைகள் உள்ளன? நோய் பரப்பும் கழிவறைகள் எல்லாப் பேருந்து நிலையங்களிலும் உள்ளன. அவற்றின் சுகாதாரமான பராமரிப்புக்கு டெண்டர் எடுத்தவனை சுகாதார அதிகாரிகளால் கேள்வி கேட்கமுடியுமா? வாகனங்கள் நிறுத்துவதற்கான கட்டணம் மட்டும் மறக்காமல் வாங்குகிறார்களே, வசூலிக்கப்படும் கட்டணம் டோக்கனில் குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்று பாருங்கள். இருக்காது. ஏனென்றால் டெண்டர் எடுத்தவன் கட்சிக்காரன், டெண்டர் நிபந்தனைப்படி அவன் கட்டணம் வசூலித்தால் அதை ஏன் அவன் டோக்கனில் குறிப்பிடவில்லை? இது குறித்து அரசு அறிவிப்பு ஒரு பேருந்து நிலையத்திலோ அல்லது ஒரு ரயில் நிலையத்திலோ பொதுமக்கள் கண்ணில்படும்படி வைக்கப்பட்டிருக்கிறதா? அப்படி வைத்தால் வணிக நலன்களை அரசியல்வாதிகள் அதிகாரிகள் எப்படிக் காப்பாற்றுவது?

இதற்குச் சரியான எடுத்துக்காட்டு சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம்.

லட்சக்கணக்கான மக்கள் வரும் போகும் வழியனுப்பும், காத்திருக்கும் தங்கும் சமூகவெளி சென்ட்ரல் ரயில் நிலையம். பெரும்பான்மையான மக்கள் புழங்குமிடம். அங்கு ஒரு ராட்சதத் தொலைக்காட்சிப்பெட்டி இருக்கிறது. அது யாருக்குப் பயன்படவேண்டும்? பயணிகளுக்குப் பயன்தரும் தகவல்களை அந்த தொலைக்காட்சிப் பெட்டி ஒளிபரப்ப வேண்டும். ஓய்வறைகள் எங்குள்ளன? தங்கும் வசதியுள்ள அறையில் தங்க யாரை அணுக வேண்டும்? குளியலறை வசதிகள் எங்குள்ளன? ரயில் நிலையத்திலிருந்து நகரின் பல பகுதிகளுக்குச் செல்ல என்னென்ன பேருந்து வசதிகள் உள்ளன? அவசர மருத்துவ உதவிகள் ரயில் நிலையத்தில் இருக்கின்றதா? இதுபோன்ற தகவல்களையல்லவா ஒளிபரப்ப வேண்டும்?

ஆனால் அங்கே என்ன ஒளிப்பரப்பாகிறது?

உலகம் உன் கையில் செல்போன் விளம்பரம். தோட்குழியில் பெண்களுக்கு மயிர்கள் வளர்வதை தடுக்கும் களிம்பு விளம்பரம். இவைப் போன்றபடி விளம்பரங்கள். காதுசெவிடு படும் சத்தம். பயணிகளின் அன்பான கவனத்திற்கு அறிவிப்பாளர் சொல்வது எதுவும் காதில் விழாது.

இப்படி பெரும்பாலான பொதுவிடங்கள் பொது நலனுக்காகப் பயன்படவில்லை. வணிக நலன்களுக்காக மட்டுமே பயன்படுகின்றன. நிர்வாகத்துக்கு வருவாய் சேர்ப்பதாகச் சொல்வதெல்லாம் கபடம். ஸ்விஸ் வங்கிகளிலிருந்து 17000 கோடி ரூபாய் கறுப்புப் பணத்தை மீட்டால் அரசு நிர்வாகத்துக்கு வருவாய் வருமே? ஏன் அரசு செய்யவில்லை? உண்மையென்னவென்றால் குப்பன் நலனும் சுப்பன் நலனும் பேணிக்காத்தால் தேர்தல் நிதி யார் தருவார்? தங்கள் எஜமானர்களுக்கு அரசியல்வாதிகள் விசுவாசமாக இருக்கவேண்டாமா? அவர்களைப் பொறுத்தவரை தேனொழுகப் பேச மக்கள், வணிகநலன் காக்க அமைச்சர் பதவி.

வியாபாரம் துரோக சிந்தனம்

இந்த மகாவாக்யத்தை ஒரு வடமொழிப்புலவன் அநாதி காலத்தில் சொல்லிப் போயிருக்கிறான். அதை விளம்பரங்கள் செயல்படுத்துகின்றன. விளம்பரத்தின் பொய்களுக்கு அளவில்லை. எடுத்துக்காட்டுக்கு சில

சில தனியார் வங்கிகள் கடனட்டைக்கான (Credit Card) ஒரு வருடக் கட்டணம் இலவசமென தங்கள் துண்டுப் பிரசுரங்களில் விளம்பரப்படுத்துகின்றன. ஆனால் இரண்டாம் வருடத் துவக்கத்தில் கடனட்டையும் கடனும் வாங்கிய ஏமாளியிடம் முதலாண்டுக்கான கடனட்டை வழங்கியதற்கு கட்டணத்தை வசூலிக்கின்றன. ஆக முதலாண்டுக்கான கடனட்டை வழங்கும் கட்டணம் கிடையாது என்ற விளம்பரம் பச்சைப்பொய்தானே? அரசின் நிதி இலாகாவோ இந்திய ரிசர்வ் வங்கியோ இத்தகைய ஏமாற்றுவேலைக்கெதிரான நடவடிக்கைகள் எடுத்தாக ஒரு செய்தி கூட வந்ததாகத் தெரியவில்லை. காக்க, காக்க, வணிக நலன்காக்க.

அடுத்ததாக பெட்ரோல் விற்பனையில் போலிமீட்டர்களின் செயல்பாடு. பெட்ரோல் வணிகம் சுதந்திரமானது. எந்த மேற்பார்வையும் இருப்பதாகத் தெரியவில்லை. மேற்பார்வை இருந்தால் பெட்ரோல் பங்க் மீட்டர்கள் பரிசோதிக்கப்பட்டதற்கான சான்றிதழ்கள் வாகன உரிமையாளர்கள் கவனம் கவரும் வண்ணம் ஏன் வைக்கப்படுவதில்லை. நிலத்தடித் தொட்டியிலிருந்து குழாய் வழியே ஓர் கண்ணாடி அளவுக்குடுவையில் நிரப்பப்பட்டு பிறகு வாகனங்களில் பெட்ரோல் டேங்கில் நிரம்பச் செய்வது ஒன்றும் கம்ப சூத்திரமில்லை. சென்னையிலுள்ள ஐ.ஐ.டி. மாணவர்களே அதைச் செய்துவிடுவார்கள். அதைச் செய்தால் பெட்ரோல் வணிகர்களின் நலன் பாதிக்கப்படுமே? அதனால் அதற்கான முயற்சிகள் அரசாங்கத்தாலோ எண்ணெய் நிறுவனங்களாலோ மேற்கொள்ளப்படுவதில்லை.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் ஒன்றிருக்கிறது. இந்திய ஒப்பந்தச் சட்டம்தான் Indian Contract Act அது. அதில் ஒரு விதி சொல்கிறதென்ன தெரியுமா? வாங்கும் / விற்கும் ஒரு செயலில் வாங்குபவன்தான் உஷாராயிருக்கவேண்டும். விற்பவன் யோக்கியனாயிருக்கத் தேவையில்லை. Caveat Emptor! Buyer Beware! என்பதுதான் அது. அதாவது வணிகன் உட்கார்ந்த இடத்தில் ஏமாற்றுவான். நுகர்வோர்கள் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்ந்து, மோசடியை நிரூபித்து நஷ்ட ஈடு பெறவேண்டும் சட்டம் யாருக்குச் சாதகமாக இருக்கிறதென்பது புரிகிறதா?

பள்ளித்தலமும் கல்விச்சந்தையும்

பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம் எனப் பாரதியின் கனவுகளை கல்வி வணிகர்கள் கொன்று வெகுகாலமாயிற்று. முதலில் ஆதரவு கோரி நன்கொடை கேட்டார்கள். அடுத்து சீட் தருகிறோம் நன்கொடை கொடுங்கள். என்றார்கள். அதற்கடுத்து நன்கொடை கொடுங்கள் சீட் தருகிறோம் என்றார்கள். பிறகு நன்கொடை தந்ததால்தான் சீட் என்றார்கள். அதற்கும் பிறகு இவ்வளவு நன்கொடை தந்தால்தான் சீட் என்றார்கள். அது எல்.கே.ஜி.யானாலும்

சரி, பொறியியல் கல்லூரியானாலும் சரி, மருத்துவக் கல்லூரியானாலும் சரி, எல்லாவற்றிற்கும் ரேட் நிர்ணயித்தார்கள். மக்களின் புகார்களுக்கு அரசுகள் எப்படித் தீர்வுகண்டன? கட்டாய நன்கொடை வசூலிக்கக்கூடாதென்று சொல்லவில்லை. அரசுகளே தரகர்வேலை செய்தன. நன்கொடைக் கட்டணம் எவ்வளவு வசூலிக்கலாமென்று நிர்ணயம் செய்தன. இந்தச் செயலின்மூலம் அரசுகள் தாங்கள் கல்வி வணிகர்களின் ஆதரவு அரசுகள் என்பதை நிரூபித்தன. நன்கொடையை சட்டபூர்வமாக்கின. கணக்கில் வரும் நன்கொடை, கணக்கில் வராத நன்கொடை யென்று மீண்டும் கல்வி வணிகர்கள் வசூலிக்கத் தொடங்கினார்கள். கல்லூரிகளைச் சோதனையிடுவதாக ஒரு கண் துடைப்பு நாடகம் நடந்தது. கணக்கில் வராத காசை தஸ்தாவேஜுகளுடன் யாரேனும் வைத்திருப்பார்களா? ஆய்வு செய்தோம். தவறேதும் நடக்கவில்லையென சான்றிதழ் தரும் அரசுகள் யார் பக்கம்? வணிகனின் பக்கமா? மக்களின் பக்கமா? மக்கள் விரோத வணிகனும் மக்கள் விரோத அரசியல்வாதியும் இதுபோன்ற கூட்டணி அமைத்துக்கொள்வதற்குக் காரணம் அனைத்திலும் புகுந்துவிட்ட வணிகக் கலாச்சாரம் தவிர மற்றொன்றில்லை.

வணிகனும் வன்முறையும்

சுமார் இருபதாண்டுகளுக்கு முன் வங்கிகளல்லாத நிதிநிறுவனங்கள் **(Non-Banking Finance Companies)** காளான்களாய் இந்தியாவெங்கும் முளைத்தன. தங்களிடம் முதலீடு செய்பவர்களுக்கு 36% வட்டி தருவதாய் ஆசைகாட்டின. முதலீடு குறிப்பிட்ட காலமானதும் முதிர்வடைந்து முதலீட்டாளர்கள் பணத்தைத் திருப்பிக் கேட்டார்கள். வட்டியை வாங்கிக் கொள். முதலீட்டைப் புதுப்பித்துக்கொள் என்று வீட்டுக்கு அடியாட்களை அனுப்பி மிரட்டிய நிதிநிறுவனங்களுமுண்டு. இப்படி மிரட்டப்பட்டவர்களில் பலர் அரசாங்கத்தில், பொதுத்துறை நிறுவனங்களில் அதிகாரிகளாக இருந்தவர்கள். இப்படியாக இந்த மோசடி நிறுவனங்கள் அரசு வட்டாரத் தகவலின்படி ஏப்பம்விட்ட தொகை ரூ.14000 கோடி ரூபாய்கள். இந்தியப் பொருளாதாரத்தை, பணப்புழக்கத்தை கட்டுப்படுத்தும் ரிசர்வ் வங்கி, இந்த நிறுவனங்கள் பணவியாபாரம் செய்ய பணச்சந்தையில் நுழைந்த போது முகத்தை வேறுபுறம் வைத்திருந்தது. கண்களை மூடிக்கொண்டிருந்தது. இந்த நிதிநிறுவனங்களைத் துவங்கியவர்களின் தகுதி, அனுபவம், பின்புலம் எதையும் கண்டுக்கொள்ளவில்லை. மோசடிகள் வெளியாகத் துவங்கியவுடனேயே மத்திய அரசின் நிதி இலாகா மூலமாக ஓர் அவசரச் சட்டம் தீட்டி இந்த மோசடி நிறுவனங்களின் சொத்துக்களை உடனடியாக முடக்கவுமில்லை. கலவரம் நடந்தபின் போலீஸ் வருவதைப்போல, சாவுக்கு வராமல் சவுண்டிக்கு வந்தது போல் முதலீட்டாளர்களின் பணம் முற்றிலும் கபளீகரம் செய்யப்பட்ட பிறகு அப்போதைய ரிசர்வ் வங்கியின் கவர்னர் மக்கள் கேட்ட கேள்விளை மக்களிடமே திருப்பி கேட்டார் ஆமாம் இவ்வளவு பணம் எங்கே போயிற்று? மக்கள் நலன் பற்றிய அதிகாரவர்க்கத்தின் அக்கறை அவ்வளவுதான்.

தேசிய வங்கிகளில் ஒருவர் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டாத போது முன்னறிவிப்புக்கு பிறகு நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்படும். நியாயமான

மார்க்கெட் அல்லது தயாரிப்புப் பிரச்சினைகளால் ஒரு நிறுவனம் கடனை திருப்பிக் கட்ட முடியவில்லையென்றால் தவணைமுறையில் வசூலிக்கப்படும். சில சமயங்களில் தள்ளுபடி செய்யப்படுவதுமுண்டு. வழக்கு தொடர்ந்திருந்தால் நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகு ஒரு வருடத்திற்குள் அமுலாக்க கோரிக்கை (Execution petition) நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நீதிமன்ற அமீனாவின் உதவியோடு ஜப்தி செய்யப்படும்.

வங்கித் துறையில் தேசீய வங்கிகளின் சேவை திருப்திகரமாக இல்லை. அதனால் சிறந்த சேவை செய்ய தனியார் வங்கிகள் வேண்டுமென்று பெருவணிகர்கள் குரலெழுப்பினார்கள். பெருவணிக எஜமானர்கள் காலால் செய்யென்றால் தலையால் செய்வார்களே நம் அரசியல்வாதிகள். தனியார் வங்கிகள் வந்தன. அவற்றில் சில தலைவலியையும் காய்ச்சலையும் சமாளிக்க முடியாமல் மூடிக்கொண்டன. முடமான சில வங்கிகள் பாசத்துடன் அப்போதைய நிதியமைச்சர் தேசீய வங்கிகளுடன் இணைக்க ஏற்பாடுகள் செய்தார். தனியார்களால் வங்கி வியாபாரத்தைச் செய்ய முடியவில்லையென்று மக்களுக்குத் தெரிந்தால் மற்ற தனியார் வங்கிகள் மீதும் நம்பிக்கை போய்விடுமே?

எஞ்சிய தனியார் வங்கிகள் நொண்டுகின்றன. இவைகளின் கடன் வசூல் செய்யும் முறை கந்துவட்டிக்காரனைப் போலத்தான். ஓய்வுபெற்ற காவல்துறை கீழ்மட்ட அதிகாரிகளை, உள்ளூர் தாதாக்களை வசூல் ஏஜெண்டுகள் (Recovery Agents) எனப் பெயர்சூட்டி, குறித்த தவணையில் கடன்தொகையைத் தராதவர்களை மிரட்டிப் பணம் வசூலிக்கின்றன. கடன் வாங்கியவனை மட்டுமல்ல. அவனுடைய அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, மாமன், மச்சார் எல்லாரும் மறைமுகமாக மிரட்டப்படுவார்கள். இதுதான் தனியார் வங்கி வணிகர்களின் நடைமுறை. இது மனோரீதியான வன்முறையல்லாமல் வேறென்ன? இதுவரை இந்திய வணிக வர்க்கம் இந்தியப் பெரும்பான்மை மக்களின் மீது செய்யம் மோசடிகளை, ஆக்கிரமிப்புகளை, மிரட்டல்களை பார்த்தோம். அதற்கு இந்தியஆளும் வர்க்கம் எப்படித் துணைபோகிறதென்பதைக் கண்டோம். பெரும்பான்மை மக்கள் மீது காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் அரசியல்வாதிகள் ஆட்சியைப் பிடிக்கும்வரை ராமாயணம் படிக்கிறார்கள். ஆட்சியைப் பிடித்ததும் ராமர் கோயிலை இடிக்கிறார்கள். எல்லாக் கட்சிக்காரனும் மக்களுக்குத் தெரியாமல் மறைவில் வணிகனாக இருக்கிறான். அதனால்தான் தன் நலனைக் காப்பாற்றிக் கொள்ள அரசியல் அதிகாரத்தைத் தேடுகிறான். அரசியல் அதிகாரம் கிட்டியவுடன் வணிகனுடன் கூட்டணி வைத்துக் கொள்கிறான். வணிக நலன் காக்க வேண்டியது கூட்டணி தர்மமாகிறது. இப்படித்தான் உருவாகிறது புண்ணாக்கு பொருளாதாரக் கொள்கைகள். சீர்த்திருத்தங்கள், தாராளமயமாக்கல் அடுத்தாக தொழில்துறைச் சட்டச் சீர்திருத்தங்கள்.

கார்ப்பரேட் வணிகர்களும் தொழில்துறை சட்டச் சீர்த்திருத்தங்களும்

தாராளமயமாக்க என்பதும் செயல்முறை வணிகவர்க்க தடைகளற்ற சுதந்திரம் அடைவதாகும். உலகமயமாதல் என்பது விதேசி வணிகப் படையெடுப்பை அனுமதிப்பது அல்லது வரவேற்பது. இதனால் இந்திய வணிக வர்க்கத்துக்கு **அந்நிய நேரடி முதலீடுகளுடன்** (FDI - Foreign Direct Investment) கூட்டாளிகள் கிடைக்கிறார்கள். விதேசிக் கம்பெனிகளுக்கு இந்தியா

நூறுகோடி மக்கள் நிறைந்த மிகப்பெரிய சந்தை. ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும்போது தொழிலாளர் ஊதியம் மிகவும் குறைவு. குறைந்த கூலி கொடுத்தும் வேலை வாங்க முடியும். மேலும் மக்கள் தொகை அதிகமாக இருப்பதே விற்கலாம். குறைந்த செலவில் பொருட்களைத் தயாரித்து மற்ற நாடுகளில் அதிக விலைக்கு விற்கலாம். ஆனால் இந்தியாவிலுள்ள தொழிலாளர்களை அவ்வளவு எளிதில் சுரண்டிவிட இயலாது. காரணம் இங்கே தொழிற்சங்கங்கள் வலுவாக உள்ளன. மேலும் அவை அரசியலைத் தெரிந்து வைத்திருக்கின்றன. தொழிலுறவுச் சட்டங்களை அமுல்படுத்த போராட்டங்களை நடத்துகின்றன. தொழிலுறவுச் சட்டங்களோ தொழிலாளர்களுக்கு மிகவும் சாதகமாக இல்லாவிட்டாலும் முதலாளிகளுக்கு சாதகமாக இல்லை.

மேலைநாடுகளில் கம்பெனிக்குப் பிடிக்கவில்லையென்றால் அவருடைய உழைப்பில் திருப்தியில்லை, செயல்திறனில் கம்பெனிக்கு லாபமில்லையென்றால் இரண்டு மாதச் சம்பளங்களுக்குப்பிறகு ஒரு பக்க லெட்டர் தொழிலாளியிடம் கொடுத்து அனுப்பிவிடலாம். அதாவது Hire and Fire. ஆனால் இந்தியாவில் தொழிலுறவுச் சட்டங்களில் (Industrial Laws) அதற்கு இடமில்லை.

நிரந்தரமாக்கப்பட்ட ஒரு ஊழியரை நிரூபிக்கப்பட்ட குற்றங்களுக்காக தொடர்ந்த தகவல் இல்லாது வேலைக்கு வராமைக்காக, கட்டுப்பாடின்மைக்காக, ஓய்வுபெறும் வயதடைந்தமைக்காக மட்டுமே பணி நீக்கம் இந்தியாவில் செய்ய முடியும்.

தொடர்ந்து நிரந்தர பணியாளர்கள் செய்யும் தன்மையுள்ள வேலைகளையோ, இடைக்கத்திறன்மிக்க வேலைகளையோ கம்பெனியின் பணியாளர்களைத் தவிர்த்து ஒரு ஒப்பந்தக்காரரிடமோ அல்லது மற்றவெளியார் கம்பெனிகளின் நிர்வாகிகளிடமோ ஒப்பந்த அடிப்படையில் ஒரு நிர்வாகம் செய்தால் அது சட்ட விரோதம்.

மூன்றாவதாக தொழிலாளர் நலத்துறை மத்திய மாநில இரண்டு அரசுகளின் அதிகாரத்தில் வருகிறது. (Concurrent subject in the Indian constitution) தொழிற்சட்டங்களின் விதிகளை மாநில அரசுகள் தளர்த்தவோ கூட்டவோ முடியும்.

நான்காவதாக இந்தியத் தொழில்தகராறுகள் சட்டத்தில் (Industrial Disputes Act 1947) சில முறைகள் சொல்லப்பட்டுள்ளன. ஒழுங்கு நடவடிக்கைகள் (Disciplinary Proceedings) இல்லாமல் ஒரு தொழிலாளி நிர்வாகத்தின் மீது வழக்குத் தொடரமுடியும். தொழிலாளர் நலத்துறை ஆணையர் முன் சமாதானப்பேச்சு (Conciliation) நடக்க வேண்டும். அடுத்து மத்தியஸ்தம் (Arbitration), நிர்வாகமும், தொழிற்சங்கமும் இருவருக்கும் பொதுவான ஒருவரை மத்தியஸ்தம் செய்யச் சொல்வது. கடைசியாக நிரந்தரமான முறையில் தொழிலாளர்களிடம் வேலை வாங்குவது போன்ற பிரச்சினைகளுக்கு தீர்ப்பாயம் (Tribunal) நீதிமன்றத்திற்குமான தீர்வு காண்பது. அல்லது நீதிமன்றத்துக்குச் செல்வது. நம் நாட்டில் அதிகம் கல்வியறிவில்லாத / உடலுழைப்புத் தொழிலாளர்கள் (Blue Collared Workers) நம்பிய வருமான ஒருவரை நம்பியிருக்கும் குடும்பத்தைக் கருத்தில் கொண்டு இந்தச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. மேலும் 3 கோடிப் பேருக்குத்தான் தொழிற்சங்கங்கள் உள்ளன. 40 கோடிப்பேருக்குத் தொழிற்சங்கங்களில்லை. 3 கோடி பேரை முடமாக்கினால் 40 கோடிப்பேரையும் முடமாக்கிவிடலாம். இந்தியக் கம்பெனி முதலாளிகளுக்கும் சர்வதேசக் கம்பெனிகளுக்கும் தொழிலாளர்களை அடிமைகளாக்குவது எளிதாயிருக்கும். அதற்காகத்தான் சர்வதேசக் கம்பெனிகள், இந்தியக் கம்பெனிகள் உடைய வலி

தொழில்துறை சட்டச் சீர்திருத்தங்களைக் கொண்டுவரச் சொல்லி அவர்களின் அடிவருடியான மன்மோகன் சிங்கையும் அவர் அரசையும் நெருக்குகிறார்கள். அவர்கள் கேட்கும் சீர்திருத்தங்கள் என்ன? அவை பின்வருமாறு.

1. உடனடியாகவும் எளிதாகவும் ஒரு தொழிலாளியை பணி நிக்கம் செய்யும்படி இந்தியத் தொழில் தகராறுகள் சட்டம் (Industrial Disputes Act 1947) திருத்தியமைக்கப்படவேண்டும்.
2. பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளியை திரும்ப பணிக்குச் சேர்த்துக் கொள்ளும் ஆணையை தொழிலாளர் நலத்துறையோ, நீதிக்குழுமமோ அல்லது நீதிமன்றமோ ஆணையிடக்கூடாது.
3. உற்பத்திச் செலவைக் குறைக்க பணிநீக்கம் செய்யப்படும் ஊழியர்களுக்கு மாற்றாக ஒப்பந்தத் தொழிலாளர்களை குறைந்த சம்பளத்துக்கு பணியமர்த்த கம்பெனி நிர்வாகத்துக்கு அதிகாரம் வேண்டும்.
4. அத்தகைய அதிகாரம் நீதிமன்றத்திலும் எதிர்வழக்காட முடியாததாக இருக்கவேண்டும்.
5. குறைந்த சம்பளத்துக்கு வேலை செய்யும் ஒப்பந்தத் தொழிலாளிகளை கம்பெனி நிரந்தர பணித்தேர்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டிய கட்டாயமிருக்கக்கூடாது.
6. பணி செய்வதற்கான ஒப்பந்தம் குறிப்பிட்ட ஊரில் மட்டும்தான் என்று ஒப்பந்தத் தொழிலாளர்கள் மாற்றலை மறுத்து ஒப்பந்தத்தை மீறாதவாறு சட்டமியற்றப்படவேண்டும். பெண் ஊழியர்கள் இதற்கு விதிவிலக்காயிருக்க முடியாது.

இதன் சாராம்சம் இந்தியத் தொழிலாளர்களை அடிமைகளாகச் செய்வதுதான். இதற்கான பிரச்சாரங்களை ஊடகங்கள் செய்து வருகின்றன. குறிப்பாக ஆங்கிலப் பத்திரிகைகள்.

இதன் துவக்கமாகத்தான் தொழிற்சங்கங்கள் ஊதிய/போனஸ் கோரிக்கைகள் கம்பெனி நிர்வாகங்களின் முன்வைக்கும் போது நிர்வாகங்கள் தங்களது எதிர்கோரிக்கைளை முன்வைக்கின்றன. அவையாவன.

1. ஆட்குறைப்பு நடவடிக்கைகள் ஒப்புக்கொண்டால் ஊதிய உயர்வு.
2. இரண்டு மூன்று பணிகளை ஒன்றிணைக்க நிர்ப்பந்திப்பது.
3. உற்பத்தித்திறன் அடிப்படையில் சம்பளம் நிர்ணயிப்பது.
4. கம்பெனிகள் ஒப்பந்தத் தொழிலாளர்களை பணிக்குச் சேர்த்தால் தொழிற்சங்கங்கள் (ஆட்சேபிக்கக்கூடாது)
5. விருப்ப ஓய்வெடுத்துக் கொள்ளச் சொல்லி தொழிலாளர்களைக் கட்டாயப்படுத்துவது.

அதாவது, சாவிறைக்கிற மாட்டுக்கொருவிலை, ஏருழுகிற மாட்டுக்கொருவிலை, வண்டியிழுக்கிற மாட்டுக்கொருவிலை. எட்டுபல் மாட்டுக்கொரு விலை. மாடு மூத்திரம் குடித்தால், நொண்டினால் திமில் புண்ணாகிப்போனால், குளம்பு தேய்ந்து போனால் கண்ணீர் விடாமல் கசாப்புக் கடைக்குப் போகவேண்டும்.

அடுத்து உற்பத்திச் செலவைக் குறைக்க வசதி வேண்டும் என்ற கம்பெனிகளின் கோரிக்கையில் எந்த அளவு உண்மையிருக்கிறதென்று பார்ப்போம்.

இந்தியாவில் ஒருவர் 45,000 சம்பளம் பெறுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அமெரிக்காவில் அவர் 1000 டாலர் சம்பாதிக்கிறதச் சமம். ஆனால் அதே வேலைக்கு அமெரிக்காவில் 3000 டாலர் அந்தத் தொழிலாளிக்குத் தரவேண்டும். இந்தியாவில் 1000 டாலர் தரும்போது எற்கனவே 2000 டாலர் உற்பத்திச் செலவு குறைந்துவிட்டது. ஆனால் அதை இன்னமும் குறைக்க வேண்டுமாம். அதற்காக இந்தியத் தொழிற்சட்டங்களை மாற்றவேண்டுமாம்.

அது மட்டுமல்ல 45000 ரூ சம்பளம் பெறும் ஒருவர் கிட்டத்தட்ட 14 மணிநேரம் இந்தியாவில் வேலை செயய வேண்டியிருக்கிறது. அமெரிக்காவில் சராசரி எட்டு மணி வேலை நேரம் தான். சம்பளமும் இந்தியாவில் தருவதைவிட அதிகம். மேற்சொன்ன கோரிக்கைகளை மன்மோகன் சிங் அரசு பரிசீலிக்க உள்ளது. மன்மோகன்சிங்கும் அவருடைய அரசும் யாருடைய நலன்களைக் காக்கும் என்பது அனைவருக்கும் தெரியும். காமன்வெல்த் விளையாட்டுப்போட்டிகள், ஸ்பெக்டரம் விற்பனைகளில் மன்மோகன்சிங்கும் அவருடைய அரசும் யாருடைய நலனைக் காத்ததோ, அதே போல தொழில்துறை சட்டத்திருத்தங்களிலும் மன்மோகன்சிங் அரசு அவர்களுடைய நலனையே காக்கும். அதாவது இந்தியப் பெருமுதலாளிகள், சர்வதேசக்கம்பெனிகளான ஹோண்டா, ஜி.ஈ. வால்மார்ட் (Wall Mart) போன்ற நிர்வாகங்களின் கோரிக்கைகளை சட்டமாக்கும். (வர்க்க விரோதிகளிடம் (Class Enemies) நாம் வேறெதையும் எதிர்பார்க்கமுடியாது)

இந்தியாவில் ஒரு தொழிலாளி ஒரு கம்பெனியில் சேர்ந்தால் தொடர்ந்து அங்கேயே வேலை பார்க்கிறான். (கம்பெனிகள் மாறுவது கணினி, மருத்துவத்துறை போன்ற சிலவற்றில் மட்டும்தான் நிகழ்கிறது. நிரந்தரத் தொழிலாளியாக குறைந்த பட்சம் முப்பது வருடங்கள் பணிபுரிகிறான். அந்தக் கம்பெனிக்கு தன் தொழிலுக்கு விசுவாசமாக இருக்கிறான். தவறுகள் செய்தால் அவனை தண்டிக்க இப்பொழுதும் நிர்வாகத்தால் முடியும். நடைமுறையில் வலுவான தொழிற்சங்கங்களோ / அல்லது தொழிற்சங்கங்களே இல்லாத கம்பெனி நிர்வாகம் அவனை பணிநீக்கம் செய்தால், அவன் சட்டத்தின் துணை கொண்டு பணிநீக்கம் சட்டப்படி செல்லாதெனச் சொல்லி மீண்டும் அதே கம்பெனியில் பணியில் சேரமுடியும். சட்டத்திலுள்ள இந்தப் பாதுகாப்பைத் தகர்ப்பதுதான் சுதேசி / விதேசிக் கம்பெனிகளின் தொழிற்சட்டச் சீர்திருத்தங்களின் தேவை குறித்த கூக்குரல்.

ஏனென்றால் பணிக்கான நிரந்தரப் பாதுகாப்பில்லையென்றால் எந்தத தொழிலாளியையும் எதேனும் ஒரு காரணம்காட்டி, உற்பத்தித் திறனில்லாதவன என்று குற்றம் சுமத்தி வீட்டுக்கனுப்பமுடியும். நிறையப் பேருக்கு வேலையில்லையென்றால் ஐயோ பாவம் இத்தனை தொழிலாளிகள் வேலையில்லாமல் அல்லாடுகிறார்கள். அவர்கள் குடும்பங்களின் கதி என்ன? அதனால் பணிபுரியும் தொழிலாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டால இவர்களைப் போலத் தவிக்கக்கூடாது. அதனால் வேலையின்மைக் காப்பீடு திட்டம் (Unemployment Insurance) இந்தியாவில் அறிமுகப்படுத்தவேண்டும் என்று நீலிக்கண்ணீர் வடித்து இந்தியக் கம்பெனி வணிகர்கள், சர்வதேசக் கம்பெனிகள் வேலையின்மைக் காப்பீடு வியாபாரத்து வழி வகுப்பார்கள்.

சர்வதேசக் கம்பெனிகளும், உலக வங்கியும் இந்தியத் தொழிற் சட்டங்களைத் திருத்தச் சொல்வது வெறும் வணிகக் காரணங்களுக்கு மட்டுமல்ல. இந்திய அரசியல் அதிகாரத்தை தங்கள் வசமாக்கிக் கொள்வதற்குத்தான்.

தங்களுக்குத் தலையாட்டுகிற பொம்மைகளை பொருளாதார மேதைகளாக்கி அந்த மேதைகளின் நிழலில் மக்களைச் சுரண்டுவதற்குத்தான் ஸ்வீஸ் நாட்டு வங்கிகளை இந்திய அரசாங்கம் இந்திய முதலீட்டாளிகளின் பெயர்ப்பட்டியலைக் கேட்டது. (இந்தியப் பெருவணிகர்களின் ரூ. 1,70,000 கோடி கறுப்புப் பணம் ஸ்விஸ் வங்கிகளுக்கு எப்படிப் போனது என்று கேட்கக் கூடாது?) தரமுடியாதென்று ஸ்விஸ் வங்கிகள் ஒற்றை வரியில் முடித்துக் கொண்டன. ஆனால் பல தேசக் கம்பெனிகள் தொழில்துறை சட்டமாற்றங்களைக் கேட்டதும் காலாலிட்டத்தை தலையால் செய்ய பரபரத்துக் கொண்டிருக்கிறது, இந்திய அரசு. வெட்கமில்லை இங்கு யாருக்கும் வெட்கமில்லை.

ஆப்பிரிக்காவிலும் தென்னமெரிக்காவிலும் பல தேசக் கம்பெனிகள் (Multi - National Companies) இப்படித்தான் உள்ளே புகுந்தன. தங்கள் சுரண்டலுக்குச் சௌகரியமாக மக்கள் சார்பு அரசுகளைக் கவிழ்த்தன. அர்ஜென்டைனாவிலும் சிலே (Chile) யிலும் செய்தது போல. செப்புச் சுரங்கங்களை, தங்கச் சுரங்கங்களை விழுங்கின. மக்களின் நிலங்களை நீராதாரங்களைச் சூறையாடின. தங்கள் கொள்ளைகளைப் பல்வேறு நாடுகளில் மறுமுதலீடு செய்து சுரண்டலைத் தொடர்கின்றன.

கார்ப்பரேட் கிரிமினல்களின் வாழ்க்கைத் தத்துவமே பெரும்பான்மை மக்களைச் சுரண்டுவதுதான். அதற்குத் தகுந்தாற்போல இந்தியர்களின் வாழ்முறையை (Life Style) சட்டங்களை, அணுகுமுறைகளை, பொருளாதாரத்தை, பலங்களை, கலாச்சாரங்களை, ஊடகங்கள், சினிமா, நீதித்துறை அரசு யந்திரம் மூலம் மாற்றுவதற்காகச் செய்யும் முயற்சிகள் உள்ளடக்கிய கோஷம்தான் தாராளமயமாதலும், உலகமயமாதலும், பன்னாட்டு வணிகப்படையெடுப்பும்

பெரும்பான்மை மக்கள் இந்த அஜல்குஜால் கார்ப்பரேட் கிரிமினல்களையும் அவர்களின் சுரண்டல்களுக்கும் தகிடுதித்தத்தங்களுக்கு துணைபோகும் அரசியல்வாதிகளையும், பெரு வணிகன் - அரசன் கூட்டணியை உடைக்கவில்லையென்றால் கம்பெனிகளின் சர்வாதிகாரமும் அரசியல்வாதிகளின் அராஜகமும் ஜனநாயகமென்ற பெயரில் செயல்படும். மக்கள் நலன் முற்றிலும் புறக்கணிக்கப்படும். மக்கள் குரல் ஒடுக்கப்படும்.

இக்கட்டுரைக்கு உதவியவை


1. இந்தியப் பொருளாதாரத்தின் கூறுகள் : தொழில் துறை சட்டச்சீர்திருத்தங்கள் எப்படி அமுலாக்கப்படுகின்றன (இணையம்)

2. தொழிலாளர் மற்றும் பணிக்கமர்த்தும் சட்டங்கள் - லலித் பாசின் (இணையம்)

3. மனித முகத்துடன் தொழில்துறை சட்டச் சீர்திருத்தங்கள் - எம்.எல்.தார் (ப்ரஸ் இன்பர்மேஷன் பீரோ, இந்திய அரசு)

மகத்தான திரும்புதல் குறித்து ஓர் கனவு

சல்மான் ருஷ்டி
தமிழில் சா. தேவதாஸ்



வியாழன், ஏப்ரல் 6

நான் இந்தியாவிலிருந்து பலமுறை கிளம்பியிருக்கிறேன். எனக்குப் பதின்மூன்றரை வயதாயிருந்த போது முதல் தடவையாகக் கிளம்பி இங்கிலாந்தின் ரக்பியிலுள்ள பள்ளிக்கூடத்திற்குப் போனேன். நான் போவதை என் அம்மா விரும்பவில்லை. ஆனால் நான் போவேன் என்று கூறிப்போனேன். என் வாழ்வை எப்போதைக்குமாக மாற்றிடப் போகும் காலடியை எடுத்து வைக்கின்றேன் என்பதை அறியாமலேயே, ஜனவரி 1961ல் பரபரப்புடன் மேற்கில் பறந்தேன். சில வருடங்களுக்குப் பின் என் அப்பா, மும்பையிலிருந்து எங்கள் விண்ட்சர் இல்லத்தை எனக்குச் சொல்லாமலேயே திடீரென்று விற்றுவிட்டார். இதனைக் கேள்விப்பட்ட தினத்தன்று என் பாதங்களுக்கு கீழே பாதாளம் ஒன்று பிளந்து கொண்டதாய் உணர்ந்தேன். அவ்வீட்டை விற்றதற்காக என் தந்தையை நான் ஒரு போதும் மன்னிக்கவில்லை என்றெண்ணுகிறேன். மற்றும் அவர் விற்காது இருந்திருந்தால் இன்னமும் அதிலே தான் வாழ்ந்து

கொண்டிருப்பேன் என்று நிச்சயமாக சொல்லமுடியும். அதிலிருந்து எனது பாத்திரங்கள் அடிக்கடி இந்தியாவிலிருந்து மேற்கு நோக்கிப் பறந்துள்ளன. ஆனால் ஆசிரியரின் கற்பனையோ, நாவல் மாற்றி நாவலாக அதனை நோக்கித் திரும்பியுள்ளது. ஒருவேளை தேசத்தினை நேசித்தல் என்பது இதுவாகத்தான் இருக்கமுடியும். அதன் வடிவமும் உங்களுடையதே. நீங்கள் சிந்திக்கின்ற உணருகின்ற மற்றும் கனவு காண்கின்ற வடிவம் அதனை நீங்கள் ஒரு போதும் விட்டு வெளியேறலாகாது.

*1947*ன் பிரிவினைப் படுகொலைகளுக்கு முன் என்பெற்றோர் டெல்லியை விட்டுக் கிளம்பி தெற்கு நோக்கி வந்தனர். சமயச்சார்பற்ற சர்வதேசப்பாங்கான மும்பையில், பிரச்சனைகள் அதிகம் இருக்காது என்று சரியாகவே எண்ணியிருந்தனர். அதன் காரணமாக சகிப்பு நிறைந்ததும் பரந்த மனோபாவம் மிக்கதுமான அந்நகரில் வளர்ந்தேன். அதற்கே உரித்தான பண்பினை விடுதலை எனலாம் - எனதாக்கி கொண்டாடப்படுவதற்கு அப்போதிலிருந்து முயன்று வந்து கொண்டிருக்கிறேன். இந்த ரீதியிலான எனது இலக்கிய நில மீட்பில் (Midnight's Children) *(1981)* எனது முதல் முயற்சியாகும்.
லண்டனில் வாழ்ந்து கொண்டு, இந்தியாவைத் திரும்பப் பெற்றுக் கொள்ள ஆசைப்பட்டேன். இந்திய வாசகர்கள் ஆனந்தத்துடன் அப்புத்தகத்தை தங்களுடன் சேர்த்து வைத்துக் கொண்டதும், வேட்கையுடன் என்னைத் தங்களுடையவனாகக் கோரியதும், என் எழுத்துலக வாழ்வின் விலைமதிப்பற்ற நினைவாக நிற்கிறது.

*1988*ல் என் புதிய நாவலுக்காக நான் பெற்ற முன்பணத்தைக் கொண்டு எனக்கென்று இந்தியாவில் ஒரு வீடு வாங்க திட்டமிட்டுக் கொண்டிருந்தேன். அந்த நாவலோ (The Satanic Verses) ஆக இருந்ததால் அது வெளியான பின் என்னைப் பொறுத்தவரையில் இவ்வுலகம் மாறிப் போனது மற்றும் கலை உத்வேகத்திற்கான எனது பிரதான ஆதாரமாயிருந்துள்ள நாட்டில் காலடி எடுத்து வைக்கமுடியாமல் போனது. விசா கிடைக்குமா என்று நான் விசாரித்த போதெல்லாம் கிடைக்காது என்பதே தவறாமல் எனக்குக் கிடைத்த வார்த்தை. கோமேனியின் தண்டனை அறிவிப்பைத் தொடர்ந்து வந்த இருண்ட தசாப்தம், இந்தப் பிணக்கினை விடவும் கூடுதலாக என்னைப் புண்படுத்தினாலும் அது ஒரு பொருட்டில்லை. ஏற்கப்படாத தாங்கிக் கொள்ள இயலாத காதலுடன் துரத்தியடிக்கப்பட்டு தனியே விடப்பட்ட காதலனாக நானுணர்ந்தேன். காதல் விட்டுச் செல்லும் துளையின் பருமனைக் கொண்டே, அதனை அளவிட முடியும்.

அது ஒரு ஆழமான பிரிவென்பதை ஒத்துக்கொண்டாக வேண்டும். The Satanit Verses - நாவலைத் தடை செய்த முதல்நாடு இந்தியாதான். இந்த விவகாரங்களில் உள்ள நடைமுறையைப் பின்பற்றாமல் விலக்கப்பட்டது. முஸ்லீம் வாக்குகளை பெறவேண்டும் முயற்சியில், ராஜீவ் காந்தி தலைமையிலான பலவீனமான காங்கிரஸ் அரசாங்கத்தால் நாட்டுக்குள் நுழையும் முன்பே தடைசெய்யப்பட்டது.

அதன் பின்னர் இந்திய அதிகாரிகள் ரணத்தில் உப்புத் தோய்ப்பதில் தீர்மானகரமாய் இருந்தனரோ என்று சிலவேளைகளில் தோன்றிற்று. நாவல் 1995ம் ஆண்டின் இலையுதிர்காலத்தில் வெளியானபோது, மும்பையில் பால் தாக்கரேயின் மிருகத்தனமான சிவசேனாவை (சுதந்திர உணர்வுடன் கூடிய அந்த நகரின் வெளிப்படையான தன்மையை அது அதிகமும் சிதைத்திருப்பதால், அதனை நான் என் நாவலில் கிண்டலடித்திருந்தேன்) ஆறுதல் படுத்தும் முயற்சியில் இந்திய அரசாங்கம் அதன் இறக்குமதியைத் தடுத்து நிறுத்திற்று. ஆனால் நீதிமன்றத்திற்கு பிரச்சனை கொண்டு போகப்பட்டதும் பின்வாங்கிற்று. நாவலினை, என்னால் தயாரிக்கப்பட்ட திரைக்கதையுடன் 5 மணிநேரப் படமாக்கும் (BBC) பிபிசியின் முயற்சிகள் இந்தியாவில் மறுதலிப்பால் நின்றுபோயின. வெளியீட்டினை சமீபத்தில் அவ்வளவு அங்கீகாரத்துடன் ஆனந்தத்துடனும் கொண்டாடிய நாட்டில் அது திரைப்படமாக்கத் தகுதியற்றதாகக் கருதப்பட்டது மோசமானதும், தாங்கிக் கொள்ள இயலாததுமான அதிர்ச்சியுமாகும்.

இன்னும் சிறிய, ஆனால் இன்னும் புண்படுத்தி வருகின்ற தாக்குதல்கள் இருந்தன. லண்டனிலுள்ள பண்பாட்டுப் பிரிவான நேருமையத்திற்கு நான் பல ஆண்டுகள் ஆகாதவனாக, இந்தியத் தூதரக அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டிருந்தேன். இந்திய சுதந்திரத்தின் 50 ஆம் ஆண்டு நிறைவு கொண்டாட்டத்தின் போது, நியூயார்க்கில் இந்திய தூதரகத்தால் இதே போன்று விலக்கப்பட்டேன்.

இதற்கிடையே இந்தியாவின் இலக்கிய வட்டாரங்கள் சிலவற்றில் என் எழுத்தை இழிவுப்படுத்துவது மோஸ்தராகி இருந்துள்ளது. The Satanic Verses மீதான தடை என்னும் நீடிக்கின்றது. செப்டம்பர் 24, 1998 ஆம் ஆண்டில் பிரிட்டன் மற்றும் ஈரான் அரசாங்கங்களுக்கு இடையே ஒப்பந்தங்கள் ஏற்பட்டு, கோமேனியின் தண்டனைச் சட்டம் ஓரங்கப்பட்டப்பட்ட பின், இந்தியாவிலும் நிலவரம் மாறத் தொடங்கிற்று. ஓராண்டுக்கு முன்னர்தான் இந்தியா எனக்கு 5 ஆண்டு விசா வழங்கிற்று. ஆனால் உடனே டெல்லி ஜும்மா மஜித்தின் இமாம் புகாரி போன்ற இஸ்லாம் தீவிரவாதிகளின் மிரட்டல்கள் இருந்தன. நான் இந்தியாவுக்கு வருவது நல்லதல்ல என்று சில பத்திரிகையாளர்கள் ஆலோசனை கூறினர். ஏனெனில் நான் வந்தால், இந்து தேசியவாத பாரதீய ஜனதா கட்சி அரசாங்கத்தின் பகடைக்காயாகவே தோற்றமளிப்பேன் என்றனர். நான் பாஜக ஆளாக ஒரு போதும் இருந்ததில்லை, ஆனால் அது தமது சயமச்சார்பான நோக்கங்களுக்காக என்னைப் பயன்படுத்திக் கொள்வதிலிருந்து அவர்களைத் தடுத்துவிடாது.

நாடு நீங்குதல் மகத்தான திரும்புதல் குறித்த ஒரு கனவு என The Satanic Verses- ல் ஓரிடம் வருகின்றது. ஆனால் அக்கனவு மங்குகிறது. கற்பிதம் செய்யப்பட்ட திரும்புதல் மகத்தானதை உணர்வதினின்றும் நிறுத்திக் கொள்கிறது. கனவு காண்பவன் விழித்தெழுகிறான். நான் அநேகமாக இந்தியாவை

இழந்திருக்கிறேன். காதல் விவகாரம் முடிந்து போனது நல்லதுக்குத்தான் என்று அநேகமாக நம்பினேன்.

ஆனால், அப்படி ஆகவில்லை. பன்னிரண்டரை ஆண்டுக்கால இடைவெளிக்குப் பின் நான் டெல்லிக்குப புறப்படபோகிறேன். இருபது வயதான என் மகன் ஜாஃபர் என்னுடன் வருகின்றான். மூன்று வயதிலிருந்து இந்தியா வந்திராத அவன், மிகவும் பரபரப்பாயிருக்கின்றான். எனினும், என்னுடன் புறப்படுகையில் அவனுடையது, அடங்கியதும் அமைதி கொண்டதுமான சித்திரமே.

வெள்ளி, ஏப்ரல் 7

தொலைபேசி ஒலிக்கின்றது. என் வருகை குறித்து டெல்லி போலீசார் மிகவும் பதற்றம் கொண்டுள்ளனர். விமானத்தில் நான் கண்டுகொள்ளப்படுவதை தயவு கூர்ந்து நான் தவிர்க்கக் கூடுமா? என் வழுக்கைத் தலை மிகவும் எளிதாக அடையாளங் காணப்படக் கூடியது. தயவு கூர்ந்து நானொரு தொப்பி அணிந்து கொள்ளக்கூடுமா? என் கண்களும் கூட லகுவில் கண்டுக் கொள்ளக்கூடியது. தயவு கூர்ந்து நான் கண்ணாடி போட்டுக்கொள்ள முடியுமா? என் தாடி கூட காட்டிக் கொடுத்துவிடுமே அதனைச் சுற்றி ஒரு ஸ்கார்ப் போட்டுக்கொள்ள முடியுமா?. இந்தியாவில் வெப்பநிலை சுமார் 100°F ஒரு ஸ்கார்ஃப் இன்னும் வெதுவெதுப்பாக்கிவிடும் என்று சுட்டிக்காட்டுகிறேன். அப்படியா, பருத்தியிழை ஸ்கார்ஃப்புகள் உள்ளன.

இவ்வேண்டுதல்களை என் வழக்குரைஞர் விஜய் சங்கரதாஸ் மூலமாக இரகசியக்குரலில் எனக்கு அஞ்சல் செய்யப்படுகின்றன. என் தலையை காகிதப் பையில் சுற்றிக்கொண்டு எனது ஒட்டுமொத்தப் பயணத்தையும் கழிக்கட்டுமா என்று கோபத்துடன் கேட்கிறேன். இங்கே ஏகப்பட்ட பதற்றம், நானே கவலையாயிருக்கிறேன், சல்மான் என்றார் விஜய் கவனமாக.

நான் டெல்லிக்குப் பயணம் செய்யக் காரணமாக காமன்வெல்த் எழுத்தாளர்கள் பரிசு அமைப்பாளர்கள் எனக்குக் கவலையான செய்திகள் அனுப்பிக் கொண்டிருக்கின்றனர். இந்நிகழ்வில் பத்திரிகைத் தொடர்பாளர் பொறுப்பிலுள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. பவன் வர்மா, இதுபற்றியெல்லாம் கவலைப்படாது பத்திரிகையாளர்களை வரவழைத்து பரிசளிக்கும் நிகழ்வில் நான் கலந்துகொள்வேன் என்கிறார். இதற்கு மாறான வகையில் இப்பரிசை வழங்கும் காமன்வெல்த் அமைப்பின் தலைவராக காலின்பால், இந்நிகழ்வுக்காக கிளாரிட்ஜ் ஒட்டலுக்கு வருகின்ற இருபதுக்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பிரமுகங்களுக்கு போலீஸ் பாதுகாப்பு தரப்படவில்லை எனில் எனக்கான அழைப்பினை அவர் விலக்கிக் கொள்ள நேரலாம் என்கிறார் விஜயிடம் - நான் கிளாரிட்ஜில் தங்கப்போவதில்லை மற்றும் பிரதிநிதிகளை யாரும் மிரட்டியிருக்கவில்லை, அவர்கள் அபாயத்தில் இருப்பதாக இந்திய அதிகாரிகளும் கருதவில்லை என்ற போதிலும் இப்போதுள்ள ஒரே மிரட்டல் திரு. பாலினுடையதே.

இப்போது நிலைமை சரியாக இருப்பதால் இது போக வேண்டிய நேரமென்று நான் முடிவு செய்து இருப்பதால், நான் இந்தியாவுக்குப் போய் கொண்டிருக்கிறேன். நான் போகாவிடில் போவதா/ வேண்டாமா என்பது பற்றி ஒரு போதும் நான் அறிந்து கொள்ளப்போவதில்லை என்பதால் போய்க்கொண்டிருக்கிறேன். இந்தியாவுக்கும் எனக்கும் இடையே இவ்வளவு நடந்திருந்தும, என் இருதயத்தில் காயங்கள் இருந்தும், காதலின் வளையம் வெளியே வரமுடியாதபடி ஆழத்தில் இருந்ததால், நான் போய்க்கொண்டிருக்கிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக நான் கூட வரவேண்டுமென்று ஜாஃபர் கேட்டுக்கொண்டதால் போய்க்கொண்டிருக்கிறேன். அவனது இன்னொரு நாட்டுடன் அவன் மறுஅறிமுகம் செய்து வைத்திட சரியான நேரம்.

ஆனால் எதை எதிர்ப்பார்ப்பது என்பதை அறியாதிருந்தேன் என்பதே உண்மை. வரவேற்கப்படுவதாக உணர்வேனா (அ) ஒதுக்கித்தள்ளப்படுவதாகவா? ஹலோ சொல்வதற்காகத் திரும்புகின்றேனா அல்லது விடைபெற்றுக் கொள்ளவா என்பது எனக்குத் தெரியாது. இவ்வளவு மிகையுணர்ச்சியுடன் இருப்பதை நிறுத்துங்கள், சல்மான். பாதி வழியில் சிக்கலைத் சந்திக்க வேண்டாம். விமானத்தில் ஏறுங்கள், செல்லுங்கள்.

ஆக நான் டெல்லிக்குப் பறந்து போகின்றேன். நான் பறப்பதை யாரும் கண்டுகொள்ளவில்லை. இங்கே புலப்படாத நபர் ஒருவர் வர்த்தகப்பிரிவு இருக்கையில் இருக்கிறார். ஈரான் முதலான நாடுகளில் வழியே விமானம் பறந்து போகையில், சிறிதாக துருத்திக்கொண்டிருக்கும் திரையில் பெட்ரோ ஆல்மோடவாரின் திரைப்படத்தை அவர் பார்த்துக் கொண்டிருக்கிறார். இங்கே புலப்படாத நபர் தூக்கத்தின் முகமூடியில் குறட்டை விட்டுக் கொண்டிருக்கிறார்.

மற்றும் பயணம் முடிந்து டெல்லி சர்வதேச விமான நிலையத்தின் வெம்மைக்குள் ஜாஃபருடன் காலடி எடுத்து வைக்கின்றேன். - விஜய் சங்கர்தாஸ் மட்டுமே எங்களைக் கண்டுக்கொள்ள முடியும். மாய யதார்த்தம் ஆட்சி புரிகின்றது. எப்படி அது நிகழ்கிறது என்றென்னைக் கேட்காதீர்கள். புத்திசாலி வித்தைக்காரன் தன் தந்திரத்தை சொல்லவே மாட்டான்.

தரையை (அ) விமானநிலையத்தின் நீலத்தரை விரிப்பை முத்தமிடத் துடிக்கிறேன். ஆனால் பாதுகாப்பு போலீசாரின் சிறிய படையின் கவனமிகு கண்களின் முன்னே அப்படிச் செய்வது சிக்கலென்று உணர்கிறேன். தரை விரிப்பினை முத்தமிடாது, விமான நிலையத்திலிருந்து எனது சொந்த நகரமான மும்பையின் ஈரத்துண்டின் கட்பத்திலிருந்து மிகவும் மாறுபட்ட, தகிப்பதும் எலும்வரை வறுத்தெடுப்பதுமான டெல்லியின் வெம்மைக்குள் நகர்கின்றேன். சூடான பகல், தழுவலைப்போல எங்களை கவித்துக் கொள்கிறது. சாலை ஒன்று தரைவிரிப்பென எங்கள் முன்விரிந்து செல்கின்றது. பிரிட்டனில் எப்போதோ காலாவதியாகவிட்ட Moris Oxford வண்டியின்

இந்திய வடிவமாக உயர்ந்துக் கொண்டிருக்கும் வெள்ளை நிற இந்துஸ்தான் அம்பாஸிடரில் ஏறினோம். அம்பாஸிடரின் குளிர்சாதனம் செயல்படவில்லை.

திரும்பிவிட்டேன்.

சனி, ஏப்ரல் 8

இந்தியா, சம்பிரதாயம் பார்க்காது, முடிவுறாத அதன் விவாதித்தினூடே என்னைத் தள்ளிவிட்டபடியும் எப்போதும் போல எனது முழுக் கவனத்திற்காக ஆர்பரித்தபடியும், எல்லாத் திசைகளிலிருந்தும் விரைந்து வந்தது. கரப்பான் பொறிகளை வாங்குகள் Drink Hellow Mineral Water! வேகம் உற்சாகம் தரும் ஆனால் கொன்றுவிடும் என்று கூச்சலிடுகிசன்றன விளம்பரப்பலகைகள். புதுவிதமான செய்திகளும் உள்ளன. Enroll for Oracle 81. Graduate with Java as well. மற்றும் நீண்ட காலமாயிருந்த பாதுகாப்பிலான ஆண்டுகள் முடிந்துவிட்டன என்பதன் நிரூபணமாக பழிவாங்களுடன் கோகோ - கோலா திரும்பி வந்து இருக்கிறது. கடைசியாக நான் இங்கிருந்த போது அது தடைசெய்யப்பட்டிருந்தது. அருவருப்பூட்டும் அதன் உள்ளூர்ப் போலிகளான Campa - Colo-க்கும், Thums-up க்கும் வழிவிட்டு. இப்போது ஒவ்வொரு நூறு கெஜத்திற்கு ஒரு தரம் சிவப்பு Coke விளம்பரம். அப்போதைய கோக்கின் வாசகம் ரோமன் லிபியில் இந்தியமொழியில் எழுதப்பட்டிருக்கிறது. Jo Chalo Ho Jaaye. நீங்கள் ஆசைப்படுவதெல்லாம் வந்து சேரட்டும் என்று இதனை மொழி பெயர்க்கலாம்.

இதனை ஆசீர்வாதமாய் எண்ணிக்கொள்ள முடிவு செய்கிறேன்.

Horn Please, சாலையை அடைத்து நிற்கும் பத்து லட்சம் வாகனங்களின் பின்னுள்ள வாசகங்கள் கோருகின்றன. இந்தியத் தெருவின் பழமையான இசைக்கோவையை உற்சாகமாக நிகழ்த்தியபடி லாரிகள், கார்கள், பைக்குகள், ஸ்கூட்டர்கள், வாடகைக் கார்கள், ஆட்டோக்கள் என மற்ற அனைத்து வாகனங்களும், ஜாஃபரையும் என்னையும் நகரில் வரவேற்கின்றன.

Wait for side! Sorry - Bye - Bye! Fatta Buy!

இந்தியா பாகிஸ்தானிடையே வழக்கம் போல விரோதம் நிலவுகின்றது. ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக சமீபத்தைய இராணுவத் தலைவர் பர்வேஸ் முஸராஃபினால் நிகழ்த்தப்பட்டதாகத் தோன்றும் நாடகத்திற்கு பிறகு, பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷரீப் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தான் புதிதாக ஏவியுள்ள சாஹீன்-II ஏவுகணைச் சம்பவத்துடன் இதனை இணைத்துப் பார்க்கும் ஆவேசமிக்க இந்தியப் பத்திரிகையாளர்கள், இருநாடுகளுக்கிடையேயான உறவு மோசமாகி வருவது குறித்து எச்சரிக்கின்றனர். பாரதீய ஜனதா கட்சியின் அரசியல்வாதி ஒருவர், பாகிஸ்தான் ஆதரவு மற்றும் இந்திய - எதிர்ப்பு வாசகங்களை வெளியிட்டார் என்று சொல்லி அவை இராஜத்துரோகப் பேச்சுக்கள்

என்று இமாம் புகாரி மீது குற்றஞ்சாட்டுகிறார். எப்போதும் போல் உலவு நிலைகள் மேம்பட்டதில்.

இந்தியத் துணைக் கண்டத்திற்குச் சமீபத்தில் வந்திருந்த பில் கிளிண்டன், தவிர்க்க முடியாதபடி இப்படியான விநோதங்களுக்குள் சிக்கப்பட்டார். பெரும்பாலும் சரியாகப் பேசினார் என்று இந்தியத் தரப்பிலிருந்து கருதினர். பாகிஸ்தானின் சர்வாதிகாரம், அதன் அணுகுண்டு, தாராளமற்ற போக்கு போன்றவை மீதான அவரது கண்டனம் அவருக்குப் பல நண்பர்களைப் பெற்றுத் தந்தது. இம்மண்டலத்தில் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் அடிப்படை, கிளிண்டனின் தொடரில் குறிப்பிடுவதானால், பாகிஸ்தானை நோக்கிய சாய்வு என்பதை பல ஆண்டுகளாக இந்தியர்கள் உறுதிபடக் கொண்டிருந்தும்.

நான் வந்து சேரும்போது, கிளிண்டன் வருகைக்குப் பின்னான மின் பிரகாசத்தில் இந்தியா ஒட்டுமொத்தமாக திளைத்துக் கொண்டிருக்கிறது. சாதகக்காரர் மீண்டும் காத்திருக்கிறார். மும்பையின் திரை உலகம் பரபரப்பாயிருக்கிறது. அமெரிக்காவின் பாரிய தந்தையிடம் இந்துஸ்தானி இதயங்கள் சரணடைந்தன என்றெழுதுகிறது. ஒரு திரையிதழ் அந்நகரக்கே உரித்தான நடையில் Sexy Babe என்று விவரிக்கப்படும் சுபா ரங்கநாதன் என்னும் சிறிய நடிகை, கிளிண்டன் மீது வியப்புற்று, ஆச்சரியகரமானவர், அணுகக் கூடியவர் மற்றும் மக்களின் இதயத் துடிப்பை அறிந்தவர் என்கிறார்.

அரசியல்வாதிகளின் அந்தரங்க வாழ்க்கை பற்றி இந்தியர்கள் கவலைப்படுவதில்லை என்கிறார். குறிப்பிடத்தக்க கலை விமர்சகரான கீதா கபூர் என்னும் எனது நண்பர். மூத்த பிஜேபி தலைவர் ஒருவர் ஆண்டுக்கணக்கில் ஒரு காமக்கிழத்தியை வைத்திருந்தார் அது எந்தவிதத்திலும் அவரது அரசியல் வாழ்வைப் பாதிக்கவில்லை. ஆகவே இந்தியர்கள் லிவின்ஸ்கி விவகாரத்தை குறுகலான திகைப்புடன் நோக்குகின்றனர்.

நான் திரும்பி வந்து ஒரு கணமே ஆகிறது. விஜய் சங்கர்தாஸ் மற்றும் நண்பர்கள் என நான் தொடர்பு கொள்ளும் ஒவ்வொருவரும், போலீஸார் கூட இந்திய அரசியலின் புதுவடிவம் குறித்த தம் அபிப்பிராயங்களால் என்னைத் திணற அடிக்கின்றனர். மும்பை இந்தியாவின் நியூயார்க் என்றால் பகட்டான கவர்ச்சியான கொச்சையான ஒரு வர்த்தக நகரம், ஒரு திரைப்பட நகரம், ஒரு சேரி நகரம், நம்பமுடியாதபடி செல்வம் நிறைந்த கேடான வகையில் ஏழ்மையும் கொண்ட நகரம் - டெல்லி, வாஷிங்டன் போன்றது. [illegible] அரசியலே. நீண்ட நேரத்திற்கு வேறு விஷயம் பற்றி யாரும் பேசுவதில்லை.

ஒரு காலத்தில், நாட்டின் ஒரேயொரு ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் இயந்திரமான இடது சார்புள்ள காங்கிரஸை, இந்தியச் சிறுபான்மையினர் பாதுகாப்பின் பொருட்டு நாடினர். இப்போது காங்கிரஸின் சிதறிப்போன தன்மை, எந்த பக்கமாக அது சரிந்துள்ளது என்பதை எங்கு பார்த்தாலும் வெளிப்படையாகத் தெரிகிறது. ஒரு

காலத்தில் வலுவான இயந்திரமாயிருந்தது. சோனியாகாந்தி தலைமையின் கீழ் சோம்பிப் போய் துருப்பிடித்துக் கொண்டிருக்கிறது.

சோனியா கட்சித்தலைமைக்கு வந்தது கட்சி மீதான அவரது அக்கறை காரணமாகவே என்று வற்புறுத்துகின்றனர். பல ஆண்டுகளாக அவரை அறிந்திருப்பவர்கள். முழுவதுமாக அதிகாரத்தால் வசப்படுத்தப்பட்டு, ஆனால் அதனைக் கைக்கொள்ள இயலாது, திறமையோ வசீகரமோ, நெடுநோக்கோ எதுவுமில்லாது அதிகாரவேட்கை தவிர்த்த வேறெதுவுமல்லாது இருக்கும் பெண்ணின் உருவச்சித்திரம் தீட்டப்படுகிறது. அவரைச் சுற்றிலும் உள்ள அடிமைச் சேவகர்களான நேரு - காந்தி வம்சத்தினர், புதிய தலைவர்களை - பி. சிதம்பரம், மாதவராவ் சிந்தியா, ராஜேஸ் பைலட் ஆகியோரை கட்சியின் நான்களைப் புத்துயிர்ப்பு கொள்ள வைக்கும் பொலிவும் உறுதிப்பாடும் கொண்டவர்கள் ஆனால் தலைமை தாங்கி நடத்திட அனுமதிக்கப்பட முடியாதவர்களாதலால், அப்பொறுப்பு சோனியாவுக்கும் அவர்தம் பிள்ளைகளுக்குமே உரியதாக ஆக்கிஇருக்கின்றனர்.

கடைசியாக நான் இந்தியாவில் இருந்தது, 40வது சுதந்திர தின நிறைவினை தொலைக்காட்சிப் படமாக ஆக்கிக் கொண்டிருந்த போது. செங்கோட்டையில் பள்ளிச் சிறுவனின் உடைந்த இந்தியில் சலிப்பூட்டும் சொற்பொழிவினை ராஜீவ்காந்தி நிகழ்த்தும் போது பார்வையாளர்கள் அப்படியே வெளியேறினதை நான் ஒரு போதும் மறந்திருக்கவில்லை. இப்போது அவரின் விதவை தொலைக்காட்சியில், இன்னும் மோசமான இந்தியில் ஆட்சி புரிவதற்கான தன் உரிமையில் திருப்தி கொண்டு, ஆனால், அநேகமாக தன்னைத் தவிர வேறு யாரையும் திருப்தியடையச் செய்யாது, பேசிக் கொண்டிருக்கிறார்.

இன்னொரு விதவை ஞாபகத்திற்கு வருகிறார். 1987ம் ஆண்டின் ஆவணப்படத்தில், காங்கிரஸ்காரர்களால் ஏவிவிடப்பட்ட கும்பல்களால் கொலை செய்யப்பட்ட தன் கணவனையும் மகன்களையும் கண்டிருந்த ராவெல் கவுர் என்னும் சீக்கியப் பெண்ணின் பேட்டியைச் சேர்ந்திருந்தோம். சமீபத்தில் தன் சீக்கியப் பாதுகாவலர்களால் இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட, ஒட்டுமொத்த சீக்கிய சமூகமே அதற்கான விலையைத் தந்து கொண்டிருந்தது. பலகொலைகாரர்களை அடையாளங்காட்டும் வலுவான சாட்சியம் இருந்தும், ராஜீவ் காந்தி அரசாங்கம் யார் மீதும் வழக்குத் தொடுக்கவில்லை.

ராஜீவ் காந்தியைப் பல ஆண்டுகளாக அறிந்து வந்துள்ள விஜய் சங்கர்தாஸுக்கு அந்நாட்கள் மயக்கத்தைப் போக்கிய நாட்களாகும். தமது சீக்கிய அண்டை வீட்டாரைப் பாதுகாப்பதற்காக விஜயும் அவரது மனைவியும் அவர்களைத் தம் வீட்டில் ஒளித்து வைத்தனர். இக்கொலைகளைத் தடுத்து நிறுத்திட ஏதேனும் செய்ய வேண்டும் என்று ராஜீவ் காந்தியிடம் கோருவதற்காக சென்றபோது ராஜீவின் மோசமான அலட்சியத்தால் திகைத்துப்போயினர். ராஜீவின் நெருக்கமான உதவியாளர்களுள் ஒருவரான அர்ஜுன்தாஸ் இன்னும் மோசமாக

எதிர்வினை செய்தார். கயவாளிகளை ஒழித்துக்கட்டுங்கள் பிற்பாடு, அவரும் கொல்லப்பட்டார்.

சீக்கிய விதவையின் பேட்டியின் பொருட்டு, எங்கள் படத்தை காட்டவிடாமல் தடுப்பதற்காக ராஜீவ் காந்தி அரசாங்கம், லண்டனிலுள்ள இந்தியத் தூதுவரகம் மூலம் தன்னால் முடிந்தவரை எல்லாம் செய்து பார்த்தது. சீக்கிய எதிர்ப்பு பயங்கரவாதத்திற்குப் பலியானவர்தானே ஒழிய தான் ஒரு சீக்கிய பயங்கரவாதி அல்ல என்ற போதும் தனி நாடு கோரும் தீவிர சீக்கிய கோரிக்கைக்கு அவர் எதிரானவர் என்ற போதும், இறந்தவர்களுக்கான நியாயம் தவிர்த்து வேறெதுவும் கோராதவர் என்றபோதும், அவரது குரலை நெறித்திட இந்தியா முற்பட்டது. அதில் தோற்றுவிட்டது என்று கூறுவதில் சந்தோஷப்படுகிறேன்.

ஏகப்பட்ட விதவைகள். Midnight's Children-நாவலில் இந்தியாவில் அதிகாரத்திற்கு வந்த முதல் விதவை திருமதி. இந்திராகாந்தியை அங்கதம் செய்திருந்தேன். எழுபதுகளின் மத்தியில் அரைபாதி சர்வாதிகாரமான அவசர நிலையின் போது, அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியமைக்காக.

இந்திய-கனடா திரைப்பட இயக்குநர் தீபா மேத்தாவின் முடிவுறாத Water படத்திலும் விதவைகள் முக்கிய இடம் பெறுகின்றனர். கணவரை இழந்து வருந்துவதற்காகவும் வேண்டிக் கொள்வதற்காகவும் விதவைகள் வருகின்ற புனித கங்கையின் கரைகளில் உள்ள வாரணாசி நகரின் விதவையர் இல்லத்தில் அதன் ஒரு பகுதி படமாக்கப்பட்டது. தீவிரவாத இந்துக் குழுக்களின் மிரட்டல்களால் படமாக்கம் நிறுத்தப்பட்டது. படத்தை முடிக்கும் தன் முயற்சிகளை கைவிட்ட மேத்தா, விரக்தியுடன் கனடா திரும்பினார்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் Midnight's Children-னின் இறுதிக்காட்சிகள் கூட வாரணாசியின் விதவையர் இல்லத்தில்தான் அமைக்கப்பட்டன. இது முற்றிலும் தற்செயலானது ஆனால் இன்னொரு எழுத்தாளரான சுநீல் கங்கோபாத்யாயா, தீபா மேத்தா மீது கடுமையான குற்றச்சாட்டுக்கள் சுமத்தினார். அவரது Those Days-நாவலின் கணிசமான பகுதிகள் திருடப்பட்டு, தீபாமேத்தாவின் திரைக்கதையில் சேர்க்கப்பட்டிருந்தன என்று. கங்காபாத்யாயாவின் புத்தகத்தால் உத்வேகம் கொண்டிருந்ததை ஒத்துக்கொண்ட மேத்தா, திருட்டினை மறுத்தார். கங்கோபாத்யாயாவின் மொழிபெயர்ப்பாளர் அருணா சக்ரவர்த்தி, கங்கோபாத்யாயாவின் இதிகாச நாவலைப் போல அறிவு விளக்கம் பெற்றதாக இல்லாது தேங்கிப் போயிருக்கும் திரைக்கதை தரம் தாழ்ந்தது என்று பதிலடி தந்தார்.

இந்தியக் கலாசார மேல்தட்டினரின் பெரும்பான்மையோர் தீபா மேத்தாவுக்கு அரை மனதான ஆதரவு தந்தமைக்கு, திருட்டுக் குற்றச்சாட்டு ஒரு காரணமாகும். தீபா மேத்தா வெளியிட்ட பல அறிக்கைகள், அவரது எதிர்ப்பாளர்களின் போக்கை இன்னும் கடுமையாக்கி, படம் நிறைவுறாது செய்துவிட்டன. அவர் முதலில்

படத்தை முடித்துவிட்டு, அப்புறம் கூச்சலிட்டிருக்கவேண்டும் என்கின்றனர் மக்கள்.

இச்சம்பவம் பாரதீய ஜனதா கட்சியின் இரு முகங்களையும் தெளிவுப்படுத்துகிறது என்று வாதிடுகிறார் ஓவியர் விவான் சுந்தரம். ஆரம்பத்தில் படத்திற்கு அனுமதியளித்த வாஜ்பாய் அரசாங்கத்தின் மிதவாத போக்கு கட்சி அணியினரின் தீவிரப் போக்கு - அவர்களின் கும்பல்கள் படத்திற்கான அரங்குகளை கங்கையில் தூக்கி எறிந்து, மேத்தாவின் உயிருக்கு மிரட்டல்கள் விடுத்தன.

இப்போதெல்லாம் காங்கிரஸுக்கு விநோதமான நண்பர்கள் இருக்கின்றனர். அதன் நெருங்கிய சகாக்களின் மோசமான தகுதியை வைத்து அதன் சிதைவை அளவிட்டுவிடலாம். The Ground Beneath their Feet - நாவலில் இடம்பெறும் மோசமான ஊழல் பேர்வழிகளான மும்பை அரசியல்வாதிகள் பிலு மற்றும் கோல்மடால் வித்வாலா விற்கு முன்மாதிரிகளான பீகார் மாநிலத்தின் லாலுபிரசாத் யாதவ் மற்றும் அவரது மனைவி ராப்ரிதேவி ஆகியோரின் அப்பட்டமான அரசியல் இரட்டைவேடம் மீண்டும் மேடையேறியுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் உயிரோடில்லாத பசுக்களின் பராமரிப்புக்காக கோரப்பட்ட கால்நடை மானியத்தில் ஏகப்பட்ட பணத்தை சுருட்டிக்கொண்ட கால்நடைத் தீவன ஊழலில் அப்போதைய முதல்வரான லாலு சிக்கியிருந்தார் (எனது நாவலில் உயிரோடில்லாத வெள்ளாடுகளுக்காக இதுபோன்றதொரு திட்டத்தை இந்தியாவின் உயர்ரக ஊழல் பேர்வழி பிலு நடத்துகின்றார்) சிறைவைக்கப்பட்ட லாலு, முதல்வர் பதவியை மனைவிக்கு பெற்றுத்தந்து, சிறைக் கொட்டடியில் இருந்தபடியே மனைவி பெயரால் ஆட்சி நடத்திக்கொண்டிருந்தார்.

அதிலிருந்து அவர் உள்ளே போவதும் வெளியே வருவதுமாயிருக்கிறார். தற்போதைக்கு அவர் உள்ளேயும், ராப்ரிதேவி ஓட்டுநர் இருக்கையிலும் இருக்கின்றனர். இன்னொரு ரசமான ஊழல் விவகாரம் உருவாகிக் கொண்டிருக்கிறது. ஒப்பீட்டளவில் இந்தியாவின் மூத்த அமைச்சர்கள் பெறாத ஊதியம் கூட இல்லாத சாதாரண வருவாயை கொண்டு லாலுவும் ராப்ரியும் இவ்வளவு பிரம்மாண்டமான மாளிகையை எப்படி வைத்திருக்க முடியும் என்று வரிவிதிப்பு அதிகாரிகள் அறிய விரும்புகின்றனர். ராப்ரி குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். ஆனால் பதவி விலக மறுக்கிறார். அல்லது லாலு சிறையிலிருந்தபடி தன்மனைவி பதவி விலகும் பேச்சுக்கே இடமில்லை என்று அறிவிக்கின்றார்.

அங்கத நாட்டமுடைய எழுத்தாளர் என்றவகையில், அப்பட்டமான மோசடி, வெட்கங்கெட்ட தன்மை, திகைக்க வைக்கின்ற சுயங்களுடன் உள்ள லாலுவும் ராப்ரியும் மிதப்புடன் போய்க்கொண்டிருப்பது என்னும் யாதவின் சாகச சரித்திரம் எனக்குத் குதூகலத்தைத் தருகிறது. ஆனால்அவர்கள் உயர்ந்திருப்பதும் இந்திய அரசியல் ஊழலில் வளர்ந்து வரும் ஊழலின் அடையாளமே ஆகும். தெரிந்தேயுள்ள குண்டர்கள் பாராளுமன்றத்திற்குத்

தேர்ந்தெடுக்கப்பட்டு, தன் சிறைக் கொட்டடியிலிருந்தே ஒரு மாநிலத்தினை ஆட்சி புரியும் ஒருவர் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி பெறும் ஆதரவுக்குச் சற்றும் குறையாது பெறக்கூடிய தேசமாகும் இது.

ஞாயிறு, எப்ரல் 9

இருபது வயதான ஜாஃபர் பெரிய கண்ணியமான இளைஞன், தன் அப்பாவைப் போன்றில்லாமல் தன் உணர்வோட்டங்களை மறைத்துக் கொள்கிறான். ஆனால் அவன் ஆழ்ந்துணரக்கூடியவன் மற்றும் இந்தியாவிடம் தீவிரமாகவும் கவனமாகவும் ஈடுபாடு கொண்டு, தனக்கான உருவச்சித்திரத்தைத் தீட்டும் நிகழ்வினைத் தொடங்கியிருக்கின்றான். இன்னும் தெரியவராத இன்னொரு சுயத்தினை இது அவனிடமிருந்து திறந்துகாட்டக் கூடும்.

முதலில், முதல்முறையாகப் பயணிகள் கவனிக்கின்றவற்றை கவனிக்கின்றான். இரயில் தண்டவாளங்களின் ஓரங்களில் குப்பைத் தொட்டிகளென தோன்றுபவற்றில் வாழும் குடும்பங்களின் மோசமான வறுமை, தெருக்களில் கைகோர்த்து திரியும் நபர்கள், இந்திய MTV- யின் அற்பமான தன்மை மற்றும் பீதியூட்டும் மும்பை திரைப்படங்கள். பரந்துவிரிந்துள்ள இராணுவ குடியிருப்புகளை கடந்து போகிறோம் - அருகிலுள்ள பாகிஸ்தானில் இராணுவத்தினர் ஆட்சியில் சக்தியாக இருப்பது போல இந்தியாவிலும் உள்ளனரா என்று கேட்கிறான், இந்திய இராணுவத்தினர் ஒரு போதும் அரசியல் அதிகாரம் கோரியதில்லை என்று நான் சொல்லும் போது அவனுக்கு உற்சாகமாயுள்ளது.

இந்திய தேசிய உடையில் ஆர்வம் ஏற்படுமாறு அவனை நான் தூண்ட முடியாது. நான் இங்கு வந்து சேர்ந்ததுமே தொள தொளப்பான குர்தா - பைஜாமாதான் அணிந்திருக்கிறேன். ஆனால் ஜாஃபர் கலகக்காரன். இது என்பாணியில்லை என்று பிடிவாதம் காட்டும் அவன் தன் லண்டன் உடைகளையே விரும்புகிறான்.

Midnight's Children நாவல் அவனுக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டிருந்தும் (எல்லா எதிர்ப்பார்ப்புகளுக்கும் முரணாக பிற்பகலில் பிறந்த ஜாஃபர் ருஷ்டிக்கு) அவன் முதல் மூன்று அத்தியாயங்களுக்குமேல் படித்ததில்லை. உண்மையில் Haroon and the sea of stories மற்றும் East and West தவிர்த்து வேறெந்த நூலையும், முடித்திருக்கவில்லை. எழுத்தாளர்களின் பிள்ளைகள் இப்படித்தான். தம்பெற்றோர் பெற்றோராகவே இருக்கவேண்டும் தவிர நாவலாசிரியர்களாக அல்ல. ஜாஃபர் தன் அறையில் எப்போதும் எனது முழுமையான புத்தகத் தொகுப்பை பெருமிதத்துடன் வைத்திருக்கிறான். ஆனால் அலெக்ஸ் கேர்லண்டையும் பில் ப்ரைஸனையும் வாசிக்கின்றான். நானும் கவலைப்படாததாக பாவனை செய்கிறேன்.

இப்போதோ அவன், எழுத்திலும் அதே போன்று என் வாழ்க்கையிலும் குறுகிய கால பயற்சி வகுப்பினை எடுத்துக் கொண்டிருக்கிறான். பிரிவினைக்கு முன்பு செங்கோட்டையில் பல

முஸ்லீம்கள் போன்று என் மாமாவும் அத்தையும் வெளியே மூண்டிருந்த வன்முறையிலிருந்து இராணுவத்தால் பாதுகாக்கப்பட வேண்டியிருந்தனர். எனது Shame-நாவலில் இதனின் ஒரு விவரிப்பு காணப்படுகின்றது. மற்றும் பழைய டெல்லியின் பரபரப்பான பிரதான தெருவான சாந்திரி சவுக்கிலிருந்து செல்லும் சந்துகளெல்லாம் பழைய இஸ்லாமிய மொஹல்லாவில் சென்று சேரும் - இவற்றில் ஒன்றில்தான் என் பெற்றோர் மும்பை செல்வதற்கு முன் வசித்தனர். மற்றும் இங்கேதான் Midnight's Children- இன் கதை சொல்லியின் பெற்றோர் அஹமது மற்றும் அமினாசினாய், சுதந்திரத்திற்கு முந்தைய சூறாவளியை சந்தித்ததும் கூட.

இந்த இலக்கிய சுற்றுலாவையெல்லாம் ஜாஃபர் நல்லவிதமாக எடுத்துக் கொள்கிறான். வரலாற்று நகரமான இந்திரபிரஸ்தா இருந்த இடத்தின் மீது கட்டப்பட்டதாக கூறப்படும் பழைய கோட்டை பூரண க்கிலாவில்தான் ஒரு கொள்ளைக்கார கும்பலைத் திருப்தி படுத்துவதற்காக அமகது சினாய் ஒரு மூட்டை நிறைய பணத்தை விட்டுச் சென்றது. அம்மூட்டையை குரங்குகள் பிய்த்து பணத்தை சிதறடித்தன. The Moor's Last sigh - நாவலின் பாத்திரம் அரோரா ஜோகோய்பிக்கு உத்வேகமாயிருக்கும், பாதி இந்தியா, பாதி ஹங்கேரிய வேர்களைக் கொண்ட அமிர்தா ஷெர்ஜில்வின் ஓவியங்களை நவீனக் கலைக்கான தேசிய அருங்காட்சியகத்தில் பார்க்கலாம். அப்பா சரி, போதும் என்று அவன் என்னுகிறான். ஆனால் சரி, அவற்றை நான் வாசிப்பேன், இத்தடவை நிஜமாகவே வாசிப்பேன் என்று கூறமுடியாதவனாக இருக்கிறேன். (அவன் வாசிக்கப்போவதில்லை)

செங்கோட்டையில் ஓர் ஒலி-ஒளி கண்காட்சி குறித்த விளம்பரத்தைப் பார்த்துவிடும் மாத்திரத்தில் அமமா இங்கிருந்தால் இக்காட்சிக்கு வரவேண்டும் என்று பிடிவாதம் காட்டியிருப்பாா என்கிறான் திடீரென்று. ஜாஃபரின் அழகான அம்மாவும் என் மனைவியும் பிரிட்டீஸ் கலை மையத்தின் மதிப்பு வாய்ந்த இலக்கிய அலுவலரும் இளம் எழுத்தாளர்களுக்கும் சிறுபத்திரிகைகளுக்கும் காவல் தேவதையுமான கிளாரிஸ்ஸ லுவார்ட் 50வது வயதில் சென்ற நவம்பரில் மார்பகப் புற்றுநோயால் இறந்து போனாள். ஜாஃபரும் நானும் அவளின் பெரும்பகுதி இறுதி நேரங்களை அவளது படுக்கை அருகே கழித்தோம். அவன் அவளின் ஒரே குழந்தை.

1994இல் என் முதல் நாவல் Grimus- க்கு கிடைத்த முன்பணத்தை வைத்து, மலிவான ஓட்டல்கள், நீண்ட தூரப் பேருந்துகள் என்று சிக்கனமாக செலவழித்து, நான்கு மாதங்களுக்கும் மேலாக கிளாரிஸ்ஸாவும் நானும் இந்தியாவைச் சுற்றி வந்தோம். ஜாஃபரின் தாய் இந்த இடத்தின் பரிசுத்தத்தை (அ) அந்த இடத்தின் ஆரவாரத்தை எந்த அளவுக்கு விரும்புவாள் என்று நான் சொல்லத் தொடங்குகிறேன். தந்தை - மகன் சுற்றுலாவாக சிறியதாக தொடங்கியது கூடுதல் பரிமாணம் ஒன்றை பெற்றுவிடுகிறது இப்போது.

எல்லாம் நிகழ்ந்துள்ள பிற்பாடான இம்முதல் வருகை உருவாக்கப்பட்டவை என்பதை எப்போதும் அறிந்திருக்கிறேன். ஆகவே கால் வைக்கவேண்டாம் என்றெண்ணினேன். இரண்டாம் வருகை? ருஷ்டி மீண்டும் திரும்புகிறார் என்பது அவ்வளவாகச் செய்தி ஆகாது. மற்றும் மூன்றாவது வருகை 'ஓ அவர் மீண்டும் ஒருமுறை' என்பது செய்தியே ஆகாது.

என் மெய்க்காப்பாளர்கள் வருந்துகின்றனர். சார் தெரிந்துள்ளது! கண்டுகொண்டிருக்கிறார்கள்! பெயரை உச்சரித்துள்ளனர்! தயவு செய்து தொப்பியைப் போட்டுக் கொள்ளுங்கள்!

கடந்த சில ஆண்டுகளில் மிகவும் விரக்திதரும் அம்சங்களுள் ஒன்றாக இது இருந்து வந்திருக்கிறது. பத்திரிக்கையாளர்கள், போலீஸ்காரர்கள், நண்பர்கள், அந்நியர்கள் என அனைவரும் எனக்கென திரைக்கதைகள் எழுத, அப்புனைவுகளுக்குள் நான் சிக்கிக் கொண்டேன். இதில் எந்த திரைக்கதை ஆசிரியனும் சாதிக்க முடியாதிருப்பது சந்தோஷமான முடிவின் சாத்தியப்பாடு - நான் சந்தித்துள்ள பிரச்சனைகளெல்லாம் படிப்படியாக எதிர்கொள்ளப்பட்டு, நான் எப்போதும் ஆசைப்படுகின்ற சாதாரண இலக்கிய வாழ்க்கையினைத் திரும்பவும் தொடங்கியிருக்கும் என்னும் முடிவு. இருப்பினும் முற்றிலும் எதிர்பாராத இக்கதைப்போக்கு நிஜத்தில் நடந்திருக்கிறது.

இந்நாட்களில் எனது பெரிய பிரச்சனை என்னவென்றால், ஒவ்வொருவரும் தமது தீக்கனவுகளை கைவிட்டு, உண்மை நிலவரத்தைக் கைக்கொள்வதற்காக காத்திருப்பதே.

தெற்கு டெல்லியின் சாந்திநிகேதன் மாவட்டத்திலுள்ள வீட்டில் விவான் சுந்தரம் மற்றும் கீதா ராஜனுடன் விருந்து உண்ணுகின்றேன். நான் போவதற்கு முன், நான் வருவது பற்றி விவானும் கீதாவும் யாருக்கும் தெரிவிக்கக்கூடாதென்று போலீஸ் என்னைக் கேட்டுக் கொண்டது. விருந்தின்போது, நான் அங்கிருப்பதை யாரும் சொல்லிவிடக்கூடாது என அவர்களை கேட்டுக் கொள்கிறார், ஒரு மூத்த போலீஸ் அதிகாரி. மறுநாள் அவர்கள் விருப்பப்படி செய்து கொள்ளலாம் என்று இன்னொரு தொலைபேசி அழைப்பு. அவர்களுக்கு வேடிக்கை, எனக்கோ எரிச்சல் இது முட்டாள்தனமாய் கொண்டிருக்கிறது.

விவான், அமிர்தா ஸெர்ஜிவ்வின் மருமகன், அமிர்தாவின் சிறந்த ஓவியங்களுள் சில அவரது வீட்டின் சுவர்களில் வைக்கப்பட்டுள்ளன. அது போன்றே அமிர்தாவின் உலகம் குறித்த அவரது பிரமாண்டமான குடும்ப ஓவியமும். ஸெர்ஜிவ்வின் வரவேற்பறையில் அமைக்கப்பட்டுள்ள இது பெரிய ஓவியம் - முடிவின்றி உங்களை தன்பால் ஈர்க்கும் இது, அழகானவகையில் மர்மமாயும் நீடிப்பது. அமிர்தா பார்வையின் தெரியதன்மை - அவர் மட்டும் ஓவியத்திலிருந்து தம்மை நேராக நோக்குவது - மற்ற குடும்பத்தினரின் கனவுக்

தன்மையதான உள்நோக்குப்பார்வையால் சமன் செய்யப்படுகிறது. ஒரே வேளையில் பொன்மயமாயும் நிறைவைப்பதாயும் உள்ள, கிழிந்த உலகின் சூழல் அறையில் பரவுகின்றது மற்றும் ஒரு துப்பாக்கி அங்குள்ளது. உடன் நிகழ்கால இந்தியக் கலையின் மீது எனக்கு வேட்கையுண்டு. மாபெரும் இவ்வோவியத்தை மீண்டும் பார்ப்பது வீடு திரும்பிய உணர்வைத் தருகிறது.

ஆக, விஷயம் வேறுபட்டுத் தோன்றுகிறதா என்னும் விவானின் கேள்விக்கு, நான் எண்ணிய அளவுக்கு இல்லை என்கிறேன். மக்கள் மாற்றமடையவில்லை, இடத்தின் அமைப்பும் ஒன்றேதான். ஆனால் மாற்றங்கள் இருக்கவே செய்தன. ஒரு நண்பர் மிகவும் சுகவீனமாயிருந்து தேறிவருகின்றார். இன்னொரு பிரியமான நண்பர் மிகவும் உடல்நலமின்றி உள்ளார். மற்றும் இயல்பான மாறுதல்கள். பாஜக ஆட்சியிலிருக்கிறது. இந்திய பூர்ஷுவாக்களுக்கு உத்வேகமும் செழிப்பும் அளித்துள்ள புதிய தொழில்நுட்பப் பெருக்கம்.

கிளிண்டன் வருகை பற்றிக் குறிப்பிடுகிறேன். எனது கடந்த வருகைக்குப்பின் புதிய தொழில்நுட்பத்தால் உரம் பெற்று அதிவேகமாக வளர்ந்துள்ள செல்வந்த இந்தியாவுக்கு அது ஒரு தீர்மானகரமாக தருணம் என்கின்றனர் விவானும், கீதாவும். அமெரிக்காவில் சிலிகான் பள்ளத்தாக்கில் பணியாற்றுகின்றவர்களின் 40% இந்திய வம்சாவளியினர். இந்தியாவிலும் புதிய மின்னணுயுகம் பல அதிருஷ்டங்களை ஏற்படுத்தியுள்ளது. தொழில் நுட்பப் பெருக்கம் கண்டுள்ள நகரங்களுள் ஒன்றான ஹைதராபாத்திற்கு வருகை புரிவதை முக்கிய அம்சமாகக் கொண்டிருந்த கிளிண்டன், இப்புதிய தொழில்நுட்ப வளர்ச்சியைப் புகழ்ந்தார். இந்தியச் செல்வந்தர்களுக்கு அவரது வருகை ஒரு நற்சான்றுப்பத்திரமாகவும், ஆவாகனமாகவும் இருந்தது.

அவரை அவர்கள் எப்படி நேசித்தனர் என்பதை உங்களால் நம்ப முடியாது. ஏராளமானவர்கள் மண்டியிட்டு நாங்கள் அமெரிக்காவை நேசிக்கிறோம் என்று சொல்ல ஏங்குகின்றனர் என்கிறார் கீதா.

இரு பெரும் ஜனநாயக நாடுகளான இந்தியாவும் அமெரிக்காவும் பங்குதாரர்கள் மற்றும் சமமானவர்கள் அதுதான் விஷயம் அது முரண்சுவை இல்லாது கூறப்பட்டது என்று தொடர்கிறார் விவான்

மிகவும் தீவிரத்தன்மையும் இடைக்காலத்தைச் சேர்ந்த வகையுமான மதவாத - இனவாத குறுங்குழு வாதத்தினருக்கு ஆச்சரியமளிக்கும் இந்தியா, காஷ்மீரில் உள்நாட்டுப்போர் போன்ற ஒன்றை நடத்திக்கொண்டிருக்கும் இந்தியா, தன்மக்களுக்கு உணவோ கல்வியோ மருத்துவ உதவியோ தரமுடியாத இந்தியா தன் குடிமக்களுக்கு குடிநீர் அளிக்க முடியாத இந்தியா சுகாதார வசதிகள் இல்லாததால் பெண்கள் இயற்கை உபாதைகளை அடக்கிக் கொண்டு இருளில் தீர்த்துக்கொள்ள நேரும் இந்தியா - அமெரிக்க ஜனாதிபதியின் முன்னே இந்த இந்தியர்கள் எல்லாம் அணிவகுத்துச் செல்லப்படவில்லை. மாறாக அணு ஆயுத இந்தியா, தொழில் முனைவோர் பெருகிய இந்தியா, அதி

நவீன கணினி இந்தியா, கவர்ச்சிகரமான பகட்டு இந்தியா, ஆகியனவெல்லாம் சுதந்திர உலகின் தலைவர் செல்லும் இடங்களுக்கெல்லாம் உடன் வருகின்ற சர்வதேச ஊடகத்தின் ஒளிப்பிரகாசத்தில் நெளிந்து குழைந்தன.

திங்கள், ஏப்ரல் 10

ஒரு வித மனஉளைச்சல் இன்றைக்குத் தொடங்கிவிட்டது. இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் கவுன்ஸில் தலைவர் கோலின் பெர்சார்ட், இவ்வார இறுதியிலான பத்திரிக்கையாளர் கூட்டத்திற்கு கவுன்ஸிலின் அரங்கினைப் பயன்படுத்திக் கொள்ள மறுதலித்திருக்கிறார். இது போதாதென்று பிரிட்டிஷ் தூதுவர் சர் ராபர்ட் யங் னென்னிடமிருந்து விலகி இருக்குமாறு லாயங்களிலிருந்து வெளிவரவேண்டாம் என்று கூறப்பட்டிருக்கிறது என்கிறார் விஜயிடம் வெளியுறவுத்துறை அலுவலகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

பிரிட்டிஷ் வெளியுறவுச் செயலாளர் ராபின் குக், நான் கிளம்புகின்ற நாளன்று இந்தியாவுக்கு வருகின்றார். என்னுடன் மிக நெருக்கமாக இருக்க வேண்டாம் என்று கவலை கொண்டிருப்பதாக தோன்றுகிறது. அவர் சீக்கிரமே ஈரானுக்குப் பயணிக்க வேண்டி இருப்பதால் அப்பயணத்தை சமரசமானதாக்கிவிடக்கூடாது என்பது இயற்கையே.

எனினும் பிற்பாடு ஈரானில் யூதர்களை இரகசியமாக உளவு - விசாரணைகளுக்கு உட்படுத்தியதன் காரணமாக குக்கின் பயணம் விலக்கப்படுகிறது.

தன் நிலைப்பாட்டினை சரிப்படுத்திக் கொண்டுள்ளதால் தனது பரிசளிப்பு விருந்திற்கு எனக்கான அழைப்பினை விலக்கிக் கொள்வதாக மிரட்டப் போவதில்லை என்னும் நல்ல செய்தி காமன்வெல்த் நிறுவனத்தின் ஷாலீன் பாலிடமிருந்து வருகின்றது. சிண்ட்ரெல்லாவைப் போல நான் பாலிடம் போகவேண்டும் என்று தோன்றுகிறது. எனது இருப்பினாலேயே நிறுவனம் இவ்வளவு நடுக்கம் கொள்ளுமானால், எனக்குப் பரிசளிப்பதால் உண்டாகும் நெருங்கிய தொடர்பினை அவர்கள் விரும்புவதாக தெரியவில்லை என்று என் மன உளைச்சலால் கருதுகிறேன்.

நிஜமாகவே நான் இங்கே ஏனிருக்கிறேன் என்று எனக்கு நினைவூட்டிக் கொள்கிறேன். காமன்வெல்த் எழுத்தாளர்கள் பரிசென்பது ஒரு சாக்குப்போக்குதான். ஜாஃபருடன் இப்பயணத்தை மேற் கொண்டிருக்கிறேன் என்பதுதான் உண்மையான வெற்றி. எங்கள் இருவருக்குமே இந்தியாதான் பரிசு.

ஹான்சி க்ரோஞ்சி கிரிக்கெட் விவகாரம், பத்திரிகைகளின் முதல்பக்கங்களிலிருந்து அரசியலை ஓரங்கட்டிவிடுகிறது. தென் ஆஃப்ரிக்கா கிரிக்கெட் அணியின் தலைவனும் புதுத்தென் ஆஃப்ரிக்காவுக்கான கவர்ச்சி நாயகனுமான க்ரோஞ்சி,

ஹெர்ஸெல்லே கிப்ஸ், நிக்கி போஸி மற்றும் பீட்டர் ஸ்ட்ரைடம் என்னும்தன் சகாக்களுடன் சேர்ந்து ஒரு நாள் சர்வதேச போட்டிகளின் முடிவை தீர்மானித்துவிடுவதற்காக இந்திய கிரிக்கெட் சூதாட்டக்காரர்களான சஞ்சய் சாவ்லா மற்றும் ராஜேஸ் கால்ராவிடமிருந்து பணம் பெற்றுக்கொண்ட விவகாரத்தில் சிக்கிக் கொண்டுள்ளனர்.

இது பரபரப்புச் செய்தி, சந்தேகத்திற்கு இடமளிக்காதபடி தொலைபேசி உரையாடல் பதிவுகள் தம்மிடம் இருப்பதாக இந்தியப் போலீஸ் கூறுகின்றது. நிழல் உலக தாதாக்களான தாவூத் இப்ராஹிம் போன்றவர்களுடன் தொடர்பு இருக்கும் என்று அறிகுறிகள் தெரிகின்றன. இது பனிப்பாறையின் ஒரு நுனிதான் என்று யூகிக்கின்றனர். மக்கள் தாங்கள் கவனிப்பது வெள்ளைக் கால்சராய்கள் நடத்தும் நல்ல போட்டியா அல்லது மல்யுத்தத்திற்கு ஆதரவான சண்டையா என்பது பார்வையாளர்களுக்குத் தெரியாது போனால், கிரிக்கெட்டே உயிர்த்திருக்க முடியுமா? நாங்கள் அவர்களை கடவுளென நடத்தினோம். அவர்களோ திருடர்களாகி விட்டனர் என்கிறார் ஒரு விசிறி.

போட்டியை முன்கூட்டியே முடிவு கட்டுவது என்பது குறித்த வதந்திகள் பல ஆண்டுகளாக நிலவி வருகின்றது. இந்த ஆட்டத்தின் முக்கிய வீரர்களான பாகிஸ்தானின் சலீம்மாலிக் ஆஸ்திரேலியாவின் ஷான்வார்னே ஆகியோரின் கீர்த்திகளால் நிழலாடச் செய்கிறது, இந்தியாவின் முன்னாள் அணித்தலைவர் முகமது அஸாருதீன், அவரது சகா மனோஜ் பிரபாகரால் ஊழல் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். இங்கிலாந்தின் முன்னாள் சர்வதேச நட்சத்திரமான கிறிஸ்லீவிஸ் ஊழல் புரிந்தவர்கள் என்று மூன்று ஆங்கிலேய நட்சத்திரங்களின் பெயர்களை பிரிட்டிஸ் கிரிக்கெட் அதிகாரிகளிடம் தந்துள்ளார். (பெயர்கள் வெளிப்படுத்தப்படவில்லை.) ஆனால் இதுவரையிலும் குற்றச்சாட்டுகளில் எதுவும் நிரூபிக்கப்படவில்லை, பெரும்பகுதி சேறும் ஒட்டிக் கொண்டிருக்கவில்லை.

ஒருநாள் ஆட்டங்கள் பெரும் பணம் ஈட்டுகின்றவை ஆகி, இத்தகைய ஆட்டங்களின் எண்ணிக்கை அதிகரிக்கவும், தூரக்கிழக்கு நாடுகளின் சூதாட்டக் குழுக்கள் மற்றும் முகவர்களுக்கு நிழலுகத்துடனான தொடர்புகள் வளர்ந்திருப்பதில் இரகசியம் ஒன்றுமில்லை. ஆனால் தன் நாயகர்கள், கறைபடிந்தவர்கள் என்று நம்பிட எந்த கிரிக்கெட் ரசிகனும் விரும்புவதில்லை. இத்தகைய தெரிவு செய்யப்பட்ட கண்மூடித்தனமும் ஒருவித ஊழல்தான்.

சில கணங்களுக்குள்ளாகவே மறுப்புகள் தொடங்குகின்றன. ஹான்ஸி அவ்வளவு அப்பழுக்கற்ற கனவான், நேர்மையானவர், முதலாவதாக தென்ஆஃப்ரிக்க வீரர்களின் தொலைபேசிகளை இந்திய போலீஸார் ஏன் ஒட்டுக் கேட்டனர்? ஒலி நாடாக்களில் உள்ள குரல்கள் தென்ஆஃப்ரிக்கா மாதிரியே இல்லை.

தான் ஒரு போதும் சூதாட்டத்திற்குத் துணைபோகவும் இல்லை அதன்பொருட்டு பணம் பெறவும் இல்லை என்பதைத் தன்னுடையதும் தன் சக வீரர்களுடையதுமான வங்கிக் கணக்குகள் உறுதிப்படுத்தும் என்பதை வற்புறுத்தி க்ரோஞ்சியே பத்திரிக்கையாளர் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்து மறுதலிக்கின்றார். இதன் பின்னணியில் இனவாதம் இருக்கவேண்டும என்று சந்தேகம் இந்தியக் காதுகளுக்குக் கேட்கிறது. இக்குற்றச்சாட்டுக்களை ஒதுக்கித்தள்ளி, இவ்விவகாரத்தை விசாரிக்கின்ற இந்தியப் போலீஸாரின் சாதுர்யத்தையும் நாணயத்தையும் கூட சந்தேகித்து கிரிக்கெட் ஆட்டத்தின் வெள்ளை நாடுகளைச் சேர்ந்த பத்திரிக்கையாளர்கள் மிகச் சீக்கிரமாகவே வெளியேறுகின்றனர்.

என் பாதுகாப்புக்கான அணியின் பொறுப்பு அலுவலர் அன்பான குணம் வாய்ந்த அட்சய் குமார், விக்ரம் சேத், விக்ரம் சந்திரா, ரோஹிந்தன் மிஸ்ட்ரி பற்றும் அருந்ததிராய் ஆகியோரின் படைப்புகள் பற்றி விஷயஞானத்துடன் பேசக்கூடியவர், இலக்கியத்தை நேசிப்பவர் மற்றும் பாஸ்டனில் உள்ள கல்லூரி ஒன்றில் தனது இரு மகள்கள் படிப்பதற்காகப் பெருமைப்படுபவர். க்ரோஞ்சி வழக்கினை விசாரிக்கும் கே.கே.பால் அவருடைய நண்பர், மேலான துப்பறியும் நிபுணர், நேர்மையானவர், இன்னும் சொல்ல வேண்டியது என்னவென்றால், பாலும் அவரது அணியினரும் விசாரிக்கும் விவகாரத்தில் *110%* உறுதிப்பாடு இல்லையெனில் இந்திய அதிகாரிகள் நட்பார்ந்திருக்கும் நாடான தென்ஆஃப்ரிக்கா பற்றிய இக்குற்றச்சாட்டுக்களை வெளியிட்டிருக்க மாட்டார்கள். ஆகவே பொறுத்திருந்து பார்க்குமாறு குமார் தீட்சன்யத்துடன் ஆலோசனை கூறுகிறார்.

ஜெய்ப்பூர், ஃபதேபூர் சிக்ரி, ஆக்ரா போன்ற இடங்களைப் பையனுக்குக் காட்டுவதற்காக நாங்கள் சாலையில் போய்க்கொண்டிருக்கிறோம். எனக்கு சாலையே பெரிய ஈர்ப்பாக எப்போதும் இருந்து வந்துள்ளது.

என்னால் ஞாபகப்படுத்த முடியாத அளவு லாரிகள் அதிகம், தவறான வழியில் சென்றும் அலறிக்கொண்டும் பயங்கரமான வகையில் விரைகின்றன. சில மைல்களுக்கு ஒரு முறை நேருக்குநேர் மோதலில் சிதைந்து கிடைப்பவை இருக்கின்றன. ஜாஃபர் அங்கே தெரிவது முக்கியமான முஸ்லிம் ஞானியின் ஆலயம், எல்லா வண்டிகளும் அங்கு நின்று அதிருஷ்டத்தை வேண்டும். இந்துக்களும் வழிபடுவார்கள். அப்புறம் வண்டிகளில் ஏறியதும் தங்களுடையதும் நம்முடையதுமான உயிர்களைப் பணயம் வைத்துவிடுகிறார்கள்.

ஜாஃபர் அதோ பார், ஆட்களை ஏற்றிக்கொண்டு ஒரு டிராக்டர் வந்து கொண்டிருக்கிறது. தேர்தல் நேரத்தில் அரசியர்வாதிகளின் பேரணிகளுக்கு இப்படி வாகனங்களில் நபர்களைக் கொண்டு வந்து சேர்க்குமாறு கிராமத்துத் தலைவர்களுக்கு ஆணையிடப்படும். சோனியா காந்தியைப் பொறுத்தவரை, ஒரு கிராமத்திற்குப் பத்து டிராக்டர்கள்

வேண்டும். ஒருவர் கூட தாமாகப் பேரணிகளுக்கு செல்லவிருமபாத அளவுக்கு இப்போதெல்லாம் மக்கள் அரசியல்வாதிகளால் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

அதோ பார் மாசுபடுத்தும் செங்கல் சூளைகளின் புகைபோக்கிகள். நகருக்கு வெளியே காற்று குறைவாக மாசுப்பட்டுள்ளது. ஆனால் இன்னும் தூய்மையாக இல்லை. ஆனால் மும்பையில் டிசம்பர் - பிப்ரவரி மாதங்களுக்கிடையே காலை 11மணிக்கு முன்பு பனிமூட்டம் காரணமாக விமானம் ஏறவோ இறங்கோ முடியாது போய்விடும்.

நவயுகம் இங்கே வந்திருக்கிறது. சரி உன்னால் இந்தி வாசிக்க முடியுமானால் நவ யுகத்தின் நவ வார்த்தைகள் அம்மொழியின் தேவநாகரி லிபியில் பெயர்க்கப்பட்டிருப்பதை வாசித்துக் கொள்ளலாம். Millennium Tires. Oasis Cellular, Modera's Chinese "Fast Food".

அவன் இந்தி கற்றுக்கொள்ள ஆசைப்படுகிறான். மொழிகள் கற்றுக்கொள்வதில் கெட்டிக்காரனான அவன் இந்தியும் உருதும் கற்றுக்கொண்டு, எங்களுடன் சேர்ந்தே வரும் ஆரவாரங்கள் இல்லாது திரும்பவேண்டும் என்று விரும்புகிறான். நல்லது. ஜாஃபர் ஒருமுறை இந்தியா மீதான ஈர்ப்பு உண்டாகிவிட்டால், அதிலிருந்து உன்னால் விலகவே முடியாது.

ஜாஃபர் இந்தியாவின் புரிந்துகொள்ள முடியாத சுருக்க வார்த்தைகளைப் (acronyous) பார். Wakf Board என்றால் என்ன? HSIDC என்றால் என்ன? ஆனால் ஒரு சுருக்க வார்த்தை, யதார்த்தத்திலான நிஜமான மாற்றத்தை வெளிக்காட்டுகிறது. ஒவ்வொரு நூறு கெஜத்திற்கும் ஒருமுறை எங்கு பார்த்தாலும் நீ காணலாம். STD - ISD - PCO என்பது தனிப்பட்ட அழைப்பறை, இப்போது எல்லோரும் இந்த சிறிய பூத்துக்குள் நுழைந்து, இந்தியாவிலோ (அ) உலகிலோ எங்குள்ளவருடனும், பேசிவெளிவந்து கட்டணம் செலுத்திவிட்டு பேசி விடலாம். இதுதான் இந்தியாவின் நிஜமான தகவல் தொடர்பு புரட்சி. யாரும் எங்கேயும் துண்டிக்கப்படவேண்டியது அவசியமில்லை.

பில்கிளிண்டன் ஜெய்ப்பூருக்கு வெளியே ஆம்பரின் மலைமீதுள்ள கோட்டை -அரண்மனைக்கு வருகை புரிந்தார். ஆனால் புகழ்பெற்ற உள்ளூர் சுற்றுலாக் காட்சிக்கு அவரது மெய்க்காப்பாளர்கள் அவரை அனுமதிக்கவில்லை. மலையின் அடிவாரத்திலிருந்து உச்சிவரை யானை மீது சென்று வரலாம். ஜனாதிபதிக்கு கிடைக்காதது எங்களுக்கு கிடைத்துள்ளது. எங்களுடையதைவிடவும் யாரோ ஒருவரது பாதுகாப்பு இன்னும் கட்டுப்பாடானதாகவும் இறுக்கமாகவும் இருப்பது அறிந்து சந்தோஷப்படுகிறேன்.

ஆம்பரின் கஃப்ரான் கார்டனில் பெண்கள் சுழன்று சுழன்று ஆடியதை கிளிண்டன் ரசிக்கவே செய்தார். ராஜஸ்தான் வண்ண, வண்ணமயமான ஆடைகள் அணிந்து, வண்ணமயமான நடனங்கள் ஆடி, வண்ணமயமான யானைகளில் வண்ணமயமான இடங்களுக்குப் போய் வருகின்றனர் - ஒரு ஜனாதிபதி பார்க்க வேண்டியது இவையே.

ராஜஸ்தானின் தார்பாலைவனத்தில் பொக்ரான் அருகிலுள்ள இடத்தில நடந்த அணுகுண்டு வெடிப்பு பரிசோதனை மூலம், இந்திய அணுயுகத்திற்கு வந்து சேர்ந்திருப்பதையும் அவர் அறிந்து கொள்ள வேண்டும். ஆகவே ராஜஸ்தான் நவ இந்தியாவின் தொட்டில். அமெரிக்காவின் பங்குதாரராகவும் சமமானதாகவும் இந்தியாவைக் கருதவேண்டும். அணுச்சோதனைத் தடை ஒப்பந்தப் பிரச்சனையை கிளிண்டன் எழுப்பினார்தான். ஆனால் இந்தியாவை கையெழுத்திடுமாறு தூண்டுவதில் தோற்றுப்போனார். (அமெரிக்கா அதனை பின்னேற்பு செய்யவும் இல்லை)

கிளிண்டனின் கவனத்திற்கு கொண்டுவரக் கூடாத - ஏனெனில் அதற்கு சுற்றுலா சார்ந்த வண்ணமயமான யானைச்சவாரியிலோ தற்போது உலகிற்கு விற்கப்பட்டுக்கொண்டிருக்கும் இணையத்தள கோடீஸ்வரர்களின் தொழில்முனைவோர் இந்தியாவிலோ இடமில்லை அண்டை மாநிலமான குஜராத்துடன் சேர்ந்து ராஜஸ்தான் ஒரு நூற்றாண்டுக்கும் மேலான மோசமான வறட்சியின் பிடியில் சிக்கி, தாகத்தில் மடிந்து கொண்டிருக்கிறது என்பதே.

ஜனாதிபதி சிந்தித்துப்பார்க்கவும் அனுமதிக்கப்படாதது, இந்தியாவின் முட்டாள்தனமாக அணுகுண்டுக்காக செலவிடப்படும் தொகை, நோயுற்றோரையும் பட்டினி கிடப்போனரயும் கவனித்து உணவளிப்பதில் உதவக்கூடும் என்பதே. (அ) இந்திய அரசாங்கம், பெருமளவிலான அழித்தொழிப்புக்கான ராஜஸ்தானின் அணு ஆயுதத்திற்கு இன்னும் பெருந்தொகையைச் செலவிட்டுக் கொண்டு எவ்வளவு சிறிதாயினும் பரவாயில்லை என்று தார்மிகப் பங்களிப்புகளின் மூலம் வறட்சியினால் உண்டாகும் பெரும் நாசத்தை எதிர்த்துப் போராடுமாறு மக்களிடம் கோரிக்கை விடுப்பது பிரதமர் வாஜ்பாயிக்கு அபத்தமாயிருக்குமா?

அநேகமாக 110°F க்கு வந்து 40°C க்கும் மேலாக உஷ்ணமாகியருக்கிறது. கடந்த இரு ஆண்டுகளாக மழை பொய்த்துப் போயிருக்கிறது. பருவமழை தொடங்க இன்னும் இரு மாதங்கள் இருக்கின்றன. கிணறுகள் வற்றிப் போக அசுத்த நீரைக் குடிக்குமாறு கட்டாயத்திற்குள்ளாகும் கிராமத்தினர், வயிற்றுப்போக்கு/காலரா போன்ற உபாதைகளுக்கு உள்ளாகின்றனர். எனவே விஷவளையம் தன் பிடியை இறுக்கின்றது.

ஒரு டஜன் ஆண்டுகளுக்கு முன்னர் கடைசியாய் நான் இங்கிருந்தபோது, இப்பகுதி மிகவும் மோசனமாக வறட்சியின் பிடியில் இருந்தது. அப்போது குஜராத்தில் பயணித்த நான், இன்றைக்கு ராஜஸ்தானின் கிராமப்பகுதிகள் எங்கிலும் வெளிப்படையாய்த் தெரியும் அதே பெரும் நாசத்தினை கண்ணுற்றேன். வசதிப்படைத்தோரின் விருந்துக்கும் இல்லாதவனின் பஞ்சத்திற்கும் இடையிலான இடைவெளி அதிகமாகும்போது நாட்டின் உறுதிப்பாடு மிக மிக அபாயத்திற்குள்ளாகிறது. சூழலில் வித்தியாசம் ஒன்றினை நுகருகின்ற நான், உள்ளுணர்வுக்கும் மேலாக பெரிதாக இல்லாத ஒன்றினை

வார்த்தைகளில் வடிக்கத் தயங்குகிறேன். மக்களிடம் பெருத்த கொந்தளிப்பை மேற்பரப்புக்கு கீழே சினத்தின் சீற்றத்தை நான் உணரவே செய்கிறேன்.

ஜாஃபர் இரவுச் சாப்பாட்டிற்கு மோசமான எறா மீன் உண்கிறான். நான் என்னையே குற்றஞ்சாட்டிக் கொள்கிறேன். இந்தியாவில் பயணிகளுக்கான அடிப்படை விதிகளை அவனுக்கு நான் ஞாபகப்படுத்தி இருக்கவேண்டும் எப்போதும் பாட்டிலில் அடைத்த நீரைக்குடி., பாட்டில் உங்கள் முன் திறக்கப்படும் முன்பு அதன் மீது முத்திரையை சரிபார்த்துக்கொள்ள வேண்டும். சாலட்டினை சாப்பிடக்கூடாது. (பாட்டிலில் அடைத்த நீரால் அது சுத்தம் செய்யப்பட்டிருக்காது). குளிர்பானங்களில் ஐஸ் போடக்கூடாது. (பாட்டிலில் அடைத்த நீரால் தயாரிக்கப்பட்டிருக்காது) மற்றும் கடலருகே இல்லாதவரை கடலுணவு சாப்பிடவே கூடாது.

ஜாஃபரின் பாலைவன எறா அவனைப் படுக்கப்போட்டு விடுகிறது. வாந்தி, வயிற்றுப்போக்கு என தூக்கமில்லாது இரவைக் கழித்திருக்கிறான். காலையில் அவன் மோசமாகத் தோன்றுகிறது. நாங்கள் கடுமையான நீண்ட பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

வியாழன், ஏப்ரல் 11

ஆக்ராவுக்கு நீண்டதும் கடுமையானதுமான பயணம், அப்புறம் டெல்லிக்கு திரும்புதல். பதேபூர் சிக்ரியைச் சுற்றி வருவதற்கு இயலாதவகையில் அவன் பலவீனமாயிருக்கிறான். தாஜினை மட்டும் ஒருவழியாகச் சுற்றிப்பார்க்கிறான். எதிர்ப்பார்த்ததைவிட சிறியது என்கிறான். ஒருவழியாக அவனை வசதியான ஓட்டல் படுக்கையில் கிடத்தும் போதுதான் விடுபட்டவனாகின்றேன்.

தொலைக்காட்சி செய்தியைக் கவனிக்கிறேன். க்ரோஞ்சி ஒத்துக்கொண்டுள்ளார்.

வெள்ளி ஏப்ரல் 12

காலைச் செய்திதாள்களின் தலைப்புச் செய்திகள் Cronje : I am a crook என்று கூறுகின்றன. தனக்கு களிமண் பாதங்கள் என ஒரு காலத்தில் கிரிக்கெட்டின் தேவதையாக இருந்தவர் ஒத்துக் கொள்கிறார். அவர் பணம் பெற்றிருக்கிறார், இப்போது அவர் தென் ஆஃப்ரிக்க அணித்தலைவர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார், தேசிய அணியிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார். கே.கே.பால் மற்றும் அவரது சகாக்கள் நாடக பாணியிலும் முழுமுற்றாகவும் தங்களை நிரூபித்துள்ளனர்.

க்ரோஞ்சி பெற்றது அற்பமானதே 8,200 டாலர்களே. ஒருவரின் நற்பெயரின் விலைக்குரிய விலையல்ல.

இதற்கிடையே, தென்ஆஃப்ரிக்காவில் பிரதானமாக கிரிக்கெட்டை விரும்புகின்ற வெள்ளையர்கள் (தென்ஆஃப்ரிக்கா கருப்பர்கள் மிகவும் ஈடுபாடு காட்டுவது கால்

தவறிழைத்துள்ளதாக யாரும் குற்றஞ்சாட்டப்படவில்லை. ஆனால் சூரியன் மீது நிழலொன்று கவிகின்றது.

சந்தை ஆய்வு நிறுவனம் Roper Starch World Wide உலக சந்தோஷ அளவுகோல் ஒன்றினை வெளியிட்டுள்ளது. சராசரியாக உலகின் மக்கள் தொகையில் 24% மட்டுமே சந்தோஷமாயிருப்பதாகத் தெரிவிக்கின்றது. மிகவும் சந்தோஷமாயிருக்கும் நாடுகள் அமெரிக்கா (46%) இந்தியா (37%) மற்றும் இங்கிலாந்து (36%) இந்தியா சந்தோஷத்தில் வெள்ளிப்பதக்கப்பட்டியலில்! உலகின் உயர்ந்த மேஜையில் அதற்கான உரிமை உறுதிப்படுத்தப்படுகிறது.

உலகின் மிகவும் சந்தோஷமற்ற நாடுகளின் பட்டியல் உள்ளவை சீனா (9%) மற்றும் ரஷ்யா (3%) தென்ஆப்பிரிக்காவிலுள்ள கிரிக்கெட் வீரர்கள் தற்போதைய சந்தோஷத்தின் மட்டத்திற்கான விபரங்கள் சேர்க்கப்படவில்லை.

இந்தியாவில் பிறந்த ஜூம்மா லஹிரி இன்று காலையில் தன்முதல் கதைகளின் தொகுப்பு The Interpreter of Maladies-க்காக புக்கர் பரிசு பெற்றுள்ளார் என்னும் நற்செய்தியால் இந்தியாவின் தேசிய சந்தோஷ மட்டம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. புலம்பெயர்ந்து வாழும் இந்தியர்களின் படைப்புகளுக்கு ஒருவித ஊசலாட்டமான அணுகுமுறை இப்பகுதிகளில் இருப்பினும் தனக்குக் கிடைத்திருக்கும் அதிருஷ்டம் கண்டு ஒவ்வொரு செய்தித்தாளின் முதற்பக்கத்திலும், புன்னகைக்கிறது அவருடைய நூலுக்கு எங்கு பார்த்தாலும் நல்ல விமர்சனங்கள் அளிக்கப்படுகின்றன. அவர் திறமை பெற்ற எழுத்தாளர் மற்றும் அவரது சாதனையின் பொதுவான பெருமித உணர்வைப் பகிர்ந்து கொள்கிறேன்.

LTTE, பாலஸ்தீனத்தின் ஹமாஸ், குர்திஸ், PKK, காஷ்மீரின் Harkat-ul-Ansat மற்றும் அமெரிக்காவின் பயங்கரவாதிகள் பட்டியலில் உள்ள மற்ற 16 குழுக்களை இங்கிலாந்து மறைத்து வைத்திருப்பதால், அதனை பயங்கரவாத அரசாக முத்திரை குத்தவேண்டும் என ஸ்ரீலங்கா விரும்புகிறது. இலங்கை சொல்வதில் பொருளிருக்கிறது என்பதை என்னால் உணராதிருக்க முடியவில்லை. பாகிஸ்தானும், ஆப்கனிஸ்தானும் ஒசாமாபின்லேடனுக்கும் பல்வேறு காஷ்மீர் பிரிவினைவாதிகளுக்கும் இடம் தருவதின் மூலம் பயங்கரவாத மையத்தை உருவாக்குகின்றன என்று இப்போது அமெரிக்கா குற்றஞ்சாட்டுகிறது. இச்சந்தோஷத்தின் மத்தியில் மிகவும் துயரமில்லை.

1930 களில் எப்போதோ ஒருமுறை, வெற்றிகரமான டெல்லி வர்த்தகரான எனது தந்தை வழிப்பாட்டனார் முகமது தீன் கானிகி, இமயமலைகளின் சோலன் என்னும் அழகிய சிறு நகரில் கோடைகாலத் தங்குவதற்காக அளவான கற்குடில் ஒன்றை வாங்கினார். தன் ஒரே மகன் அனிஸ்அகமது பெயரால் அனில் வில்லா என்று அதற்குப் பெயரிட்டார். என் தந்தையான அம்மகன் பிற்பாடு ருஷ்டி என்னும் பிற்பெயரைச் சேர்த்துக் கொண்டு, எனது 21வது பிறந்தநாளில் எனக்கு அதனை பரிசளித்தார். 11 ஆண்டுகளுக்கு முன்னர் இமாசல பிரதேச

அரசாங்கம் எந்தவித சம்பிரதாயமும் இன்றி அதனை எடுத்துக்கொண்டது.

இந்தியாவில் ஒரு மாநில அரசாங்கத்தால்கூட ஒருவரது சொத்தினை கைப்பற்றுவது எளிதானதல்ல. **அனில் வில்லாவைக்** கைப்பற்றிக் கொள்வதற்காக, உள்ளூர் அதிகாரிகள் பொய்யாக அதனை வெளியேறியோர் சொத்து என்றறிவித்தனர். பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்தவர்களின் வீடுகளை அரசு கைக்கொள்வதற்காக உருவாக்கப்பட்டது வெளியேறியோர் சொத்து சட்டம். இது எனக்குப் பொருந்தாது. இயற்கையாக நான் பிரிட்டிஷ் பிரஜை ஆவதற்கு முன் இந்தியப் பிரஜையாக இருந்தேன். நான் ஒருபோதும் பாகிஸ்தான் பாஸ்போர்ட் வைத்திருந்ததில்லை (அ) அந்நாட்டில் குடியிருந்ததும் இல்லை. **அனிஸ் வில்லா** தவறாகக் கைக்கொள்ளப்பட்டிருந்தது. அப்படியே நிரூபணமும் ஆனது.

சோலன் காரணமாக **விஜய் சங்கர்தாஸும்** நானும் நெருங்கிய நண்பர்கள் ஆனோம். தணிக்கை எதிர்ப்பு வெற்றிகளை ஈட்டி, பெருமித வரலாறு பெற்றுள்ளவரும் இந்தியாவிலுள்ள தனிச்சிறப்பான வழக்குரைஞர்களுள் ஒருவரான அவர், என் சார்பில் இமாசல அதிகாரிகள் மீது வழக்குத் தொடுத்தார். ஏழாண்டுகள் வழக்கு நடத்தி, வென்றோம். இந்திய அளவுகளின்படி ஏழாண்டுகள் என்பது நம்பமுடியாத விதத்தில் துரிதமானது. சரி என்பது உங்கள் பக்கம் இருப்பினும், ஒரு அரசாங்கத்தை தோற்கடிக்க சிறிது திராணி வேண்டும். விஜயின் வெற்றி இந்தியாவில் மிகவும் பாராட்டப்பட்டது, அவர் அதற்குத் தகுதியானவர்.

தன்னைப் பொறுத்தமட்டில் ஒருவித தனிப்பட்ட சிலுவைப் போராக ஆகியிருக்கின்ற, இந்தியாவுடனான எனது உறவை சரிசெய்வதில், சோலன் வழக்கு ஒரு பகுதிதான் என்கிறார் விஜய். சூழலை அறிந்தும் அரசியல்வாதிகளிடம் ஆதரவு தேடியும் என் பொருட்டு அயராது பணியாற்றியும் பெருமளவு நேரத்தை இதற்கென அர்ப்பணித்திருக்கிறார். அவரில்லாமல் இப்போதைய பயணம் சாத்தியமாகி இருக்காது. பேரம் பேசுவதிலும் இணங்க வைப்பதிலும் அசாதாரணத் திறன்கள் பெற்றுள்ள அவர் மெல்லப் பேசுவார். அவருக்கு ஒரு போதும் திருப்பிச் செலுத்த முடியாத அளவு நன்றிக்கடன் பட்டுள்ளேன்.

நவம்பர் 1997ல் நாங்கள் **சோலன் வில்லாவை** மறு உடைமையாகப் பெற்றோம். அதன்பிறகு மேற்கூரை சரிசெய்யப்பட்டு, வீடு சுத்தம் செய்யப்பட்டு, ஒரு குளியலறை நவீனப் படுத்தப்பட்டுள்ளது. கச்சிதமானவகையில், மின்சாரம், குழாய் இணைப்புகள் மற்றும் தொலைபேசி இயங்குகின்றன. எங்கள் வருகைக்காக ஆயத்தம் செய்யும் பொருட்டு, ஆறு படுக்கை வசதி கொண்ட இல்லத்திற்கு அசாதாரணமான வாடகையான நூறு டாலர்களில் தளவாட சாமான்கள் எடுக்கப்பட்டுள்ளன. ஒரு பராமரிப்பாளர் தன் குடும்பத்துடன் வீட்டு வளாகத்தில் வசிக்கின்றார். அடையாளங்கண்டு கொள்ள முடியாதபடி சோலன் வளர்ந்திருக்கிறது.

ஆனால் அங்கிருந்து மலைகளை நோக்குவது தெளிவாகவும் மாசுறாமலும் இருக்கின்றது.

ஜாஃபரின் 21-வது பிறந்தநாளுக்கு ஒரு சில வாரங்களே உள்ளன. இன்றைக்கு அவனுடன் சோலன் போவது. ஒரு வருடத்தை பூர்த்தி செய்கிறது. 1987ல் இறந்து போன என் தந்தையின் ஞாபகம் தொடர்பாக நீண்டகாலமாக நான் உணர்ந்து வந்திருந்த பொறுப்பினையும் அது நிறைவேற்றுகிறது. தந்தையே நம் வீட்டினை நான் மீண்டும் பெற்றுள்ளேன். வாழ்ந்தும் இறந்துமுள்ள நம் குடும்பத்தின் நான்கு தலைமுறைகள் இப்போது அங்கே ஒன்று கூட முடியும். ஒரு நாளைக்கு அது **ஜாஃபருக்கும்** அவனது தம்பி **மிலனுக்கும்** போய்ச்சேரும். நம்முடையதைப் போன்று அவ்வளவு பிடுங்கி எறியப்பட்டதும் தூரத்தே வீசப்பட்டதுமான ஒரு குடும்பத்தில் தொடர்ச்சியின் இச்சிறு ஏக்கம், மிகப்பெரிய ஒன்றைக் குறிப்பதாக இருக்கும்.

சோலனுக்குப் போய்ச்சேர பஞ்சாப் (ம) ஹரியானாவின் ஒரே தலைநகரான **சண்டிகருக்கு** புதுடெல்லியிலிருந்து **சதாப்தி** விரைவு ரயிலில் மூன்று மணிநேரம் குளிர்சாதன வகுப்பில் பயணிக்க வேண்டும். அப்புறம் ஒன்றரை மணிநேரம் வாகனத்தில் பயணம். நானில்லாமல் நீங்களாயிருந்தால் குறைந்தபட்சம் இதனையே செய்வீர்கள் நான் ரயிலில் செல்வதைப் போலீஸார் வேண்டாம் என்கின்றனார். ஜெய்ப்பூரில் நானிருக்கும் ஓட்டல் மேலாளர் நான் அங்கிருப்பதை ராய்ட்டர் நிறுவனத்திற்கு உளறிக்கொட்டிவிட்டதால் போலீஸார் நிலைகுலைந்து போயுள்ளனர். அப்போதைக்கு ராய்ட்டர் கதையினை ஒன்றுமில்லாததாக்கி சமாளித்துள்ளார் விஜய் ஆனால் புலரப்படாததன்மையின் கவசம் மெலிதாகி கொண்டு போகிறது. சோலனில் பூனை வெளிப்பட்டுவிடும் என்கின்றனர் போலீஸார். அங்கேதான் நான் போக வேண்டும் என எல்லாரும் எதிர்ப்பார்க்கின்றனர். நேற்றைக்கு முன் தினம் இந்திய அரசின் தொலைக்காட்சி சேவை **தூர்தர்ஷன், அனிஸ் வில்லாவுக்கு** ஒரு குழுவை அனுப்பி, பராமரிப்பாளர் கோவிந்தராமிடம் துருவிப் பார்த்தது. ஆனால் அவர் மூச்சுவிடவில்லை. எனினும் நான் அங்குப் போய்ச் சேர்ந்ததும் விஷயம் வெளியாகிவிடும்.

நிலைமை எப்படிப் போய்க்கொண்டிருக்கிறது என்று அறியும் பொருட்டு, 5 நிமிடங்களுக்கு ஒருமுறை **அட்சய குமாருக்குத்** தொலைபேசியில் பேசும் போலீஸ் உயரதிகாரிகள், ஜெய்ப்பூர் செய்தியை கசியவைத்தது. விஜய் மற்றும் என்னுடைய வேலையே என்று வளர்த்தெடுத்திருந்தது. **வசீகரம் இல்லாது போய்விட்டது. சந்தேகக்கிருமி சீக்கிரமே நோயாகிவிடும்.**

ஜாஃபர் நன்றாக காணப்படுகிறான். ஆனால் ஏழுமணிநேரம் கார்ப்பயணம் எப்படி இருக்கும் என்று அவனிடம் சொல்ல மறுத்துவிடுகிறேன். அவனை இரயிலில் அனுப்பி விடுகிறேன். எனது நான்கு கறுப்பு சேடன்களின் கார் வரிசையுடன் நான் அவனை **சண்டிகரில் சந்திக்க வேண்டும்.**

கடந்த முறை நான் இந்தியாவில் இருந்தபோது அப்படி ஒரு ரயிலுண்டா என்று கனவு கண்டிராத இன்னொரு ரயில், டெல்லியிலிருந்து புறப்படுகிறது. இந்தியத் தலைநகருக்கும் பாகிஸ்தானின் லாகூருக்கும் இடையில் நிற்காத நேரடி ரயிலான அது பழைய எதிரிகளுக்கிடைய உறவுநிலைகள் மேம்படுவதின் அறிகுறியை நான் கொண்டாட ஆயத்தமாகும் போது, இச்சேவையின் தொடர்ச்சி இப்போது பிரச்சனையில் இருக்கிறது என்று கண்டு கொள்கிறேன். இந்தியா தன்பங்கினைத் தாவில்லை என்கிறது பாகிஸ்தான். போதைமருந்துகளையும் கள்ளப்பணத்தையும் கடத்துவதற்கு பாகிஸ்தான் இந்த ரயிலைப் பயன்படுத்துகிறுது என அப்பட்டமாக குற்றஞ்சாட்டுகிறது இந்தியா

போதை மருந்து பெரியதொரு பிரச்சனையே ஆனால், போலியாக அடிக்கப்பட்ட பணம் இன்னும் பெரிய பிரச்சனையே, நேபாளத்தில் போலி நாட்டுகள் புழக்கத்தில் இருப்பதால் இந்தியாவின் 500 ரூ. நோட்டகளை வாங்கத் தயங்குகின்றனர். டெல்லியிலுள்ள பாகிஸ்தான் தூதுவரகத்தைச் சேர்ந்த ஒருவர், தன் பிள்ளையின் பள்ளிக்கட்டணத்தைக் செல்லும்போது நல்லதும் போலியானதுமான நோட்டுகளைக் கலந்து கொடுத்து நீண்ட நாளாகவில்லை. வெளியேற்றப்பட்ட பையன் திரும்ப சேர்த்துக் கொள்ளப்பட்டாலும், பாகிஸ்தான் அரசாங்கத்திற்கும் போலி நோட்டுகளுக்கும் இடையிலான தொடர்பு தெளிவாக நிறுவப்பட்டிருந்தது.

பதினான்காம் நாளான வெள்ளியன்று, தற்போதைக்கு ரயிலை கூட விடுவது என இந்தியாவும் பாகிஸ்தானும் ஒத்துக் கொள்கின்றன. ஆனால் அது நட்பார்ந்த கூட்டுறவின் உணர்வை அடையாளப்படுத்துகிறது என்று சொல்ல முடியாது. மாறாக இரு அண்டை நாடுகளுக்கிடையே அது இன்னொரு பிரச்சனை, போராட்டத்தின் இன்னொரு வடிவம் அவ்வளவுதான்.

சண்டிகரில் ஜாஸ்பரை அழைத்துக்கொண்டு மலைகளின் உயரம் போகும் போது என் இருதயம் எழுச்சிக் கொள்கிறது. மலைகள் தனியொரு வகையில் சமவெளி மக்களை உற்சாகப்படுத்தும். காற்று புத்துணர்ச்சிக் கொள்ளச் செய்கிறது. நீண்ட ஊசியிலை மரங்கள் செங்குத்தான சரிவுகளிலிருந்து சாய்ந்து நிற்கின்றன. சூரியன் மறைகையில் முதல் மலைவாச ஸ்தலத்தின் விளக்குகள் எங்களுக்கு மேதுள்ள அந்திப் பொழுதில் ஜொலிக்கின்றன. சிம்லாவரை அழகான பாதையில் மெல்ல ஊர்ந்து செல்லும் மீட்டர்காஜ் ரயிலைக் கடந்து போகின்றோம். என்னைப் பொறுத்தவரை இது நாள்வரையிலும் பயணத்தின் உணர்ச்சி உச்சம் இதுவே. ஜாஸ்பரும் நெகிழ்ந்து போயிருப்பதைப் பார்க்கிறேன். சோலனுக்கு அருகிலுள்ள தாபா ஒன்றில் இரவு உணவுக்காக நிறுத்துகிறோம். நான் இங்கு வந்திருப்பதில் அவ்வளவு மகிழ்வதாக அதன் உரிமையாளர் தெரிவிக்க யாரோ ஒருவர் என் கையொப்பம் பெற விரைந்து வருகிறார். அட்சய குமாரின் முகத்தில் கவலை தோய்ந்த வெளிப்பாட்டினை நான் பொருட்படுத்தவில்லை.

என் ஆயுளில் நான் இங்கு இருந்திருக்க மாட்டேன். அதுவும் பன்னிரண்டு வயதான பிறகு இருந்திருக்கவே மாட்டேன் என்ற போதிலும், நான் வீட்டிலிருப்பதாகவே உணர்கிறேன்.

நாங்கள் வில்லாவை அடையும் போது இருண்டிருக்கிறது. சாலையிலிருந்து நாங்கள் 122 படிகள் இறங்க வேண்டும். கீழே ஒரு சிறிய கேட். என் குடும்பத்திற்காக தான் வென்று தந்துள்ள வீட்டின் முன் நிற்கும் விஜயும் உணர்ச்சி வயப்பட்டவராக, என்னைச் சம்பிரதாய முறையில் வரவேற்கிறார். கோவிந்தராம் ஓடிவந்து எங்கள் பாதங்களைத் தொட்டு வணங்கி, ஜாஃபரை வியப்பில் ஆழ்த்திவிடுகிறான். நான் மூடநம்பிக்கையிக்கவன் இல்லை எனினும், நான் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்ட என் தாத்தா மற்றும் என்பெற்றோரின் இளைய கயங்கள் என் தோள்களில் இருப்பதாக உணர்கிறேன். வானம் நட்சத்திரங்களுடன் பற்றி எரிகின்றது. வீட்டின் பின்புறத் தோட்டத்திற்கு நானாகவே போகிறேன். நான் தனித்திருக்க வேண்டும்.

வியாழன் ஏப்ரல் 13

காலை 5 மணிக்கு பள்ளத்தாக்கின் இந்துக் கோயில் ஒன்றிலிருந்து வரும் ரேடியோப்பாட்டு மற்றும் மந்திர ஒலிகளால் எழுப்பப்படுகிறேன். விடியலின் வெளிச்சத்தில் வீட்டைச் சுற்றி நடக்கிறேன். இளஞ்சிவப்பு கூரைகள் மற்றும் மூலைவாட்டுக் கவிகைகளுடன் வீடு, நான் ஞாபகத்தில் வைத்திருப்பதைவிடவும் அழகாக விஜயின் புகைப்படங்களில் தென்படுவதை விடவும் அழகாக இருக்கிறது. உறுதியளித்தபடியே அங்கிருந்து பார்ப்பதும் அதிசயிக்கச் செய்கிறது. ஏதோ ஒரு விதத்தில் உங்களுக்குரியது என்று நீங்கள் அறிந்து கொள்ளாத ஒரு வீட்டைச் சுற்றி நடந்து வருவது ஒரு புதிரான உணர்வாகும். வீடும் நானும் ஒருவருவக்குள் ஒருவர் சேர்ந்துகொள்ள சிறிது நேரமாகிறது. ஆனால் மற்றவர்கள் விழித்துக் கொள்ளும் வேளையில் அது என்னுடையதாகிவிடுகிறது.

நாளின் கணிசமான நேரத்தை வீட்டைச் சுற்றி வருவதிலும் தோட்டத்தை பெரிய ஊசியிலை மரங்களின் கீழுள்ள நிழலில் அமர்வதிலும், விஜயின் விசேடமான முட்டைப் பொரியலைத் தின்பதிலுமாகக் கழிக்கின்றோம். இப்பயணம் பயனுள்ளதாயிருந்துள்ளது என இப்போது அறிந்து கொள்கிறேன். ஜாஃபரின் முகத்திலுள்ள வெளிப்பாட்டைக் கொண்டு அறிந்து கொள்கிறேன்.

பிற்பகலில் அடுத்த நகரமான, முன்னால் பிரிட்டிஸ் கோடைகாலத் தலைநகரத்திற்கு சிறிய சுற்றுலா போகிறோம். அவர்கள் இதனை சிம்லா என்றனர். அவர்கள் போன பின்பு ஷிம்லா என்றாகிஉள்ளது. அனிஸ் வில்லாவுக்காகத் தான் போராடிய நீதிமன்றங்களை விஜய் எங்களுக்குக் காண்பிக்கின்றார். முன்னர் வைசியராய் இல்லமாக இருந்த இடத்திற்கும் 1945ல் சுதந்திரத்திற்கு

முந்தைய, முக்கியமான சிம்லா மாநாட்டினை மேடையேற்றியதும், தற்போது Indian Institute of Advance Studies-(IIAS)னைக் கொண்டிருப்பது ஆகிய இடத்திற்கும் போனோம். இக்கட்டிடம் பராமரிக்கப்படாதுள்ளது. சீக்கிரமே பாதுகாப்பற்றதாகி விடலாம்.

காந்தி, நேரு மற்றும் ஜின்னாவின் நிழல்கள் அமர்ந்திருந்த மாநாட்டு மேசையைச் தீவிர பாவத்துடன் ஷான்பர் சுற்றி வருகின்றான். ஆனால் நாங்கள் வெளிவரும் போது திரும்பவும் அவன் வினவுகிறான். கல்லால் ஆன அந்தச் சிங்கம் இன்னமும் ஏன் ஆங்கிலக் கொடியைப் பிடித்திருக்கிறது? அவன் கண்டுகொள்ளும் வரையிலும் யாரும் கவனிக்கவில்லை என்பதே நான் புரிகின்ற பதிலாக இருக்கும். இந்தியா சுதந்திரமடைந்து அரை நூற்றாண்டுக்கும் மேலாகின்றது. ஆனால் புனித ஜார்ஜின் கொடி இன்னும் கூரை மீதிருக்கிறது.

இப்போது இந்த நிறுவனத்தை நடத்துகின்ற பாஜக நபர்களுக்கு பிடிகொடுக்காமல் நழுவிவிட வேண்டும். இங்கே நான் பார்வையாளனாக மட்டுமல்லாது பார்க்கப்படுபவனாகவும் இருக்கின்றேன். பாஜக ஆளாகத் தோற்றமளிக்கிற பொறிக்குள் மாட்டிக்கொள்ளக் கூடாது. நிச்சயமாகப் புகைப்படம் எடுக்கப்பட்டுவிடும் ஒரு கைகுலுக்கலினைத் தவிர்ப்பது புத்திசாலித்தனம்.

வி.எஸ். நைபாலை அவரும் இங்கிருக்கிறார் என்றறிகிறேன் போலல்லாது, இந்த தேசியத்தின் எழுச்சியை இந்தியப் படைப்பாக்க உணர்வின் பிரவாகமாக நான் காணவில்லை. மதச்சார்பின்மை மீதான மதவாதத்தின் வெற்றியாக, நட்பின் மீதான வெறுப்பின் வெற்றியாக, நேசத்தின் மீதான அருவெருப்பின் வெற்றியாக நான் வளர்ந்த இந்தியாவின் மறுதலிப்பாகவே இதனை நான் காண்கிறேன். பிரதமர் வாஜ்பாய் தன் கட்சியை மேலும் கட்டுப்பாடான திசைவழியில் தலைமை தாங்கிச் செல்ல முயன்றுள்ளார் மற்றும் முஸ்லிம்களிடையே ஆச்சரியமான வகையில் புகழ் பெற்றவராயிருக்கிறார் என்பது உண்மையே. ஆனால் தன் படிமத்தில் தன்கட்சியை மறு உருவாக்கம் செய்திடும் தன் முயற்சியில் தோற்றுப் போயிருக்கிறார்.

பாஜக என்பது தீவிரவாத இந்து இயக்கமான ஆர்.எஸ்.எஸின் அரசியல் வடிவமாகும். வடக்கு அயர்லாந்தின் Sinn Fein, provisional IRA-வின் அரசியல் வினைவு போல. பாஜகவை மாற்ற வேண்டுமாயின், வாஜ்பாய் ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைமையினை ஏற்று நடக்கவேண்டும். வருத்தப்படும் விதத்தில், அதற்கு நேர்மாறானதே நிகழ்கின்றது. ஒப்பீட்டளவில் மிதவாத ஆர்.எஸ்.எஸ்.தலைவர் பேராசிரியர் ராஜேந்திர சிங் ராஜுபையா ஆர்.எஸ்.எஸ்ஸின் போக்கில் செல்லுமாறு வாஜ்பாயை எச்சரிக்கின்ற தீவிரப் போக்கினராகிய கே.எஸ். சுதர்ஸனால் வெளியேற்றப்பட்டுள்ளார்.

பிரதமரின் தேர்வுகள் வரம்புக்குட்பட்டவை. மதவியல் சச்சரவின் நாய்களை அவரால் அசைத்து வைக்கவும் அவிழ்த்துவிடவும் முடியும். காங்கிரஸின் மன்னரை உருவாக்குவோர் இந்திரா காந்தியை

தம் கைப்பாவையாக ஆக்க முயன்றபோது 1969ல் இந்திராகாந்தி புத்திசாலித்தனமாக நிகழ்த்திக் காட்டியதை அவர் முயன்று பார்க்கலாம் (அவர் தன் கட்சியிலிருந்தே விலகினார், இந்திரா காங்கிரஸை உருவாக்கினார். பெரும்பாலான எம்பிக்களை தன்னுடன் சேர்த்துக்கொண்டார், பொதுத்தேர்தலை அறிவித்தார். பழைய தலைகளை தேர்தலில் வீழ்த்தினார். (அ) அடுத்த தேர்தல் வரை போராடிவிட்டு அப்புறம் பதவி விலகலாம். அந்நிலையில் பாஜகவின் நடுத்தர முகமூடி கழன்று விடும். தற்போதைக்கு அதனை அதிகாரத்தில் இறுத்திவைக்கின்ற பரந்துப்பட்ட கூட்டணியை ஒன்று சேர்த்து வைத்திருக்க முடியாது போகும், காங்கிரஸ் கட்சியின் குளறுபடிகளைக் கணக்கில் கொண்டால், சிதறுண்டதும் ஸ்திரமற்றதுமான அரசாங்கங்களின் இன்னொரு கட்டத்தில் இந்தியா நுழையும். இது ஒன்றும் சந்தோஷமான தீர்க்கதரிசனமன்று. ஆனால் இதுதான் நிகழும் என்று உணர்த்துகிறது. எவ்வளவுதான் கீழ்மட்டத்தில் இருப்பினும் பாஜக அணிகளிடமிருந்து விலகி நிற்பது நல்லதாகும்.

ஆய்வு நிறுவனத்தில் மாறாடு ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மாபெரும் குரு-பாண்டவர் யுத்தத்துடன் தொடர்புடைய இடத்திலிருந்து கிடைத்துள்ள பானை ஓடுகளை வைத்து வழிபாட்டுக்குரிய மகாபாரதத்தின் காலம் ஏற்கனவே கருதப்படுவது போல 5000 ஆண்டுகளாவ் மாறாக 3000 ஆண்டுகளே ஆகலாம் என்கிறார் பேராசிரியர் பி.பி.லால். இப்புனித இந்துப்பிரதியின் பாஜக/ஆர்.எஸ்.எஸின் தீவிர மறு எழுத்தாக்கம் என்னவாக இருக்கும்?

பார்ப்பவனிலிருந்து பார்க்கப்படுவபவனாக நானறிந்துள்ள சாவமானிலிருந்து அவ்வளவாக நான் அடையாளங்கண்டு கொள்ளாத ருஷ்டியாக எனது உருமாற்றம் தொடர்கின்றது. இந்தியாவில் நானிருப்பது குறித்த வதந்திகள் எங்கனும் உலவுகின்றன. இரண்டு இஸ்லாமிய நிறுவனங்கள் பிரச்சனையை உண்டாக்க சபதம் பூண்டுள்ளன என்று கேள்விப்படும்போது மிகவும் மனச்சோர்வுக்கு உள்ளாகிறேன். பிரச்சனை செய்தியாகிறது. இந்தியாவுக்கான எனது பயணத்தின் பொருளாக அது பார்க்கப்படலாம்.

தூர்தர்ஷனில் செய்தியாளர் அக்னிஹோத்ரி தன் குடும்பத்துடன் சந்தப்பவசமாக இங்கே விடுமுறையைக் கழிக்க வந்துள்ளவர், சோலனின் ஹிமானி உணவகத்தில் சீன உணவு சாப்பிடுகின்ற போது என்னை நெருங்கினார். அவருக்கு முதலில் செய்தி கிடைத்துவிட வெளியாகிவிடுகிறது. சில கணங்களிலேயே உள்ளூர் செய்தியாளர் ஒருவர் வந்து நட்பார்ந்த கேள்விகள் சிலவற்றைக் கேட்கிறார். இதில் எதுவும் எதிர்பாராதது இல்லை, ஆனால் சந்தர்ப்பவசமான இச்சந்திப்புகளின் விளைவால், போலீஸாரின் நடுக்கம் உச்சத்தை எட்டி கொதிநிலைக்குப் போய்விடுகிறது.

அனிஸ் வில்லாவுக்குத் திரும்பியதும், டெல்லியிலுள்ள போலீஸ் அதிகாரி குல்பீர் கிருஷணிடமிருந்து விஜய்க்கு ஒரு அலைபேசி

அனுபவ வருகிறது டெல்லிப் போலீஸின் புலப்படாத கட்டுப்பாட்டுக் கைதியின் எதிரில் இருப்பவர் கிருஷ்ண். ஆனால் அவர் கூறியது எங்களது நடைபெற இருப்பதை நான் கண்டிப்பாக விரும்பவில்லை [illegible] இருக்கச் செய்கிறது. என்னிடம் பேசும் போது அவர் அமைதியாக [illegible] கொண்டிருக்கிறார்.

அப்பத்திரிகையாளர்களை நாம் உலகத்திற்கு வரவழைத்திருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறோம். நாம் சொன்னதை நிறைவேற்றவில்லை, கனவான்களாக நடந்து கொள்ளவில்லை என்கிறார். நாளைக்கு டெல்லியில் கலவரங்கள் நிகழும். கட்டடத்தின் மீது நாங்கள் கட்டு மரங்களை நட்டால் உங்கள் தலைகள் மீது குருதி கொட்டியிருக்கும்.

நான் யோசிக்கிறேன். இதில் இரு விஷயங்கள் இருப்பது சட்டென்று எனக்குத் தெளிவாகிறது. சற்றுத் தனிவானதும் முதலாவதுமான விஷயம் எல்லாவிதமான பாதுகாப்பு நிபந்தனைகளையும் வாய்ப்புகளையும் ஒத்துக்கொண்ட ஒரு [illegible], நாங்கள் நேர்மையில்லை நம்பிக்கையில்லை என குற்றஞ்சாட்டப்படுகிறோம். இது மனதைப் புண்படுத்துவது. அநியாயமானது. ஆனால் ஆபத்தானதில்லை. இரண்டாவது விஷயம் வாழ்வா சாவா பிரச்சனை. டெல்லிப் போலீஸ் மக்களைக் கொல்ல ஆரம்பித்துக் கொண்டிருந்தால் அது நிறுத்தப்பட வேண்டும்.

சம்பிரதாயம் பார்க்க நேரமில்லை. ஜார்ஜ் நிதானத்துடன் பார்க்கிறான். கவர்னர் கிருஷ்ண இப்போதே தொலைபேசியில் விஷயத்தைச் சொல்லட்டும் தனிப்பட்ட முறையில் மன்னிப்பு கோரி நாளைக்கு யாரையும் கொல்வதற்குத் திட்டமேதும் இல்லை என்று உறுதிப்படுத்தாவிட்டால் நான் இரவே டெல்லி சென்று இப்பிரச்சனையை தனிப்படக் கவர்னருக்கு பிரதமர் வாஜ்பாயிடம் எடுத்துச்செல்வேன் என்று அச்சக் குமாரிடம் (அவரது குற்றம் ஒன்றுமில்லை) சொல்கிறேன்.

இந்தக் கோபத்துடன் [illegible] நேரம் [illegible] தொலைபேசியில் [illegible] கட்டளை [illegible] தொலைபேசி [illegible] தெரிந்து கொள்ளலாம் [illegible] இருக்கிறது என்று [illegible] தொலைபேசியில் [illegible].

[illegible] பொறுத்தவரை நான் [illegible] பொறுத்துக் கொள்ளுங்கள் என்று தன் அமைதியை [illegible]. இதன் [illegible] கண்டு [illegible] தொலைபேசியை வைக்கிறேன். ஆனால் சரியாகத் தூங்கவில்லை. அடுத்த இருதினங்களில் என்ன நிகழ்கிறது என்பதை வைத்தே [illegible] இடைவெளியில் அர்த்தத்தை வரையறுக்க முடியும். [illegible] எதிர்ப்பை [illegible] என்று நான் நம்பிக்கையும் உறுதி கொள்ளவில்லை. டெல்லி அவர்களின் நகரம், நானோ [illegible] விருந்தினன்.

வெள்ளி, ஏப்ரல் 14

[illegible]

[illegible]

[illegible]

இன்று டெல்லியில் நடந்தது என்ன? பாதுகாப்புப் பிரிவினரின் பார்வை எப்போதும் நம்பகமானதாகவும், ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் இருக்கும். ஆனால் அது ஒரு பக்கப் பார்வையே. உலகெங்கிலும் உள்ள பாதுகாப்புப்படையினரின் பணி நடைமுறை ஒன்று. இருவருக்குமான பார்வையைப் பெற முயன்று பெரிய ஆர்ப்பாட்டம் நடந்திருப்பின் எங்களது பதட்டமெல்லாம் நியாயப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறி இருப்பார்கள். ஆனால் அதற்கு [illegible] சிக்கலைத் தவிர்க்க முடிந்தது என்கிறார்.

அப்படி இருக்கக்கூடும். பெரும்பான்மை இந்திய முஸ்லிம்களுக்கு [illegible] இப்போது மறுபடி விஷயம். அரசியல்வாதிகள் மற்றும் மீடியாவின் முயற்சிகள் இருப்பினும், யாரும் அவசரத்துக்குச் செல்ல

என்னால் உணர முடிகிறது. ஓர் ஆயுளில் இத்தகு தருணங்கள் சிலவே. இது பற்றி நான் அதிகப்படியாகவே கூறுவதற்காக என்னை மன்னியுங்கள் உங்கள் இருதயத்தின் ஆசை அனுமதிக்கப்படுவது அரிதானது.

காமன்வெல்த் எழுத்தாளர்கள் பரிசு ஜே.எம்.கூட்ஸிக்குப் போகின்றது. அவ்விருந்தில் ஆவிபோல் அமர்ந்து பாறையான இறுகிய முகம் கொண்டுள்ள இந்திய நடுவர் சஷி தேஷ்பாண்டேயின் தீர்மானகரமான வாக்குக்கு நன்றி. ஆனால் அவரது உறைந்து போன முடிவுகள் கூட எட்டிப்பார்க்க முடியாத கொண்டாட்டம் அது. இந்தியாதான் பரிசு.

சனி, ஏப்ரல் 15

ருஷ்டி இந்தியாவிலிருப்பது, ஷோல்ஜெனிட்ஸன் திரும்பவும் தாயகத்தைப் பெற்றது போல - ஆனால் கோபமோ இடைக்காலத்து தீர்க்கதரிசனங்களோ இல்லாதது. இங்கிருப்பது ஆனந்தம் மட்டுமே. ஏகப்பட்ட சந்தோஷம். இந்தியன் எக்ஸ்பிரஸின் மிகைப்படுத்தப்பட்ட முன்பக்கச் செய்தி குறிப்பிடுவது போல விழாக் கொண்டாட்ட உணர்வு ஊடகத்திற்குள் கசிகிறது. ஊமையான எதிர்மறைக்குரல்கள் சிலவற்றை மூழ்கடிக்கிறது. பத்திரிக்கையாளர்களுடனான எனது உரையாடல்களிலெல்லாம், பழைய ரணங்களைக் கிளறிப் பார்ப்பதைத் தவிர்த்து, நான் ஒரு போதும் முஸ்லீம்களின் பகைவனாக இருந்ததில்லை, இப்போதும் இல்லை என்று கூறவும்! முறிந்து போன கண்ணிகளை சரிப்படுத்தவே இங்கு வந்திருக்கிறேன் என்று வற்புறுத்தவும் ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்கப் போகிறேன் என்று குறிப்பிடவும் முயன்றுள்ளேன். இன்றைய Asian Age உடன்பாடு கொள்கிறது. ஒரு பக்கத்தைப் புரட்டுவோம் The Satanic Verses-நாவலை முதலாவதாகத் தடைசெய்து, அதனைத் தொடர்ந்து ருஷ்டியை இம்சித்து வருத்தியதற்காக இந்தியா சிறந்து பரிகாரம் தேடியுள்ளது என்று Outlook குறிப்பிடுவதைக் காணும்போது சந்தோஷமாயுள்ளது. ஜனநாயக மதிப்புகளுக்காவும் தன்னை வெளிப்படுத்தும் தன் நபர் உரிமைக்காகவும் இந்தியா மீண்டும் ஒரு முறை எழுந்து நிற்பதற்காக The Pioneer தன் மனநிறைவை வெளிப்படுத்துகிறது.

The Times of India-வின் திலீப் படகோங்கர் மிக கச்சிதமாக இதனைக் குறிப்பிடுகிறார். அவர் இந்தியாவுடன் இணக்கம் கொண்டுள்ளார். இந்தியா அவருடன் இணக்கம் காண்கிறது. அவருக்கு நிகழ்ந்துள்ள உன்னதமான ஒன்று, தன் கதைகளால் நம்மை அவர் வசியப்படுத்துவதை தொடருமாறு அவருக்குத்துணைப்புரிய வேண்டும்.

அவரது இருதயம் எப்போதும் இருந்து வந்து கொண்டிருக்கும் இடத்திற்கு அவர் திரும்பியிருக்கிறார். அவர் தாயகம் திரும்பியுள்ளார். The Hindustan Times-இல் தடையை மறுபரிசீலனை செய்க என்னும் தலைப்பில் தலையங்கம் இருக்கிறது. ஊடகங்கள் அனைத்திலும் இவ்வுணர்வு எதிரொலிக்கின்றது. The Times Of India-வில் மற்ற அறிஞர்களின் மத்தியில் ஒரு இஸ்லாமிய அறிஞர், தடைக்கான முடிவை ஆதரிக்கின்றார். The Satanic Verses இந்தியாவில் இலவசமாக வெளியிடப்பட வேண்டும் என்றும் மின்னணு ஊடக அபிப்பிராய வாக்கெடுப்பில் 75% வரை ஆதரவாக வாக்களிக்கின்றனர்.


விஜய் எனக்கு ஒரு பிரியாவிடை விருந்தளிக்கிறார். சிறை அமைப்புகள் மற்றும் தண்டனை சீர்திருத்தத்தில் நிபுணரான அவரது மனைவி ராணி வியன்னாவில் ஒரு மாநாட்டிலிருந்து நேரத்தே திரும்பியிருக்கிறார். ஓர் ஆச்சரியமும் உள்ளது. எனது இரு அத்தைகள், நடிகைகளான உஸ்ரா பட்

மற்றும் ஜோரா ஸேகல் ஆகியோர் எனது அத்தை மகள் கிரண் ஸேகலுடன் இந்திய செவ்வியல் நாட்டியமான ஒடிஸ்ஸியில் முன்னணி விற்பன்னராகவும் ஆசிரியராகவும் இருப்பவர் வந்திருக்கின்றனர். கூர்ந்த நாக்கும் விஷமப்பார்தலையும் கொண்டுள்ள இவர்கள் குடும்பத்தின் உற்சாகமான பிரிவினர் உஸ்ராவும் ஜோராவும் இந்திய நாடகத்தின் பாட்டிகள் என்று கூறத்தக்கவர்கள். ஏதேனும் ஒரு காலத்தில் கிரணுடன் பாசங் கொண்டிருந்தவர்கள். 1960 களில் ஹாம்ஸ்டெட்டின் அடுக்குமாடி ஒன்றில் ஜோராவும் கிரணும் வசித்தனர். ரக்பி பள்ளியில் நான் படித்த போது விடுமுறைக் காலத்தினை நான் அங்கு கழித்ததுண்டு. அதே காலகட்டத்தில் அதே அறையினை விஜயும் ரோஷன் சேத்தும் பகிர்ந்து கொண்டிருந்ததை இப்போது அறிந்து கொள்கிறேன்.

A Dream of Glorious Return - Step Across this line




பிரகீத் கருத்துப்படங்கள்



உன்னுடைய பெருவிருப்பம் மற்றவனைச்
சுருக்கிடுவதில் முடியக்கூடும்



உன் முகத்தை உன் துணியாலே மூடிக்கொண்டால்
நீ செய்த குற்றத்தை உன்னால் காணவியலாது



பலவீனமானவர்களே ஜனநாயகத்தை
எதிர்க்கிறார்கள்



பெரும்பான்மையே ஜனநாயகத்தை
அடையாளப்படுத்தினால்



நீதியும் இருக்கக்கூடும் வெளிப்படையற்று




அவர்கள்தான் நாம் இலங்கை பிரஜைகள்



மதம் தான் அதிகாரம், அரசியல் போன்று ஏனெனில் இரண்டும் தம் வடிவத்தை தாமே வடிவமைக்கின்றன.



அமைதிக்கான யுத்தம் என்பதே புதிய கோஷம் ஆனால் இந்த அமைதி யுத்தத்திற்காகவே



பிரகீத் ரஞ்சன் எக்னேலிகோடா - இலங்கை கார்ட்டூனிஸ்ட், பத்திரிகையாளர், அரசியர் விமர்சகர். கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்தியமையால் கடந்த ஜனவரி 24, 2010 அன்று காணாமல் போனவர். (அதிபர் தேர்தலுக்கு இரு தினங்களுக்கு முன்னர்) வருடம் ஒன்றுக்கு மேலாகியும் எங்கிருக்கிறார் என்னவானார் என்று தெரியவில்லை. இலங்கை மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் இது தொடர்பான ஆட்கொணர்வு மனு மே 2011ல் தான் விசாரணைக்கு வரவிருக்கிறது.

தமிழில் **சம்யுக்தா பினாகினி**

செக்கோவின் நண்பன்

சல்மான் ருஷ்டி

தமிழில் இர. மணிமேகலை

1984ம் ஆண்டு நவம்பர் மாதத்து 4-ம் தேதியில் பர்மிங்ஹெம்மில் ஜுலு காணாமல் போனான். இந்திய உளவியல்துறை விம்ப்லேயிலிருக்கும் ஜுலுவின் மனைவியைச் சந்திக்க அவனது பள்ளித்தோழன் செக்கோவை விம்ப்லே அனுப்பியது. திருமதி. ஜுலு உள்ள வரலாமா? கண்டிப்பா டிப்டி சாஹிப். சம்பிரதாயக் கேள்வியெல்லாம் எதுக்கு? ஞாயிற்றுக்கிழமை உங்களைத் தொந்தரவு செய்யறேன். மன்னிக்கணும். திருமதி. ஜுலு இன்னிக்குக் காலைல ஜுலு உங்ககூடப் பேசினாரா? என்னோடாய? எந்தக்காலத்துல அலுவலக வேலையாப் போயிருக்கும் போது எங்கூடப் பேசியிருக்கார்? அவர் மகிழ்ச்சியாயிருக்கும்போது தொலைபேசியில கூப்பிட்டு அவர் சந்தோஷத்தை ஏன் கெடுக்கணும்? வருத்தமாகத்தான் இருக்கு. என்ன மன்னிச்சிடுங்க. எப்பவுமே நான் சொல்றது கொஞ்சம் தப்பாகத்தான் போயிடுது. சரி தேநீர் குடியுங்க. திருமதி. ஜுலு இந்த ஸ்பேர்ட் அலங்காரம் மிக அற்புதம். கண்ணாடி வேலைப்பாடு இல்ல? ரொம்ப நல்லாயிருக்கு. அந்த அயோக்யன் இதுக்காகவே அதிகம் சம்பாதிக்கணும். புத்திசாலி நாய்.

அது எப்படி முடியும்? தலைமை பாதுகாப்பு அதிகாரிங்கிறதுனால டிப்டி சாஹிப்பின் சம்பளம் கொஞ்சம் அதிகமோ?

சந்தேகமே வேண்டாம். ஜி ஆனா ஒண்ணு பேரம்பேசறதுல நீங்க ரொம்ப கெட்டிதான். அதவிடுங்க. அங்க ஏதோசிக்கல் அப்படித்தான? நீங்க கேட்டது புரியல அரே ஜெய்சிங் தூங்கிட்டிருக்கிறயா? நம்ம டெப்டி சாருக்கு டீத்தாகம் எடுத்திடுச்சு. பிஸ்கெட்ஸிம் ஜிலேபியும் கொண்டுவர்றியா? உடனே குதிச்சு ஓடிவா. விருந்தாளி காத்துக்கிட்டிருக்கார்.

திருமதி. ஜுலு நீங்க சிரமப்படாதீங்க?

இதிலென்ன சிரமம் டிப்டிஜி. வீட்டிலிருந்து வந்தப்புறம் இந்தப்பையன் ரொம்ப சோம்பேறியாயிட்டான். விடுமுறை, அறையில் தொலைக்காட்சி பவ்ண்ட், ஸ்டாலிங் இப்படி எல்லாமே அவன் எதிர்ப்பார்க்கிறான். ஆனா என்ன சொல்றது ஒண்ணும் சரியில்ல.

ஏன் சரியில்ல, அருமையான ஜிலேபி, நன்றி திருமதி. ஜுலு தொலைக்காட்சி பெட்டியின் மேலும் அதைச்சுற்றியிருந்த அறைகளிலும் காணாமல் போன ஜுலுவின் பயணங்களை நினைவுறுத்தும்படி நினைவுச்சின்னங்கள் நிறைந்திருந்தன. **தலைவர் கிர்க், ஸ்போக் பொம்மைகள், விண்வெளி ஓட மாதிரிகள், கிலிங்கன், பேர்ட் ஆப் ப்ரே, ரொமுலன் விண்வெளிக்கப்பல், விண்வெளி மையம், ஸ்டார் ஷிப் நிறுவனம்** என இரண்டு வரிசையில் அமைந்திருந்த அந்தச் சின்னஞ்சிறு சிற்ப உருவங்கள் ஆக்ரமித்திருந்த இந்த இடம் செருக்கினாலும் பெருமையினாலும் நிறைந்திருந்தது. நாங்க டெஹ்ராடூன் பள்ளியில் படிக்கும் போது எங்களுக்கு வெச்ச பட்டப்பேர் இருக்கே என மனம் நிறைந்த ஆச்சர்யத்துடன் செக்கோவ்

பேசத் தொடங்கினான். அந்தப் பெயர்கள் எல்லாம் ஒருத்தர்கிட்ட தொடர்ந்திருக்கற ஆவணம் மாதிரித்தான். கணங்கி, குட்டையன், மூணங்கி, கூனன். இதெல்லாம் எங்கிட்ட இருந்துதான் உருவாகும். ஆன எங்க ரெண்டு பேரு விசயத்துல பயம்ங்கற வார்த்தையே அறியாத ரஷ்ய விண்வெளி வீரர்களின் பெயர்கள்தான் இருந்துச்சு.

எனக்குத் திருமதி ஜுலுன்னு கூப்பிடறது பிடிக்கல. நான் திருமதி. ஜுலுதான். ஆனா என்ன அப்படிக் கூப்பிடறது கருப்பின்னு கூப்பிடற மாதிரி இருக்கு.

பட்டப் பெயர்களை எப்பவும் பெருமையோட ஏத்துக்கணும் மேம் சாஹிப்? நாங்க ரெண்டு பேரம் போர்தளவாடங்களில் பழைய தோழர்கள். நானும் உங்க வீட்டுக்காரரும்தான். சின்னவயசிலிருந்தே அவன் தைரியமான தந்திரமான விண்வெளி வீரன்னு சொல்லலாம். ஒரு புதிய உலகையும் புதிய நாகரிகங்களையும் தேடிக்கண்டுபிடிப்பதுதான் எங்களுடைய குறிக்கோளா இருந்துச்சு. அங்க பாருங்க உங்க டிவி மேல. எங்களோட ஆளுமைகளின் பிரதிபலிப்பைப் பார்க்கலாம். ஆசியக்கண்டத்தைச் சேர்ந்த ருஸ்கியும் சின்கும். நீங்க நினைக்கற மாதிரி அவங்களத் தலைவர்கள்னு நினைச்சு நாங்க கொண்டாடல. ஆனா நல்ல தொழில் வல்லுநர்களா அவங்க எங்களுக்கு முன்னோடி. எங்களோட முன்னேற்றம் தொடங்கியது. வரவேற்பளிக்கும் எண்ண அலைகள் எங்கள எதிர்கொண்டுச்சு. ஆனால் மூன்று விசயங்கள் எங்களோட இயல்பை மாத்திச்சு. அந்தத் திமிர்பிடிச்ச தலைவன். அவனுக்குக் கீழ் வேலைபார்க்கும் உயர் அதிகாரிகள் இல்லாம அவனால் என்ன செய்ய முடியும்? ஹிந்துஸ்தான் நல்லுறவு மாதிரிதான். நாங்க வேலைக்காரங்கத்தான் உங்க ஜெய்சிங் மாதிரி. இப்படி இருக்கற மாதிரி மோசமான சூழல் எப்பவும் இருந்ததில்லை. எந்தச் சூழலிலும் அடிப்படை அமைப்பு சரியா இருக்கணும் இல்லையா. ஜிலேபிகள் பரிமாறப்படணும் டீயும் ஊத்தப்படணும். ஆனா எப்படிங்கிறது பெரிய விஷயமில்ல. நாங்க வழிநடத்தப்போறதில்லை. ஆனா எங்களால முடியும். நாங்க இல்லாம எந்த விசயமும் முன்னேற்றத்தைக் கொடுக்கப் போறதில்லை. எந்த முன்னேற்றமும் ஏற்படாது.

அவரு ஏதாவது சிக்கல்ல மாட்டிக்கிட்டாரா? தாங்கிக்க முடியாத கெடுதல் ஏதாவது நடந்திடுச்சா? ரொம்ப பயங்கரமான நேரமாயிருக்கே.

தொலைக்காட்சிக்குப் பின்னாலிருக்கும் சுவரில் இந்திரா காந்தியின் சட்டமிடப்பட்ட புகைப்படம் மாட்டப்பட்டிருந்தது. அதன் மேல் மலர்மாலை தொங்கிக் கொண்டிருந்தது. அவர் புதன்கிழமைதான் இந்த உலகைவிட்டு மறைந்திருந்தார். அவருடைய இறுதிச்சடங்கைத் தொலைக்காட்சி பலமணிநேரமாக ஒளிபரப்பிக் கொண்டிருந்தது. இறுதிச்சடங்குக்குத் தயாராயிருந்த மலர்களின் இதழ்கள் தாங்கிக்கொள்ளவியலாத மனக்கிளர்ச்சியை உண்டு பண்ணின. நம்பவே முடியல. இந்திராஜி வார்த்தையே வரமாட்டேங்குது. அவங்க எங்க அம்மா. அவங்க சகாப்தம் முடிஞ்சுது.

வானொலியும் தொலைக்காட்சியிலயும் டெல்லி

நிகழ்ச்சிகளைப் பத்திய பல கதைகள் வருது. எத்தனை கொலைகள் டிப்டிசாகிப், நம்மோட சீக்கிய மக்கள் பெருவாரியாகக் கொல்லப் பட்டிருக்காங்க. ரெண்டு பாதுகாப்பாளர்கள் செஞ்ச தப்புனால எல்லோரும் குற்றவாளியாயிட்டாங்க.

சீக்கியர் எப்பவுமே நாட்டுக்கு நேர்மையானவங்கதான். செக்கோவ் திருமதி. ஜுலுவின் கருத்தை ஆமோதித்தான். அவங்க இராணுவத்தின் முதுகெலும்பு மட்டுமல்ல டெல்லியில வாடகைக்கார்களே அவங்களாத்தான் ஓடுது. வயசானவங்க எல்லாரும் நாட்டின் கருத்துக்கு ஒத்துப்போவது போலத்தோணும். ஆனா இப்ப அந்தக் கருத்து எல்லாமே கேள்விக்குள்ளாயிருக்கு. இத நீங்க ஏத்துக்க வேண்டியதுதான். சீப்பு, வளையல், கூர்மையான கத்தி இதுமாதிரிப் பொருள்களோட இருக்கறவங்க எல்லார்த்துக்குள்ளேயும் ஒரு எதிரி ஒளிஞ்சிருக்கான்னு அர்த்தமாகுது.

நம்மப்பத்தி இப்படி பேச யாருக்கு தைரியம் இருக்கு? இவ்வளவு மோசமாப் பேச?

எனக்குத் தெரியும். இப்ப நீங்க ஜுலுவை எடுத்துக்குங்களேன். ரொம்பக் கூச்சப்படவேண்டிய விசயம் என்னன்னா அவன் இப்ப அலுவலக வேலைல இல்ல. அவன் அவனோட வழியத்தவறிவிட்டுட்டான் பேகம் சாகிப்பு. இப்ப ஜுலு அலுவலகத்துக்கும் வரல. வீட்டுலயும் இல்ல. ரெண்டு நாளா எந்தத் தகவலும் இல்ல.

அடக்கடவுளே

தலைமையகத்துக்கு வந்த செய்தியின்படி ஜுலுவுக்கு ஏதோ ஒரு கூட்டத்தோட தொடர்பு ஏற்பட்டிருக்கணும். அதுவும் அந்தக் கூட்டம் நீண்ட நாட்களா இங்கிருக்கிறவங்களோட தொடர்பு கொண்டிருக்கிறவங்களா இருக்கணும்.

கடவுளே!

ஆனா இந்தக் கருத்தையெல்லாம் நான் வன்மையா எதிர்த்துதான் பேசியிருக்கேன். ஆனா ஜுலு இந்த நேரம்பாத்துக் காணாமப்போனதப்பத்தி நீங்களே யோசிச்சுப்பாருங்க. நமக்கு இந்தக் காலிஸ்தான்காரங்கிட்ட எந்தப் பயமும் இல்லைன்னாக்கூட. அவங்க கொஞ்சங்கூட இரக்கமே யில்லாதவங்க. ஜுலுவோட அறிவு, பாதுகாப்புப் பின்னணி இதெல்லாம் யோசிச்சுப்பார்த்தா. அவங்க மறுபடியும் மேற்கொண்டு ஏதாவது தாக்குதல் செய்ய மிரட்டலாம். உங்களுக்குத் தெரிஞ்ச மாதிரி ஆமா கண்டிப்பா உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். அப்படித்தான் சொல்லிக்கறாங்க. உங்களுக்கு எல்லாமே நல்லாத் தெரியுங்குறாங்க

ஐயோ கடவுளே!

அதுக்கு வாய்ப்பிருக்குதான் செக்கோவ் ஜிலேபிகளை ருசித்தவாறே ஜுலு வேற எந்த புத்திசாலி விண்வெளி வீரரும் போகாத இடத்துக்கு தைரியமாகப் போயிருக்கான். ஜுலுவின் மனைவி கதறியழத்தொடங்கினாள். அந்தப் பேரக்கூட எப்பவும் சரியாச் சொன்னதில்ல.

அது சூ சூலு நானும் பாத்துட்டுதான் இருக்கேன். எனக்குத் தெரியாதுன்னு நெனச்சீங்களா? கிர்க் ஸ்பாக் மெக்காய் ஸ்காட் உகூரா செக்கோவ் சூலு.

ஆனா ஜுலுங்கற பேர் அவன் ஒரு கிறுக்கன்னு உறுதிப்படுத்திடுச்சு. அவன் ஒரு சந்தேகத்திற்குரிய காட்டுமிராண்டி, ஏமாத்துக்காரன், துரோகி.

உங்களுடைய சுவையான தேநீருக்கு நன்றி.

ஆகஸ்டு மாதத்தில் டில்லி விமானத்திலிருந்து கீழிறங்கிய செக்கோவை கூச்சம் நிரம்பிய முரட்டுத்தனமான ராட்சசன் ஜூலு சந்தித்தான் செக்கோவ் முப்பத்து மூன்றுகளில் இருந்தான். சிறிய உருவத்துடன் ஒல்லியான எடுப்பான தோற்றத்தைக் கொண்டிருந்தான் செக்கோவ். சாம்பல நிறக்கம்பளி ஆடையோடு பித்தளைப் பொத்தான்கள் பொருத்தப்பட்ட விரைத்த கழுத்துப்பட்டையோடு கூடிய பெரிய மார்புக்குரிய நீல நிற மேல்ச்சட்டையை அணிந்திருந்தான். அவனுடைய புருவங்கள் வெளவாலின் சிறகைப்போல் படர்ந்திருந்தன. அவனது தாடை மிகச்சிறியதாக யாரையும் எளிதில் வம்புக்கு இழுக்கக்கூடியதாக இருந்தது. அதனால்தானோ என்னவோ அவனுடைய குரல் மிகப்பக்குவப்பட்டதாக இருந்தது. அதே சமயம் மென்மையாகப் பேசுவது மிக ஆச்சரியத்தைத்தந்தது. அந்தப் புருவத்தாலும் தாடையாலும் வழிநடத்திச் செல்லப்படும் எந்த நிராயுதப்பாணியும் அவனிடம் வியச்சண்டையிடும் ஆளுமையை எதிர்ப்பார்பார்கள். அவன் தூதரகத்தின் சார்பாக இரண்டு மலைகளுக்கிடைப்பட்ட பிளவின் வழியாக உயர உயரப்பறக்கும் விமானி. தற்போது லண்டனில் அவன் ஈடுபட்டிருக்கும் வேலை அவனது சமீபத்திய வெற்றிக்கனி.

எத்தன வருஷமாச்சு என்றவாறே செக்கோவ் சூலுவின் மார்ப்பைத்தன் உள்ளங்கையால் தட்டினான்.

அப்பா நீ கூந்தலழக -னாயிட்டே இளம் ஜூலு தலைமுடியோடு இருக்கும் நவநாகரிகச் சீக்கியன். 18 வயதில் பொழுது போக்கிற்காக மீசையை வளர்த்திருந்தான். ஆனால் அவனுக்கு தாடியில்லை. நீண்ட மயிர்க் கற்றையைத் தலைப் பாகைக்குள் வளைத்துக்கட்டாமல் நன்றாக முடியை ஒட்ட வெட்டியிருந்தான். ஆனால் இப்பொழுது தன் பாரம்பரிய பண்பாட்டுக்குத் திரும்பியிருந்தான்.

ஹலோ என்றான் ஜூலு எச்சரிக்கையுணர்வுடன்.

அப்ப பழைய முகரியையே பயன்படுத்திக்கலாமா.

ம் பயன்படுத்திக்கலாம். நீ வேற எதையும் கேள்விப்படல இல்ல? என்று கேட்டான் செக்கோவ். ஜூலு செக்கோவின் பைகளையும் மூட்டை முடிச்சுகளையும் எடுத்துக் கொண்டான். நம்ம நிறுவனத்தின் ஒற்றுமையையும் அங்கு நடக்கும் கூத்தையும்தான் கேட்கிற.

பொதுவாழ்க்கையில் இணக்கமான மனிதனாக இருக்கும் செக்கோவ் சாதாரண வீரனாகிவிட்டால் சற்றுகுழம்பிப் போவதுண்டு. செக்கோவ் தனது புதிய பதவியை ஏற்றுக்கொண்டவுடன் ஒரு மதிய உணவு வேளையில் ஜூலுவுடன் எம்பேன்க்மெண்ட் தோட்டத்தின் இருக்கைகளில் ஒன்றில் அமர்ந்திருந்தான். அவன் தலை பல்வேறு திசைகளிலும் கடந்து கொண்டிருந்த வழிபோக்கர்களை நோக்கித்திரும்பிவாறிருந்தது. ஏமாத்துக்காரங்க என்றான் மிகச்சிறிய குரலில் எங்க? துள்ளிக் குதித்தான் ஜூலு நான் துரத்தி பிடிக்கட்டா தலைகள் திரும்பின. செக்கோவ் திடீரென ஜூலுவின் சட்டைப் பட்டையைப் பிடித்து இழுத்து இருக்கையில் அமரவைத்தான் கதாநாயகனாக முயலவேண்டாம் பா என்று ஆசையோடு அறிவுரை கூறினான். நான் பொதுவா எல்லாத் திருடங்களையுந்தான் சொன்னேன்.

எனக்கு லண்டன் ரொம்பப் பிடிக்கும். லண்டனின் திரையரங்குகள் பாடல்களும் பேச்சுகளுமில்லாத கூட்டு நடனம் போலே இசைநாடகம், உணவகம், சனிக்கிழமை லார்ட்ஸில் டெஸ்ட் விளையாட்டைப் பார்க்கப் பார்வையாளர் உட்காருமிடம், ராயல் தெருவிலுள்ள ராயல்பான்டில் நடைபயிலும் என் அன்புக்குரியவர்கள், செயிண்ட் ஜேம்ஸ் பூங்கா, பண்பான தையல்காரர்கள், விரும்பும் போது கிடைக்கும் பக்குவமாகச் சுடப்பட்ட கறி, நல்லதரமான இதழ்கள், சிறப்பாக என்னைக் கவர்ந்தவைகள் என் நினைவுகளில் இன்னமும் இருக்கு. அதை உன்கிட்டப் பகிர்ந்துக்கறதுனால எனக் கொன்னும் இல்ல. ஏதினியம் முயல்பண்ணை, ட்ராபால்கர் சதுக்கத்திலிருந்து சிங்கங்கள். அப்பாடி அதெல்லாம் எவ்வளவு அழகுதெரியுமா. நான் துணை அமைச்சரைச்சந்திக்க எஃப்சிஓ அலுவலகம் போனேன். அப்போ பழைய இந்திய அலுவலகம் ஒன்றிலிருப்பதாகவே உணர்ந்தேன். ஜான்கம்பெனி ப்ளாக் டீக்காரரர்கள் பழைய வழக்குகள் மேலக்கடுங்கோபத்தோட இருந்தாங்க போல. அவங்க எனக்கு முற்றிலும் புதிய திருப்பத்தத்தந்தாங்க. அவங்களோட வெற்றியை நான் பாராட்டுறேன். ஆனா அதுக்கப்புறம் என் வீடு கொள்ளைக்காரங்களால கொள்ளை போயிருந்தது. அந்த மனத்துயரத்த என்னால மறுக்கமுடியல.

உன்னோட இழப்புக்கு நான் வருத்தம் தெரிவிச்சுக்கிறேன் என்ற ஜுலு புருவத்தை முடிச்சிட்டவாறே ஆனா நிச்சயமா குற்றவாளிகள் பக்கத்துல இல்ல.

ஜுலு..... ஜுலு என் முட்டாள் போர்வீரர்களின் இளவரசே. அவங்களோட அருங்காட்சியகங்கள் எல்லாமே நம்ம செல்வங்களால்தான் நிறைஞ்-சிருக்குன்னு நான் நினைக்கிறேன். அவங்களோட அதிஷ்டமும் நகரங்களும் அவங்க கொள்ளையடிச்ச பொருட்களின் மேலதான் கட்டப்பட்டிருக்கு. நாம மன்னிச்சிடுலாம். அது நம்நாட்டவர்களின் இயல்பு. ஆனா மறக்கக்கூடாது.

கந்தலான தொப்பியையும் மேலங்கியையும் அணிந்து அங்கேயிருந்த படுக்கும் வசதியுள்ள இருக்கையின் மேல் படுத்திருந்த நாடோடி ஒருவனைச் சுட்டிக்காட்டிய ஜுலு அவன் கூட நம்மகிட்டயிருந்து திருடியிருக்காங்கிறியா? என்று கேட்டான்.

மறந்துடாத என்ற செக்கோவ் விரலை மேலும் கீழும் ஆட்டிக்கொண்டே பிரிட்டீஷ் தொழிலாளர்கள் காலனிமயமாக்கிய திட்டத்தில் இணைந்து வேலை செய்யக்காரணம் அவங்களோட சொந்த லாபத்துக்காகத்தான். மான்செஸ்டர் பருத்தித் தொழிலாளர்கள் உடனடியாக நம்முடைய பருத்தித் தொழிலை நாசஞ்செஞ்சாங்க. நாட்டின் நல்லுறவை வளர்க்கிற துறையில இருந்துட்டு நாம இதுமாதிரி உண்மைகள் மேல கவனம் செலுத்த முடியல. இருந்தாலும் இதெல்லாம் இன்றும் உண்மையாகத்தான இருக்குது? என்றான்.

ஆனா பிச்சைக்காரன் தொழிலாளி வர்க்கமாக முடியாது என்று காரணத்தோடு மறுத்தான் ஜுலு.

ஆமா கண்டிப்பா இவன் நம்மைச் சுரண்டின வர்க்கம்னு சொல்லமுடியாது, ஜுலு! செக்கோவ் எரிச்சலுடன் முட்டாள்தனமாப் பேசாதே என்றான்.

செக்கோவும் ஜுலுவும் சொர்பென்டைனுக்குப் படகு சவாரிசெய்யப் போனார்கள். செக்கோவ் மரக்குதிரையில் அமர்ந்து கொண்டான். அவங்க நம்மள அபகரிச்சுட்டாங்க என்றவன் நேரான விளம்புகளைஉடைய வெளிர் மஞ்சள் நிறத்தொப்பியை அணிந்தவாறே உறைகளற்ற மெத்தைகளின் மீதிருந்த மதுபானத்தை எடுத்துக்கொண்டான். ஜுலு துடுப்பை வலித்தப்படி படகைச் செலுத்தினான். இப்பக்கூட நம்மள நாமே அபகரிச்சிட்டுத்தான் இருக்கோம். சூழலுக்கேத்த மனோநிலைதான் காரணம். இருக்கறதுல திருப்தியடைஞ்சுக்கணும் என்றவாறே நீரோட்டத்தின் போக்கில் படகைச் செலுத்திய ஜுலு கோலாவை விழுங்கினான். உனக்குக் கொஞ்சமாப் பசிவரணும். கொஞ்சமாக் கோபம் வரணும் பாரு நீ எவ்வளவு குடிச்சிருக்கேன்னு. இப்போது சாஞ்சு உட்காரு. சந்தோஷமாயிரு. நான் கொஞ்சமாத்தான் எடுத்துக்கிட்டேன். எனக்கு இது போதும். சூரியன் ஒளிருது. ஆனா காலனிமயமாக்கப்பட்ட காலம் மூடிய புத்தகமாயிடுச்சு. உனக்கு சாண்ட்விச் வேண்டாம்னா எங்கிட்டக்குடு என்ற செக்கோவ் மேலும் தொடர்ந்தான். என்னுடைய இயற்கைப் பாதுகாப்புத் தீவிரவாதக் கோட்பாட்டைப் பார்த்தால் நான் ஒரு ராஜதந்திரியா இருக்கக்கூடாது. ஆனா தீவிரவாதியா இருக்கலாம். அப்புறம் நாம ரெண்டுபேரும எதிர்எதிர் அணியில எதிரியா இருந்திருப்போம் என மறுத்த ஜுலுவின் கண்களில் திடீரெனக் கண்ணீர் பொங்கியது. உண்மையான கண்ணீர், நீ நம்ம நட்பப்பத்தியோ வாழ்க்கையில என்னோட பொறுப்புகளப்பத்தியோ கொஞ்சங்கூட நினைக்கமாட்ட இல்ல என்றான் ஜுலு. செக்கோவ் வெட்கப்பட்டான். சரிதான் ஜுலு. என் பழைய நண்பனே நீ சொல்றது முட்டாள்தனமான உண்மைதான். நாம ரெண்டுபேரும் லண்டன் உளவுத் துறையில் படைவீரர்களாக இணையமுடியும்னு நான் தெரிஞ்சிக்கிட்டபோது எவ்வளவு சந்தோஷப்பட்டேன்னு உன்னால கற்பனைகூடப் பண்ண முடியாது. சின்னவயது நட்புக்கிணையா வேறெதுவும் கிடையாது. உலகத்தில் வேறு எதுவுமே அந்த இடத்தைப் பிடிக்கமுடியாது. அட என் புத்திசாலியே இந்த நீள முகத்தைவிட எனக்கு வேறு எதுவும் பெரிசில்ல. நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன். உன்னமாதிரி ஆளுக தேம்பி அழலாமா. நாம ரெண்டுபேரும் சகோதரர்கள். ரத்த உறவு, பழைய நண்பர்கள். சரிதானா உனக்கு நான் எனக்கு நீ

உடன்பிறப்புகளை ஜுலு வெட்கப் புன்னைகயுடன் சொன்னான். நாற்காலியின் மெத்தென்று பகுதியில சாய்ந்துகொண்டே எல்லாம் உள்ளுணர்வுதான் என்றான். இந்திராகாந்தியை அவரது பாதுகாவலர்கள் சுட்டுக் கொன்றபோது ஜுலுவும் செக்கோவும் செயிண்ட் ஜான்ஸ்வுட்டிலிருக்கும் விளையாட்டுத்திடலில் ரப்பர்பாலைக் கொண்டு வரிமட்டையில் அடித்து விளையாடும் ஸ்குவாஷ் விளையாட்டு விளையாடப் போயிருந்தார்கள். விளையாடி முடித்துத் தனியறையில்

குளிக்கும்போது அப்பொழுதுதான் நரைக்கத் தொடங்கியிருந்த செக்கோவ் உள்ளாடை அணிந்து துண்டு ஒன்றை மென்மையான இடுப்பைச் சுற்றிக் கட்டியிருந்தான். அவனுடைய பலம் குறைந்த சுருங்கிப்போன கருஞ்சிவப்புநிற ஆண்குறியைக் காட்ட மிகத்தயங்கினான். ஆனால் ஜூலு பலமான ஆண்குறியுடன் ஆடையில்லாமல் பெருமிதத்தோடு நின்றுகொண்டு அவனுடைய நீண்ட சுருங்கூந்தலை அன்போடு தடவிக் கொடுத்ததுடன் அழகாகச் சீவவும் செய்தான். அந்தக்காட்சி ஒரு பெண் தன் தலைமுடியை வாஞ்சையுடன் சீவுவது போலிருந்தது. இறுதியில் அதை முறுக்கி முடிச்சிட்டான். ஜூலு என்ன அருமையான விளையாட்டு நாம அடிச்ச ஒவ்வொரு அடியும் இரத்தஓட்டத்தை அதிகமாக்கியிருக்கு

நீ ஒரு விமானி ஜி எதுக்குமே தயாராயிருக்கணும்

நான் மனுஷனோட வளர்ச்சி நிலைகளையெல்லாம் கடந்தாச்சு

நீ ஒராண்டுதான் என்னவிடச் சின்னவன் இல்ல

நான் ரொம்பத்தூய்மையான வாழ்க்கை வாழ்ந்திட்டிருக்கேன்

நம்முளதெல்லாம் வெறும் வாய்ப்பேச்சு இல்ல. செயல்தான்.

நாம உன்னோட பேர இருட்டடிப்புச் செய்ய வேண்டியிருக்கும். இது உனக்குப்புரியுதா என்று கேட்டான் செக்கோவ் மென்மையாக. ஜூலு அழகான ஆண்சிலையைப் போல முழு உருவக்கண்ணாடி முன் நின்றான். ஆனா அது எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கணும். ஏதாவது தப்பாப் போனா அதை நாம மறுக்கணும். அது ரொம்ப முக்கியம். உன்னுடைய மனைவி கூட உண்மையைச் சந்தேகிக்கக்கூடாது. ஜூலு அவனுடைய கைகால்களை விறைப்பாக நீட்டினான். மீண்டும் அவனுடைய உடல் குறிவடிவாக்கினான். பிறகு நேரான நிலைக்கு வந்தான். செக்கோவ் சிறிய விவாதத்தில் இறங்கினான். ஜூல்ஸ் நீ என்ன சொல்ற?

நாம கிளம்பலாம். வாகனம் தயாராயிருக்கா

நீ வா முட்டாள்தனமா சத்தம்போட்டுக் கேட்டுட்டு இருக்காத என்றான் செக்கோவ். மரியாதைக்குரிய திரு. செக்கோவ் அவர்களே அது என் முட்டாள்தனமாகவே இருக்கட்டும். வாகனம் தயாராயிருக்கா, வாகனம் தயாரா இருக்கு. அப்ப வாகனத்துக்கு உயிர்குடு.

செக்கோவின் நிகழ்ச்சிப் பதிவேட்டில் ரகசியக்குறிப்புகள் ஜேம்ஸ் டி.கிரிக் அவர்களுக்கு எழுதப்பட்டிருந்தது.

ஆபரேஷன் ஸ்டார்ட்ரெக் கைவிடப்படவேண்டுமென்பது என்னுடைய வலுவான பரிந்துரை. கிலிங்கனுக்குக் கிலிங்கனைச் சார்ந்த அலுவலர்களையே உளவு செய்ய அனுப்புவது என்பது எஜமான விசுவாசத்தைச் சோதிக்கும் இரக்கமற்ற செயல். இப்பொழுது இருக்கும் அச்சமும் மனஉளைச்சலும் நிறைந்த நாசமாகக்கூடிய சூழலில் நம்முடைய நடவடிக்கையைக் கைவிடுவது நம் நோக்கத்திலிருந்து விலகுவதாகாது. அப்படிக் கைவிடுவது சரியானதாகத்தான் இருக்கும். கிலிங்கன் நாம் சொல்வதைக் கேட்கத் தவறினால் அவர் நம்மைப்பற்றி முழுவதும் அறிந்து கொள்ளும் முன்பாகத் தவறான கணக்குப் போட்டுவிடுவார். இது பணையக்கைதிகளைப் பிடித்துச்

செல்லும் வழிமுறை அல்ல. எல்லாம் தவறாகிவிட்டது. தவறான திட்டம். சுற்றுவட்டார கிலிங்கனின் மக்கள் தொகை ஒரு மையச்சிக்கல் அல்ல. நாம்வென்றாலும் செய்திகளைப் பெறுவதன் வழியே மட்டுமே அது இயலும். நாம் திரும்புவதும் சந்தேகத்திற்குரியதுதான். நாம் ஸ்டார் ஃப்ளீட் தலைமையகத்தைக் கிலிங்கனின் விருப்பத்திற்கு ஒத்துழைக்கும்படி அறிவுறுத்த வேண்டும். இவை நேர்மையாகக் கையாளப்பட வில்லையென்றால் தொலைந்த அமைதி திரும்பாது.

இதற்கு ஜேம்ஸ் விடை அனுப்பியிருந்தார். நீங்கள் குறிப்பிட்டிருந்த செய்திகள் முற்றிலும் ஒருதலைபட்சமானவை. நாட்டின் மீது இருக்கும் பற்றை வெளிக்காட்டவோ அல்லது இரகசியமான செயல்களை எப்படிச் செய்யவேண்டும்? என்ன செய்ய வேண்டும் என்பதை முடிவெடுக்கவோ உங்களுக்கு உரிமையில்லை. உங்களுக்கு நடவடிக்கை எடுக்கமட்டுமே அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. தேவைப்படும் போது உதவ வேண்டும். உங்கள் நன்மைக்காகவும், உங்களுடைய உயர்ந்த தந்தையிடம் கொண்ட நீண்ட நாள் நட்பின் காரணமாகவும், நீங்கள் அனுப்பிய கடிதத்தை அழித்துவிட்டேன். நகல் கூட எடுத்துக்கொள்ளவில்லை. நீங்களும் அப்படியே செய்யுங்கள். இதையும் அழித்துவிடுங்கள்.

கொரியோலேனஸின் நிகழ்ச்சியைப் பார்க்க செக்கோவ் ஜுலுவை ஸ்டார்ட் போர்டுவரை அழைத்துப்போகச் சொன்னான்.

உனக்கு இப்ப எத்தனை குழந்தைகள்? மூணா? நாலு என்ற ஜுலு எல்லாம் பசங்க என்றான். கடவுள் புண்ணியம்தான் உன் மனைவி ரொம் நல்ல பெண்ணாயிருக்கணும்.

ஆமா என் மனசு முழுக்க நிறைஞ்சிருக்காங்க ஜுலு திடீரென உணர்ச்சி வசப்பட்டான். வீடு முழுசும் வயிறு நிறைய படுக்கையெல்லாம் நிறைஞ்சிருக்காங்க

நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி என்ற செக்கோவ் எப்போதும் வெப்பரத்தம்தான். ஆனா அதற்கு எதிர்டையா நான் அப்படியில்ல. ஊர்வன, சிலவகையான டைனோசர்கள், அப்புறம் நான். நான் கல்யாணச்சந்தையில் பெண் தேடிக்கிட்டிருக்கேன். சரியான ஆள் கிடைச்சா சொல்லு. குறிப்பிட்ட காலத்துக்கப்புறம் பிரம்மசார்யா இருக்கிறது நம்ம வேலைக்குத் தடையாயிருக்கு.

ஜுலு ஓட்டியது வித்தியாசமாக இருந்தது. வாகனங்கள் செல்லும் தெருவின் வழியாக வெளியே வந்தபோது ஒரு மணிநேரத்துக்கு 100 மைல் தொலைவில் ஓட்டினான். வெளியே வந்தபிறகு மெதுவாக ஓட்டினான். அவனுடைய வேகத்தின் அளவு மாறிக்கொண்டேயிருந்தது. ஆனால் வழி மாறவில்லை என்பதை செக்கோவ் கவனித்தான். வேகக்கட்டுப்பாடு இல்லையா என்று கேட்டான். ஏனென்றால் விண்கோள் நிறுவனத்தில் தலைவன் இருக்கும் போது தளத்தில் இப்படியெல்லாம் ஓட்டமுடியாது. நாம கவனிக்கவேயில்ல என்றான் ஜுலு உலர் சலவை செய்யணுமே என்று கத்தினான் பின்பக்க சன்னலைப் பார்த்தவாறே. நாம மழை மாட்டிருவமா? கவலையே வேண்டாம்? என்ற ஜுலு பற்கள் எல்லாம் தெரியும்படி சிரித்தான்.

மன்னிப்புக்கேட்கறதுக்கு பதிலா நம்மைப் பாதுகாத்துக்கணும். எல்லா மோசமான சூழல்களையும் எதிர்கொள்ள தயாரா இருக்கணும். செக்கோவ் தன்னுடைய இருக்கையில் சாய்ந்து உட்கார்ந்தான. உனக்கு பொம்மைகளும் விளையாட்டுக்களும் ரொம்பப் பிடிக்கும்இல்ல என்று கேட்டான் செக்கோவ். பள்ளி நாட்களில் மற்போர், வாள்வீச்சு, துப்பாக்கியில் சுடுவது என எல்லாவற்றிலும் சிறந்து விளங்கினான் ஜுலு. ஒவ்வொரு பொற்பொழிவு நாளன்றும் ஜுலு தொடர்ந்தான். நீ பரிசுகளை வாங்கும் போது நான் அந்தப் பெரிய அறையில் உட்கார்ந்து கைதட்டிக்கிட்டிருப்பேன். ஆங்கிலம், வரலாறு, லத்தீன், இப்படி எல்லாத்துக்கும் கைத்தட்டிக் கிட்டிருப்பேன். ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு பருவத்திலும் இது ஒவ்வொரு முறையும் நடக்கும். ஆனால் விளையாட்டு நாள் வரும்போது நான் என்னோட கோப்பைகளை பெறுவேன். இப்பக்கூட என்வேலையில் நான் சிறப்பாத்தான் இருக்கேன்.

உன்வாழ்க்கை நல்ல பெயரால் புகழால் நிறைஞ்சிருக்கு. நான் என்ன கேள்விப்பட்டாலும் அதைப்பத்திக் கவலையில்ல. சற்று அமைதி நிலவியது. வேகத்தால் இங்கிலாந்து கடந்து கொண்டிருந்தது. உனக்கு டோல்கீன் பிடிக்குமா என்று கேட்டான் ஜுலு உனக்குள்ள இப்படிெ யாரு வாசகனை நான் எதிர்ப்பார்க்கல என்ற செக்கோவ் ஜுலுவைத்திடுக்கிடச் செய்தான். தப்பா எடுத்துக்காத கே.ஆர்.ஆர்.டோல்கீன் என்றான் ஜுலு லார்ட் ஆஃப்தி ரிங்ஸ் நான் அவரோடு எடுத்துக்களைப் படிச்சிருக்கேன்னு சொல்லமுடியாது. அவரைப்பத்தி கேள்விப் பட்டிருக்கேன். குறும்புத்தனமும் இளமையும் இல்ல. ஆனா நான் உன்னமாதிரி அவரை அணுகினதில்ல.

நன்மைக்கும் தீமைக்கும் இடையில் நடக்கற போரை முடிவுக்குக் கொண்டுவருவது மாதிரிதான் ஜுலு உள்ளார்ந்து சொன்னான். இந்தப்பெரும போர். நடக்கறது உலகத்தின் ஒருபகுதியா்ன ஷையர் மாவட்ட வாசிகளுக்கு தெரியக்கூட செய்யாது. அங்கிருக்கிற மக்கள் வேலை செய்வாங்க, சண்டை போட்டுக்குவாங்க, மகிழ்ச்சியா இருப்பாங்க. ஆனா அங்கிருக்கிற படைவீர்களைப் பத்திய துப்பு செய்தியோ அல்லது அவங்களத் தோல்வியிலிருந்து பாதுகாத்தது யாருங்கறதோ அவங்களுக்குத் தெரியாது அவனுடைய முகம் உணர்ச்சி வேகத்தால் சிவந்தது.

நானும் அப்படித்தான் நினைக்கிறேன் என்றான் செக்கோவ். நான் அந்தப் போர்ல வீரனாயிருக்கேன் என்றான் ஜுலு.

நீ உன் அலுவலகத்துல உட்கார்ந்துகிட்டா உண்மையான உலகம் என்னாங்கறது உனக்குத் தெரியாது. உலகம் வேகமா இயங்கிட்டிருக்கு. உலகத்துல செய்ய முடியறதும் முடியாததும் இருக்கத்தான் செய்யுது. உலகத்துல வாழ்வும் சாவும் தான் உண்மை.

ஆமா மோசமான நிலையில் அதை ஏத்துக்கத்தான் வேணும் என்றான் செக்கோவ் அடக்கமாக.

நான் எப்பவாவது உன்னோட மிதவாதத்த மக்கள்கிட்ட எப்படி ஊடாடவிடறதுன்னு சொல்லியருக்கனா என்று கொந்தளித்தான் ஜுலு இல்லையில்லை. அப்படி என்னோட

விளையாட்ட விளையாடவிடு. போர்க்களத்தில் வீரர்கள் தங்களைத் தாங்களே ஊக்குவித்துக் கொள்வதைச் செக்கோவ் அறிவான். ஆனால் இதய உணர்வுகள் தவறாகப்புரிந்து கொள்ளப்பட்டது.

நீ எப்பப்போகப்போற என்று அமைதியாகக் கேட்டான்.

செக்கோவ்ஜி, நீங்க இனி என்னைச் சந்திக்கவே போறதில்ல. கிளம்புங்க. ஸ்டார்ட்ஃபோர்டு நெருங்கியது. உங்களுக்குத் தெரியுமாஜி தொடர்ந்தான். போல்க்கின்றுடைய மத்தியபூமியின் வரைப்படம் பத்திய இங்கிலாந்துக்கும் வேல்சுக்கும் ரொம்ப அழகாப்பொருந்துது. நம்முடைய இடைப்பகுதி நிலங்கள்கூட ரொம்பச்சரியாயிருக்கு நீ ரொம்ப ஆழமாச்சிந்திக்கிற என்ற செக்கோவ் இன்னிக்கு எல்லாம் உணர்ச்சி வெளிப்பாடுதான் என்றான்.

ஹேம்ப்ஸ்பிடிவிருந்து தன்னுடைய நவீன அலுவலகத்துக்குச் சிலரை இரவு விருந்துக்கு அழைத்திருந்தான் செக்கோவ். இந்தியரல்லாத ஆனால் இந்தியரை விரும்பும் பெரும் வியாபாரிகளையும் பத்திரிகைத்துறையினரையும் செக்கோவுக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் அவனுடைய கொள்கை வழக்கம்போல வியாபார நிமித்தமாகத் தான் இருக்கும். மாநிலத்தின் விமானத்தைச் செலுத்துவதில் எந்த அசம்பாவிதமும் நிகழ்ந்துவிடக்கூடாது. விமானத்தின் புதிய தலைவன் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான். அவன் இப்போது முன்னாள் விமான ஓட்டியாகிவிட்டான். சூலுவைப் போல செக்கோவும் திடீரெனத் தலைவன் பதிவிக்கு உயர்ந்திருந்தான். விருந்தினர்களை வரவேற்க மனைவியில்லாததால் குறைப்பட்டுக் கொண்டே விருந்தினர்களை உபசரித்தான் செக்கோவ். சிங்கத்தலை வடிவமைக்கப்பட்ட சிறந்த தங்கத்தட்டுக்கள் அறையின் நடுவில் இருந்தன. மதுபானங்களும் உணவுப் பொருட்களின் பட்டியலும் கிரிஸ்டலினாலான பொருட்களும் அறையிலிருந்தன. செக்கோவுக்கு உதவுவதற்காக இந்திய உளவுத்துறையால் அவனது தனித்துவம் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. என்றாலும் அது அவனுக்கு உதவவில்லை. நல்ல மாலைநேரங்களின் ரகசியம் கடவுள் தன்மையைப் போலிருந்தது. செக்கோவ் அஜாக்ரதையாகவும் நிம்மதியிழந்தும் காணப்பட்டான். அந்த மாலை நன்றாக இருந்தது. செக்கோவ் அதிகமாகக் குடித்திருந்ததால் தன் இன்னொரு முகத்தைக் காட்டத் தொடங்கினான்.

இங்கிலாந்து நம் புரட்சியாளர்களை வளர்க்கும் நிலமாகத்தான் இருக்கு. பண்டித ஜவகர்லால் நேருவுக்கு அச்சுறுத்தலோ அதிர்ச்சியோ ஏற்படாம இருந்திருந்தா அவர் நமக்குக் கிடைச்சிருப்பாரா? காந்திஜி மட்டுமென்ன இங்க கிடச்ச அனுபவங்கள்தான் அவரச் செதுக்குச்சு. நாம் நமது தாய்நாட்டைப்பத்தி சிந்திக்கத் தூண்டப்பட்டபோது பாகிஸ்தான் குறித்த சிந்தனைகள் நவநாகரிக இளைஞர்களாலதான் உருவாச்சு. இங்கிலாந்து உருவாக்கற புரட்சியாளர்களினால் இங்கிலாந்தின் நிலை கீழே தான் போயிட்டிருக்கு. காஷ்மீரிகளின் நிலையும் கவலைக்குரியதுதான் காலிஸ்தான்காரங்க இருக்கங்களே அவங்களோட கெட்ட ஆசை

நிறைவேற்றப்போகற நாள் நெருங்கிட்டிருக்குன்னு அவங்களுக்குத் தெரியாது. நாம அவங்கள வேரோட அழிக்கணும். என்ன வார்த்தைல சொல்றது ம். சின்னசின்ன துண்டுகளாக்கணும் அவனே ஆச்சரியப்படும்படி அவன் சத்தமாகப் பேசிக்கொண்டிருந்தான்.

கீழே உட்கார்ந்து சிரித்தான். சில கணங்கள் கழிந்தன. என்னோட பட்டப்பேர் இருக்கே அது கிடைச்சது ஒரு வேடிக்கையான அனுபவம் விருந்து நடைபெற்ற மேசையில் தனக்கு அருகிலிருந்த எழுதிலிருந்த எழுபத்தி ஒன்பது வயதுக்கிடைப்பட்ட பெரிய வியாபாரியின் இளம்மனைவி நினைத்தே பார்க்குமுடியாத அழகோடு இருந்த அவளிடம், அப்பல்லாம் நாங்க தொலைக்காட்சி நெடுந்தொடர்களை யெல்லாம் பார்த்ததில்ல. தொலைக்காட்சியே இல்ல பார்க்கறதுக்கு. பழைய வீரக்கதையெல்லாம் யு.எஸ். மற்றும் யு.கேயிலிருந்து எங்களோ அழகான பெஹ்ராடூர் மலைப்பகுதி வரைக்கும் இருக்கிற வழியில காத்தோடு காத்தா கரைஞ்சிருக்கும். அதுக்கப்புறம் நாங்க ரெண்டு நாவல்களை உருவாக்கினோம். அத நாங்க குறும்புத்தனமான லேடி சி புத்தகத்தைப் போல எல்லாருக்கும் பரப்பினோம். எங்கள்ல பெரும்பாலானவங்க பல பேர்கள முயற்சித்தோம். ஆனா ரெண்டு பேர்தான் கிடச்சது. அந்த ரெண்டுமே ஒன்றிணைந்து இருக்கத்தகுந்தது. அந்த இரண்டும் எங்களுக்குப் பொருந்துச்சு. வாரல் ஹார்டியைப் போல நாங்க செக்கோவ் ஜுலு காதல் திருமணமா என்று கேட்டாள் அவள். என்ன சரியாக்கேக்கல உனக்குத் தெரியும் என்றவள் மீண்டும் பாலும் பிரிட்ஜும் போல அல்லது காரும் கேரேஜும்போல நீங்க ரெண்டுபேரும் சேர்ந்தேயிருங்க. எனக்கு பழைய பாட்டுக்கள் பிடிக்கும். லாலா லலலா. சகோதரா உங்கம்மா இல்லாம உன்னால எதையும் அடைஞ்சிருக்க முடியாது. ஆமா எனக்குத் தெரியும். இப்ப நான் அத நினைச்சுப்பார்க்கறேன்.

மூன்று மாதங்கள் கழித்து ஜுலு அவனுடைய மனைவியைத் தொலைபேசியில் அழைத்தான். எங்க போய்தொலஞ்சீங்க. செத்தா போனீங்க. என் அருமை மனைவியே கொஞ்சம் கவனி. ரொம்ப கவனமாக்கேளு என் அன்பே சரி நான் கேட்கிறேன். ஆனா தொலைபேசி இணைப்பு ரொம்ப மோசமாயிருக்கு. செக்கோவக் கூப்பிட்டு நெலம ரொம்ப அபாயமாயிருக்குன்னு சொல்லு. என்னாச்சு உங்க நிலைமைக்கு தயவு செய்யு நிலைமை அபாயம் சரி நிலைமை அபாயமாயிருக்கும் கிலிங்கன் குழுவினர் மோப்பம் பிடிச்சிடுவாங்கன்னு சொல்லு. கிலிங்கன் மோப்பம் பிடிச்சிடுவாங்களா? அப்படின்னா என்ன அர்த்தம். அன்பே உன்னக் கெஞ்சிக்கேட்டுக்கிறேன்?

உங்ககிட்டத்தான் என் அதிகாரம் செல்லும். இருங்க பென்சில்ல எழுதிக்கிறேன்.

அவன்கிட்ட சொல்லு. என்னோட வழிகள அடைக்க உத்தரவாதம் தரச்சொல்லு. என்னங்க இது முட்டாள் தனமாயிருக்கு. நீங்க இன்னும் அந்த விளையாட்ட விடலயா? எனக்கு உத்தரவாதம் தா அவசரம்.

செக்கோவ் உடனே எல்லாக் காரியங்களையும் விட்டுவிட்டுக்

கிளம்பினான். சொன்னபடி உலர்சலவைக்காரர்கள் இருக்கும் தெரு வழியாகப் போனான். இருமுறை வட்டமடித்தான். சிவப்பு விளக்குகளைத் தாவிக்கடந்தான். வேண்டுமென்றே தவறான வழியைத் தேர்ந்தெடுத்தான். பிறகு வட்டமடித்தான். முடிந்த அளவுக்கு வலப்புறமாகவே திருப்பினான். பெரிய வாகன நெரிசலைக் கடந்தான். மோட்டார் வாகனங்கள் செல்லும் வழியில் ஜுலுவின் முறையைப் பின்பற்றினான். அவன் முடிந்தளவு சரியாகவே வந்திருந்தான். ஏற்கனவே முடிவு செய்த இடத்தை அடைந்திருந்தான். லென்டெய்டனில் வண்டியை உருட்டிக்கொண்டு வந்தான். வண்டி செல்லும் வழியிலிருந்து விலகி அதை நிறுத்தும் ஒதுக்கமான பகுதிக்குப் போனான். யாரோ மரங்களினூடாக இருந்து வெளிவந்தது போலிருந்தது. அப்போதுதான் குளித்த புத்தாடை அணிந்து அழகாக வந்திருந்தான் அவன். அவன் முகத்தில் வெட்கம் கலந்த புன்னகை. ஜுலுதான்.

செக்கோவ் காரிலிருந்து குதித்து வெளியே அவனுடைய நண்பனைக் கட்டிப்பிடித்தான். ஜுலுவின் கன்னங்களில் முத்தங்களைப் பதித்தான். செக்கோவின் தாடி ஜுலுவின் உதடுகளைக் குத்தியது. நான் உன்னக் கையில்லாம எதிர்ப்பார்த்தேன். அல்லது துப்பாக்கி குண்டோட புண்ணில் ரத்தம் ஒழுக ஒழுக வருவன்னு பாத்தேன். கொறஞ்சபட்சம் கண்ல கருவளையத்தோடவாவது வருவன்று நினைச்சேன், ஆனா நீ நல்லா உடைப்போட்டுட்டு மேல் சட்டையும் கைத்தடியும்தான் மிச்சம். திட்டம் வெற்றிகரமா முடிஞ்சுது என்று அவனுடைய மார்பிலிருந்து சட்டைப்பையைத் தட்டியவாறே சொன்னான். அப்போ நிலமை மோசமாயிருக்குன்னு சொன்னது? மோசமான நெலமதான் என்ற ஜுலு எல்லாத்தையும் சரிபண்ண முடியாது என்றாள்.

காரில் அமர்ந்தபின் ஜுலுவின் பழுப்புநிற உறையிலிருந்த குறிப்பில் எழுதப்பட்டிருந்த பெயர்களையும் இடங்களையும் நாட்களையும் செக்கோவ் உன்னிப்பாக பார்த்தான். குறிப்பிலிருந்து செய்திகள் யாரும் எதிர்ப்பார்த்ததைவிட மிகத் துல்லியமாயிருந்தன. எழுதப் பட்டவரின் பெயரற்ற அந்தக் குறிப்பில் மத்திய நிலப்பரப்பில் பஞ்சாப்பிலிருந்த கிராமங்களின் மேலும் சந்துப்பள்ளங்களின் மேலும் குறிகள் ஒளிர்ந்துகொண்டிருந்தன. அந்த இடம் சுற்றிவளைக்கப்படலாம் அல்லது ஏதாவது அழிவுக்குட்படலாம். மறைந்து கொள்ளப்பாதுகாப்பான இடமும் இல்லை. மனதில் பதியும்படி அவன் மெதுவாகச் சீழ்கையடித்தான். ஜுலு தன் இருக்கையில் தலையைச் சாய்த்துக் கொண்டே கிளம்பலாம் என்றவன் விதிவிளையாடுது என்றான். அவர்களிருவரும் தெற்கு நோக்கி சாலையின் நடுவில் ஒட்டிக்கொண்டு போனார்கள். சிறிது நேரத்தில் மோட்டார் வாகனப் பகுதியில் ஓட்டத் தொடங்கினார்கள். ஜுலு திடீரென நான் வெளியேறப்போறேன் என்றான். என்ன இது யார் இதுக்குக் காரணம்? யார் உன் கவனத்த திசை திருப்பினா? செக்கோவ் முட்டாள்தனமாப் பேசாதே. டெல்லியில் படுபயங்கரக் கொலைகள் நடந்திட்டிருக்கு. யாருக்குத்தீவிரவாதிகள் தேவை. நூறு

அல்லது ஆயிரம் சீக்கியர்களோடு தலய வாங்கியிருக்காங்க. அவங்க குடும்பத்தின் முன்னாலே அவங்களை எரிச்சிக்கொன்னிருக்காங்க. ஆண் குழந்தைகளைக்கூட விட்டுவைக்கல.

நமக்குத் தெரியுமே அப்புறம் ஜி இதுக்குப்பின்னால யார் இருக்காங்கங்கறதும் நமக்குத் தெரியும்.

ஆனா அதுக்குக் கொஞ்சங்கூட எந்த சாட்சியும் இல்ல என்ற செக்கோவ் மீண்டும் தன் கொள்கையை விளக்கினான். கண்ணால பார்த்த சாட்சியும் புகைப்படமும் இருக்கு என்றான் ஜுலு. நமக்கு இதுவும் தெரியுமே அங்க சிலர் செக்கோவ் மெதுவாகச் சொன்னான். இந்திராவுக்கப்புறம் சீக்கியர்களுக்கேற்பட்ட நிலை சரியானதான்னு நினைக்கிறாங்க ஜுலு விறைப்பானான்.

உனக்கு என்னபத்தி நல்லாத் தெரியும்னு நம்பறேன். என்ற செக்கோவ் ஜுலு கடவுள் சத்தியமாய் சொல்றேன். நம்ம வாழ்க்க தான போனாப்போகுது என்றான். இல்ல காங்கிரஸ்காரங்கள் தடுக்கல என்றான் ஜுலு. குற்றத்துக்கு உடந்தயா இருந்ததத்தவிர. அதுனால நான் வேலையை விடப்போறேன். நீயும் வேலய விட்டுடு. இல்ல உன் முடிவு தப்பு என்னக் கத்தினான் செக்கோவ். அப்புறம் எதுக்கு இந்தப்பட்டியல்? பாதியில ஏன் வெளியேறணும் என்றான். நான் பாதுகாப்பாளன் என்றான் ஜுலு. கார் கதவைத் திறந்தவாறே பயங்கரவாதிகள் என் பகைவர்கள். நீ என் சூழ்நிலையைத் தெளிவாகப் புரிஞ்சுக்குவேன்னு நினைக்கிறேன். ஜுலு உள்ள ஏறு. முட்டாளே எனக்கத்தினான் செக்கோவ் உனக்கு உன் எதிர்காலத்தப்பத்தியோ வேலயப்பத்தியோ கொஞ்சமாவது அக்கறை இருக்கா. உனக்கு மனைவியும் நான்கு குழந்தைகளும் இருக்காங்க. உன் பழைய நண்பனை மறந்துட்டியா? நீ என்ன விட்டுட்டுப் போகப்போறியா? ஆனால் ஜுலு வெகுதொலைவு போயிருந்தான். அதன்பிறகு செக்கோவும் ஜுலுவும் சந்திக்கவேயில்லை. ஜுலு பாம்பேயில் குடியேறினான். தனியார் பாதுகாப்பு மையங்கள் ஊதியத்தை உயர்த்திக் கொடுத்தன. எனவே ஜுலு வெகு சிறப்பாக வளர்ந்தான். **ஜுலு ஷீல்டு, ஜுலு** ஸ்பியர் தொழிற்சாலைகள் நன்கு வளர்ந்தன. மறுபடியும் ஜுலுவுக்கு மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தார்கள். அவர்களுக்கும் திருமணமானது. செக்கோவ் திருமணம் செய்யவேயில்லை. அவனது ஊனத்தை ஏற்றுக்கொண்டு அவனது துறையில் நன்றாகவே வளர்ந்தான். அவனுடைய வேகம் சீராக இருந்தது. ஆனால் மே 1991 ஆம் ஆண்டின் ஒருநாளில் தென்னிந்திய கிராமத்தின் ஸ்ரீபெரும்புதூருக்குத் தேர்தல் உரையாற்ற ராஜீவ் வருகை தந்த போது உடன் வந்த குழுவில் ஒருவனாக செக்கோவும் சேர்ந்து வரவேண்டியதாயிற்று. உள்ளுணர்வின் காரணமாகவோ என்னவோ பாதுகாப்பு பலமாயிருந்தது. முந்தைய தேர்தலில் ராஜீவுக்கு வாக்களர்களுக்கும் இடையில் பாதுகாப்புப்படை ஒரு தடையாக இருந்ததாக ராஜீவ் நினைத்தால் இந்த முறை அவர் வாக்காளர்களை நெருங்கிவர அனுமதித்திருந்தார். ராஜீவின் குழுவினர் மேடையை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

செக்கோவ் ராஜீவுக்கு சில அடிகள் பின்னாலிருந்தான். அந்த நேரம் ஒரு தமிழ்ப்பெண் புன்னகையுடன் முன்னேறினாள். அவள் ராஜீவின் கையைக் குலுக்கினால். ஆனால் அந்த இடத்தைவிட்டு நகரவில்லை. அவள் எதற்காகப் புன்னகைக்கிறான் என்பதை செக்கோவ் தன் அனுபவத்தால் அறிந்திருந்தான். அது காலத்தை நிறுத்தி வைக்ககூடியதாயிருந்தது. காலம் நின்று போனது செக்கோ பல விஷயங்களை உற்று நோக்கியிருக்கிறான். தமிழ்ப் புரட்சியாளர்கள் இங்கிலாந்து திரும்பவில்லை. நாம் நல்லவர்களை வீட்டிலிருந்து உருவாக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். இறக்குமதி செய்யத் தேவையில்லை. துயரநிலை என்பது ஒருவர் எப்படி இறந்தார்கள் என்பதைப் பொருத்ததில்லை. ஆனால் எப்படி வாழ்ந்தார்கள் என்பதைப் பொருத்துதான் என மெதுவாக ஆனால் சலிப்போடு சொன்னான்.

அவனைச் சுற்றியிருந்த காட்சிகள் மறைந்தன. ஒளிவெள்ளம் சூழ்ந்தது. ஸ்டார் ஷிப் நிறுவனத்தின் பாலம் தோன்றியது. அவர்கள் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகளெல்லாம் அவரவர் இடத்தில் அமர்ந்திருந்தார்கள். முன் பகுதியில் ஜுலு செக்கோவின் அருகில் அமர்ந்திருந்தான். பாதுகாப்பு அமைப்பு வெகுநேரமாக இயங்கலை என்றான் ஜுலு திரையில் கிலிங்கனின் பேர்ட் ஆஃப் ப்ரே தன்னுடைய தளர்ந்த மேலுறை இல்லாமல் தாக்கத் தயாராயிருந்தது. நேரடியா மோதிடணும் என்று கத்தினார் டாக்டர் மெக்காய் கடவுள் புண்ணியம் ஜிம் நாம உடனே இங்கிருந்து வெளியேறலாம். நீங்க சொல்றது தர்க்கமே இல்லாம இருக்கு என்றார் தலைமை அதிகாரி. டைலித்தியம் செயலூக்கியின் செயல் குறையக்குறைய வளைந்து போகும் போது வேகமாகப் போகமுடியாது. தூண்டுதல் வேகத்தினால் நாம் பேர்ட் ஆஃப் ப்ரேய விட்டு நிச்சயமா ஓட முடியும். வேறவழியில்லை. நாம் சரணடைய வேண்டியதுதான். கிளிங்கனிடம் சரணடைவதா கத்தினார் மெக்காய், முட்டாளே ஐடமே அவங்க கைதிகளை எப்படி நடத்துவாங்கன்னு தெரியாதா?, விமானத்தைத் திருப்பும் போது சாயும் பகுதியெல்லாம் செயலிழக்கத் தொடங்கிடுச்சு. தாக்கும் தன்மை இல்லை என்றான் ஜுலு. நான் கிளிங்கனோட தலைவரத் தொடர்பு கொள்ளவா என்று கேட்டான் செக்கோவ். அவங்க எந்த நிமிடத்திலயும் சுடலாம்.

நன்றி திரு. செக்கோவ் அவர்களே என்று பதிலளித்தார் தலைவர் கிர்க். அது தேவையில்லைன்னு நான் நினைக்கிறேன். இந்தச் சூழ்நிலையில் நாம தொடர்ந்து இயங்கக் கடமைப்பட்டிருக்கோம், தயாராயிருங்க. விமானம் போறபடி போகட்டும்.

பேர்ட் ஆஃப் ப்ரே சுடத்தொடங்கிடுச்சு என்றான் ஜுலு செக்கோவ் ஜுலுவின் கரங்களை உறுதியாகப் பற்றிக் கொண்டான். மரணத்தின் ஒளி வெற்றிகரமாக அவர்களை நெருங்கியது.

நிகழ்வும் மெய்ம்மையும்

மா. கணேசன்

மெய்ம்மை குறித்த கேள்விக்கு நீண்ட நெடுங்காலமாக தத்துவ ஞானிகளும் விஞ்ஞானிகளும் மனிதனைத் தவிர்த்த புறவயமான உலகின் மெய்ம்மை குறித்தாக மட்டுமே தமது ஆய்வைச் செலுத்தி வந்துள்ளனர். உலக மெய்ம்மையுடன் இணைந்ததானதொரு மெய்ம்மையாக அவர்கள் மனிதனைக் காணவில்லை.

இன்றளவிலும் ஒரு சில தத்துவஞானிகளைத் தவிர பிற ஏனைய தத்துவஞானிகளும் விஞ்ஞானிகளும் புறவயமான மெயம்மையுடன் மனிதனையும் சேர்த்துக் காண்பதில்லை. அதோடு இவர்கள் மனிதனை ஒரு புறவய மெய்ம்மையாகவே கருதுவதில்லை. வெறுமனே புறவயமான உலகை அறிகின்ற ஒரு அகவயச் சுயமாகவே (Subject) இவர்கள் மனிதனை அறிந்து வந்துள்ளனர்.

உலகம் எதனால் ஆனது? அது எவ்வகைப்பட்ட மெய்ம்மை? என்கிற கேள்வியுடன் மேற்கின் தத்துவச் சிந்தனை தொடங்கியது. உலகின் அடிப்படை மெய்ம்மை நீர் என்பதாக கிரேக்க தத்துவ ஞானி தேலீஸ் கூறினார். எல்லையற்ற தன்மை என்பதாக அனாக்ஸிமேண்டர் சொன்னார். இவ்விரண்டும் இல்லை காற்று தான் என்றார் அனாக்ஸிமினீஸ். இல்லை இல்லை நெருப்பு தான் என்றார் ஹெராக்ளிடஸ். ஆனால் உலகமும் அதிலுள்ள அனைத்தும் கண்ணுக்குப் புலப்படாத பகுக்கவியலாத துகள்களால் ஆனது என்பதாக லூஸிப்பஸ் என்பவர் கருதினார். இவரது மாணவரான டெமாக்ரிட்டஸ் அத்துகள்களை அணுக்கள் என்றழைத்தார்.

இவ்வாறு பகுக்க வியலாது எனக் கருதப்பட்ட அணுத்துகள் பிறகு பகுத்துக் காணப்பட்டது. அணு என்பது புரோட்டான் என்னும் கருவையும் அதைச் சுற்றி வலம் வரும் எலக்ட்ரான் எனும் நுண்துகளையும் கொண்டதொரு அமைப்பு என்று அறியப்பட்டது. பிறகு அணுக்கருவும் பகுக்கப்பட்டு கிட்டதட்ட 200க்கும் மேற்பட்ட வெவ்வேறு தன்மையாலான அதி நுண்துகள்கள் Sub atomic Particles அதிலிருந்து வெளிப்படுவது கண்டறியப்பட்டது. ஆனால் இத்துகள்களில் இதுதான் அனைத்து துகள்களுக்கும் அடிப்படை என்று கூறத்தக்கதான யாதொரு ஒற்றை (அடிப்படைத்) துகளையும் குறிப்பிடவியாத முட்டுக்கட்டையான நிலைமையினை அணுக்கருவியல் விஞ்ஞானிகள் தற்போது சந்தித்து வருகின்றனர். ஒரு வேளை அவர்களால் இறுதியான அந்த ஒற்றை அடிப்படைத் துகளை பிரித்தறியவிலாமல் போனாலும் போகலாம். அல்லது ஒரு நாள் அதைக் கண்டுபிடித்திடவும் கூடலாம்.

அவ்வாறு கண்டுபிடித்திடக் கூடிய அந்த துகளினை அதன் தன்மையைக் கொண்டு நாம் அறிந்து கொள்ளக் கூடியதும் புரிந்து கொள்ளக்கூடியதும் என்னவாக இருக்கவியலும்? அப்புரிதல் எவ்வகையில் நமது வாழ்க்கைக்கு அர்த்தத்தையோ அல்லது இலக்கையோ வழங்கிடவியலும்? ஆம் அப்புரிதல் நிச்சயமாக புதிதாக எதையும் வழங்கிட வியலாது - மற்ற எவ்வொரு அணுக்கருத்துக்களினைப் போலவே அதுவும் குறிப்பிட்ட பௌதீகப் பண்புகளைக் கொண்ட ஒரு துகள் என்பதற்கு மேல் மேலதிகப் புரிதல் எதையும் அது தந்திடாது. ஆம் உலகம் பொருளால் ஆனது. இன்னும் குறிப்பாக அணுக்கருத்துகள்களால்

ஆனது என்கிற உண்மை ஒரு போதும் மாறிடப் போவதில்லை தான். ஆனால் அப்பொருள் அல்லது துகள் எவ்வாறு எங்கிருந்து உருவானது? அத்துகள்கள் ஏன் எதற்காக எவ்வாறு இம்மாபெரும் பிரபஞ்சமாக வளர்ந்தது? ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் பிரபஞ்சத்தில் சடப்பொருள் ஏன் எதற்காக உயிராக பரிணமிக்க வேண்டும்? உயிர்ப்பரிணாமம் ஏன் எதற்காக சிந்திக்கும் திறனுடைய மானுட ஜீவிகள் உருவாக்கிட வேண்டும்? மானுட ஜீவிகள் ஏன் பிறகு இவ்வாறெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும்? வாழ்க்கை என்றால் என்ன? மனிதன் என்றால் என்ன? மனம் என்றால் என்ன? இக்கேள்விகளுக்கான விடைகளை (பௌதிக) விஞ்ஞானம் என்றாவதொரு நாள் கண்டறிந்து கூறிடுமா?

ஆக, அடிப்படை மெய்ம்மை குறித்த ஆய்வுகளும் சிந்தனைகளும் இவ்வாறிருக்கையில் மெய்ம்மைக்கும் மேற்புற நிகழ்வுகளுக்கும் இடையே நிலவும் உறவு எத்தகையது? என்கிற கேள்வி இவ்விடத்தில் கவனத்திற்குரியது ஆகும். அப்படியானால், நிகழ்வுகள் மெய்ம்மையிலிருந்து வேறுபட்டிருப்பவையா?, மெய்ம்மையின் சாயல் / சாரணம் நிகழ்வுகளில் படிந்துள்ளதா? அல்லது எவ்வகையில் நிகழ்வுகள் மெய்ம்மையிலிருந்து வேறுபட்டிருப்பவை, வித்தியாசமானவை? இரண்டும் எவ்வகையில் இணைந்துள்ளன. உறவு கொண்டுள்ளன. இக்கேள்விகளுக்கெல்லாம் விடை காணாமல் நாம் மெய்ம்மை குறித்த முழுமையான புரிதலைப் பெறவியலுமா என்பது சந்தேகமே!

தத்துவஞானி இம்மானுவல் காண்டின் கூற்றுப்படி மெய்ம்மை வேறாகவும், நிகழ்வுகள் வேறானதாகவும் இருப்பதாகின்றது. பொருட்கள் தம்மளவில் என்னவாக இருக்கிறது (சாரம்) என்பதை நம்மால் ஒரு போதும் அறியவியலாது என்பதாகவும், அனுபவத்தின் பொருளாக விளங்கும் நிகழ்வுகளை (இவற்றை தோற்றம் என காண்ட் கூறுகிறார்) மட்டுமே நம்மால் புலன்களின் மூலம் அறிவியலும் என்பதாகவும் காண்ட் கூறுகிறார். ஆனால் சாரத்தையும், தோற்றம் அல்லது நிகழ்வினையும் பிரித்துக் காணும் கான்டியப் பார்வை முற்றிலும் பிழையானது ஆகும். இப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் இயங்கியல் பொருள் முதல் வாதப் பார்வையானது சாரத்திற்கும் நிகழ்விற்கும் இடையே கூர்மையான எல்லைகள் ஏதுமில்லை என்கிறது. அதோடு, தோற்றம் அல்லது நிகழ்வின் ஊடே சாரமானது அறியப்படுகிறது என்றும் அது கூறுகிறது.

உண்மையில் சாரத்திற்கும் நிகழ்விற்கும் இடையே இருப்பதாக காண்ட் பிழையாகக்கூறிய பிரிவை இயங்கியல் பொருள் முதல் வாதப்பார்வை நீக்கிச் சரி செய்து விடுகிறது என்ற போதிலும், இயங்கியல் பொருள் முதல் வாதமானது மெய்ம்மை குறித்த விஷயத்தில் தவறிவிடுகிறது. எவ்வாறெனில் நிகழ்வினூடே சாரமானது அறியப்படுகிறது என்று அது கூறினாலும் மெய்ம்மையை அல்லது சாரத்தை அது முன்கூட்டியே தீர்மானித்துக் கொண்டுவிடுகிறது. அதாவது மெய்ம்மையின் சாரம் பொருள் தான் என்பதாக இயங்கியல் பொருள் முதல வாதம் அழுத்திக் கூறுகிறது. பிரபஞ்சத்தின்

பரிணாம வரலாற்றில் எல்லையை யடைய மாற்றம் ஏற்படுகிறும் அப்பரிமாணத்தின் விளைவாக வெளிப்படும் புதிய அம்சத்தை பொருள் முதல் வாதமானது பொருளின் வெவ்வேறு வகைப்பட்ட பண்புகளாக மட்டுமே காண்கிறது. இவ்வழியே பொருள் முதல் வாதமானது மெய்ம்மையை அதன் சாரத்தை பொருள் என்பதாகவே காண்கிறது. அதோடு எல்லையற்ற பல்வேறு வகையிலான பண்புகளைக் கொண்ட மாபெரும் பொருளாகவே அது பொருளைக் காண்கிறது. மேலும் பொருள் முதல் வாதக் கூற்றுப்படி பொருள் என்பதை அதனுடைய மெய்நிலைப் பண்புகளான நிறை, சக்தி, வெளி போன்ற ஏதுமொன்றினைக் கொண்டும் அடையாளப்படுத்திக் காண்பது பிழையானது என்றும் கூறுகிறது. இவ்வழியே அது பொருள் என்பதற்கு யாதொரு குறிப்பிட்ட தெளிவான விளக்கத்தையும் அர்த்தத்தையும் வரையறுத்துக் கூறாமலேயே பொருள் எனும் சொல்லினை தமது தத்துவத்தில் பயன்படுத்திச் செல்கிறது. அதாவது பிரபஞ்சப் பரிணாம வரலாற்றில் வெளிப்படும் எவ்வொரு அல்லது அனைத்து நிகழ்வுகளுக்கும் அடிப்படை பின்புலமாக எப்போதும் பொருள் இருப்பதாக அது உரைக்கிறது.

ஆனால் பண்பு ரீதியாக (குவாலிடேடிவ்) மாறிக் கொண்டேயிருக்கும் நிகழ்வுப் போக்கினில் எப்பண்பை மூலமான முதன்மையான அடிப்படையான மெய்ம்மை எனக் கொள்வது? பொருள் முதல்வாதிகள் கூறுகிறபடி பொருள் என்பது என்ன? நிகழ்வின் எப்படி அறியப்படுவதாக பொருள் முதல் வாதம் கூறுகிறது என்பது என்ன?

உண்மையில், நிகழ்வினூடாக வெளிப்படும் வெவ்வேறு பண்புகள் என்பவை இன்னும் அறியப்படாத முழுமையாய் உருப்பெறாதவொரு இறுதிப் பண்பு அல்லது மெய்ம்மையின் வகைகளே. ஆம், பொருள் என்பதும் அந்த இறுதிப் பண்பின், மெய்ம்மையின் ஒரு வடிவம் அல்லது பண்பு மட்டுமே. ஆனால் பொருள் முதல் வாதமானது யாவற்றையும் தலைகீழாகவே காண்கிறது. இந்த தலைகீழ்ப்பார்வையின் மூலம் அது அனைத்து தத்துவ உண்மைகளையும் திரிபுக் கோணமாகவே கொடுக்கின்றது. இந்த தத்துவக் கோணலைத் தவிர்க்க வேண்டுமெனில் பொருள் முதல் வாதத் தலைகீழாக்கிடலை நாம் தலை நேராக்கிக் காண வேண்டும்.

அதாவது ஒட்டுமொத்த பிரபஞ்சப் பரிணாம நிகழ்வில் இன்று வரையிலும் பொருள், உயிர், மனம் அல்லது பிரக்ஞை எனும் பரிணாமக்கிரமத்தில் மூன்று பிரதான பண்புகள் வெளிப்பட்டுள்ளன என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் போது மெய்ம்மைக்கும் நிகழ்வுக்கும் உள்ள உறவை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள விடுவோம். பிரபஞ்சப் பரிணாம வரலாற்றில் பின்னோக்கிக் காணப்போமெனில் சிந்திக்கும் ஆற்றலைப் பெற்ற மனித இனம் தோன்றியிராத ஒரு காலகட்டம் இருந்துள்ளது என்பதையும் அதற்கும் முன்னே யாதொரு ஒரு செல் உயிரும் தோன்றியிராத காலக்கட்டம் இருந்துள்ளதையும் அதற்கும் முன்னர் ஜடப்பொருளின் [illegible] மட்டுமே இருந்துள்ளதையும் இன்னும் பின் சென்றால் அதுவும் கூட தோன்றியிராத விஞ்ஞானம் கூறும் பெருவெடிப்பிற்கு முந்திய வெளி, காலம், பொருண்மை என்ற எதுவுமே அற்ற நிலை இருந்துள்ளதையும் நம்மால் புரிந்து கொள்ள முடியுமெனில் நிகழ்வினூடும்

மெய்ம்மைக்குமான உறவானது பின்வருமாறு விளங்குவதாக நம்மால் காணமுடியும். அதாவது நிகழ்வு என்பது முழுமைக் குறைவானதொரு மெய்ம்மையின் முழுமையை நோக்கியதொரு பயணம் எனலாம்.

அப்படியானால் வெவ்வேறு காலச் சட்டத்தில் அல்லது காலக்கட்டத்தில் மெய்ம்மையானது வெவ்வேறு பண்புகளாக வெளிப்பட்டு வருகின்றது. முதற்கட்டத்தில் சடப் பொருளாயிருந்த மெய்ம்மையானது ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் உயிராய் பரிணமிக்கின்றது. பிறகு அது மனிதனாக, மனிதனில் மனமாக பரிணமிக்கிறது. இவ்வாறாக மெய்ம்மையானது வெளி-காலத்தின் உலகில் ஒவ்வொரு காலகட்டத்திலும் முழுமையாய் வெளிப் பட்டிருக்கவில்லை என்பது தெளிவாகிறது. இதையே வேறு விதத்தில் சொன்னால், மெய்ம்மையானது முக்காலங்களிலும் பிரிந்து கிடக்கிறது எனலாம்.

இவ்விடத்தில் காலம் எனும் மாபெரும் புதிர் எதிர்ப்படுவது தவிர்க்கவியலாததாகும். பிரபஞ்சத்தின் பிறப்பு என்பதாய் விஞ்ஞானம் உருவகிக்கின்ற பெருவெடிப்பு எனும் நிகழ்வு உண்மையில் காலம் என்பதன் ஆரம்பத்தையும் அதனுடன் இணைந்து வெளியின் மற்றும் பொருண்மையின் ஆரம்பத்தையும் குறிப்பதாகிறது. அதாவது பெருவெடிப்பு எனும் நிகழ்விற்கு முன் காலம் என்பதில்லை. ஆக காலமற்ற அந்த நிலை எத்தகைய மெய்ம்மையாய் விளங்கி இருக்கவியலும்? காலமற்ற நிலை வெளியற்றதும் பொருண்மை -யுமற்றதுமானதொரு நிலையெனில் அது ஏதுமற்ற சூன்யநிலை என்பது சரிதானா? ஏதுமற்ற சூன்ய நிலையிலிருந்து ஏதுவொன்றும் தோன்ற வியலுமா?

முதலிடத்தில் சூன்ய நிலையை ஏதுமில்லா வெறுமை என்று கூறுவதற்கான அனுபவரீதியான அடிப்படை ஏதேனும் உள்ளதாவென நாம் கண்டறிந்தாக வேண்டும். நாம் வாழுகின்ற இவ்வுலகமானது நமது புலன்களின் வழியே நமது பிரக்ஞையில் உரைப்பதாய் அனுபவப்படுவதாய் உள்ளது. ஆனால் சூன்யநிலையினை நாம் எவ்வாறு உணர்கிறோம். அனுபவம் கொள்கிறோம்? அல்லது சூன்ய நிலை என்பது வெறுமனே தருக்கரீதியாக அனுமானிக்கப்படும் ஒரு நிலையா? நம்மைச் சுற்றியுள்ள உலகம் நமக்கு தட்டுப்படுவதாய் உள்ளது. அதில் காலம் பற்றிய உணர்வானது இயக்கத்தைக் குறிப்பதாய், எப்போதும் ஏதோ ஒரு இலக்கு குறித்த ஒரு இயக்கத்தைக் குறிப்பதாய் உள்ளது. இன்னும் முற்றுப் பெறாத முழுமையடையாத அனுபவத்தின் பிடியில் நாம் சிக்கியிருப்பதான உணர்வைத் தருகிறது. நாம் மகிழ்ச்சியாய் ஆனந்தமாய் இருக்கும் பொழுதெல்லாம் காலத்தை உணர்வதில்லை. மாறாக துன்பத்தில் சோகத்தில் இருக்கும் போது காலத்தை அதன் ஓட்டத்தை உணர்பவராயுள்ளோம். உண்மையில் மகிழ்ச்சியாய் ஆனந்தமாய் இருக்கும்பொழுது காலம் நீங்கிய அந்நிலையை மிகவும் செறிவுடைய ஒன்றாக உணர்கிறோம். ஆனால் சோகமாய் இருக்கும் பொழுது கால ஓட்டத்தை உணர்கிறோம். அதோடு ஒருவித வெறுமையையும் உணர்கிறோம் என்பது எவ்வளவு முரண்பாடாய் விளங்கிறது. ஆம் சூன்யநிலை என்பது காலம் நீங்கிய ஆனால் செறிவு மிக்க நிலையாய்

பரிணாமத்தின் விதிப்படி பிரபஞ்சப் பரிணாம இயக்கத்தின் இடையே ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தோன்றிடும் மனிதன் தனது பரிணாம உறக்கத்தை உதறிவிடும் போது பிரக்ஞை கொள்பவனாகிறான். பிறகு அவன் தன்னைச் சுற்றியுள்ள இயற்கையினை ஆராய்கிறான். பிறகு தான் யார்? என்கிற அந்த அதிமுக்கியத்துவம் வாய்ந்த கேள்வியை தனக்குள் கேட்பவனாகிறான். தான் யார்? எங்கிருந்து வந்தான்? எங்கே செல்கிறான்? தற்போது தனது இனத்துடன் சேர்ந்து இங்கே பூமியில் என்ன செய்து கொண்டிருக்கிறான்? தான் உண்மையில் செய்ய வேண்டியதென்ன? என்கிற கேள்விகளுக்கு விடைகளைக் கண்டுபிடிப்பதை பிரதான வாழ்க்கைச் செயற்பாடாக மேற்கொள்ளும் மனிதன் பிரக்ஞையுடன் பிரபஞ்சத்தின் பரிணாம வரலாற்றை முன்னெடுத்துச் செல்பவனாகிறான். இவ்வகையில் மனிதனானவன் ஒட்டுமொத்த பிரபஞ்சத்தின் பிரதிநிதியாக செயலாற்றுபவனாகிறான். ஒட்டுமொத்த பிரபஞ்சமும் அதன் பௌதிக இயக்க விதிகளும் அதனினும் மேலான பரிணாம விதிகளுக்குக் கட்டுப்பட்டவையாக பரிணாமத் திட்டத்தினை நிறைவேற்றும் பொருட்டு பிரக்ஞையினை உருவாக்கும் வழிமுறையினால் தான் பன்னூறு கோடியாண்டுகளாக ஈடுபட்டு வந்துள்ளன. இறுதியாக அது மனிதனை உருவாக்கி அவனுள் பிரக்ஞையைக் கண்டடைந்தது.

பொருண்மை நிலையில் (சடப்பொருளாக) தனது பரிணாமப் பயணத்தை தொடங்கிய பிரபஞ்சம் தனது பொருண்மையைக் கடந்திடும் பொருட்டு மேற்கொண்ட உருமாற்ற நிகழ்வில் அது முதற்கட்டமாக உயிராக பரிணமித்தது. ஆனால் உயிர் எனும் பரிமாணம் பொருண்மையினை முற்றிலும் கடந்ததாய் இருக்கவில்லை. மேலும் உயிர் என்பது இன்னமும் முழுமையான இருப்பு நிலை என்பதை எட்டவில்லை. உயிர் என்பது உணர்வுடையதாய் இருப்பினும் அது அவ்வளவு முழுமையான விழிப்புணர்வாய் பிரக்ஞையாய் மலர்ந்திடவில்லை. ஆகவே உயிரானது பரிணமித்து மனிதனாக மனிதனுள் மனமாக விகசித்தது. எனினும் மனித மனமும் முழுமையான பிரக்ஞை நிலையினை இன்னும் எட்டிடவில்லை.

என்ற போதிலும், ஒட்டுமொத்த பரிணாம வரலாற்றில் மனிதன் இருக்கும் இடம் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனென்றால், மனிதனே முழுமையினை எட்டிடும் வழியில் முழுமைக்கு வெகு அருகில் இருக்கிறான். அவன் தனது சிறு பிரக்ஞையை இறுதியானது என்பதாகக் கருதிக் கொண்டு தேக்கமடையாதிருப்பானெனில் அவனால் தனது சிறு பிரக்ஞையை ஒரே தாவலில் கடந்துவிட முடியும். அவன் மட்டும ஆயிரத்தொரு விஷயங்களில் தனது மனதைச் சிதறவிடாமல், வெறுமனே பூமியில் காலத்தைப் போக்காமல் காலத்தைக் கடப்பதே தனது சவால் என்பதை உணர்வானேயெனில் உடனடியாக அவன் காலம் நீங்கிய முழுமையின் அனுபவத்தைப் பெறலியலும். அதில் அறிபவன் அறியப்படுவது என்பதான பிளவுகள் மறைந்து அனைத்தும் ஒருமையும் முழுமையுமான அனுபமாகிவிடுகிறது. மனிதனும் உலகமும் மறைந்து விட பிரபஞ்சப் பிரக்ஞையாகிய உண்மை மட்டுமே உள்ளதாகிறது. நிகழ்வு தனது முழுமையைத் தழுவி மெய்ம்மையில் மெய்ம்மையாக அடங்கி விடுகின்றது.

மேலைவீடு வெளியீடு ரூ.250/-

வெளிரங்கராஜன்

தவசி கருப்பசாமியின் தொகுப்பு நூல்

அருங்கூத்து



கொங்கு நாட்டுக் கூத்து மற்றும் பொம்மலாட்டக் கலைஞர்களின் பாரம்பரிய செறிவு, கலை ஈடுபாடு, அர்ப்பணிப்பு உணர்வு மற்றும் வாழ்வியல் குறித்த இந்தத் தொகுப்பு நூல் ஒரு சிறப்பான ஆவணப் பதிவாகும். தவசிக் கருப்புசாமி சில ஆண்டுகளாக கொங்குநாட்டுப் பகுதிகளில் அலைந்து திரிந்து அங்குள்ள பாரம்பரியமான கூத்துக் கலைஞர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதிலும் அவர்களுடைய நிகழ்வுகளை உடனிருந்து பார்த்து அவர்களுடைய கலை குறித்த நேரடியான அனுபவத்தைப் பெறுவதிலும் கணிசமான நேரத்தை செலவிட்டுள்ளார். அவர்களுடைய பாரம்பரிய வளமை மற்றும் ஈடுபாடுகளுக்கும் நேரடி வாழ்க்கையின் அவலங்களுக்கும் இடையே அவர்கள் போற்றிப் பாதுகாத்துவரும் கலை சிக்கித் தவிப்பது கண்டு கடுமையான வாழ்வியல் போராட்டங்களுக்கு நடுவிலும் கூத்துப் பரப்பில் அவர்கள் நிகழ்த்தி வரும் சாதனைகள் முறையாக கவனப் படுத்தப்படவேண்டும் என்கிற உத்வேகத்துடன் இத்தொகுப்பு நூலை உருவாக்கியுள்ளார். கூத்துக் கலைஞர்கள் லட்சுமி அம்மாள், ஏகாம்பரம் சுப்ரு, எலிமேடு வடிவேல், எலிமேடு மகாலிங்கம், கொத்தாபாளையம் குருநாதன் வாத்தியார், கூலிப்பட்டி சுப்ரமணி, கூத்திசை செல்லப்பன், கொம்பாடிப்பட்டி ராஜு மற்றும் பொம்மலாட்டக் கலைஞர்களான செம்மலை, ஜெயா, அம்மாபேட்டை கணேசன் ஆகியோரது நேரடி வாழ்வனுபவங்களும், கலை நுட்பங்கள் கைவரப்பெற்ற பல மேடைக் கலைஞர்களைப் பற்றிய குறிப்புகளும் இத்தொகுப்பில் பதிவாகியுள்ளன. கொங்குச் சீமையின் கூத்துவெளிக்கு இவ்வளவு நீண்ட பாரம்பரியம் உள்ளதும் முக்கியமாக பெண்களுக்கென்றே தனித்து ஜமா வைத்து கூத்து, தோற்பாவைக் கூத்து, கட்ட பொம்மலாட்டக் கூத்து ஆகியவை நிகழ்த்தியமை குறித்த பதிவுகளும் இதுவரை பரவலாகத் தெரிய வராத தகவல்களாகும். அவர்களால் நிகழ்த்தப்பட்ட அரவான் களப்பலி கூத்துப் பிரதியும் இத்தொகுப்பில் ஆவணப் படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தொகுப்பு நூலில் முக்கியமாக கவனத்தை ஈர்க்கிற விஷயம் இந்தத் தொகுப்பு முழுவதும் அவர்களுடைய பேச்சு மொழியில் பதிவாகி இருப்பதுதான். நம்மூர் ஆய்வாளர்களைப் போல இல்லாமல் இதில் நேர்கண்டவர்களும் அக் கலைஞர்களுடைய சூழலிலேயே வாழ்ந்த பழகியவர்களாகி இருப்பதால் நேர்காணல்கள் சற்றும் அந்நியத்தனம் இல்லாமல் மிகுந்த உயிர்ப்புடன் உரையாடல் தன்மை கொண்டிருக்கின்றன. இதனால் கலைஞர்கள் இயல்பாக வெளிப்படுவதும். வாழ்க்கைச் சுழலிலும், கலைத் தவிப்பிலும் உழலும் ஒரு நீண்ட பாரம்பரியத்தின்

எண்ணற்ற சுவடுகளை அருகிருந்து பார்ப்பதான உணர்வும் சாத்தியமாகி இருக்கின்றன. இதன் மூலம் பெறப்படுகின்ற பல தகவல்கள் இது போன்ற வெளிஉலகுக்குத் தெரியாமல் தங்கள் கலையுடன் வாழ்ந்து மடியும் எண்ணற்ற நாட்டுப்புறக் கலைஞர்கள் பற்றிய நினைவுகளைக் கிளறியபடி உள்ளன.

இந்தக் கலைஞர்களின் நேர்காணல்களில் எல்லாம் வெளிப்படும் தொழில் குறித்த மரியாதையும், அங்கீகாரம் குறித்த தெளிவும் மனதைத் தொடும் விஷயங்களாக இருக்கின்றன. இந்த ஊருதான் நம்ம சொந்த ஊருங்களா என்கிற கேள்விக்கு பக்கிக்கும் பரதேசிக்கும் ஏது சாமி சொந்த ஊரு? மானங் கூர மண்ணு ஆசாரம்னு தெருக்கூத்து கலைஞர் லட்சுமி அம்மாள் பதில் சொல்றாங்க. கூத்து மேல உள்ள பிரியத்துல கூத்தாட வந்தீங்களான்னு கேட்கும்போது பிரியமாவது மண்ணாவுது, கொலாயி காஞ்சா குதுர தானா கொள்ள திங்குது பாரு அப்படின்னு சொல்றவங்க,பிரியமில்லாம ஒராளு ஒரு காரியத்தைவுடாம கஷ்டப்பட்டு செய்யுமாங்கும் போது திருத்தமான செஞ்சன் பேரு வந்தது. பிரியமாயிருந்திச்சி. பாக்கிற சனம் நல்லாயிருக்குங்கிறதுக்காவ உசுர கொடுத்து ஆடனேன் அப்படின்னு சொல்றாங்க. வடிவேலு சொல்றார். அலங்காரம் வரிச்சா நம்பளப் பார்க்க வர்ற சனம் எத்தன? விடியந்திண்ணியும் குந்தி அவனவன் படற கஷ்ட நஷ்டத்த மறந்து சந்தோஷப் படறவிங்க எத்தன? நாம்பளே இத மதிக்கலையின்னா பின்ன யாரு மதிப்பா? ஆட்டமும் பாட்டமும் எங்களுக்குத்தான் ஒட்டும். சாவாட்ட முன்னாலும் சேரி, கூத்தேன்னாலும் சேரி நல்லா கெவுணிச்சுப் பாத்தீங்கன்ன தெரியும். மத்தலிங்க ஆடற ஆட்டத்துக்கும் இந்த பறயங்சக்கிலியரு, தொம்பருங்க ஆடற ஆட்டத்துக்குமுள்ள வித்தியாசம். நெத்தி வேர்வைய நெலத்துட சிந்தி புழுதி மண்ண திங்கறானே பறயஞ், சக்கிலி. அவனுக்குத்தான் கூத்துல ருசுன அவந்தான் அஞ்சாயிரம், பத்தாயிரமுன்னு காச காசுன்னு பாக்காம செலவு பண்ணி கூத்தாடுவான். பாத்துட்டுப் போறதோட இல்ல உள்ள பொருள கருத்தா வெச்சி பொழப்பை சேபிக்கிறவனும் அவந்தான். அரசாங்கம் உங்கள கண்டுக்கறது இல்லையேங்கிற கேள்விக்கு எலிமேடு மகாலிங்கம் சொல்றார். கேட்டு வாங்கறது வெகுமதி இல்லீங்க. எங்க காலத்துல எம்சியாரு, சிவாசிகணேசனெல்லாஞ் சினிமாவுல கொடிகட்டிப் பறந்தாங்க. கோட்டயப் புடிச்சாங்க. இந்தப்பக்கம் வூரு நாட்ல ஆராச்சும் செத்தாங்கன்னா உசுர உடும்முந்தி இன்னைக்கும் இன்னாரு மவன் இன்னார கூட்டியாந்து எங்குழிமேல கூத்துவுடுங்கன்னு சொல்லிப்புட்டு சாவறாங்களேவொழிய எம்சியாரு படமோட்டுங்க. சிவாசி படமோட்டுங்கன்னு சொல்றதில்ல. இதோட நம்புளுக்கு வேறென்ன கெளரதி வேணும்? ஒரு தடவ கொத்தாபாளையம் குருநாத வாத்தியார் கூத்து நடத்தினப்போ தன் எதிரே மத்தளமடித்த பறையனும், குழலூதிய பறையனும் பெஞ்சு போட்டு குந்தியிருப்பதான்னு அவங்கள மண்ணுல குந்த சொல்லி பண்ணையார் மிரட்டினபோ, குருநாத வாத்தியார் மானம் மருவாதி கெட்டு கூத்தாட மாட்டேன்னு கூத்தை நிறுத்திட்டார்.

மேலோட்டமா பார்க்கும் போது கூத்து இந்த சமூக

கட்டுமானத்தை நிலைநிறுத்தற மாதிரியான காரியத்தையே செஞ்சிக்கிட்டு இருக்கிற மாதிரியான தோற்றம் இருந்தாலும், நுட்பமான எதிர்ப்புகளையும் அது பதிவு பண்ணுது. ராமாயணம், மகாபாரதத்தை வெச்சே காலத்தை ஓட்டுறீங்களேங்கிற கேள்விக்கு கூத்துக்கலைஞர் ஏகாமபரம சுப்ரு சொல்றார். எது கண்ணு புதுசு? ராக்கெட்டும் எரோக்கப்பலும, டிவிப்பெட்டியும் இந்த சினிமாவுந்தாம் புதுசு. இந்த மானங்கெட்ட மனசரும், அவிங்க கோணப்புரதியும் அன்னைக்கியிருந்தது இன்னைக்கிம் அச்சுக்கொலையாம அப்படியே இருக்குதேங்கிறார். பாஞ்சாலிய துச்சாதனன் துயிலுறிக்கிறத எல்லாரும் வேடிக்கை பார்த்துகிட்டுதானே இருந்தாங்கங்கிற கேள்விக்கு ஆத்துக்கு நேரான ஊரும் அரசாட்சிய எதுத்துமுடியும் நீரு நீராய் போவுமுன்னு அவிங்களுக்கு அப்பையே தெரிஞ்சிருக்குது. அது சுத அதவுடுங்க. இப்ப இந்த கலிகாலத்துல எத்தனை வக்கீலு, எத்தன மேசர்ட்டு, எத்தன டாக்டரு, எத்தன கலைக்கிட்ரு? இங்க எத்தன ஏடாகூடம், எக்கச்சக்கம் நடக்குது? எதயாச்சுங் கண்டுக்கிறாங்களா அப்படின்னு கேட்கிறார். ஆனா எப்படியோ பார்க்கிறவங்கி கிட்டே தீவிரமாக ஏதோ ஒரு எதிர்புணர்வை தொத்த வைச்சுடறாங்க. அம்மை - சால்வன் கூத்தில ஒண்ணு சேரவந்த அம்பையை சால்வன் நிராகரித்து கீளே தள்ளி, காலில் எத்தி சாட்டையில் விளாசும்போது பார்த்துக் கொண்டிருந்த ஒரு வயதான மூதாட்டி பதறியெழுந்து பிரியப்பட்டா பிள்ளைய வைச்சுப் பொழ இல்லையின்னா என்ற மகராச்சி. கை தீண்டற வேலையெல்லாம் வெச்சுக்காத. இதுவரிக்கும் உனக்கு மரியாதி. இன்னும் ஒரே ஒரு ஈடு பிள்ள மேல பட்டதுன்னா இந்த ஊரத்தாட்டி அக்கட்ட போமாட்ட மாப்ள என்கிறாள்.

இது போன்ற பல உயிரோட்டமான உணர்வுகளை உள்ளடக்கியிருக்கிறது இத்தொகுப்பு தாலலயம் குறித்தும், அடவுகள் குறித்தும், அந்த எளிய மக்களுடைய ஞானம் பிரமிப்பூட்டுவதாக இருக்கிறது. தங்களுடைய ஆண், பெண் அடவுகள் குறித்து தோல் பொம்மை மற்றும் கூத்துக்கலைஞர் ஜெயா இவ்வாறு கூறுகிறார். தோலுப் பொம்மையாட்டத்துக்கு சுதி நானம் உண்டு. தெருக்கூத்தில் அது அறுதி கண்ட பாவனதான். பண்ணெண்டு வக தாளம் - எழுவக அடவுதான் இப்பே ஆடறம். ஆணு வேஷத்துக்கும், பெண்ணு வேஷத்துக்கும் ஆதி, அடதாளம், ரூபகம், சூரடி சாப்பு, ரெண்டடி சாப்பு, நொண்டிச் சிந்து, திறப்பட தாளம். ஒத்தச்சம்ப, ரெட்டச் சம்ப இப்பிடி தாள வரிச ஒண்ணுதான். ஆனாக்கா ஒரு ஆண் வேசத்துல ஆடும் போது பெண்ணாயிரந்தாலும் ஆட்டம் துடியா இருக்கணும். ஏர்வதாளத்துல எத்துவரிசையா ஆடணும். பெண் வேஷத்துல ஆடும்போது அதுவோரு ஆம்பளையாயிருந்தாலும் சீலைக்குள்ளயே நயனமா ஆடணும். இப்படிப்பட்ட நாட்டுப்புறக் கலைஞர்களை அருமை தெரியாமல் நம்முடைய சாகித்ய அகாடமியும், இயல்இசை நாடக மன்றமும் நடத்திய விதமும் இத்தொகுப்பில் உள்ளது. ஆனால் இத்தொகுப்பு அவர்களுடைய குரலை உயர்த்திப் பிடிக்கிறது.

If we wish to avoid the impoverishment of our imagination and the disappearance of the Precious dissatisfaction that refines our sensibility and teaches us to speak with eloquence and rigor, and the weakening of our freedom, then we must act. More Precisely, we must read. - Mario Vargas Llosa

நேர்காணல்

மரியோ வார்கஸ் யோசா

ஆதம் ஸ்மித்

தமிழில் யூமா வாசுகி

நீரில் மீனைப்போல





இலக்கியத்திற்காக இவ்வருட நோபல் பரிசு பெற்ற மரியோ வார்க்ஸ் யோசாவின் சுயசரிதை **The Man Who was my Papa** எனும் அத்தியாத்துடன் தொடங்குகிறது. அம்மா சொல்கிறார்கள். உன் அப்பா இறக்கவில்லை யோசா வியப்படைகிறார். அப்பா இருக்கிறார் என்றா சொல்கிறீர்கள்? இறந்துவிட்டார் என்று நான் நினைத்திருந்த அவ்வளவு காலமும் அப்பா எங்கேயிருந்தார்?

Fish in the Water' எனும் தலைப்பிலான யோசாவின் நினைவுகள் கண்ணீரும் உணர்ச்சிப் பெருக்கும் கொண்டவை. *1990* - ஆம் ஆண்டில் பெருவின் பிரசிடண்ட் பதவிக்கான போட்டியில் பங்குபெற்ற யோசா, தன் பால்யம் முதலான அனுபவங்களுடன் அரசியல் இடையீடுகளின் சரித்திரத்தையும் விவரிக்கின்ற இந்த நூலின் சாசனம் **(Epigraph)** மாக்ஸ் வெர்பரின் **Politics as a vocation** விலிருந்து எடுத்தது. பிரசிடண்ட் தேர்தலில் தோற்றுப்போனது என்பது யோசாவில் உள்ள எழுத்தாளனுக்கு நன்மையாக ஆனது என்றுதான் கருதவேண்டும். அது முடிந்து யோசா, கடவுளுடன்தான் உடன்படிக்கை செய்து கொண்டார். அரசியலதிகாரத்தையோ, பாலியலையோ பகுத்து ஆராய்வதற்கு கடவுள் எதிரானவர் அல்ல என்று யோசா சாட்சியளிக்கிறார். நோபல் விருதுக்குழு அதை ஏற்றுக்கொள்கிறது.

நோபல் பரிசு அறிவிக்கப்பட்டதற்குச் சற்று பிறகு பெருவிய எழுத்தாளர் மரியோ வார்கஸ் யோசாவுடன் நோபல் பிரைஸ் ஆர்க் எடிட்டர் இன் - சீஃப் ஆடம் ஸ்மித் நடத்திய தொலைபேசி உரையாடலிலிருந்து *(7 அக்டோபர் 2010)*

மரியோ வார்கஸ் யோசா ஹலோ?

ஆதம் ஸ்மித் ஓ, ஹலோ, மரியோ வார்கஸ் யோசாதானே?

யோசா ஆமாம்

ஸ்மித் ஓ ஹலோ என் பெயர் ஆதம் ஸ்மித் ஸ்டாக் ஹோமில் உள்ள நோபல் பரிசு இணையத்திலிருந்து பேசுகிறேன் உங்களுக்குப் பரிசு கிடைத்தற்கு என் பாராட்டுக்கள்.

யோசா அப்படியென்றால் அது உண்மைதானா? ஹாஹா

ஸ்மித் ஹாஹா நிச்சயமாக

யோசா ஏன் அப்படிக் கேட்டேன் என்றால், அகாடமியின் செகரட்டரி ஜெனரல் என்னிடம் பேசினார். அது உண்மைதானா அல்லது ஒரு நண்பரின் வெறும் தமாஷா என்று நான் வியப்படைந்தேன்.

ஸ்மித் ஸ்டாக்ஹோமில் பொதுமக்கள் முன்னால் அறிவித்துவிட்டோம்.

யோசா ஓ, அப்படியா? நான் மிகவும் உணர்ச்சிவசப்பட்டிருக்கிறேன். மிக்க நன்றி இது ஒரு பெரும் அதிசயம் தான். என்ன சொல்ல வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. நான் மிகவும் உணர்ச்சிவசப்பட்டிருக்கிறேன். உண்மையாகவே.

ஸ்மித் இது ஒரு நல்ல எதிர்வினைதான். கடந்த சில வருடங்களில் உங்களுக்கு இது கிடைத்திருக்க வேண்டும், கேட்கிறேன். உங்களைப் பொறுத்தவரை நோபல் பரிசுக்குரியவராவது என்றால் என்ன?

யோசா என்னால் இப்போதும் இதை நம்பமுடியவில்லை. பத்திரிகைகளில் வாசிக்க வேண்டும்.

ஸ்மித் நிச்சயமாக ஆனால் இலட்சியத்திலானால் அது உண்மை. தங்களுக்கு ஒரு.

யோசா நான் மிகவும் உணர்ச்சிப்பெருக்குடன் இருக்கிறேன். இது ஒரு பெரிய உற்சாகம். உண்மையைச் சொல்கிறேன். நான் இதை எதிர்ப் பார்க்கவில்லை. வாய்ப்புப் பட்டியலில் என் பெயர் இடம் பெற்றிருக்கும் விஷயம் கூட எனக்குத் தெரியாது. இது ஒரு பெரிய நிகழ்ச்சி. எனக்கு மிகப் பெரிய ஆச்சரியமாயிருந்தது. அவ்வளவு அதிகமான ஆச்சரியம். எழுதுவது என்றால் வாழ்வு முழுவதும் மகத்துவமான ஆனந்தம் எனக்கு. அதுவே எனக்கு பெரியதொரு மகிழ்ச்சியாக இருக்கும்போது, நான் கௌரவிக்கப்படுபவனாக இருப்பது அதைவிட மேலான வேறொரு மகிழ்ச்சி புரிகிறதா.



ஸ்மித் மனப்பூர்வமான பாராட்டுக்கள்

யோசா நோபல் பரிசு அகாடமியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் என் நன்றியைத் தெரிவியுங்கள்.

ஸ்மித் நிச்சயமாக. இன்னும் கொஞ்சம் நேரம் போனில் பேசலாமா. நாங்கள் ஒரு சிறிய நேர்காணலை பதிவு செய்வதற்காக?



யோசா நிச்சயமாக

ஸ்மித் நன்றி. நீங்கள் பிரின்ஸ்டனில் தானே இருக்கிறீர்கள்?

யோசா நான் இப்போது நியூயார்க்கில் இருக்கிறேன். ஆனால் பிரிஸ்டனுக்குச் சென்று சொல்லிக் கொடுக்கிறேன். திங்கள் கிழமையும் செவ்வாய் கிழமையும் வகுப்புகள் உண்டு. டிசம்பர் வரை நியூயார்க்கில்தான் வசிப்பேன்.

ஸ்மித் நீங்கள் பெருவைச் சேர்ந்தவர். ஆனால் பலவித இடங்களில் வசிக்கிறீர்கள்...

யோசா உண்மைதான். லிமாவிலும் மார்ட்ரிடிலும் வீடு இருக்கிறது. மாறி மாறி வசிக்கிறேன்.

ஸ்மித் நீங்கள் எழுதும் நீதிக்கோ, வசிக்குமிடத்திற்கோ நோபல் பரிசிற்குப் பிறகு மாற்றங்கள் ஏற்படுமா?

யோசா இல்லையென்று தான் தோன்றுகிறது. இல்லையில்லை. பலவித பிரதேசங்களைக் குறித்து நான் எழுதுகிறேன். ஒரு பிரத்தியேக இடத்தை குறித்து எழுதும்போது சில சமயம் வசிப்பிடத்தை மாற்றுவதுண்டு. ஒரு கதையைக் குறித்து மனதிலுள்ள கருத்தைப் புரட்டிப்போடுவதற்கு சுற்றுச்சூழலால் முடியுமா? முடியாது என்றுதான் தோன்றுகிறது. உண்டு என்றால் அது பிரக்ஞையற்ற தன்மையில் நடக்கும். சுற்றுச் சூழல்கள் என்னில் பயன் நிறைக்கின்றன.

ஸ்மித் மொழி?

யோசா ஸ்பானிய மொழியுடனான என் உறவை வலுப்படுத்துவது வெளி, நாட்டு வாசம்தான் என்று உணர்ந்திருக்கிறேன். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளை எதிர்கொள்ளும்போதுதான் தாய்மொழியான ஸ்பானிய மொழியை நான் கூடுதலாகப் புரிந்துக் கொள்கிறேன். ஒரே கருத்தை, உணர்ச்சியை வெளிப்படுத்த ஒவ்வொரு மொழியும் பயன்படுத்துகின்ற பாவமாற்றங்களை அப்போதுதான் புரிந்து கொள்கிறேன். இப்படிப் பார்த்தால் ஸ்பானிய மொழியுடனான என் உறவு மிகவும் வலிமையானது. காரணம் ஸ்பானிய மொழி தேசிய மொழியாக

அல்லாத நாடுகளில் நான் வாழ்ந்திருக்கிறேன்.



ஸ்மித் எழுத்தின் மிக அதிகமான வடிவங்கள்தான் தங்களின் மற்றொரு சிறப்புத்தன்மை. இதன் பின்னணி என்ன?

யோசா அடிப்படையில் நானொரு நாவலாசிரியர். அதனுடன் நாடகங்களும் சிறுகதைகளும் எழுதுகிறேன். ஆனால் எழுத்தின் வடிவம் எழுத்தாளனின் தரிசனத்தையோ நம்பிக்கையையோ மாற்றுமென்று நான் நினைக்கவில்லை. சில கதைச் சரடுகளைப் பொறுத்தவரை, நாவல்தான் மிகவும் பொருத்தமானதென்று தோன்றியிருக்கிறது.

ஸ்மித் அரசியல் ஈடுபாட்டைக் குறித்துச் சொல்கிறீர்களா? ஒரு தார்மிகக் கடமை போலத்தான் அரசியலில் பிரவேசித்ததாகச் சொல்லியிருக்கிறீர்கள் அல்லவா? இந்தக் கடமை தனி நபருடையதா எழுத்தாளனுடையதா?

யோசா எழுத்தாளனும் நாட்டின் குடிமகன் தான். பொதுஜன சர்ச்சையில் பங்கு பெறுவதற்கான தார்மிகக் கடமை எழுத்தாளனுக்கு உண்டு. அதாவது, சமூகம் எதிர்கொள்கிற பிரச்சனைகளுக்கு தீர்வு தேடும் சர்ச்சைகள். எழுத்தாளர்கள் தொழில் ரீதியான அரசியல்வாதிகள் ஆகவேண்டும் என்று நான் சொல்லவில்லை. எழுத்தாளன் அப்படி ஆகவேண்டும் என்று நான் ஒருபோதும் நம்பியதுமில்லை. நான் விரும்பியதுமில்லை. பெருவின் சூழ்நிலைகள் மிகவும் தீவிரமடைந்த போதுதான் நான் அரசியலில் ஈடுபட்டேன். விலையேற்றத்தால் மக்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். நாட்டில் தீவிரவாதம் தலைதூக்கியது. உள்நாட்டுப்போர் மூண்டது. பலவீனமானது என்றாலும் எங்களுக்கு இருந்த ஜனநாயகம் உடைந்து நொறுங்கப் போகிறதென்று எனக்குத் தோன்றியது. அரசியல் நுழைவின் சூழ்நிலை இதுதான். மிக வித்தியாசமான ஒரு செயலாக நான் அதைப் பார்த்தேன். அது தற்காலிகமான ஒரு அனுபவமாக இருக்குமென்று எனக்குத் தெரியும். அது அப்படித்தான் இருந்தது. மக்கள் பிரச்சினைகளில் மற்ற குடிமக்களைப் போல எழுத்தாளர்களும் தலையிட வேண்டும். இல்லையென்றால் எதிர்க்க முடியாமல் போகும். பங்கெடுக்க முடியாமல் வரும். ஜனநாயகத்தில் நம்பிக்கை உண்டு என்றால் அது பங்கேற்பும் சேர்ந்ததுதான் என்று அறிந்து கொள்ளுங்கள். எழுத்தாளர்களும், கலைஞர்களும், அறிவு ஜீவிகளும் இந்தத் தார்மிகப் பொறுப்பிலிருந்து விலகி நிற்க வேண்டியதில்லை.

ஸ்மித் சரி. கடைசியாக ஒரு கேள்வி. இந்தப் பரிசு அறிவிப்பு உங்களை புதிய ஒரு வாசக சமூகத்திற்கு அறிமுகப்படுத்தும், முன்பு வாசித்திராத வாசகர்களிடம். எந்த புத்தகம் வாசிக்கத் தொடங்க வேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்கள்.

யோசா ஹாஹா எனக்குத் தெரியவில்லை நான் என்ன நினைக்கிறேன் என்றால்... ஓ உண்மையாகவே எனக்குத் தெரியவில்லை ஆனால், இல்லை.. என்னால் சொல்ல முடியவில்லை.

ஸ்மித் நல்லதுதான். அவர்கள் தாங்களாகவே தேர்ந்தெடுத்துக்கொள்ளட்டும், அல்லவா?

யோசா ஆமாம்

ஸ்மித் உங்களுடன் உரையாட முடிந்ததில் மிகவும் மகிழ்ச்சி

யோசா உங்களுக்கு மிகவும் நன்றி

ஸ்மித் வாழ்த்துகள் நன்றி குட்பை

யோசா குட்பை.



ஜீவன் பென்னி கவிதைகள்

புத்தனை சரிபாதியாக வெட்டிய மாலைநேர வினவில்
முழுவதும் மகிழ்ச்சி சிதைந்த நான்
சதுர வடிவ பூவென வொரு குளத்திலிருந்தேன்
புராதனமிக்க நான்
தார்சாலையின் முடிவற்ற வெள்ளைக் கோடுகளாயிருந்தேன்
கருத்துருவாக்கங்களைப் புரிந்த நான்
மிகக்கொடிய போரின் துப்பாக்கி ரவைகளாயிருந்தேன்
கொடுமைகளும் துரோகங்களும் நிறைந்த நான்
தினசரி மொழியின் அரசியலாகயிருந்தேன்
மற்றேதுமில்லாத ஒரு நாளில்
நானிருந்தேன்,
இவைகள் நிறைந்த முழு புத்தனாக
அல்லது
மிக வேறாக.

கசப்பு ஒரு பூவாகிவிட்டது
சிறுமிகள் வளர்த்த சிறிய செடிகள் வேர்களின்றி வளரத்தொடங்கின
எப்புறங்களுமற்ற சாலையினிறுதியில் பிறந்திருக்கிறது அன்றைய வெயில்
நிறங்களேதுமற்ற யதார்த்தத்தில் வெளிவொரு வடிவமாகிவிட்டது
சிதைக்கப்பட்ட மனிதர்களின் சின்னஞ்சிறிய மொழி கல்லறையாகிவிட்டது
மீன்கள் நிறைந்திருக்கும் வொரு உலகினை திறந்து மூடுகின்றது புத்தம்
உயிர்தெழுவர்களின்றி நிகழ்ந்து கொண்டிருக்கிறது அனைவரின் மரணம்
பூமேலும் கசப்பாகிவிட்டது
கசப்பு மேலும் சில பூக்களாகி விட்டன.

பறவைக்கூட்டமொன்று வந்திறங்கிய பகலில்
நகரமே தூங்கிக்கொண்டிருக்கிறது
சின்னஞ்சிறு கனவு கருப்பு வெள்ளை உலகைப்போலவேயிருக்கிறது
அணைந்த விளக்கின் மொழி இன்னஞ்சற்று நேரத்தில்
உங்களுக்குப் புரியலாம்
நீங்க்ளோ நானோ செல்லமுடியாத உயரத்தில் சுற்றிக்கொண்டிருக்கிறது
புத்தனின் பேரவா

நிழல்களில்லாத புத்தனினுலகு கடலுச்குச் சற்றருகிலிருந்து
துயரங்களையெல்லாம் ஸ்தூல வடிவங்களாக்கிய அவர்
அவைகளை மீன்களென கடலில் அலையவிட்டிருந்தார்
அக்கரைகளின் சங்குகளிலிருந்து அவர் புதைத்திருந்த ஆசைகள்

அலை ஒன்றன் பின் ஒன்றாக வருகின்றன
ஒவ்வொரு அலையும் இழுத்துச் செல்கின்றன
ஒவ்வொரு சங்கினை.

புத்தனை நிறைக்கும் மழைத்துளிகள் இன்று பெய்தவையல்ல
புத்தன் தூங்கிய பெருபேகல் ஒரு நாடககாட்சியை போலவேயிருந்தது
புத்தனை சரிபாதியாக வெட்டிய மாலை நேர வானவில் நிறங்களற்றேயிருந்தது.
ஒன்றும் வேறொன்றும் மற்றொரு புத்தனாகியது
நீங்கள் நின்று கொண்டிருப்பது வேறு புத்தனின் மிகப்பெரிய வெற்றிடத்தில் மேலும்
நீங்களளித்த சில பரிசை புத்தனின்னும் எடுத்துக்கொள்ளவேயில்லை

புத்தனிறந்த அன்று மழையேதும் பெய்யவில்லை
புத்தன் பிறந்த அன்றும் மழை பெய்திருக்க வாய்பேதுமில்லை

பறித்துத் தீராத கனிகள் இன்னும் மீதமிருக்கின்றன -சம்பு

கொய்து தீராத நறுமண மலர்களே எங்கும்
படர்ந்து கிடக்கையில்
எம் பிரதேசத்தில் விழுந்தது பெயரறியா
விதையொன்று

பனிக்குளிர்வு நடைவழி கிழித்து நீண்ட
நீலக்கோடுகள்
சீதோஷ்ண மாறுதலின் சிறு குழப்பமெனவிருந்தோம்
அவ்விதையோ துளிர்விட்டு
குறுஞ் செடியாகியிருந்தது

ராட்சஷ சர்ப்பங்கள் விஷப்பற்களுடன் விரட்டுவதான
கனவுகளில்
குழந்தைகள் அரற்றுகையில்
துஷ்ட தேவதைகளைச் சாந்தப்படுத்த முனைந்தோம்
அதற்குள் வீசத் துவங்கியிருந்தது
அச்சிறு தாவர மலரின்
மெல்லிய துர் கந்தம்

ஸ்திர தேகத்தினரொருவர் பின்னொருவரான
துர் மரணம் சம்பவிக்கையில்
எல்லாம் வல்லவர் திசைவழி விழுந்தோம்
நெடுஞ்சாண் கிடையாக
அவர்கள் நாவுகளில் சுவையெனப் படர்ந்திருந்தது
அவ் விருட்ஷத்தின் மறைகனி

துயரத்தின் மன்றாடல் துவங்கும் முன்பாகவே
சாரட்டை கிளப்பி நழுவியே விட்டிருந்தார்
பீதியில் துயில் கலைந்த
எமது ரட்சகர்

பிறகே
அறுத்துச் சாய்க்கவுமியலாத
வெட்டி வீழ்த்தவும் முடியாத அவ்விருட்ஷத்தில்
பறிக்க பறிக்க
பெருகத் தொடங்கின கொடுங்கனிகள்.

ஐதராபாத் இலக்கிய விழா - 2010

ஸ்ரீநேசன்



சாகித்ய அகாதமி, அலியேன்ஸ் பிராங்கைஸ், கதே - ஜென்ட்ரம், ஆந்திர அரசு - சுற்றுலாத்துறை, யு.எஸ். கான்சுலேட் போன்ற எட்டு நிறுவனங்களின் ஆதரவோடு மியூஸ் இந்தியா இணைய இதழ் மற்றும் உஸ்மானியா பல்கலைக் கழகப் பன்னாட்டு நிகழ்வுகள் மையம் ஆகியன இணைந்து ஐதராபாத்தில் டிசம்பர் 10, 11, 12 ஆகிய தேதிகளில் ஐதராபாத் இலக்கிய விழா - 2010 ஐ நடத்தின. இந்தியா முழுவதுமிருந்து இந்திய ஆங்கிய எழுத்தாளர்களும், பிராந்திய மொழிப் படைப்பாளிகளும் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் தொண்ணூறு விழுக்காடு கவிஞர்கள்.

தமிழிலிருந்து அசதா, பழனிவேல், அஜயன்பாலாவோடு செல்லும் வாய்ப்பு எனக்கும் அமைந்தது. மியூஸ் இந்தியா தமிழ்ப்பிரிவு ஆசிரியரான பிரம்மராஜன் பழனிவேள், அசதாவோடு என்னையும் பரிந்துரைத்திருந்தார். மீனா கந்தசாமி அஜயன் பாலாவை சிபாரிசு செய்திருந்தார். பிரம்மராஜன் இவ்விழாவிற்கு வருவதாக இருந்து கடைசி நேரத்தில் வரமுடியாமல் போய்விட்டது.

தமிழில் இவர்களை விடச் சிறந்த கவிஞர்கள் இல்லையா, அஜயன்பாலா கவிஞரா போன்ற கேள்விகளையெல்லாம் மீறி நாங்கள் சென்று திரும்பிவிட்டோம். இதன் மூலம் நாங்கள் பெற்றது இந்திய அளவிலான ஒரு இலக்கிய விழாவிற்குச் சென்று திரும்பிய ஒரு புதிய அனுபவத்தை மட்டுமே.

10.12.2010 அன்று காலை 9.30 மணிக்கு இந்நிகழ்வின் தொடக்க விழா கிரீன்பார்க் ஓட்டலில் நடைபெற்றது. இமாச்சல பிரதேசம் மற்றும் கர்நாடக மாநிலங்களின் முன்னாள் ஆளுநர் ரமாதேவி குத்துவிளக்கேற்றி தொடக்க உரையாற்றி விழாவைத் தொடங்கி வைத்தார். உஸ்மானிய பல்கலைக் கழக பன்னாட்டு நிகழ்வு மையத்தின் இயக்குநர் பேராசிரியர் விஜயஸ்ரீ அனைவரையும்

வரவேற்க, மியூஸ் இந்தியாவின் நிர்வாக ஆசிரியர் ஜிஎஸ்பி ராவ் விழாவை ஒருங்கிணைத்தார். இவ்விழாவின் கனவும் நனவாக்கியத் திறமும் இவருடையதே. இவருடைய நிர்வாகத்திறன் மூன்று நாட்களிலும் வெளிப்பட்டுக் கொண்டேயிருந்தது.

இவ்விழாவில் கலந்து கொண்ட படைப்பாளிகளின் படைப்புகள் அடங்கிய தொகுப்பு ஒன்று இத்தொடக்க விழாவின் முக்கிய நிகழ்வாக வெளியிடப்பட்டது. படைப்புத் திறனைக் கொண்டாடுதல் என்று தலைப்பிட்ட அத்தொகை நூலில் பெரும்பாலும் கலந்து கொண்ட இந்திய ஆங்கிலக் கவிஞர்களின் ஆங்கிலக் கவிதைகளும், பிராந்திய மொழிக்கவிஞர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு கவிதைகளும் இடம்பெற்றிருந்தன. ஒரு சிலரின் சிறுகதை, நாடகம் இதில் வெளியாகியுள்ளன. தமிழில் அசதாவின் கவிதை மாத்திரமே இடம்பெற்றுள்ளன. கவனமின்மை காரணமாக இந்நூல் தொகுக்கப்படும் முன்பு பழனிவேள், அஜயன் மற்றும் என்னுடைய கவிதைகள் அனுப்பப்படாமையினால் இதில் இடம் பெறாமல் போய்விட்டது. இதைப் பெரிய ஏமாற்றத்துடன் எதிர்கொண்டோம். தவிர இது ஒரு பாடமும் கூட. அவர்களால் அளிக்கப்பட்ட நினைவுப் பரிசைக் காட்டிலும் நிலைத்த, உண்மையான நினைவுப் பொருள் இந்நூல்தான்.

இத்தொடக்க விழாவின் மற்றொரு முக்கிய நிகழ்வு இந்திய ஆங்கில மூத்தக்கவிகள், ஷிவ்.கே.குமார், கேகி என் தாருவாலா மற்றும் மூத்த மலையாளக் கவிஞர் கே. சச்சிதானந்தன் ஆகியோரை கௌரவப்படுத்தும் வகையில் சிறப்பு செய்ததாகும். ஷிவ்.கே.குமார் மற்றும் தாருவாலா இருவரும் தத்தம் கவிதைகள் சிலவற்றை வாசித்தார்கள். அந்தக் காலைப்பொழுதில் புரிந்து கொள்ள முடியாத மொழிப்பிரச்சனையை மீறி அவர்களின் வெளிப்பாட்டின் வித்யாசமான தொனி கவருவதாகவே இருந்தது.

இதைத் தொடர்ந்து கே.சச்சிதானந்தனின் தலைமையில் படைப்புத்திறனைக் கொண்டாடுதல் என்ற தலைப்பில் நாட்டியக் கலைஞர் ஆனந்த சங்கர், இளம் திரைப்பட இயக்குநர் மோகன் கிருஷ்ணா இந்திராகாந்தி மற்றும் நாவலாசிரியர் (எழுத்தாளர்) வம்சி ஜுலூரி ஆகியோருடன் ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. மற்றத் துறைகளைவிட எழுத்தில், கவிதையில் படைப்புத்திறனின் தனித்தத்தன்மை குறித்து சச்சிதானந்தன் ஆழமான கருத்துக்களை எடுத்து வைத்தார்.

அடுத்து மைதிலி மொழிக் கவிஞர் உதய நாராயண சிங்கின் (இவரது கவிதை நூல் முன்னிலை ஒருமை என்ற பெயரில் சி. மணியால் மொழிபெயர்க்கப்பட்டு ஏற்கனவே தமிழில் வெளிவந்துள்ளது) தலைமையில் கவிஞர்கள் கே. சச்சிதானந்தன் மற்றும் இந்திய ஆங்கிலக் கவிஞர்கள் மாமங்டை, சாந்தா ஆச்சார்யா, சுகிர்தபால்குமார் ஆகியோர் தத்தம் கவிதைகளை வாசித்தனர். பொதுவாகவே ஆங்கில நுனிநாக்கு உச்சரிப்பு ஆகியன சற்று அந்நியப்படுத்தவே செய்தன. அதுமட்டுமின்றி சிரிய கவிதைகளைத் தமிழில் வாசித்துகேட்டாலே பின்பற்ற முடியாது தவிக்கும் நான் ஆங்கிலத்தின் மூலம் வாசிக்கக் கேட்டபோது ஆங்கில மொழியறிவின் போதாமைக் குறித்த தாழ்வுணர்வில் சிக்க நேர்ந்தது.

இந்நிகழ்வுக்குப் பின் ஐதராபாத் பிரியாணியுடன் கூடிய நல்ல மதிய உணவு கிடைத்தது. பின் தொடங்கிய பிற்பகல் நிகழ்வில் பிராந்திய மொழிக் கவிஞர்களின் கவிதை வாசிப்பு நிகழ்ந்தது. கவிஞர் சுகிர்த பால் குமார் தலைமையில் குஜராத்தி கவிஞர் தலீர் ஜாவாரி உதயநாராயண சிங், மராத்திக் கவிஞர் ஹேமந்த் திவேத் மலையாளக் கவிஞர் டி.பி ராஜீவன் ஆகியோரின் கவிதைகள் தத்தம் மொழிகளிலும் ஆங்கிலத்திலுமாக அரங்கமானது.

இந்நிகழ்வுக்குப்பின் நாங்கள் ஐதராபாத்தில் வசிக்கும் மொழிப்பெயர்ப்பாளர் சாந்தா தத்தை சந்திக்கச் சென்றோம் தெலுங்கானா கதைகள் தொடங்கி இன்று சாகித்ய அகாதமிக்காக என தெலுங்கிலிருந்து தமிழுக்கு அவர் செய்துவரும மொழிபெயர்ப்புப் பணிகள் ஏராளம். 2 மணிநேரத்துக்கும் மேலாக அவரோடு பேசிக்கொண்டிருந்தோம். தமிழ்நாட்டுக்கு வெளியே வசிக்கும் தமிழர்களுக்கே உரிய வெகுஜன நிகழ்வுகள் - தகவல்கள் மீதான ஆர்வம் இவரிடமும் இருந்ததை கவனித்தேன். பேச்சு மொழிபெயர்ப்பு நோக்கித் திரும்பியபோது தமிழில் இருந்து தெலுங்கு மொழிக்கு மொழிபெயர்க்க ஒருவருமே இல்லை என அவர்கூறிய செய்தி ஆச்சரியத்தை மட்டுமல்ல அதிர்ச்சியையும் அளித்தது. பிறமொழிகளிலிருந்து படைப்புகளை தமிழுக்குக் கொண்டுவரும் நம் ஆர்வம், பிறமொழியினருக்கு தமிழ்ப்படைப்புகளைப் பொருட்படுத்தி மொழிபெயர்த்துக் கொள்ளுவதில் இல்லை என்றே கூறலாம். இதனால் உடனடி இழப்பு என எதுவும் நமக்கு இல்லைதான். சென்றிடுவீர் எட்டு திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் என அவர்தம் மொழிகளின் மகாகவிகள் யாரேனும் சொல்லியருந்தால்தான் கேட்பார்களோ என்னவோ? ஓய்வு பெற வேண்டிய வயதிலும் தீவிரமான மொழிபெயர்ப்பில் ஈடுபட்டு வரும் சாந்தா தத்துக்கு விரைவில் மொழிப்பெயர்ப்புக்கான சாகித்ய அகாதமி விருது கிடைக்கட்டும் என வாழ்த்தித் திரும்பினோம்.

இரண்டாம் நாள் நிகழ்வு (11.12.2010) உஸ்மானிய பல்கலைக்கழக பன்னாட்டு நிகழ்வு மையத்தில் நடைபெற்றது. இப்பல்கலையை ஒட்டியப் பகுதிகளில் தெலுங்கானா பிரச்சனையை ஆதரித்து எழுந்த கோஷங்களை கேட்க முடிந்தது. ஒரு ஊர்வலத்தையும் சென்ற முதல் நாளே எதிர்கொண்டோம். இவ்வளாகத்தில் அமைந்துள்ள கலைக்கல்லூரி மாணவர்களே இப்போரட்டத்தின் முதுகெலும்பு. நாம் சென்றது ஸ்ரீகிருஷ்ணா அறிக்கைக்கான காத்திருப்பு காலமானதால் அசம்பாவிதங்களை எதிர்கொள்ள தேவையிருக்கவில்லை.

முதல்நாள் போலின்றி இரண்டாம் நாளில்இந்திய ஆங்கிலக் கவிஞர்கள் மற்றும் பிராந்திய மொழிக் கவிஞர்களுக்கென தனித்தனியே அரங்குகள் பிரிக்கப்பட்டிருந்தன. அதனால் இயற்கையாகவே இந்திய ஆங்கிலக் கவிதைகளின் பக்கம் நாங்கள் செல்ல வேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது. இந்தி மொழி அஸ்ஸாமி, வங்காளம், ஒரியா மொழிகளுக்கு ஒரு அமர்வும், குஜராத்தி, கன்னடம் மொழிகளுக்கு ஒரு அமர்வும், தெலுங்குக்கு மட்டும் தனி அமர்வும் எனவும் பிரிக்கப்பட்டிருந்தது. அதிகபட்சமாக குஜராத்திக் கவிஞர்கள் ஐவர் வருகை தந்திருந்தனர். எனில் கன்னடத்திலிருந்து ஒரு அம்மையார் (ஹேமா பட்டன் ஷெட்டி) மட்டுமே வந்திருந்தார். அவரும் கவிஞரல்லர்.

நாடகத்துறையைச் சேர்ந்தவர். அவர் இலக்கிய விஷயங்களை விடவும் பிற விஷயங்களை ஆர்வத்தோடு பேசிக் கொண்டேயிருந்தார். நாங்கள் ரயில் ஏறும் வரை அவர் குரலிலிருந்து தப்பிக்க முடியவில்லை. குஜராத் கவிஞர்களில் உணர்ச்சிவயப்பட்டு கவிதைகளை வாசித்த (தலித்) கவிஞர் நீரவ் பட்டேல் நிறைவு விழாவில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான கவனத்தைப் பெற்றார்.

அடுத்து நிகழ்ந்த தெலுங்கு மொழி அமர்வுக்கு நான் செல்லவில்லை. ஒருவிதமான அலுப்புதான். அத்துடன் அவ்வமர்வில் கவிஞர்களோடு எழுத்தாளர்களும் தம் கதை நாவல்பகுதிகளை வாசிக்க இருந்தனர். தவிர மாலை நடைபெற இருந்த கலை நிகழ்வுக்குச் செல்ல உடல்ரீதியாக தயாராக வேண்டியிருந்தது.

அன்று மாலை கோல்கொண்டா குதுப்ஷாயி சுல்தான்களின் பிரம்மாண்ட நினைவிடங்களின் பின்னணியில் பலவத வண்ண விளக்குகள் ஒளிர்ந்த மேடையில் முகம்மது அலி பெய்க் என்பவர் தம்முடைய குழுவினருடன் கவிதைகள் வாசிக்கவும், கவாலி பாடல்கள் இசைக்கவும் செய்தார். அதற்கு முன்பு விருந்தினர்களை உற்சாகப்படுத்தும் வண்ணம், பானங்கள் வழங்கப்பட்டிருந்ததால் இவ்வரங்கு வாவ் வாவ் பௌத் அச்சா பௌத் அச்சா போன்ற குரல்களில் எதிரொலித்துக் கொண்டிருந்தது. அதில் ஒன்ற முடியாமல் நானும் அசதாவும் இருளில் மூழ்கிக் கிடந்த சமாதிகளை (தாஜ்மஹால் போன்ற பிரம்மாண்ட தோற்றம்) சுற்றிப்பார்த்துத் திரும்பிய போது சுடச்சுடப் பரிமாறப்பட்ட மட்டன் பிரியாணி முன்னிரவு குளிருக்கு மிகுப் பொருத்தமாக ருசித்து கொண்டாட்டம் முடிந்து உறைவிடம் திரும்ப நள்ளிரவு ஆகிவிட்டது.

மூன்றாம் நாள் (12.12.2010) முதலில் மராத்திய, ஹிந்தி, உர்து மொழிகளுக்கான அமர்வு நடைபெற்றது. அடுத்த அமர்வு மலையாள, தமிழ் மொழிகளுக்கானது என்பதால் அதிலும் கவிதைகளை ஆங்கிலத்தில் வாசிக்க வேண்டியிருந்ததால் ஒரு வித பயிற்சி கொள்ளும் நேரமாகிவிட்டது அது. அதற்கிணையான நேரத்தில் ஹைகூ அரங்கு ஒன்று நடைபெற்றதால் அங்கும் தலைகாட்ட வேண்டியிருந்தது. அங்கு வாசிப்புக்கு மாற்றாக பெரிய எழுத்துக்களில் அச்சடித்த ஹைகூ கவிதைகளில் காண்பித்து பார்வையாளர்களே வாசித்துக் கொள்ளும் விதமாக செய்தது புதுமையானதாகவும் பொருத்தமாகவும் அமைந்தது.

காலை 11.30 மணிக்குத் தமிழ், மலையாளக் கவிஞர்களின் கவிதை வாசிப்பு நிகழ்ந்தது. மலையாளக் கவிஞர் டி.பி. ராஜீவன் தலைமையேற்றார். பார்வையாளர் வரிசையில் கே. சச்சிதானந்தன் அமர்ந்திருந்தது ஒரு வித கௌரவமாகவே எனக்குப்பட்டது. டி.பி.ராஜீவன் தலைமை தாங்கினாலும் அதுவரையில் எங்களிடம் எங்களைப் பற்றிய அறிமுகக் குறிப்பு எதையும் கூட கேட்டிருக்கவில்லை. அஜயன் பாலா எங்களது தலா மூன்று கவிதைகளை சிறு புத்தகவடிவில் தயாரித்து வந்து அங்கு விநியோகித்தார். அதிலும் கூட அறிமுகக் குறிப்பு இடம்பெறாமலிருந்ததால் அவரவர்களைப் பற்றிய அறிமுகத்தை அவரவராகவே வாசிக்க நேர்ந்தது. நான் என்னிடமிருந்த குறிப்பை ராஜிவனிடம் அளித்ததால் அதை மட்டும் அவர் வாசித்தார்.

மலையாளத்திலிருந்து கல்பட்றா நாராயணன், ஓ.பி. சுரேஷ் ஆகியோர் கவிதை வாசித்தனர். தமிழிலிருந்து நாங்கள் நால்வர். தலா மூன்று கவிதைகளில் முதல் கவிதை மட்டும் அவரவர் தாய்மொழியிலும் பிற இரண்டை

மொழிபெயர்ப்பினூடாக வாசித்தோம். தமிழில் வாசிக்கும் போதைய இயல்பு ஆங்கிலத்தில் வாசிக்கும் போது புதுமையாக மாறியிருந்தது. கவிதை வாசிப்புக்கும் பின் கே. சச்சிதானந்தனுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டபோது தமிழ்க் கவிதைகள் நன்றாக இருந்ததாக அவர் கூறினார். அவரோடு பேசும் உரையாட மொழி ஒரு பிரச்சனையாக இருந்ததை இப்போது உணர உணர்கிறேன்.

பின்பு விருது பெறும் நிகழ்ச்சியில் ஜி.எஸ்.பி. ராவ் உடன் தலைமையிருந்த அகாதமியைப் நன்றியுடன் நினைவுகூர்ந்து நினைவுப் பரிசுகளும் வழங்கிட, மதிய உணவுடன் நிகழ்வு நிறைவுற்றது.

இதை எழுதும் இவ்வேளையில் அவ்விழாவை அசைபோடும் போது சில விஷயங்கள் - வினாக்கள் நினைவில் எழுகின்றன.

1. எங்களைத் தவிர இவ்விழாவிற்கு செல்லும் பொருத்தமுடையவர் வேறு எவராக இருந்திருக்கக்கூடும்? (ஆங்கிலம் அறிந்த கூடுதல் தகுதியுடன்)
2. இந்திய அளவில் புகழ்ப்பெற்ற கவிஞர்கள் ஏன் தமிழில் இல்லை?
3. தமிழ்நாட்டில் இத்தகைய ஒரு விழாவை நடத்தும் சாத்தியமாவது உண்டா?
4. குறைந்த பட்சம் தென்னிந்திய மொழிகளிலுள்ள நவீன கவிஞர்களின் அறிமுகமாவது சாத்தியமாக (படைப்பு ரீதியாகவும்)
5. இந்திய ஆங்கில கவிஞர்களிடையே ஒதுக்கப்பட்டவர்கள் போல விலகித் தெரியும் பிராந்திய மொழிக் கவிஞர்களின் இருப்பை எவ்வாறு வர்ணிப்பது.

யாழி கவிதை

அந்தக் கல்லறை
சில பூக்கள்
பற்றவைக்கப்பட்ட
ஒன்றை மெழுகு
பெரும் அமைதி
இந்த முறையும்
விடைபெறுதலில்
எழுந்து அடங்கியது
ஒரு கடல்

இரண்டாவது முறையும்
பூவிழுந்தது
தலை எதிர்ப்பார்த்து
காத்திருக்கையில்
இந்த முறை
பூ கேட்கிறேன்
மூன்று சிங்கங்களும்
சிரிக்கின்றன
ஏளனமாய்...
இறுதியாய்
இரண்டிற்கான வாய்ப்பற்ற
முடிவுக்கு வருகிறேன்
அது
நாணயத்தை
சுண்டாமலிருப்பது.

ஒரு நூறாண்டு காலத் தனிமை

காப்ரியல் கார்சியா மார்க்வெஸ்



தமிழில் இரா. நடராசன்

7

யுத்தம் மே மாதம் முடிவுக்கு வந்தது. உள்நாட்டு கலகத்தை தாண்டிவிட்டுத் தொடங்கியவர்களின் மீது இரக்கமும் பாரபட்சமும் இன்றி

தண்டனை ஏவப்படும் எனும் உறுதிமொழிகளோடு அரசு அதிகாரப் பகிர்வையாய் பிரகடனம் ஒன்றை வெளியிடுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன் கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா, மேற்கத்திய எல்லையில் ஒரு இந்திய ஆன்மமருத்துவரின் உருமறைவோடு கடப்பிட முயன்றபோது யுத்தக் கைதியாய் வீழ்ச்சியுற்றார். அவரோடு யுத்தங்கொள்ளச் சென்ற இருபத்தொரு பேரில் பதினொன்றுபேர் போரின் போது இறந்திட, ஆறுபேர் கடுமையாக காயங்கள் பட்டும், இறுதித் தோல்வியின் போது அவரோடு ஒரே ஒருவரே மீதம் இருந்தார். கர்னல் ஜெரினெல்டோ மார்க்வெஸ் சிறப்புப் பிரகடனம் ஒன்றின் மூலம் அவர் பிடிப்பட்ட செய்தி மெக்காண்டோவில் அறிவிக்கப்பட்டது. அவன் இன்னமும் உயிரோடுதான் இருக்கிறான். அவள் ஊர்சுலா தனது கணவரிடம் சொன்னாள். அவனது எதிரிகள் அவன் மீது கருணை காட்டிட நாம் ஆண்டவரை பிரார்த்திப்போம். மூன்று நாட்கள் தொடர்ந்த அழுகைக்குப்பின் பால் இனிப்பு மிட்டாய் கடைந்த ஒரு மதியம் தனது மகனின் குரலை அவள் தெளிவாகக் கேட்டாள். அது அவ்ரெலியானோ தான் அவள் கத்தினாள். செம்மலர் மரத்தடிக்கு தன் கணவரிடம் செய்தியை சொல்ல ஓடினாள். எப்படி இந்த அற்புதம் நிகழ்ந்ததோ நானே அறியேன். அவன் உயிரோடுதான் இருக்கிறான். நாம் அவனை விரைவில் காணவும் இருக்கிறோம். அதை உண்மையாகவே இவள் பாவித்தாள். வீட்டை நன்னீரால் மெழுகி, இருக்கைகளை இடம்மாற்றி அவனது வருகைக்காக தயார் படுத்தினாள். ஒரு வாரம் கழித்து எங்கிருந்தோ கிளம்பிய ஒரு புரளி, அது அரசு பிரகடனம் அல்ல, அவளது முன் உணர்வை ஊர்ஜிதம் செய்தது. குற்றங்கள் நிரூபணமாகி கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா மரண தண்டனை விதிக்கப்பட்டார். தண்டனை மெக்காண்டோவில் மக்களுக்கு பாடம் புகட்ட அனைவர் முன்னிலையிலும் நிறைவேற்றப்படும். திங்கட்கிழமை காலை மணி பத்தரை ஆனபோது அவ்ரெலியானோ ஜோஸ்க்கு அமரந்தா உடைமாற்றிக் கொண்டிருந்த வேளையில் தூரத்தில் ராணுவ ஊர்திகளின் ஓசையையும் கொடிதாங்கி முன்செல்பவரின் ஊதலிசையையும் கேட்ட மாத்திரத்தில் அறைக்குள் ஊர்சுலா வார்த்தைகளால் வெடித்து சிதறினாள். அவர்கள் அவனை இப்போது அழைத்து வருகிறார்கள். தங்களது துப்பாக்கிகளின் கைப்பிடியால் தள்ளியபடியும் அடித்தபடியும் வீரர்கள் ஆர்ப்பரித்துக் கூடிய பொதுமக்களை அடக்கிட முயன்றார்கள். அமரந்தாவும் ஊர்சுலாவும் அனைவரையும் தள்ளியபடியே முண்டியடித்து முன்னேறி ஒரு மூலைக்கு சென்று அங்கே அவரை கண்டார்கள். அவர் ஒரு பிச்சைக்காரனைப் போல காட்சியளித்தார். காலணி இன்றியும் ஆடைகள் கிழிக்கப்பட்டும் தலைமுடியும் தாடியும் சடைபிடித்துப்போன நிலையில் அவர்இருந்தார். கைகள் பின்னால் இழுத்து ஒரு பெருங்கிணற்று வடகயிற்றால் கட்டப்பட்டு மறுமுனை உயர் அதிகாரி ஒருவனால் குதிரையின் கழுத்தோடு கட்டப்பட்டிருக்க, கொதிக்கும் மணலின் சூட்டை பற்றிய எந்த உணர்ச்சியும் இல்லாதவர்போல அவர் பின்னே ஓடிக்கொண்டிருந்தார். அவரோடு அவரைப் போலவே கடுந்துயரெய்தி தோற்கடிக்கப்பட்டவராய் அவர்கள் கர்னல் ஜெரினெல்டோ மார்க்வெஸ்ஸையும் இழுத்து வந்திருந்தார்கள். இருவரும் எந்த துக்கமும் அற்றவர்களாய் காணப்பட்டார்கள். ஆனால் அங்கு கூடி இருந்த மக்கள் படைவீரர்களை இழித்துரைத்து பேசிய கெட்ட வார்த்தைகளாலும் கூச்சலாலுமே அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள்.

உயர்மலை பிரதேசத்தின் நகர்ப்புறம் சார்ந்த குரலொலித்தொனியுடனும் உணர்வற்ற தன்மையோடும் கூடிய அதிகார குரலில் வெளிப்பட்ட அவனைப் புரிந்து கொண்டாள் அவள்.

ஆமாம் நீங்கள் சொல்வது போலவே மிஸ்டர் தான் அவள் ஒப்புதலளித்தாள். பார்க்க அனுப்புவதனால் சரி மிஸ்டர் தான்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை சந்திக்க யாரையுமே அனுமதிக்கக்கூடாதென்று கடும் உத்திரவு இருந்த போதிலும், அந்த அதிகாரி பதினைந்து நிமிடங்கள் அவள் உள்ளே சென்று தனித்திருக்க பொறுப்பேற்றுக் கொண்டான். தனது கூடையில் கொண்டு தான் எல்லாவற்றையும் எடுத்துச் சென்றோம் என்பதை உணர்வை அவனிடம் காட்டினாள். துவைத்து தேய்க்கத் தயார் மாற்றுடை ஒன்று, திருமணத்தின் போது தன் மகன் அணிந்திருந்த சூட்டை அவன் திரும்பி வருவானென்று மனதுக்கு தோன்றிய நாள் முதல் அவள் அக்கறையுடன் செய்து வைத்துபாதுகாத்த பாலிஷிடப்பட்ட பூட்ஸ். சிறையின் அறையாய் மாற்றப்பட்டிருந்த ஒரு அறையில் அவள் அவ்ரேலியானோ புயெண்டியாவை நீ புண் கொப்பளங்களால் சாரிசாரியாக ரணமாகிப்போன அக்குளின் காரணமாக கைகளை அகலத்திருந்த வண்ணம் தனது படுக்கையில் படுத்துக்கிடந்தபடி இருந்ததை கண்டாள். தாடியை மழித்துக்கொள்ள அவர்கள் அவரை அனுமதித்திருந்தார்கள். தாடை எலும்புகளின் வளைவுகளை துல்லியமாக்கியபடி நுனி முறுக்கப்பட்ட மீசை தடிப்பாக இருந்தது. மேலும் சோகை விழுந்து வெளுத்திருந்தவன் போலிருந்தான். வீட்டைச் சென்ற போதிருந்ததை விட கனிவாயிருந்து ஓரளவு உயரமாகி... மேலும் மேலும் தனிமையில் சிக்கியவனாய் அவனைக் கண்டாள். வீட்டைக் குறித்த அனைத்து செய்திகளையுமே அவன் முன்பறிந்திருந்தான். பியெட்ரோ கிரெஸ்பியின் தற்கொலை, அர்காடியோவின் அராஜகம் மற்றும் மரண தண்டனை, செம்பலர் மரத்தடியில் கட்டிப்போடப்பட்டிருக்கும் ஜோஸ்அர்காடியோ புயெண்டியாவின் நிலை. அமரந்தா தனது கன்னிகழியா விதவை வாழ்வை அவ்ரேலியானோ ஜோஸை வளர்ப்பதன் மூலம் புனிதப்படுத்தி வருவதையும், அவன் பேசி கற்கும் போதே எழுதப்படிக்க கற்கும் நல்லது கெட்டது அறிந்தவளாய் இருப்பதையும் கூட அவன் அறிந்திருந்தான். தனது மகனின் அறிவு முதிர்ச்சியை மேலாண்மை கொண்ட தேஜஸ்ஸை நரம்பில் புடைத்து தோலில் பளபளத்த அதிகாரத்துவத்தை உணர்ந்து அவள் ஸ்தம்பித்தாள். இந்த அளவிற்கு அவனை விஷயங்கள் சென்றடைந்திருந்தது அவளுக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. உனக்குத்தான் தெரியுமே. எப்போதும் நான் ஒரு மந்திரவாதி அல்லவா அவன் ஜோக்கடித்தான். பிறகு திடீரென்று மிகவும் உள்ளார்வத்தோடு கருத்தூன்றியபடியே இன்று காலையில் அவர்கள் என்னை இங்கே அழைத்துவந்த போது நான் ஏற்கனவே ஒருமுறை அவையனைத்தையுமே வாழ்ந்து முடித்துள்ளதாகவே தோன்றியது. உண்மையில் அவனைச் சுற்றியும் கூட்டம் கர்சித்துக் கொண்டிருந்த போது தனது எண்ணங்களை குறிப்பாக எப்படி நகருக்கே வயது முதிர்ச்சி ஏற்பட்டுவிட்டதென யோசனைக் கொள்வதில் கவனஞ்செலுத்தினான். வாதுமை மரங்களின் இலைகளெல்லாம் உடைந்துதிர்ந்தன. முதலில் நீல நிறத்திலும் பிறகு சிவப்பு நிறத்திலுமாய் கட்டாயமாக வர்ணமிடப்பட்ட வீடுகள் இரண்டுங்கலந்து சொல்லமுடியாத நிறத்தை அடைந்திருந்தன.

நீ பின் என்னதான் எதிர்ப்பார்த்தாய் ஊர்சுலா சுட்டினாள். காலம் ஓடுகிறது.

இப்படித்தான் அது ஓடுகிறது. அவ்ரெலியானோ ஒப்புதலளித்தார். ஆனால் அந்த அளவிற்கு அல்ல.

இவ்வகையில் ஒருவருக்கு ஒருவர் இருவரும் எந்த சந்திப்பிற்காக ஏங்கி வினாக்களை மனங்கொண்டு விடைகளை எதிர்கொண்டு மிகுந்த எதிர்ப்பார்பபோடு காத்திருந்தார்களோ, அந்த சந்திப்பு, ஒரு அன்றாட கலந்துரையாடலாக ஆகிப்போனது. காவல் வீரன் சந்திப்பு நேரம் முடிந்ததை அறிவித்ததும், தனது படுக்கை அடியிலிருந்து அவ்ரெலியானோ அழுக்கானதொரு காகிதத்தையை உருவி எடுத்தார். அவை அவரது கவிதைகள். ரெமெடியா ஆளுமையால் உதித்தவை. வெளியேறியபோது உடனெடுத்துச் சென்றவை. யுத்தம் கொடுத்த இடைவெளிகளில் புனையப்பட்டவையும் கூட இருந்தன. இவற்றை யாருமே வாசிக்கமாட்டார்களென உறுதியிட்டு சத்தியம் செய், அவர் சொன்னார். இவற்றால் அடுப்பை பற்றவை இன்று இரவே அவ்விதமே உறுதிமொழியளித்து கிளம்பிய பிரியாவிடை முத்தமிட ஊர்சுலா எழுந்தாள்.

உ.. உனக்காக ஒரு கைத்துப்பாக்கி கொண்டு வந்தேன் அவள் முணுமுணுத்தாள்.

காவல் வீரன் அதைப் பார்த்துவிடவில்லை என்பதில் கர்னல் அவ்ரெலியானோ புயொண்டியாதுறியாக இருந்தார். அது எனக்கு எவ்விதத்திலும் இனி உதவாது அம்மா என்று தீர்மானமாய் சொன்னார் தாழ்ந்தகுரலில், ஆனால் அதை இப்படி கொடுத்துவிடு. அவர்கள் போகும்போது உன்னை சோதனை செய்தால் தனது உள்ளாடையிலிருந்து கைத்துப்பாக்கியை எடுத்து ஊர்சுலா அதை உடனடியாக படுக்கை விரிப்பின் அடியில் திணித்தாள். இறுதி விடை தயவு செய்து அளிக்காதே அவர் கணீரென்று அதே சமயம் வழுவமைதியோடு அழுத்தம் திருத்தமாக சொன்னார். யாரையும் கெஞ்சாதே யார் முன்னும் தலைகுனியாதே... போ. அவர்கள் எப்போதே என்னை சுட்டுக் கொன்றுவிட்டார்கள் என்பது போல சாதாரணமாய் போய் வா அம்மா அழுது விடாமலிருக்க ஊர்சுலா உதடுகளை கடித்துக் கொண்டாள்.

கொப்புளங்களுக்கு கொஞ்சம் ஒத்தடம் கொடுக்கக்கூடாதா? அவள் சொன்னாள்

அப்படியே திரும்பிய அவள் அந்த அறையிலிருந்து வெளியேறினாள். கதவு சாத்தப்படும் வரையில் கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா எண்ணங்கொண்டபடியே நின்றார். பிறகு மீண்டும் கைகளை விரியப்பட்ர விட்டு மீண்டும் படுக்கையில் விழுந்தார். தனது வாலிபப் பருவம் முதலே அவர் தனது வருந்திங்குணரும் நிலைபற்றி அறிந்தே இருந்தார். எனவே மரணம் என்பதும் சற்றும் அய்யத்திற்கிடமின்றி மீட்டெடுக்கப்பட்ட தெளிந்த சிருக்கையாய் முன் உணர்த்தப்படும் அதில் சந்தேகமே இல்லாதிருந்தது. ஆனால் இப்போதோ இன்னும் சில மணிநேரங்களே இருந்தன. அவருக்கு மரண தண்டனை நிறைவேற்ற இருக்கிறார்கள். ஆனால் எவ்வித சிமிக்கையும் கைகொள்ளப்படவில்லை. டக்கர்னிகாவில், ஒரு குறிப்பிட்ட நாளில், மிகவும் அழகான யுவதி ஒருத்தி அவரது முகாமிற்குள் வந்துவிட்டிருந்தாள். காவல்

வீரர்களிடம் வந்து அவரை சந்திக்க அனுமதியும் கோரினாள். காவல் வீரர்களுக்கு சில தாய்மார்களின் மட்டுமீறிய வெளியார்வம் தெரிந்தே இருந்தது. தங்களது மகள்களை மிகவும் உயர்வான அந்தஸ்த்தடைந்தக யாவிரர்களின் படுக்கை அறைக்குள் அனுப்பி வைத்தார்கள். அவர்கள் அதை தாங்கள் வளர்ப்பின மரபை உயர்நிலைக்கு செலுத்துதலெனவும் அழைத்துக் கொண்டனர். பெருங்கனமழையொன்றில் தொலைந்த மனிதன் ஒருவனைப் பற்றி கர்னல் அவ்ரேலியானோ புயெண்டியா கவிதை புனைந்த அந்த இரவில் அவள் அவரது அறைக்குள் நுழைந்தாள். வழக்கமாய் கவிதைகளை வைக்கும் மேசை டிராயரில் அவற்றை நுழைத்துப் பூட்டிட அவளுக்கு எதிர்புறமாய் அவர் திரும்பியிருந்தார். அதை அதை முன் உணர்ந்தார. தலையைத்திருப்பாமலேயே அதே மேசை இழுவையிலிருந்ததைத் துப்பாக்கியை எடுத்தார்.

தயவு செய்து சுடவேண்டாம் அவர் சொன்னார்.

தன்துப்பாக்கியேந்திய அவர் திரும்பியபோது அந்தப்பெண் தன் துப்பாக்கியை ஏந்திய கையை கீழ தொங்கவிட்டு செய்வதறியாது திகைத்து நின்றாள். அவ்வகையில் அவர் மரணக்குழியின் பன்னிரண்டில் நான்கு பொறிகளிடம் தப்பினார். அதே சமயம் யாரிடத்திலும் பிடிபடாத யாரோ மனோயூரின் புரட்சிப்படை தலைமையத்திற்குள் அத்துமீறி நுழைந்து தனது படுக்கையை காய்ச்சலில் போர்த்தியபடி வியர்த்திட அவர் கொடுத்திருந்த ஆருயிர் நண்பர் கர்னல் மாக்னிஃபிகோ விஸ்பாலை, சராமரியாய் கத்திகுத்தின் மூலம் ஒரு நள்ளிரவு கொலை செய்திருந்தார்கள். ஒரு தொங்கு படுக்கையில் கடும் இருளில் படுத்துறங்கிக்கொண்டிருந்த அவர் அதே அறையில் நடந்த எதும் தெரியாதிருந்தார். வருந்திங்குணர்த்தும என்ன ஓட்டங்களை ஒழுங்கிற்கு முறைப்படுத்த அவர் எடுத்த எந்த முயற்சியும் கைகூடியதும் இல்லை. மனித செயல்களுக்கே அப்பாற்பட்டவையாய் அவை திடீரென்று மிகத்தெளிவாய் காட்சியகப்படுத்தப்பட்டன. ஒரு உந்து விசைத் தீர்ப்பினைப் போல அவை வந்தாலும், தாமாக அவற்றை கைகொள்ளவோ அவரால் முடியவே முடியாதிருந்தது. சில சமயம் அவை முன் உணர்த்தப்பட்டவை என தீர்மானமாக செயலனைத்தும் நடந்து முடித்தான். அவருக்கு பெருந்தெளிவு கிட்டும் மிக அடிக்கடி அவை குருட்டு நம்பிக்கையின் எச்ச சொச்சங்களாகவே எண்ணங் கொள்ளப்பட்டன. ஆனால் அவர்கள் அவருக்கு மரணதண்டனை வழங்கிவிட்டு கடைசி ஆசையை



கேட்டபோது தன்னை பரிசீலிக்க தானே முறைமன்றில் அவருக்கு சந்தேகமே இல்லை.

நான் எனக்கான மரண தண்டனை மெக்காண்டோவில் நிறைவேற்றப்படவேண்டுமென கேட்கிறேன். அவர் சொன்னார்.

இராணுவ நீதிமன்றத்தின் தலைவர் பெரும் பதற்றங்கொண்டார்.

ரொம்ப புத்திசாலித்தனமாய் போகாதே புயெண்டியா அவரிடம் அவர் சொன்னார் இது காலங்கடத்திட நீ செய்யும் ஒரு தந்திரம்.

அதை நிறைவேற்றுவதும் நிறைவேற்றாததும் உங்கள் பாடு. கர்னல் திட்டவட்டமாய் பதிலுரைத்தார். ஆனால் அதுதான் என் இறுதி விருப்பம்.

அப்போதிருந்த வருந்தீங்குணர்த்தும் எண்ணங்கள் அவரை கைவிட்டன. ஊர்சுலா தன்னைச் சந்திக்கவந்த நாளில் அவர் நீண்ட நேர யோசனைக்குப்பிறகு மரணம் என்பது முன்னறிவிக்கப்படாது. ஏனென்றால் அது வசதிவாய்ப்பின்படி இல்லை. மரண தண்டனையை நிறைவேற்ற இருப்பவரின் விருப்பப்படியால் உள்ளதென முடிவுக்கு வந்தார். தனது கொப்பளங்களின் வலியால் சித்திரவதைகளை அனுபவித்தார். இரவு முழுவதையும் உறங்காமல் கழித்தார். விடியலுக்கு சற்றுமுன்பாக அவனது சிறைக்கு வெளியே காலடிச்சுடங்களைக் கண்டார். அவர்கள் வந்துவிட்டார்கள் அவர் தனக்குத்தானே சொல்லிக்கொண்டார். காரணமே இன்றி ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவை நினைத்தார். அவரும் தனது செம்மலர் மரத்தடியில் அமர்ந்து வண்ணம் இவரையே யோசித்தார். பழமை குறித்த பேரச்சமோ மரணம் அச்சமோ அவருக்கு ஏற்படவில்லை. தான் தொடங்கி முடிக்காமல் போன பல விஷயங்கள் முடிவுக்கு வரும் விதத்தை பார்க்கவிடாது இந்த வலிந்தேற்றிய மரணம் தடுப்பதை குடலாழஆத்திரத்தோடு யோசித்தபடி பற்களை கடித்தார். கதவு திறந்து காவல் வீரன் உள்ளே வந்து குவளைக் காப்பி குடிப்பதற்கு அளித்தான். மறுநாள் காலை அதே நோக்கிலும் கொப்புளங்களின் வலியால் துடித்து ஆத்திரமுற்றபடி காத்திருந்தார். அப்போதும் அதே தான் நடந்தது. வியாழக்கிழமையன்று வீரர்களோடு ஊர்சுலா அளித்த பெருத்த பாலினிப்பு மிட்டாயை பகிர்ந்து கொண்டு மிகவும் சின்னதாகி இருக்கப்படித்த புத்தாடைகளை மற்றும் பதப்படுத்தப்பட்ட தோல் பூட்ஸையும் அணிந்தார். ஆனால் வெள்ளிக்கிழமை அன்று அவர்கள் அவரை இன்னும் சுட்டுக் கொன்றிருக்கவில்லை.

உண்மையில் மரண தண்டனையை நிறைவேற்ற அவர்கள் அஞ்சினார்கள். நகரத்தில் நிலவிய கிளர்ச்சியுணர்வு, கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியாவின் மரண தண்டனையில் பயங்கரமான அரசியல் பின் விளைவுகளை மெக்காண்டோவில் மட்டுமல்ல அனைத்து சதுப்பு நிலப்பகுதிகளிலும் ஏற்படுத்தக்கூடிய ஒன்றாய் கருத வைத்தது. எனவே பிராந்திய தலைமையகத்தோடு தொடர்பு கொண்டு அவர்கள் ஆலோசித்த வண்ணமிருந்தனர். சனிக்கிழமையன்று இரவு மேலிடத்திலிருந்து இன்னமும் முடிவுக்காக காத்திருந்த அந்த நாளில் காப்டன் ரோக் கார்னிசெரோ ஏனைய சில அதிகாரிகளுடன் கட்டாரினோ அங்காடிக்கு சென்றான். வெகுநேரம் மிரட்டியபிறகு ஒரு ஒரு பெண் மட்டுமே அவனை தன் படுக்கைக்குக் கூட்டிச் சென்றாள். அவர்கள் தங்களுக்கு செத்துப்போக இருக்கின்றானென அறிந்த ஒருத்தனோடு படுக்கை பகிர்வு செய்ய விரும்பவில்லை என்றவள் அவனிடம்

ஒப்புதல் அளித்தாள். எப்படி நடக்குமென யாருக்கும் தெரியாது. ஆனால் கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியாவை சுட்டு மரண தண்டனையை நிறைவேற்ற இருக்கும் அதிகாரி அப்படைவீரர்கள் உலகின் எந்த மூலைக்கு தப்பிச்சென்றாலும் கொல்லப்படுவது உறுதி. அதிலிருந்து தப்ப வாய்ப்பே இல்லை இப்போது அல்லது எப்போதே அது நடந்தே திருமென்று. எல்லோருமே பேசிக்கொளகிறார்கள். காப்டன் ரோக்கார்னிலெரோ அவ்விஷயத்தை ஏனைய அதிகாரிகளுக்குத் கூறிட அவர்கள் அதை மேலிடத்திற்க தெரிவித்தனர். ஞாயிற்றுக்கிழமை யாருமே அதை நேரடியாக சொல்லவில்லை என்றாலும், அந்த நாட்களில் இராணுவத்தின் கெடுபிடியால் யாரும் பேசுவதையே கூட மிகுந்த பதட்டமான விஷயமாக கருதியதால் மூச்சு விடவும் யோசித்தப்டி ஆனால் முழு நகருக்கே தெரிந்திருந்தது. அதிகாரிகள் ஏதாவது ஒரு சாக்குபோக்கு கூறியாவது மரண தண்டனையை நிறைவேற்றுவதை தவிர்க்கவே தயாராக இருந்தார்கள். காசின் நேரடி ஆணை திங்கள் தபாலில் வந்தது. மரண தண்டனை இருபத்திநான்கு மணிநேரத்திற்குள் நிறைவேற்றப்படவேண்டும். அன்றிரவு அதிகாரிகள் ஏழு பெயர்குறிப்பு காகிதங்களை சுருட்டி ஒரு தொப்பியில் போட்டனர். காப்டன் ரோக் கார்னிலெரோவின் அமைதி குலைந்த கொடிய விதிக்கு கோடுகாட்டியபடியே அவனது பெயர்கொண்ட சீட்டு எடுக்கப்பட்டிருந்தது. துரதிர்ஷ்டம் வந்தால் கண்ர் ஒலியோடு வராது. அவன் மிகுந்த கசப்புணர்ச்சியோடு சொன்னான். வேசி மகனாய் நாய் வாழ்வு வாழப்பிறந்தவன் நான் அரே நாய் மரணம் எனக்கு காலை மணி அய்ந்தானபோது தனது கொலைப்படையைம் குலுக்குச்சீட்டுல் தேர்ந்தெடுதது அதை முன் தாழ்வாரத்தில் நிற்கவைத்துவிட்டு தண்டிக்கப்பட்ட வரை, முன்னறிகுறி சொற்களையே பிரயோகித்து அழைத்தான்.

போகலாம். புயெண்டியா அவரிடம் சொன்னான். நமக்கான நேரம் வந்துவிட்டது.

ஓ இது தானா அது கர்னல் பதிலளித்தார். நான் இன்று என் கொப்புளங்கள் வெடித்துவிட்டதாய் கனவு கண்டேன்.

ரிபெக்கா புயெண்டியா அதிகாலை மணி மூன்றுக்கே எழுந்துவிட்டான். அவ்ரெலியானோவை அவர்கள் சுட இருப்பதை அவள் கேள்விப்பட்டிருந்தான். ஜோஸ் அர்காடியோவின் குறட்டை ஒலியால் அதிர்ந்த படுக்கையின் மேல் அமர்ந்து பதி திறந்த ஜன்னல் வழியே அவள் தூரத்து இடுகாட்டு சுவரையே கவனித்துக் கொண்டிருந்தாள். பியெட்ரோ கிரெஸ்பியின் கடிதங்களுக்காக காத்திருந்த நாட்களின் அளவிடமுடியா இச்சையோடும் பதட்டத்தோடும் அவள் வாரம் முழுவதும் அதற்காக கவனமாய் காத்திருந்தாள். அவர்கள் அவனை இங்கே வைத்து சுடமாட்டார்கள். ஜோஸ் அர்காடியோ அவளிடம் சொன்னான். அவர்கள் நள்ளிரவில் தங்கள் இராணுவக் கொட்டடியில் வைத்தவனைச்சுடுவார்கள். கொலைப்படையில் இருந்தவர்கள் யார் என்பது வெளியே தெரியக்கூடாதென ரகசியமாய் அவனை இங்கே புதைப்பார்கள். ஆனால் ரிபெக்கா மேலும் மேலும் காத்திருக்கவே செய்தாள். அவனை இங்கே அழைத்து வந்துதான் சுடுவார்கள். அவர்கள் முட்டாள்கள் அவள் சொன்னாள். கதவுகளை திறந்து தான் கையசைத்து குட்பை சொல்வதை கற்பனையில் வடித்து பலமுறை யோசிக்குளவு அவள் நிச்சயமாக நம்பினாள். தெருக்களின் வழியே அவனை அழைத்து வரமாட்டார்கள். ஜோஸ் அர்காடியோ கண்டிப்பாக

[illegible] இருப்பது ஆறே படைத்தாசீ வீரர்கள் அதுவும் மக்கள் ஏற்கனவே [illegible] தயாராக இருக்கிறார்கள் என்பதும் தெரியும். தனது கணையின் [illegible] ரீபெக்கா துன்னையோரம் காத்திருக்கவே செய்தான்.

நீங்கள் பார்ப்பீர்கள். அவர்கள் அந்த அளவிற்கு முட்டாள்கள் அவன் சொன்னான்.

செவ்வாய்க்கிழமை காலை ஐந்து மணிக்கு ஜோஸ் அர்காடியோ தனது காப்ரினை அருந்திவிட்டு நாய்களை வெளியில்விட்ட நேரத்தில் ரீபெக்கா துன்னையை காத்துவிட்டு ஒரு படுக்கையில் விழுந்துவிடாதபடி நடுக்கத்தில் பிதற்றினாள். அவர்கள் அவனை அழைத்து வருகிறார்கள். [illegible] எடுப்பாகவும் மிடுக்காகவும் இருக்கிறான். ஜோஸ் அர்காடியோ ஒப்புயோசா துன்னையைத் திறந்து தடுமாறிய படி நடந்து கொண்டிருந்த அவ்ரெலியானோவை அந்த அதிகாலை மங்கிய ஒளியில் கண்டான். ஏற்கனவே அவர் சுவரில் முதுகை பதித்தபடி இடுப்பில் கைவைத்திருந்தார். அக்குள் கொப்புளங்களை சுற்றிக் கட்டியிருந்த கட்டுக்காயக்கட்டுகள் அவர் கையை தளவிடாமல் செய்தன. ஒருவன் கையாலாகாத நிலையில் தன்னைத் தானே நொந்திட நேர்கிறது. கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா சொன்னார். ஆறு நோஞ்சான் சித்திரக்குள்ளர்கள் ஒருவனை கொன்றுவிட்டனர் ஏதும் செய்ய இயலாதெனும் நிலையில் தன்னைத்தானே உட்படுத்திக்கொள்பவனைப் போலத்தான். [illegible] அவைக் திருப்பித் திரும்பக்கூறிய அவர் எதோ வெறி ஆவேசம் கொண்டு காப்டன் ரோக் கார்னிஸெரோவின் நெஞ்சுக்கொடும் வகையில் இறுதித்தீர்ப்பு போல இதை வெளியிட்டார். கர்னல் ஆண்டவனை வேண்டுதல் செய்து ஜபிப்பதாக கருதிய காப்டன் இதைக்கேட்டு மனம் நெகிழ்ந்தான். அவருக்கு முன் கொலைப்படை வரிசைப்பட்டு கூடுவதற்கு தலைவீ வகுத்தபோது ஆக்ரோசம், நாக்கை பேசவிடாது செய்யும் பசையாய் உருவெடுத்து அமைதியாகி அவரை கண்களை மூட செய்தது. வெள்ளிநிற காலை வெளிச்சம் விடைபெற்று அவர் தன்னை அரை டவுசரில் கழுத்துடை சுற்றியபடியே தனது தந்தையாரால் ஜிப்ஸி [illegible] ஒரு அற்புதமான [illegible] அழைத்துச் செல்லப்பட்டு அங்கே அவர் ஐஸ்கட்டியை பார்க்கும் காட்சித் தோன்றியது. ஓங்கி ஒலித்த குரலை கொலைப்படையினரின் இறுதிக் கட்டளை என்று அவர் நினைத்தார். ஆனால் எதோ பதுட்டத்தோடு கண்களைத் திறந்தவர், தன்னைத் தாக்கவரும் துப்பாக்கி [illegible] ஆனால் அங்கேயோ காப்டன் ரோக் கார்னிஸெரோ கைகளை தூக்கி இருக்க எப்போது வேண்டுமானாலும் சுடப்படும் நிலையில் கையில் வேட்டைத்துப்பாக்கியுடன் ஜோஸ்அர்காடியோ சாலையைக் கடந்துக் கொண்டிருக்கக் கண்டார்.

தயவு செய்து சுடாதீர்கள். காப்டன் ஜோஸ் அர்காடியோவிடம் கெஞ்சினான். புனிதமிக்க வானுலக ராஜ்யத்திலிருந்து ஆண்டவரால் அனுப்பப்பட்டவராகத்தான் நீங்கள் இருக்கவேண்டும்.

இன்னொரு யுத்தமே அந்த இடத்திலிருந்து தொடங்கியது. காப்டன் ரோக் கார்னிஸெரோவும் அவனது ஆறு படைவீரர்களும் கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியாவுடன் [illegible] [illegible]

எவ்வழியாக வந்து மெகாண்டோவை கண்டடைந்தாரோ அந்த வழியில் காடுகளைக் கடந்து ரியோஹாச்சாவை அடையும் பட்சத்தில் நேரத்தை மிச்சப்படுத்த விரைவாகச் செல்ல முடியுமென முடிவெடுத்து அவ்வழி சென்ற போது ஒரு வாரம் கழிவதற்குள்ளாகவே அது முற்றிலும் சாத்தியமற்ற பயணம் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். எனவே கொலைப் படை மரண தண்டனை நிறைவேற்ற வைத்திருந்ததைத் தவிர வேறு ஆயுதங்கள் இன்றி இருந்தார்கள் காடுகளின் வழியே மேற்பரப்பு பாறைகள் அடர்ந்த முட்புதர்கள் வழியே ஆபத்தான கடினப் பயணம் மேற்கொள்ளவேண்டியிருந்தது. சிறு நகரங்களுக்கு அருகே அவர்கள் முகாமிட்டு அவர்களில் ஒருவர் சிறு தங்க மீனோடு மாறுவேடத்தில் பகலில் சென்று செயலற்ற நிலையடைந்துவிட்ட லிபரல் கட்சியினரோடு சந்திப்பு ஏற்படுத்திட முயல்வான். மறுநாள் அத்தகைய விபரங்களோடு காட்டிற்கு வேட்டையாட என்று சென்று திரும்பவரவே மாட்டான். மலைகளின் பள்ளத்தாக்கு ஒன்றிலிருந்து தூரத்தெரிந்த ரியோ ஹச்சாவை அவர்கள் கண்ட அன்று ஜெனரல் விக்டோரியோ மெடினா சுட்டுக்கொல்லப்பட்டார். கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியாவின் ஆட்களை அவரைப் புரட்சிப்படையின் அடுத்த கரீபிய கடற்கரை தளபதியாக பிரகடனம் செய்து அவருக்கு ஜெனரல் பட்ட உயர்வு அளித்தார்கள். கன்சர்வேட்டிவ் மிதவாதக்கட்சி ஆட்சி தொடரும் வரை பதவி உயர்வையோ தாம் ஜெனரல் என்று விளிக்கப்படுவதையோ ஏற்கமுடியாதென மறுத்த அவர் தலைமை பொறுப்பேற்ற புரட்சிகர யுத்தத்தை வழிநடத்த மட்டும் மனம் ஒப்பினார். மூன்றே மாத இடைவெளியில் அவர்கள் ஒரு ஆயிரம் வீரர்களை ஒன்று திரட்டி படை பலம் பெருமளவு பெற்றிருந்தார்கள். ஆண்டிலஸின் சிறு சிறு தீவுகளிலிருந்து புறப்பட்டு அவர்கள் காபோடிலா வெலா வரை வந்துவிட்டார்கள் என்பதே அடுத்து அவர்களைப்பற்றி அறியப்பட்டிருந்த செய்தி ஆகும். அரசாங்கத்திலிருந்தோ, கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா இறந்து போய விட்டார் எனும் செய்தி நாடு முழுவதும் கம்பி இல்லாத் தந்தி முறையில் பெருமகிழ்ச்சி ஆரவாரிப்போடு பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் இரண்டே நாட்களில் முந்தைய தந்தை திரும்பப் பெறப்பட்டு வேறொரு புதிய தந்தை தெற்குச் சமவெளியில் ஒரு புதிய கலகம் வெடித்து இராணுவ புரட்சி நடப்பதை ஊர்ஜிதம் செய்தது. ஒரே சமயத்தில் எங்கும் இருப்பார் என கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியாவைக்குறித்து ஒரு புராணிக்கூற்று அப்போது ஏற்பட்டதுதான். அடுத்தடுத்த ஆனால் ஒன்றுக்கு ஒன்று முரணான அவரைப் பற்றிய தகவல்கள் அரசால் அறிவிக்கப்பட்டன. வில்லநுயேவாவில் வெற்றி அடைந்து, குவாக்காமயாலில் தோற்கடிக்கப்பட்டு, மோட்டிலோனின் இந்திய பழங்குடியினரால் சமையலில் கலந்து விழுங்கப்பட்ட சதுப்புநில கிராமம் ஒன்றியல் இறந்துபோய் திரும்பவும் உருமித்தாவில் ஆயுதங்களுடன் எழுச்சியை முன் நடத்தினார் அவர். மகாசபையில் இடம் கேட்டு அரசோடு அச்சமயம் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருந்த லிபரல் கட்சித் தலைவர்களோ அவரை தங்கள் கட்சி சாராதவர் என்றும் சாகசப்பிரியர் என்றும் முத்திரை குத்தினார்கள். தேசிய அரசோ அவரை ஒரு கொள்ளைக்கூட்டத்தலைவர் என இனவகைப்படுத்தி அவர் தலைக்கு ஐந்தாயிரம் பெஸாக்குகள் விலை வைத்தது. பதினாறு தோல்விகளுக்கப்பால் கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா காஜிராவை விட்டு நன்கு ஆயுதம் தரித்த இரண்டாயிரம் இந்திய வம்சாவழியினருடனும்

பயிற்சிபெற்ற கோட்டைக்காவல் எதிர்த்து புறப்பட்டார். அது திடீர்தாக்குதலில் பிடித்தப்பட்ட ரியோ ஹாச்சாவை அவரதுபடை கைப்பற்றியது. அங்கே தனது புரட்சி அரசின் தலைமையகத்தை நிர்மாணித்த அவர் அரசை எதிர்த்து முழு யுத்தத்தை பிரகடனமும் செய்தார். கிழக்கத்திய எல்லைப்புறத்திலிருந்து தனது படைகளை திருப்பப்பெறாவிட்டால் கர்னல் ஜெரினெல்டோ மார்க்வெஸ்ஸை சுட்டுக் கொல்லப்போவதாக வந்த தந்தி வழி மிரட்டலே அரசிடமிருந்து அவருக்கு வந்த முதல் எதிர்வினையாக இருந்தது. நாற்பத்தெட்டுமணிநேர கெடுவை நிர்ணயித்து அரசு மெக்காண்டோவிலிருந்து கொடுத்திருந்த அந்தத் தந்தியை இலியோடு பதறியபடியே அப்போதைய அவரது நிர்வாகத்துறையை தலைமையேற்றிருந்த காப்டன் ரோக் கார்னிஸெரோ அவரிடம் எடுத்துச் சென்றபோது எதிர்ப்பார்ப்பிற்கு மாறாக அவர் ஏக மகிழ்ச்சியாரவாரத்தோடு அதை வாசித்தார்.

ஆஹா எவ்வளவு அற்புதம்? அவர் அதிசயித்தார். இப்போது மெக்காண்டோவில் ஒரு தந்தி அலுவலகம் நமக்குள்ளது.

அவரது பதில் நிச்சயிக்கப்பட்ட முடிவாக இருந்தது. மூன்று மாதங்களில் தனது தலைமையகத்தை மெக்காண்டோவில் நிர்மாணிக்க அவர் முடிவுடனிருந்தார். அச்சமயம் கர்னல் ஜெரினெல்டோ மார்க்வெஸ்ஸை அவர் உயிருடன் காணவில்லையெனில் பிடிபட்டுள்ள அனைத்து யுத்த கைதிகளையும் அதில் ஜெனரல்கள் உட்பட சுட்டுக்கொல்ல இருப்பதாகவும் யுத்தமெங்கும் அதையே செய்திட தனது படை முழுவதற்கும் உத்திரவிடப்போவதாகவும் அரசுக்கு தாக்கீது அனுப்பினார். மூன்று மாதங்கள் கழித்து வெற்றி வாகைச்சூடி அவர் மெக்காண்டோவிற்குள் நுழைந்த போது சதுப்பு நிலத்தை நோக்கிய சாலையில் அவரை வரவேற்று முதலில் அணைத்துக்கொண்டது கர்னல் ஜெரினெல்டோ மார்க்வெஸ்தான்.

வீடு குழந்தைகளால் நிரம்பியிருந்தது. சாந்தாசோபியா டிலா பை டாட்டையும் அவளது மூத்த மகள் மற்றும் அடுத்து அர்காடியோ சுட்டுக்கொல்லப்பட்ட ஐந்து மாதங்கள் கழித்து பிறந்த இரட்டை குழந்தைகளோடு உர்சுலா வீட்டிற்குள் சேர்ந்திருந்தாள். கொலையுண்டவனின் கடைசி ஆசைக்கு மாறாக அவள் பெண் குழந்தைக்கு ரெமெடியாஸ் என்ற பெயரை வைத்தாள். அர்காடியோ நிஜத்தில் இதைத்தான் விரும்பி இருப்பான். அவள் கூறிக்கொண்டாள். நாம் அவரை உர்சுலா என்றழைக்கப்போவதில்லை. அந்தப்பெயரில் ஒருவர் மிக அதிக சங்கடங்களை அனுபவிப்பதை காண்கிறோம். இரட்டையர்கள் ஜோஸ் அர்காடியோ செகுண்டோ என்றும் அவ்ரெலியானோ செகுண்டோ என்றும் பெயரிடப்பட்டார்கள். அமராந்தா அவர்கள் அனைவரையுமே பேணிடத் தொடங்கினாள். பக்கத்துக் குடும்பங்களின் குழந்தைகளையும் சேர்த்துக் கொண்டு வாழ்வறையில் மர நாற்காலிகள் போடவைத்து ஒரு மழலையர் பள்ளியை அவள் நிர்மாணித்தாள். கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா வானவேடிக்கைகளும் வெற்றி மணி ஓசையுமாய் ஊர் திரும்பியபோது குழந்தைகள் சேர்ந்திசையிடலோடு அவரை வீட்டில் வரவேற்றனர். தனது தாத்தாவைப் போலவே ஆஜானுபாகுவாய் வளர்ந்திருந்த அவ்ரெலியானோ ஜோஸ், ஒரு புரட்சி இயக்க அதிகாரி போல உடையுடுத்தி இராணுவமரியாதையை அவருக்கு வழங்கினான்.

ஆனால் எல்லாமே நல்ல செய்தியாக இருக்கவில்லை. கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா வெளியேறி ஓராண்டானபோது ஜோஸ் அர்காடியோவும் ரிபெக்கவும், சுட்டுக்கொள்ளப்பட்ட அர்காடியோ கட்டிய புதிய வீட்டிற்கு குடிபுகுந்தனர். கர்னலின் மரண தண்டனையை நிறைவேற்ற விடாமல் ஜோஸ் அர்காடியோ தடுத்து நிறுத்தியதை யாருமே அறிந்திருக்கவில்லை. மைனதானத்தின் மிகஅற்புதமான ஒரு மூலையில் இருந்த அந்த வீடு பிரம்மாண்டமான மூன்று செவ்விதழ் பறவைகளின் பெரிகூடுகளுடனிருந்த வாதுமை மரத்தின் நிழலில் விருந்திகளுக்கான பிரத்யேக பெரியநுழைவாயிலும், ஒளி வீசுவென்றே வடிவமைக்கப்பட்ட நான்கு சிறப்பு ஜன்னல்களும் கொண்ட அங்கு அவர்கள் விருந்தோம்பலுடன் கூடிய தன் இல்லத்தை ஸ்தாபித்தனர். ரிபெக்காவின் பழையத் தோழிகள் அவர்களுக்குள்ளும் இன்னும் மணமாகாதிருந்த மாஸ்கோட் சகோதரிகள் நான்கு பேர் முன்தாழ்வார மலர்செடிகள் ஊடாக முன்பு நின்றுபோன பூத்தையல் வகுப்புகளை திரும்புவம் அவளோடு தொடங்கி இருந்தனர்.

ஜோஸ் அர்காடியோ தான் சட்ட விரோதமாய் கையகலப்படுத்திய நிலங்களின் வழியே வருமானத்தை கன்ஸர்வேடிவ் மிதவாத அரசின் ஆதரவோடு தொடர்ந்து வசூலித்தே வந்தான். ஒவ்வொருநாள் மதியமும் தனது குதிரையில் இரட்டைக்குழல் துப்பாகியுடனும், குதிரை இருக்கைகளில் சேர்த்துக் கட்டிய செத்த முயல் கொத்துடனும் வேட்டை நாய்கள் பின்தொடர தென்பட்டே வந்தான். ஒரு செப்டம்பர் நாளின் மதியத்தில் புயல் எச்சரிக்கை காரணமாக ஜோஸ் அர்காடியோ வழக்கத்தைவிட முன்னதாக திரும்பி இருந்தான். உணவறையிலிருந்த ரிபெக்காவுக்கு வழக்கமாய் தன் வருகையை உணர்த்தும் ஒரு ஹாய் யை உதிர்த்து வெளிவராண்டாவில் நாய்களை கட்டிவிட்டு, சமையலறையில் பிறகு பதப்படுத்தி உட்பிட்டுக் கொள்ளலாமென்று முயல்களை தொங்கவிட்டு பின் உடைமாற்றிட படுக்கை அறைக்கு சென்றான். தனது கணவன் படுக்கை அறைக்கு சென்று கதவு சாத்திக்கொண்ட போதுதான் குளியலைறைக்குள் இருந்ததால் தனக்கு எதுவுமே கேட்கவில்லை என்று ரிபெக்கா பின்னர் கூறினாள். ஆனால் நம்ப முடியாதளவு அது சற்று கடினமான காரணமாயிருந்தது, என்றாலும் வேறு நியாய வாதங்கள் இருக்கவில்லை ஏனெனில் தன்னை முற்றிலும் மகிழ்ச்சியாக வைத்திருந்த ஒரு மனிதனை ரிபெக்கா சுட்டுக்கொன்றிட ஆழமான நோக்கம் ஸ்தாபிப்பட வாய்ப்பிருக்கவில்லை. மெக்காண்டோவில் கடைசி வரையில் துலக்கப்படாமலேயே இருந்த ஒரே மர்மம் அதுதான். உண்மையில் படுக்கை அறைக்குள் நுழைந்து ஜோஸ்கர்காடியோ கதவை தளிட்ட நொடியில் ஒரு துப்பாக்கி சுடும் சப்தம் வீடெங்கும் அதிர்ந்தது. ரத்தத்தின் நீரொழுக்கு கதவிடுக்கின் வழி தரையில் வெளியேறி, தாழ்வாறையை வழிந்தோடித்தாவி, வாசல் கடந்து தெருவில் இறங்கி, நேர்கோட்டு வழி சிற்ற மேற்கூரைகளில் தாவி, படிகளில் ஏறி, புதர்களையும் தாண்டி துரக்கியர் தெருவைக் கடந்து ஒரு முனையில் வலதுபுரமாகவும், மற்றொரு தெருவின் முனையில் இடது புரமாகவும் கடந்து புயெண்டியா இல்லத்தை நோக்கி செங்கோணமாய் திரும்பி மூடிய கதவு வழி நுழைந்து வரவேற்பறையில் ஓடி திரை சீலைகளை கறைபடாதிருக்க வளைந்து வளைந்து சுவரில் வழிந்தோடி மற்றொரு வாழ்வரையைக் கடந்து உணவு மேஜையில் படாது பெரிய வளைவுப் பாதையாய் பெகோனிய மலர் செடித்



தோட்டமும்தாண்டி, அவ்ரெலியானோ ஜோஸ்சுக்கு கணக்கு பாடம் நடத்திக்கொண்டிருந்த அமரந்தாவுக்கு தெரியாமல் அவளது நாற்காலி அடிவழியே கடந்து உக்கிராணம் வழியே உள்ளோடி சமையல் கூடத்திற்கு ஊர்சுலா மெதுரொட்டி தயார் செய்ய முப்பத்தியாறு முட்டைகளை ஒவ்வொன்றாய் உடைக்க தயாரான இடத்திற்கு வந்து நின்றது.

ஆண்டவரே புனித மாதா ஊர்சுலா கத்தினாள். வழிந்தோடிய ரத்தத்தின் பாதைவழியே அது எங்கிருந்து வருகிறதென உணர்ந்தறிய அதை பின்தொடர்ந்து மலர்செடி சிறுத்தோட்டத்தின் முன்னமர்ந்து வாய்ப்பாடு ஒப்புவித்துக் ொகண்டிருந்த அவ்ரெலியானோ ஜோஸ் மூன்றும் மூன்றும் ஆறு ஆறும் மூன்றும் ஒன்பது, கடந்து உணவரையைத்தாண்டி வாழ்வறைகளை கடந்து நேராக சாலையில் கால்பதித்து முதலில் வலப்புரமாகவும் பின் இடப்புரமாகவும் திரும்பி துருக்கியர் தெ கடந்து தான் இன்னமும் ரொட்டி சுடும் சமையல் மேலாடையும் விட்டு வார் செறுப்பும் அணிந்து போவதைக்கூட மறந்து சதுக்கம் கடந்து, தான் ஒரு போதும் நுழையாத ஒரு வீட்டின் வாசற்கதவைக் கடந்து, படுக்கை அறைக் கதவை தள்ளித்திறந்து உள்ளிருந்து வீசிய துப்பாகி ரவை தீய்ந்த நெடியால் எறக்குறைய மூச்சு திணறி ஜோஸ் அர்காடியோ தான் கழட்டிப்போட்ட கால் சாக்ஸின் முகம் பொத்தி செத்துக்கிடப்பதையும், தன்னைத் தேடி வந்த ரத்தம் தன் பயணத்தை தொடங்கிய இடத்தையும் காண்பாள். அது அவனது கலது காதிலிருந்து வழிந்து ஓடி நின்றுவிட்டிருந்தது. அவர்களால் அவனது உடம்பி வேறு எந்த காயத்தையும் காணமுடியாதது மட்டுமல்ல. ஆயுதம் எது என்பதை கூடி நிச்சயித்துக் கூற முடியவில்லை. அத்தோடு உடம்பிலிருந்து அந்த ரவை தீய்ந்த வாடையை அப்புறப்படுத்தவும் அவர்களால் இயலாது போனது. முதலில் அவனை அவர்கள் மூன்றுமுறை சோப்பாலும் தேய்க்கு நாறினாலும் குளிப்பாட்டி பின்னொருமுறை புளிக்காடி திரவத்தை விட்டு கழுவியும் பார்த்தார்கள். எலுமிச்சையும் சாம்பலும் கலந்து தேய்த்து குளிப்பாட்டியும் ஒரேயடியாக

சோப்புக்கார கரைசலிலேயே ஆறுமணிநேரம் ஊறப்போட்டும் வைத்தார்கள். பின் பச்சைகுத்தப்பட்ட உடலின் தோல் வர்ணங்களில் சாயம் பிளந்து கொட்டும் படியால் சுரண்டி விட்டார்கள். மௌகு, ஜீரக விதைகள் மற்றும் புன்னைத்தழைகளை இட்டு ஒரு நாள் முழுவதும் வெதுவெதுப்பான நீரில் அவனைக் கொதிக்கவிட அவர்கள் முடிவெடுத்த போது அவனது உடல் முற்றிலும அழுகலெடுத்துவிட் டதால் வெறுத்துப்போய் அடக்கம் செய்தார்கள். காற்று உட்புமுடியாத அளவு இரவாத ஆற்றல் மிக்க தொரு சிறப்பான ஏழரை அடி நீளமும் நாளடி அகலமும் கொண்ட உள்ளே இரும்புச்சட்டங்களால் வரயேற்றப்பட்ட ஒரு சவப்பெட்டியில் இரும்பு திருகாணிகளால் இழுத்து அறையப்பட்டு முற்றிலும் அடைக்கப்பட்டும், இறுதி ஊர்வலம் சென்று பாதைகளில் கூட உள்ளிருந்து தீய்ந்த துப்பாக்கி ரவை வாடை வீசிக்கொண்டுதான் இருந்தது. தனது குடல்பெருத்து விரைத்தபடி இருந்த அருட்தந்தை நிக்கானெர் அவனுக்கு ஆசிர்வாதம் படுக்கையிலிருந்தபடி கட்டளையிட்டார். மாதங்கள் கடந்த போது அவர்கள் கல்லறையை சுற்றி சுவர் எழுப்பி நடுவே மரத்துளையும் நீருடன் கலக்காத சுணணாம்பு கற்களைமிட்டு எவ்வளவோ வலுயேற்றியும் குண்டுத்தூள் தீய்ந்த வாடை ஆண்டுகள் பலவாய் அடித்துக் கொண்டே இருந்து பின்நாட்களில் வாழைப்பழத்தொழிற்சாலையின் பொறியாளர்கள் கல்லறையை சிமெண்ட் கான்கிரீட்டால் முற்றிலும் மூடும் போதுதான் போயிற்று. ஜோஸ் அர்காடியோவின் உடலை ஊர்வலமாய் அவர்கள் எடுத்துச் சென்ற மறுநிமிடம் ரிபெக்கா தன்னை வீட்டிற்குள் உயிரோடு புதைத்துக் கொண்டாள். வீட்டை முற்றிலும அடைத்து வைத்த அவளது பேரமைதியை கெட்டிப்பட்டு முற்றிய அந்தத் தனிமையை புவியின் எந்த சபலத்தாலும உடைக்கமுடிந்ததில்லை. மிகவும் வயதான பிறகு ஒரே ஒருமுறை தெருவழியாய் பழம் வெள்ளிநிற காலணியும், சிறுமலர்தலைக்குல்லாயும் அணிந்து அவள் சென்று அன்று சாலைகளை அந்த அலைந்து திரிந்த யூதமகள் கடந்ததன் விளைவு பயங்கரமானதாயிருந்தது. வெப்ப வீச்சின் சீற்றம் தாங்காது, பறவைகள் படுக்கையறை காற்றாளிகளை உடைத்துக்கொண்டு உள்ளே வந்து விழுந்து இறந்து போயின. அவளை அவளது வீட்டுக் கதவை உடைக்க முயன்ற ஒரு கொள்ளையனை அவள் சட்டுக்கொன்று அன்றுதான் உயிரோடு சிலர் கடைசியாக பார்த்தனர். அந்தரங்கசேவகியும் வேலைக்காரியுமான அர்ஜென்டினாவைத்தவிர வேறு யாருமே அவளோடு எத்தகைய தொடர்பும் வைத்திருக்கவில்லை. தனது ஒன்றுவிட்ட சகோதரன் அவள் அழைத்துக்கொண்ட பிஷப்பிற்கு கடிதங்கள் அவள் எழுத வருவதை மட்டும் ஒரு சமயம் கண்டுபிடித்தார்கள். ஆனால் அப்போது கூட அவள் பதில் கடிதங்கள் பெற்றதாக யாரும் சொல்ல முடியவில்லை. நகரம் அவளை மறந்து போனது.

வெற்றிகரமான தனது ஊர் திரும்பல் நடந்த பின்னும் கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா நடந்து கொண்டிருந்தவைகளால் ரொம்ப உற்சாகம் ஏதும் அடையமுடியவில்லை. அரசுப்படைகள் எவ்வித எதிர்ப்பையும் காட்டாமல் பின்வாங்கி - எவ்வித சேதமும் இன்றி ஏதோ வெற்றிவாகை சூடுவதான மாயையை லிபரல் ஆதரவாளர்களுக்கு அளித்துக் கொண்டிருந்தாலும், புரட்சிவாதிகளுக்கு உண்மை தெரியவே செய்தது. அதிலும் கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியாவோ அவர்கள் அனைவரையும் விட அதிகமாகவே உண்மையை அறிந்தவராக இருந்தார். தனக்குக் கீழே அவ்வேளையில் சுமார்

ஐந்தாயிரம் பேரை தனது கட்டளைக்குக் கீழ் வைத்திருந்து இரண்டு கடலோர மாநிலங்களை தனது ஆட்சிக்குக் கீழே கொண்டு வந்திருந்த போதிலும் தான் ஒரு குறிப்பிட்ட கடல் எல்லைக்குள் தள்ளப்பட்டிருப்பதோடு மிகவும் குழப்பமான சூழலில் சிக்க இருப்பதையும் உணர்ந்தார். அரசுப் படை குண்டு வீச்சில் சிதறிப்போன தேவாலயத்தை மறுகட்டுமானம் செய்ய அவர் உத்திரவு இட்ட போது தனது நோய்ப்படுக்கையிலிருந்தபடியே அருட்தந்தை நிக்கனார், இது ரொம்ப வேடிக்கையாக உள்ளது. கிருஸ்துமீதான நம்பிக்கையின் காவலாளிகள் தேவாலயத்தைத் தகர்க்க கதை அதன் எதிர்ப்பாளர்கள் கட்டிமுடிக்க உத்திரவிடுகிறார்கள் என கருத்துரைத்தார். ஏதாவது ஒரு ஓட்டை வழியே தப்பிட யோசனையிட்டப்படியே கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா, தந்தி அலுவலகத்தில் முழுநேரமும் இருந்தபடி ஏனைய நகரங்களிலிருந்து போர் தளபதிகளோடு அளவளாவியபடியே இருந்தார். ஒவ்வொரு முறையும் அவர் உறுதியானதொரு தீர்மானத்திற்கு வந்தார். யுத்தம் வெற்றித் தோல்வியற்ற தேக்கமான முட்டுக்கட்டை நிலைக்கு வந்துவிட்டது என்பதே அது.

லிபரல் படையின் புதியபுதிய வெற்றிகள் மகிழ்வாரவாரத்தோடு பிரகடனங்களாக அறிவிக்கப்பட்டு கொண்டாடப்பட்ட போதெல்லாம் அவரால் வெற்றி கொண்ட இடங்களை வரைபடங்களில் கண்டு உணர முடிந்தது. படைகள் உண்மையில் காடுகளை ஊடுருவிக்கொண்டிருந்தன. உண்மையான திசைக்கு எதிர்திசையில் தங்களை கொசுக்களிடமிருந்து மலேரியாக்காய்ச்சலிலிருந்து போராடி மீட்ட வண்ணம் படை அவதிப்படுவதை அவரால் காணமுடிந்தது. நாம் நேரத்தை வீணாக்கி வருகிறோம். அவர் தனது அதிகாரிகளிடம் புகார் போல இறைவன் கட்சிலுள்ள வேசிமகன்கள், மகாசபையில் இடம் கேட்டு பிச்சை எடுத்துக்கொண்டிருக்கறாமோ. நேரத்தை வீணடித்து வருகிறோம். இரவில் தனது தொங்கு படுக்கையில் முன்பு மரணத்திற்காக காத்திருந்த அதே அறையில் மல்லாந்தபடி, தங்கள் கருப்பு பெருங்கோட்டில் வழக்குரைஞர்கள் ஜனாதிபதி அரண்மனையிலிருந்து அதிகாலை பனிக்குளிரில் காதுகளையெல்லாம் மேல்கோட் காலர்கள் மூடிட அவர்கள் நடுக்கத்துடன் வெளியேறி காப்பிக் கிளப்பு கடைகளில் தங்களை அவசரமாய் அடைத்துக்கொண்டு, கைகளை தேய்த்து சூடேற்றி கிசுகிசுத்தவண்ணம் தங்களுக்குள் முடிந்த சமரசக் கூடத்தின் போது குடியரசு தலைவர் ஆமென சொல் கையில் அர்த்தப்படுத்தியது என்ன என்பதையும் நோ என மறுத்த போது அர்த்தப்படுத்தியது என்ன என்பதையும் குறித்த ஊகங்களை பகிர்ந்து, அவர் முற்றிலும் எதிர்மறையாக சிந்தித்து எதையோ வேறு ஒன்றை கூறியதை பற்றிக் கூட கற்பனையில் அர்த்தப்படுத்தியதை அதை என்று நிதானமாய் விவாதிப்பதை, தனது தொன்னூற்றி அய்ந்து டிகிரி வெப்பச் சூழலில் கட்டைக்கொசுக்களை விரட்டிய வண்ணம் அவர் சிந்தையில் கண்டு மனம் வெறுத்து, விரைவில் ஒரு நாள் தனது படையை கடலில் குதிக்கவும் உத்திரவிட வேண்டி இருக்குமோ எனும் பெரும் அச்சம் ஏற்பட்டு கலங்குவார்.

இது போன்று முடிவுற்று தொடர்ந்ததொரு உறுதியின்மை நிலவிய காலத்தில் ஒரு நாள் இரவு, பிலெர்டெனரா வீரர்களுடன் முன்தாழ்வாரத்தில் பாடலிசைத்துக் கொண்டிருக்க அவளை அழைத்து சீட்டாட்ட சீட்டுகள் வழி எதிர்காலத்தை கணித்துக் கூற அவர் கேட்டுக்கொண்டார். உன்வாய் விஷயத்தில்

நீ மிகவும் எச்சரிக்கையாக இரு என்பது மட்டுமே பிலெர்டெனரா சீட்டாட்டா சீட்டுக்களை இணைத்தும் சீட்டை பொறுக்கியும் மீன்று முறை முயன்று கூறினாள். இதற்கு என்ன அர்த்தம் என்பதை நான் அறியேன். ஆனால் உன் வாய் விஷயத்தில் நீ எச்சரிக்கையாக இரு என்பதுதான் வந்துள்ள முடிவான சிமிக்ஞை இரண்டு நாட்கள் கழித்து யாரோ யாரிடமிருந்தோ ஒரு சிப்பந்தியிடம் ஒரு குவளைக் கருப்பு காப்பியை ஒப்படைக்க அதை அந்த சிப்பந்தி வேறொரு சிப்பந்தியிடம் கைமாற்றிட அதை பல வேறொரு சிப்பந்திகளில் ஒரு வேறாது சிப்பந்தி வேறொரு சிப்பந்தியிடம் கைமாற்ற கைமாறி மாறி அது இறுதியாய் கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியாவின் அலுவலகத்திற்கு வேறொரு சிப்பந்தியின் மூலம் வந்து சேர்ந்தது. அவர் காப்பி ஏதும் கேட்கவில்லை என்றாலும் அது அங்கிருந்ததால் அதை கர்னல் எடுத்துக் குடித்தார். அதில் இரண்டு மடக்கு, ஒரு குதிரையை கொல்லப்போவதுமான எட்டிக்காய் விஷம் கலக்கப்பட்டிருந்தது. அவரை அவர்கள் வீட்டிற்கு தூக்கிச்சென்றபோது அவரை விரைத்து விளைவு போல குருகி, நாக்கு பற்களுக்கிடையே சிக்கிட பேச்சற்று இருந்தார். அவர் மீதான மரணத்தை எதிர்த்து ஊர்சுலா போராடினாள். வாந்தியைத் துண்டும் கஷாயங்கள் கொடுத்து அவரது வயிறை காலி செய்து அவரை வெப்பமூட்டிய போர்வைகளால் சுற்றி வெள்ளை முட்டைகரு மட்டுமே உணவாக இரண்டு நாட்களில் அவரது முற்றிலும் ரணமாகிப்போன உடம்பு தனது இயல்பான வெப்பநிலை அடையும் வரை அளித்தாள். நான்காம் நாள் அவர் ஆபத்தான நிலையிலிருந்து முற்றிலும் மீண்டிருந்தார். அவரது விருப்பத்திற்கு எதிராக ஊர்சுலாவும் அவரது அந்தரங்க காரியதரிசிகளும் நச்சரித்தால் அவர் மேலும் ஒரு வாரம் படுக்கையில் கிடந்தார். அப்போதுதான் அவர் தனது கவிதைகள் இன்னமும் எரிக்கப்படவில்லை என்பதை கண்டார். நான் அவசரப்படவிரும்பவில்லை. ஊர்சுலா விளக்கமளித்தாள். அன்று இரவு அடுப்பை மூட்டியவேளையில் நான் எதற்கும் அவர்கள் உடலை கொண்டுவரட்டுமே என்று நினைத்து தயக்கமுற்றேன். நோயிலிருந்து படிப்படியாக நலம்பெற்று ரெமெடியாஸின் பழுதடையா பழம் பொம்மைகளுக்கு நடுவே படுத்திருந்த அந்த நாட்களில் கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா.. தாம் வாழ்ந்திருந்த அந்த நாட்களில் கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா தாம் வாழ்வாங்கு வாழ்ந்த காலத்து எண்ண ஓட்டங்களை கவிதைகளை வாசித்தன் வழியே மீண்டிடவைத்தார். மீண்டும் அவர் எழுதத் தொடங்கினார். நீண்ட நீண்ட மணிநேரங்கள் எதிர்காலமேஇல்லாது நீண்ட யுத்தமெனும் அதிசயக் கயிற்றில் தன்னைச் சமனில் சாகச நடைக்காரனமாக பாவித்தபடி மரணப்பெருங்கடலின் கரையில்தான் பெற்ற அனுபவங்களை இசைசொற்பிரவாகமாய் புனைந்தார். பிறகு தன் எண்ண ஓட்டங்களை முன்னிருந்து பின்னும் பின்னிருந்து முன்னுமாய் பரிசோதனைக்கு உட்படுத்தும்படியாக தெளிவும் அடைந்தார்.

ஒரு இரவு அவர் கர்னல் ஜெரினெல்டோ மார்க்வெஸ்ஸைக் கேட்டார். சொல் என் நீண்டகால நண்பனே நீ ஏன் சண்டையிடுகிறாய்?

வேறு என்ன காரணம் இருக்க முடியும்? கர்னர் ஜெரினெல்டோ மார்க்வெஸ் ப்திலளித்தார். மாபெரும் லிபரல் கட்சிக்காகத்தான்.

நீ அதிர்ஷ்சாலி ஏனென்றுந்துள்ளாய். அவர் பதிலளித்தார். என்னைப் பொறுத்தவரை, இப்போதுதான் கண்டுணர்ந்தேன். நான் பீத்த பெருமைக்காக யுத்தத்தில் இருக்கிறேன்.

அது கெடுதல் கர்னல் ஜெரினெல்டோ மார்க்வெஸ் சொன்னார்.

அவரது அச்சத்தையும் பதற்றத்தையும் கண்டு கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியாவிற்கு ஆர்வம் அதிகரித்தது. உண்மைதான் அவர் சொன்னார் எப்படியானாலும் அது என் போரிடுகிறோம் என்பதையே அறியான ஒரு நிலையை விடப்பரவாயில்லை. நேராக தன் நண்பனின் விழிகளை இப்போது அவர் உற்றுநோக்கினார். ஒரு புன்னகையுடன்

அதைவிட உன்னைப் போல யாருக்குமே எந்த பயனும் அற்ற ஒன்றை முன் வைத்து போரிடுவதை விடவும் கூட.

அவரது செறுக்கும் இறுமாப்பும், நாட்டின் மத்தியப் பகுதிகளில் தலைமையேற்று போரிட்டவர்களோடு தொடர்பு கொள்ள அவரை தடுத்தன. அதிலும் அவர் குறித்த கொச்சையான விமர்சனங்களை அவர் ஒரு கொள்ளைத்தலைவர் எனும் முத்திரையை கட்சி விலக்கிக் கொள்ளும்வரை, அந்த மனத்தக்கயத்தை மட்டும் விட்டொழித்துவிட்டால் போதும், தன்னால் யுத்தத்தின் சூழ்கொள்வட்டத்திற்குள்ளேயே நுழைந்து அதை கைப்பற்றவும் முடியுமென்று அவருக்கே நன்றாகத் தெரியும். உடல்நலம் தேற வேண்டிய ஓய்விலிருந்த காலம் அவருக்கு திருப்பித்தாக்கிட போதுமான அவகாசம் அளித்தது. பின் அதே அவகாசம் அவருக்கு, தன் புதைத்துப் பாதுகாக்கப்பட்ட பரம்பரை தங்ககாசுகளையும் சேமித்த பெருந்தொகையையும் தர ஊர்சுலாவின் சம்மதத்தையும் பெற உதவியது. அவர் கர்னல் ஜெரினெல்டோ மார்க்வெஸ்ஸை மெக்காண்டோவின் ராணுவ மற்றும் சிவில் தலைவராய் பதவியேற்கவைத்து பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு நாட்டின் உட்பகுதி புரட்சிப்படை தளபதிகளோடு தொடர்பேற்படுத்திக்கொள்ள சென்றுவிட்டார்.

கர்னல் ஜெரினெல்டோ மார்க்வெஸ், கர்னல் அக்ரெலியானோ புயெண்டியாவுக்கு மிகவும் நெருக்கமானவர் மட்டுமல்ல. ஊர்சுலா தன் குடும்பத்தின் ஒரு உறுப்பினராகவே கருதி அவரை வரவேற்றாள். மிகுந்த மிதுவான சுபாவமும், வளைந்து கொடுக்க முடியாத பிடிவாதமுமாய் அவர் அரசு நடத்துவதை காட்டிலும் யுத்தத்திற்கே பொருத்தமானவர். அவரது அரசியல் ஆலோசகர்கள் அவரை மிக எளிதில் கோட்பாட்டு ரீதியில் கூட பல சிக்கல்களில் அடுத்தடுத்து சிக்கவைத்து வேடிக்கை பார்த்தனர். ஆனால் கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா கனவு கண்ட, தன்னை தங்க மீன்ரசவாதத்தில் மீண்டும் தள்ளி. வயது முதிர்ந்து இறந்திடும் நிம்மதியைப் பெற அங்கே மெக்காண்டோவில் ஒரு கிராமப்புரத்தில் அமைதிப் பேணிவதில் கர்னல் ஜெரினெல்டோ மார்க்வெஸ் வெற்றி அடைந்தார். தன் பெற்றோர்களின் வீட்டிலேயே தொடர்ந்து வசித்து வந்தாலும், வாரம் இரண்டு மூன்று முறையேனும் ஊர்சுலாவுடன் மதிய உணவு எடுத்துக் கொள்ளத் தொடங்கினார். பீரங்கி போன்ற சுடுபடைகலன்கள் மீது அவ்ரெலியானோ ஜோஸ்ஸை கவனங்கொள்ள வைத்து இராணுவ பயிற்சியிலும் ஈடுபத்தி முகாமிற்கு கூட்டிச் சென்று அங்கே நாட்கணக்கில் அனுபவ கல்வி புகட்டினார். இவை அனைத்தையும் ஊர்சுலாவின் முழு அனுமதியுடன் அவன் அவ்ரெலியானோ ஜோஸ் மனிதனாகிட என செய்தார். வெகுகாலங்களுக்கு முன்பு கிட்டத்தட்ட சிறுவனாக இருந்தபோது ஜெரினெல்டோ மார்க்வெஸ் அமரந்தாவிடம் தனது காதலை அறிவித்திருந்தார். அப்போது அவருக்கு இருந்த பியெட்ரோ இரெஸ்பி எனும் ஒரே மயக்க நிலையில்

அவரைப்பார்த்து அமரந்தா எள்ளி நகையாடினாள். ஜெரினெல்டோ மார்க்வெஸ் காத்திருந்தார். தான் சிறையில் இருந்த காலத்தில், வெகுநாள் கழித்து ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு டஜன் பருத்திக்கைக்குட்டைகள், தனது தந்தை பெயரின் முதலெழுத்தை பொறித்து தயாரித்து தருமாறு அமரந்தாவிற்கு அவர் செய்தி அனுப்பி பணத்தையும் சேர்த்தே கொடுத்தனுப்பியிருந்தார். வாரம் ஒன்றான போது அமரந்தா தான் தயாரித்த கைக்குட்டைகளை பின்வந்து பணத்தையும் திரும்ப கொடுத்திட அவர்கள் பணிக்கணக்கில் பழங்கதைகளை பேசிய வண்ணமாயிருந்தனர். வெளியே வரும் போது நான் உன்னை மணம் முடிப்பேன். ஜெரினெல்டோ மார்க்வெஸ் அவள் வெளியேறும்போது அவளிடம் சொன்னார். அப்போது சிரித்தாலும் குழந்தைகளுக்கு வாசிக்கக் கற்றளித்தபோதும் இதர சமயங்களிலும் அவரையே நினைத்துருகி, தனக்கு தன் இளம்பருவ பியெட்ரோ கிரெஸ்பி காலத்திய மனக்கிரக்கம் அரும்புவதை கண்டாள். கைதிகளை சந்திக்க உறவினர்கள் கூடும் சனிக்கிழமைகளில் அவள் ஜெரினெல்டோ மார்க்வெஸ்ஸின் வீட்டருகே காத்திருந்து அவரது பெற்றோர்களோடு அவரை சந்திக்க சென்றுவர இணைவாள். அந்த சனிக்கிழமைகளில் ஒன்றில், சமையலறையில், அடுப்பு சுடுவாணலியிலிருந்து பிஸ்கட் ரோட்டிகள் சுடச்சுட வெளிவந்து கொண்டிருக்கையில் அங்கு வந்து மிக நேர்த்தியானவைகளை அன்றைய சந்திப்பின்போது ஜெரினெல்டோ மார்க்வெஸ்ஸிடம் தர அமரந்தா நின்றது கண்டு ஊர்சுலாவே அசந்து போனாள். அவள் கையில் அழகாக பூவேலைப்பாடுகள் அவளாகவே செய்திருந்த புதிய கைக்குட்டைகள் இருந்தன.

அவனை மணந்துகொள் அவள் சொன்னாள். அவனைப்போல ஒருவனை திரும்பவும் தேடுவது அவ்வளவு எளிதல்ல.

உடனடியாக அமரந்தாவின் முகமேமாறி வெறுப்போடு பதிலுரைத்ததை கண்டாள்.

நான் ஒன்றும் ஆண்களைத் தேடி வேட்டையாட வேண்டியதில்லை அவள் பதிலளித்தாள். இந்த ரொட்டி வில்லைகளை ஜெரினெல்டோவிற்கு நான் எடுத்துச் செல்வது உண்மைதான். பாவம் அவரை அவர்கள் விரைவில் சுட்டுக் கொல்ல இருக்கிறார்கள்.

எந்த யோசனையும் இன்றிதான் அவ்வாறு வெடுக்கென்று அவள் பதிலுரைத்திருந்தாள் என்றாலும் அப்போதுதான் அரசாங்கம், புரட்சிப்படைகள் உடனடியாக ரியோஹாச்சாவில் சரணடையவில்லை யாயின் கர்னல் ஜெரினெல்டோ மார்க்வெஸ் சுட்டுக்கொல்லப்பட்டுவிடுவாரென்று அறிவிப்பு மிரட்டலை வெளியிட்டது. சந்திப்புகள் உடனடியாக நின்றன. அமரந்தா தன்னை கதவடைப்பு செய்துகொண்டு. ரெமெடியால் இறந்த போது ஏற்பட்ட அதே சித்திரவதைக்கு ஆட்பட்டு அழுது அழுது காலங்கடத்தி தன் அவசா வார்த்தைகள் மேலும் ஒரு உயிரை பறிக்க இருப்பதால் துடித்துடித்தாள். அவளது தாய் அவளைத் தேற்றினாள். கட்டாயம் கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா ஏதாவது செய்து ஜெரினால்டோ மார்க்வெஸ்ஸின் உயிரைவிட்டாரென்று யுத்தம் முடிந்ததும் தானே ஜெரினெல்டோ மார்க்வெஸ்ஸை வீட்டை நோக்கி அழைத்து வருவதாயும் ஊர்சுலா வாக்களித்தாள். நினைத்துப் பார்க்க முடிந்ததற்கு வெகுகாலம் முன்னதாகவே தனது சத்தியத்தை அவள் நிறைவேற்றியிருந்தார். ஜெரினெல்டோ மார்க்வெஸ் மெக்காண்டோவின் ஆட்சியாளன் எனும் பதவியில்

முதலீடு செய்யப்பட்டு வீடு தேடி வந்தபோது தன் மகனைப் போலவே பாவித்து வரவேற்றாள். அத்தோடு களிப்பூட்டும் முகஸ்துதிகளால் சீராட்டி, அமரந்தாவை மணந்துகொள்ள நினைத்ததை அவர் மறந்துவிடாமலிருக்க இறைவனை மனதார பிரார்த்தனை செய்தாள். அவளது மன்றாடுதல்களை ஆண்டவர் செவிமடுத்ததாகவே தோன்றியது. வீட்டில் உணவருந்த வந்த நாட்களில் கர்னல் ஜெரினெல்டோ மார்க்வெஸ், முன் தாழ்வாரத்தில் மலர்செடிகளுக்கு மத்தியில் அமரந்தாவுடன் சீனதாயங்கள் ஆடி பொழுதைக் கழித்தார். அவர்களுக்கு காப்பியும் பாலும், ரொட்டிவில்லைகளும் எடுத்து வந்து வந்து அவர்களை தொந்திரவு செய்யாதிருக்க குழந்தைகளையும் பார்த்துக் கொண்டாள். தனது மனதில் எங்கோ அடி-ஆழ்மனதில் இளமையின் விருப்புகளை கிளர்ந்தெழச்செய்ய அமரந்தாவும் சரியாகவே பெருமுயற்சிகள் எடுத்தாள். பேரார்வம் பிடுங்கித்தின்ன அவள் தாங்கொன்ன எதிர்ப்பார்ப்புகளோடு மதிய உணவெடுக்க அவர் வரும் நாளெண்ணி காத்திருக்கத் தொடங்கினாள். மதிய நேர சீனதாயக்கட்டங்களுக்காகவும் அவள் ஏங்கினாள். யுத்த இராணுவ வீரரின் சகவாசத்தோடு நேரம் ஓடுவதே தெரியாத அந்த நாளில் பழமை மீதான நாட்டம் கொண்டிருந்த பெயர் கொண்ட அவரது கைவிரல்கள் காய்களை நகர்த்தியபோதோ புலன்களால் உணரமுடியாத படி ஒருவித நடுக்கம் கொண்டன. ஆனால் அவளை மணமுடிக்கும் தன் விருப்பத்தை மறுபடி அவர் தெரிவ்த்த போது அவள் அவரை நிராகரித்தாள்.

நான் யாரையுமே திருமணம் செய்து கொள்ள மாட்டேன். அவள் அவரிடம் சொன்னாள். அதிலும் உன்னை மணமுடிக்க முடியவே முடியாது. நீ அவ்ரெலியானோவை மிகவும் உயிருக்கு உயிராய் நேசிக்கிராய். அவனை மணமுடிக்க முடியாததால் என்னை மணந்து கொள்ள விரும்புகிறாய்.

ஆனால் கர்னல் ஜெரினெல்டோ மார்க்வெஸ் ரொம்பவும் பொறுமைசாலி மனிதராய் இருந்தார். நான் விடாமல் வற்புறுத்திக் கொண்டே இருப்பேன். அவர் சொன்னார். விரைவில் அல்லது நாட்பட உன்னை நான் இணங்கவைப்பேன். அவர் வீட்டையும் விடாமல் வருகை புரிந்து கொண்டிருந்தார். கதவு தாழிட்டு நகம் கடித்தபடி கண்ணீர் சிந்தி அவர் யுத்தம் குறித்து ஊர்சுலாவிடம் அளித்த முக்கிய செய்திகளைக்கூட கேட்காது காதுகளை இறுக்கி இரு கைகளாலும் பொத்தினாள். இருந்தும், அவரைக்கான அளவுக்கு முழுவேகம் ஏற்பட்ட போதும், வெளியே கதவு திறந்து சென்று இணையை அவளது தைரியம் அவளை கட்டிப்போட்டது.

அந்த நாட்களில் இரண்டு வாரத்திற்கு ஒரு முறை மெக்காண்டோவிற்கு யுத்தம் குறித்த விரிவான கடிதம் ஒன்றை கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா அனுப்பி வந்தார். ஆனால் ஒரே ஒரு முறை மட்டுமே தான் வெளியேறி எட்டுமாதங்கள் கழித்து அவர் ஊர்சுலாவுக்கும் எழுதினார். ஒரு சிறப்பு தூதன் ஒட்டப்பட்ட மேலுறையுடன் கூடிய கடிதத்தை வீட்டிற்கு எடுத்து வந்தான். உள்ளேயோ கர்னலின் நடுங்கும் கையெழுத்தில் எழுதப்பட்டிருந்த கடிதம்

இருந்தது. அப்பாவை ஜாக்கிரதையாக கவனித்துக்கொள். ஏனெனில் அவர் விரையில் இறந்து போக இருக்கிறார். ஊர்சுலா அச்சத்தில் நடுங்கினாள். அவ்ரெலியானோ செல்கிறானென்றால் அவ்ரெலியானோவுக்கு அது நன்றாகத் தெரியும். அவள் சொன்னாள். அவள் ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவை அவரது படுக்கையறைக்கு அழைத்துச் செல்ல அவர் தனது உதவியை நாடினாள். முன்பிருந்ததைவிட எடை அதிகம் கொண்டிருந்தது மட்டுமல்ல செம்மலர் மரத்தடியிலேயே இருந்து வந்த அந்த நாட்களால் மனம் போல உடல் பருத்து, ஏழுபேர் சேர்ந்தும் தூக்க முடியாமல் அவரை இழுத்துத்தான் செல்ல முடிந்தது. புது காளான்களின் வாடையும், பூஞ்சையின் நெடியும், ஏதும் செய்ய இயலாத அளவு வலிமை பெற்று காற்றெங்கும் படுக்கை அறையில் பேருருவம் படைத் அம்மனிதரினால் மூச்சாக விடப்பட்டு ஆக்கிரமித்தது. மழையிலும், வெயிலிலுமாய் மாறாத நிலை அங்கே இடம் மாறியது. மறுநாள் சாலையில் அவர் படுக்கையில் இருக்கவில்லை. தனது தணியாத பலமிருந்தும் ஜோஸ்கார்டியோ புயெண்டியா எதிர்த்து போராடும் நிலையில் இருக்கவில்லை. எல்லாமே அவருக்கு நன்றாகவே இருந்தது. அவர் திரும்பவும் செம்மலர் மரத்தின் அடிக்கே சென்றார். விருப்பப்பட்டாடோடு அல்ல. அவரது உடலின் பழக்கதோசத்தினால்தான். ஊர்சுலா அவரை கண்ணும் கருத்துமாய் பார்த்துக் கொண்டாள். அவ்ரெலியானோ குறித்த செய்திகளையும் கூறிக்கொண்டே இருந்தாள். ஆனால் உண்மையில் அவரால் உரையாட முடிந்த ஒரே நபர். நீண்டகாலமாய் நட்புறவாடிவரும் புருடன்ஷியோ ஆக்விலார்தான். காலத்தால் சற்றேக்குறைய முற்றிலும் தோற்கடிக்கப்பட்டு மரணத்திற்கு முதுமை தளர்ச்சி ஏற்பட்டு, புருடன்ஷியோ ஆக்விலார் நாளைக்கு இருமுறை சுவரோடு அளவலாவிக் கொண்டிருக்க வருவான். அவர்கள் சண்டைக்கோழிகளைப் பற்றி பேசுவார்கள். ஒருவருக்கு ஒருவர் பெருந்தோற்றம் கொண்ட கோழி முட்டைகள் பேணி பண்ணை வளர்க்க வாக்களித்துக் கொண்டார்கள். சண்டை வெற்றிகளுக்காக அல்ல. அது அப்போது அவாகளுக்குத் தேவையும் இல்லை, மாறாக சலிப்பேற்படுத்தும் மரணத்தின் ஞாயிறுகள் குறித்தாக அந்த முடிவு இருந்தது. உண்மையில் அவரை உடல் முழுவதும் துடைத்து சுத்தம் செய்தது ஆக்விலார்தான் அதுமட்டுமல்ல அவருக்கு உணவளித்து, யாரோ இதுவரை அவர் பார்த்திராத, அவ்ரெலியானோ எனும் யுத்தகர்னர் ஒருவரைப் பற்றிய ஏராளமான செய்திகளைக் கூட ஆக்விலார்தான் சொல்லிக்கொண்டே இருந்தாள். தனியாக இருக்கும் போதோ ஜோஸ் அர்காடியோ புயெண்டியா எண்ணற்ற அறைகள் குறித்த கனவில் ஆறுதல் கொள்வார். தனது படுக்கையிலிருந்து எழுவதாய் கனவு கண்டு, பக்கத்தில் அப்படியே அச்சடித்து அதே மாதிரி அறைக்குள் செல்வார் அங்கே அதே படுக்கை வார்ப்பிரும்பு தலைவைத்ததும், அதே கூடை நாற்காலியும் அவற்றின் பின்னே மேரிகன்னி மாதா படமும் காண்பார். பிறகு அந்த அறையிலிருந்து கிட்டத்திலிருந்த அதே மாதிரி அச்சாக இருக்கும் மற்றொரு அறைக்குள் செல்வார். அங்கே ஒரு கதவு இருக்க அதைத்திறந்தால் அதே மாதிரி அச்சான தோற்றமுடைய

அடுத்த அறை இருந்தது. இதில் ஒரு கதவு திறந்து மீண்டும் அச்சான அதே தோற்றமுடைய அடுத்த அறை. பின் அடுத்த அதே போன்ற தறை. பிறகு மீண்டும் அச்சான அதே தோற்றமுடைய மேலும் ஒரு அறை முடிவுறா எண்ணிக்கையில் தொடர்ந்தது. நேருக்கு நேர் கண்ணாடி பதித்த பார்வையாளர் அரங்கையொத்த அந்த அறைகளில் ஒவ்வொன்றிலும் நுழைந்துகொண்டே இருக்க அவர் விருப்பப்பட்டார். ஆக்விலார் வந்து தோற்களைத் தொடும் வரை பிறகு அவர் அறைவிட்டு அறைக்கு வின்நோக்கி முதுகைக்கண்டபடி வேகமாய் ஒவ்வொரு அறையாய் கடந்து நிஜஅறையில் ஆக்விலாரை சந்திப்பார். ஆனால் அவரது படுக்கைக்கு அவரை அழைத்துச் சென்ற இருவாரங்கள் கழித்து ஒரு இரவு புருடன்ஷியோ அக்விலார் அவரது தோறை ஒரு நடுவழி அறையிலியேயே தொட்டுவிட அவர் அங்கேயே அதுதான் நிஜ அறை என்றெண்ணியவராய் நிரந்தரமாக தங்கிவிட்டார். மறுநாள் காலையில் ஊர்சுலா அவருக்கு காலை உணவை எடுத்து வந்தபோது வழியில் ஒருவனை வீட்டு பிரதான அறையை கடந்து வரக்கண்டாள். கட்டை குட்டையான தேகம், கருப்பு மேல்கோட்டும், அதே போல் கருத்த மிகப்பெரிய குல்லாயுமாக அதை சொற்செட்டான உணர்ச்சியற்ற கல்களை மூடியபடி அவன்விட்டிருந்தான். ஆண்டவா ஊர்சுலா நினைத்தாள். இது கட்டாயம் மெகியூவாடெஸ்தான் என ஊர்ஜிதமாய சத்தியமே செய்வேன். அது கட்டாயுர். விஷித்தாசியோனின் சகோதரன். தூக்கமின்மை எனும் கொள்ளநோய் காலத்தில் ஓடிப்போன அதன்பின் என்ன ஆனான் என்பதே அறியப்படாது போன அதே கட்டாயுர். விஷித்தாசியேன் அவனிடம் அவன் திருமபி வந்ததன் காரணத்தை கேட்ட போது அவர்களுக்கு மட்டுமே புரியும் அந்த மொழியால் சொன்னான்.

நான் மகாராஜாவின் மரண இறுதி சடங்கில் பங்கேற்க வந்தேன்.

பிறகு அவர்கள் ஜோஸ்அர்காடியோ புயெண்டியாவின் அறைக்குள் சென்று அவரை பலங்கொண்ட மட்டும் அசைத்துப்பார்த்தும காதில் பெருங்கத்து கத்தியும், நாசித்துவாரத்திற்கு முன் முகம் பார்க்கும் கண்ணாடி வைத்தும் பார்த்தார்கள். ஆனால் அவரை எழுப்ப அவர்களால் முடியவில்லை. சற்று நேரங்கழித்து ஒரு மரத்தச்சன் சவப்பெட்டி செய்ய அவரை அளவெடுத்த போது ஜன்னலின் வெளியே சிறு மஞ்சள் பூக்களின் மழையொன்று பெய்வதைக் கண்டார்கள். சப்தமின்றி தொடர்ந்த ஒரு புயலில் இரவெல்லாம் அவை நகரெங்கும் மண்ணில் உதிர்ந்தன. வீடுகளின் கூறைகளை மூடி கதவுகளையும் நிறைத்து அடைத்து. அதே மஞ்சள் நிற சிறுப்பூக்கள் விட்டு வெட்டவெளியில், உறங்கிய வீட்டுவிலங்குகளை மூச்சுத்திணற வைத்தன. மறுநாள் சாலையில் சாலைகளை போர்வைபோல முற்றிலும் போர்த்தும் வண்ணம் ஒரு மெத்தைப் போல இறுதி ஊர்வலம் கடந்தபோது வழியேற்படுத்திட மண் வாளியாலும் வைக்கோல் விருகோலாலும் தள்ளிவிட வேண்டிய அளவு அத்தனை இலட்சம் பூக்கள் கொட்டிக் கிடந்தன.

தொடரும்

எதிர்ப்புகள் மறைந்து தோன்றும் இடம்

லக்ஷ்மி மணிவண்ணன்

(மதுரையில் நடந்த கடவு கருத்தரங்கத்தில் வாசித்தது)

குலசேகரன்

எதிர்ப்புகள் மறைந்து தோன்றும் இடம் என்கிற கவிதைத் தொகுப்பு லக்ஷ்மி மணிவண்ணனின் மூன்றாவது தொகுப்பாகும். ஒரு தொகுப்பாக வாசிக்க கிடைக்கிற போது அதனுடைய அனைத்து கவிதைகளும் கலந்து விடுகிற மாயம் அடைகின்றன. அவை தனித்துவமான ஒரு மொழியையும், ஒத்த சில படிமங்களையும், குறியீடுகளையும் கொண்டிருப்பதும் தெரிகிறது. ஆச்சரியமூட்டும்படி அவை ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டவையாய் இருக்கின்றன. ஆகவே வினோதமான அர்த்தங்களையும் அனுபவங்களையும் அளிக்கின்றன. கவிதை சொல்லியை முன்வைத்து இந்த வாழ்க்கை முழுமைக்கும் அவற்றைப் பொருத்தி விடலாம். கவிஞன் நடைமுறையிலிருக்கிற உலகத்தை ஒவ்வாமையால் கலைத்து போட்டு தனக்கான ஒன்றைப் படைக்கிறான். அந்த மொழியின் வழியாக அதை மறுபடியும் நமக்கானதாகப் படைத்துப் பார்க்கிறோம்.

இன்றைய நவீன கவிஞர்கள், கடவுள் இருந்தால் உண்டாகும் கடவுளின் தன்மையை படிமங்களாக உருவாக்குகிறார்கள். வெளியில் தூலமாக இல்லாத கடவுளை கவிதைகளில் தொடர்ந்து மீள் படைப்பாக்கம் செய்கிறார்கள். கடவுள் ஒரு மௌன முன்னிலையாக்கப்பட்டு கவிதை ஓர் உரையாடலாகவும் ஆக்கப்படுகிறது. நவீன கவிதைகளில், காலம், இடம் போன்ற பொதுப் படிமங்களுக்கு இணையாக கடவுளும் கவிதைப் படிமமாக ஆகிவிட்டார். 'கடவுள் நான்கைந்து முறை எனது பாதையில் தென்பட்டார்' என்று கவிதை சொல்லி எழுதுகிறார். மற்றொரு இடத்தில் கடவுள் கவிதை செயலில் துணை நிற்பதாகவும் கூறுகிறார். கடவுள் அவருக்குள்ளேயே இருப்பவராகவும் உள்ளார். கடவுள் வெளியேயிருக்கின்ற சமூக நிறுவனங்களை கட்டிப் பேணுகின்ற நிறுவனராகவும் காட்டப்படுகிறார். எனவே அவர் கடவுள் எனப்படுகிறார். இந்த நிறுவனங்களும் ஒவ்வொரு போத மனத்திலும் உள்ளதுதான். அதனாலேயே கடவுளை நேராக சந்திப்பதை கவிதை சொல்லி விரும்புவதில்லை. ஆனாலும், கடவுள் தவிர்க்க முடியாத பெரும் நியதி. அந்தக் கடவுளை எதிர்ப்பதால் 'நோய்மையும் பிசாசுகளும்' தண்டனைகளாகக் கிடைக்கும் என்றும் கவிதை கூறுகிறது. இருந்தாலும் தான் விரும்பி ஏற்றுக் கொண்ட சீரழிவுதான் தண்டனையாகக் கிடைக்கிறது. உச்சமான நிலைகளில் எல்லாவற்றுக்கும் காரணமென கடவுளை குறியீடாக்கி இறந்து போக சொல்கிறது. கடவுள் தனக்குள் இருப்பதால் தற்கொலைக்கும் முயலுகிறது.

இவற்றில் கடவுளுக்கு எதிர்வாக சாத்தான் அமைக்கப்படுகிறார். எதிர்ப்புத்தன்மை கொண்டவராக சாத்தான் செயல்படுகிறார். ஆனால், கிராமத்து சாமிகள் உடன் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். அவர்கள் குடிக்கின்ற, புகைக்கின்ற, புணர்கின்ற சக மனிதர்கள். அவர்களுடைய கலக மனப்பான்மை கொண்ட இடம்தான் கவிதை சொல்லிக்கானது என்று படுகிறது.

நாட்டார் தெய்வங்களான பல்வேறு இயக்கிகள் உண்மையான பெண்களாக பிரச்சினைகளோடு போராடிக் கொண்டு இருக்கின்றன. (ஆனால், பெண் கவிஞர்களின் மொழி கவலைகளை குறை கூறும் தொனியை மீறுவதில்லை என்று இங்கு குறிப்பிடப்படுகிறது). இயக்கிகளை வழிபடுத்தும் நாட்டுப்புறக் கலைஞனோடு தன்னை கவிதை சொல்லி ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்கிறார். இந்த வகையில் கடவுள் தன்னை மீறிய நிலையாகக் கருதுகிறார் எனலாம். அதனால் கடவுளை குறுக்கீடு செய்ய இயலுமே தவிர நிராகரிக்க முடியாது போலவும் காட்டப்படுகிறது.

அதே போல், மறுபடியும் மறுபடியும் வீட்டிலிருந்து வெளியேறும் சித்திரத்தை கவிதை சொல்லி உண்டாக்கிக் கொண்டேயிருக்கிறார். அப்படியும் அது அவரைப் பின் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அந்த வீடு அவர் கட்டுப்பாட்டை மீறியதான வளவிலங்கால் சிதைந்திருக்கிறது. 'தொடர்ந்து கண்காணித்தபடி உடன் வருகிறது வளவிலங்கு குலைத்துச் சென்ற வீடு' என்பது கவிதையின் வரிகள். அந்த வளவிலங்கையும் கூட அவர் நேசிப்பதாக இருக்கிறது. குலைந்த வீட்டுக்குள் எதிர் உணர்வுகளாக பிசாசுகளும் நோய்மையும் குடியிருக்கின்றன. அவருக்கு வீடுகள் வெறுமையாகவும் தோன்றுகின்றன. அவை தரையில் கட்டப்படாமல் அந்தரத்தில் மிதந்து கொண்டிருக்கின்றன. அதில் தொடர்ந்து இருக்கப் பிடிக்காமல் அவர் வெளியேறுகிறார். சுதந்திரக் கனவுகளைக் காணவும், உச்ச உணர்வு நிலையாக போதையை அடையவுமே செல்கிறார் என்று கருதலாம். உண்மையான உயிரியாக விளங்கும் வெளியிலிருந்து வீட்டுக்கு வந்த புறாக்களைத் தின்று விட்டதான மன உளைச்சலில், உறக்கத்தை விரும்பாமல், அந்த உளைச்சலை நேர் நின்று எதிர் கொள்வதற்காக வெளியேறுகிறார். அந்த வீடுகளில் குழந்தைகளும் மனைவியும் தனித்து விடப்பட்டு இருக்கிறார்கள். ஆனால், அவர்களை கனவுகளும் கடவுளும் காப்பாற்றுமெனவும், அதனால் தான் காக்க வேண்டியதில்லை எனவும் நம்புகிறார். ஒரு முறை வீடு வழக்கத்திற்கு மாறாக அது வெளியேறுகிறது. அவர் தன்னுடைய பழைய நினைவுகள் எஞ்ச அங்கேயே கைவிடப்படுகிறார். அடிக்கடி வெளியேறிச் சென்று திரும்பும் அவருக்கு வீடு பாழ்பட்டு அன்னியமாகி விடுகிறது. மற்றொரு வீட்டைக் கடக்கும் போது கூட அது கொலை நடந்த குற்றவாளிகளை அறிய முடியாத வீடாகத் தெரிகிறது. குடும்பம் என்கிற அமைப்பு சிதைந்து வருவதின் உருவகமாக குலைந்த வீடுகளை எழுதுகின்ற கவிதை சொல்லிக்கு வருத்தமோ அல்லது விருப்பமோ இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக அவரும் அங்கமாயிருப்பதை பார்வையாளனைப் போல்தான் சொல்கிறார்.

கதவற்ற வீடு இவருடைய கவிதைகளில் தொடர்ந்து வருகின்ற ஒரு படிமம். இது 'சங்கருக்கு கதவற்ற வீடு' என்கிற முந்தைய தொகுப்பிலும் கூட அடிக்கடி பயின்று வந்திருக்கிறது. இதனாலேயே இது வாசிப்பில் ஒரு தொடர் படிமமாக மாறுகிறது. பிறருடைய வருகைக்காக திறந்திருக்கும் வீடென்பதை விட, கவிதை சொல்லியின் வெளியேறலுக்கும் பின் திரும்பலுக்கும் ஏதுவான வீடாக இருக்கிறது. நுழைவையும் வருகையையும் சமமானதாக ஆக்கும் வீடு இது.

குழந்தைகள் மட்டுமே இந்த கறுப்புப் பிரதியின் நடுவில் பிரகாசமாகக் காட்டப்படுகிறார்கள். இந்த சிதைவுகளுக்கு மத்தியில் குழந்தைகள் எப்போதும் பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய உலகத்தில் சேர்ந்து வாழ்வதற்கு வேறு யாருமில்லை. அவர்களால் உடைந்து போன கரடி பொம்மையோடு கூட பேச முடிகிறது. அவை நிஜக் கரடிகளைப் போல் கவிதை சொல்லிக்குத் தெரிந்தாலும், உரையாடும் நிலையை அவராலும் எட்ட முடிவதில்லை. வாழ்க்கை சுழித்தோடும் மாபெரும் இயக்கமான பேருந்து நிலையத்தையே பொம்மையாக்கி ஒரு நாடோடி நரிக்குறவக் குழந்தை விளையாடிய மகிழ்வில் நடனம் ஆடிக் கொண்டிருக்கும் அம்மாவிடம் தாய்ப்பாலைக் குடிக்கிறது. நண்பர்கள் வீடுகளுக்கு வந்து விட்டுச் சென்ற இடங்களையும் பொம்மைகளாக்கி விளையாட குழந்தைகளால் முடிகிறது. குழந்தைகளுமே எவ்வித நடவடிக்கைகளுமற்று இவற்றில் பொம்மைகளைப் போல்தான் இருக்கிறார்கள். குழந்தைகளுக்கு மாற்றாக பொம்மைகள் உரத்து அழுவதையும், வீறிடுவதையும் கவிதை சொல்கிறது. மின்சாரமில்லாத கொடும் இரவில் பொம்மைகள் தனிமையையும் பயத்தையும் அடைகின்றன. இவற்றைக் கூட குழந்தைகள் வெளியில் சொல்ல முடியாமல் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 'சிமெண்ட் மூட்டை அளவுக்கு புத்தகங்களை முதுகில் சுமந்தபடி குழந்தைகள் பள்ளிக்கு செல்வதாக' எழுதுகிறார். பள்ளிகளை இறக்குறைய மியூசியக் கூண்டாக்குகிறார். சாகடிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும் அவர்களின் உடல்களை, தன்னை சித்திரவதை செய்து கொள்ளும் இந்த வெளியில் பயங்கரமாக காட்டுகிறார் கவிதை சொல்லி. 'காட்சிக்கான தலைக்குள் எரிந்த குழந்தைகளின் கட்டைகள் படுத்துத் துயில்கின்றன அழுகுரல்கள் ஏதுமின்றி' என்பது கவிதையின் வரிகள். (இக் குறிப்பிட்ட கவிதை, கும்பகோணம் பள்ளியில் எரிந்த குழந்தைகளின் அஞ்சலிக்கு எழுதப்பட்டிருக்கிறது).

மது அருந்துவதைப் பற்றி மிகவும் வலியுறுத்துவதைப் போல இவற்றில் எழுதப்படுகின்றன. கவிதை சொல்லி குடிப்பதென்பதில் கனவு நிலையான போதையை உத்தேசிக்கிறார். அதில்தான் குகை ஓவியங்களைப் போல் குழப்பமாக இருந்தாலும் எல்லாமேத் துலக்கமாகத் தெரிகின்றன. அதிலேயே மிகுந்த போதையிலும் எல்லாவற்றையும், எப்போதையும் விட தெள்ளத் தெளிவாக அறிய முடிகின்ற விழிப்புணர்வு கிடைக்கின்றது. அந்த உச்ச நிலையிலேயே அவர் தன்னுடைய மனக்கட்டுப்பாடுகளையும், பெரும் காமத்தையும் கடக்கிறார். தன்னுடைய எல்லா தளைகளையும் காண முடிகிற ஒரு விடுதலையை அடைகிறார். அதற்காகவும் அதனாலுமே அவர் சிதிலமாகிக் கொண்டிருக்கும் வீடுகளிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார். குடிப்பதை எதிர்ப்புணர்வாகவும் காட்டுகிறார். அதனால் நிபந்தனைகளற்ற தூய அன்பு கிடைக்குமானால் அதையும் தேடுகிறார். 'அன்பு தேடி கடல் உயிரியாய் அலைந்து ஆழ் கடலடியில் சென்று கடலை பெரிய அக்வேரியமாக்கலாம்.' என்றிருக்கின்றன கவிதை வரிகள். இந்த குடியின் வாயிலாகவே நடைமுறை யதார்த்தத்தை மறுதலிக்கிறார். அதற்காக அவர் புனைவான கனவு நிலையையயும் நாடவில்லை. மாறாக அவர் உச்சகட்ட

விழிப்பு நிலையை வேண்டுகிறார். 'மதுவிடுதிக்கு செல்லாமல் நோக்கங்களை நிறைவேற்றுவது இயலாது' என்று எழுதப்படுகிறது. பிற கவிஞர்களைப் போல் அவர் குடிப்பதைக் கொண்டாட்டமாகக் கருதவில்லை போலவும் தெரிகிறது. இங்கு ஒரு மாற்று யதார்த்தமே எதிர்பார்க்கப்படுகிறது.

கவிதை சொல்லி சிறைச்சாலையை வீடு போலவும் உருவகிக்கிறார். சிறைச்சாலை அதன் குரூர முகத்தோடும் கோபத்தோடும் சித்தரிக்கப்படுவதில்லை. மாறாக அதன் வேடம் பூண்ட கட்டிடம் மறைவாக நம்மை சுற்றி வளைத்துக் கொண்டிருப்பதாகவும் காட்டப்படுகிறது. 'ஏகதேசமாக வீட்டின் சூழலை அடைந்து கொண்டிருக்கிறது அல்லது வீடு சிறைச்சாலையின் உருவமடைந்து வருகிறது' என்பது கவிதை. சிறைச்சாலையில் அவர் தன்னை வலிந்து ஒப்படைத்துக் கொள்வதாகவும், எப்போதும் சிக்கியிருப்பதாகவும் உள்ளது. பஷீர் மற்றும் டாஸ்டாவஸ்கி போன்ற படைப்பாளிகளின் சிறைகள் நினைவூட்டப்படுகின்றன. அதற்குள் போலிஸ்காரர்கள், கைதிகள் எல்லோருமே ஒன்றாக அடைக்கப்பட்டிருக்கிறவர்கள்தான். சிறைச்சாலையென்பது சிறுமீறலில் கூட உடைபடும் சாத்தியத்தையேக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. வன்முறையின் சின்னமான போலிசாரின் புதை மிதியடிகள் இதன் வரிகளில் அழுத்தமாக எழுதப்படுகின்றன. இந்த அடக்குமுறைகளே நிரம்பிய சூழலில் குற்றம் மிகவும் கவர்ச்சிகரமானதாகவும் தவிர்க்கமுடியாததாகவும் உள்ளது. ஆகவே அது தண்டனைக்குள்ளாவதும் இயல்பானதாயிருக்கிறது.

மரணத்தை மிக வெளிப்படையாகவும் அருகாமையில் எப்போதும் காத்திருப்பதாகவும் காட்டப்படுகிறது. 'மரணத்தை எதிர் நோக்கியிருக்கும் வீடுகள்' என்றும் கவிதை சொல்லி கூறுகிறார். அது எங்கோ வாழ்க்கையில் ஒளிந்திருப்பதாக இல்லாமல் பகிரங்கமாக முன்னால் வைக்கப்படுகிறது. அதை ஒரு தீர்வாகக் காட்டவும் முயலுவதாகப்படுகிறது. மரணம் களிப்பான விஷயமாகவும் உருவகிக்கப்படுகிறது.

புணர்ச்சி மரணமற்ற தன்மையுடையதாகவும் கூறப்படுகிறது. குழந்தைகள் தூங்கிய பின்னால் இந்த வீடுகள் புணர்ச்சியில் ஈடுபடுவதால்தான் அவை தங்களின் மீறலை நிகழ்த்துகின்றன. 'நள்ளிரவுக் காற்றில் அசைந்து நெளிவு கொள்கின்றன' என்பார் கவிதை சொல்லி. புணர்ச்சியை சிறைச்சாலையும், மருத்துவமனைகளும் தடை செய்வதைப் போலவே குழந்தைகளும் தடுக்கின்றன. அதனாலேயே சுதந்திரமான காமம் பெரும் விடுதலையாக இருக்கிறது. 'புணர்ச்சியின்போது செடியில் பூக்கள் மலர்வதாக' எழுதுகிறார்.

எதிர்ப்புகளிலிருந்துதான் கலகம் பிறக்கிறது, அதிலிருந்தே போராட்டங்கள் துவங்குகின்றன என்று கவிதைகள் கூறுகின்றன. இக் கவிதைகளில் கலகத்தின் குறியீடாக பிசாசுகளும் சாத்தான்களும் உலவுகின்றன. 'வெற்று உடலுக்குள் பேய்கள் நடனமாடுகின்றன' ' பேய்கள் அவனை வழி நடத்திச் செல்கின்றன' என்று எழுதப்படுகின்றன. பிறர் கடவுளை வணங்கிக் கொண்டிருக்கும் போது கவிதை சொல்லி பிசாசுகளைத் துணை கொள்கிறார். கடவுள்கள் கையாலாகாதவர்களாகவும் வெறுமையானவர்களாகவும் இருக்கையில், பேய்கள் கவிஞனை உந்தும் செயலூக்கத் தன்மை

கொண்டவையாக இருக்கின்றன. அதனாலே கவிதை சொல்லி, எல்லாவற்றையும், வேலை புரிவதையும், குழந்தைகளைப் பேணுவதையும், வீட்டைக் கட்டிக்காப்பதையும் நிராகரிக்கிறார். இந்தக் கலக உணர்வே விதிகளை மீறிய காலி மைதானத்தின் விளையாட்டாகின்றன. புனிதமென புணர்ச்சிகளையே செய்திகளாகக் கூறுகின்றன. சாத்தான்களைக் கடவுளென்றும், குற்றங்களை சாகசமாகவும், குடிப்பதை விழிப்பாகவும் தெரிவிக்கின்றன.

பொதுவாக பெரும் சமூக உணர்வை சக கவிகளிடம் இல்லாத அளவுக்கு இந்த கவிதை சொல்லி கொண்டிருக்கிறார். சமூகத்தின் மேற்கட்டுமானங்களெனப்படும் கடவுள், வீடு, சிறைச்சாலை, மருத்துவமனை, அலுவலகம் போன்றவற்றின் மீதான விமரிசனங்களாக கவிதைகள் காணப்படுகின்றன. இந்தக் கட்டுமானங்களெல்லாம், இருக்கின்ற சமூக அமைப்பை மறுஉற்பத்தியாக்கம் செய்து கொண்டிருப்பவை. அவற்றைக் குலைக்கவே, வெளியேறலும், குடிப்பதும், குற்றமிழைப்பதும், மனநோய்களை கொள்வதும், வேலையை மறுப்பதும், பிசாசுகளைக் கொண்டாடுவதும் நடக்கின்றன. இந்த எதிர் நிலைக் கவிதைகள், எப்போதும் தான் கவிஞன் என்கிற உணர்வோடும், உக்கிரமான மொழியிலும், எழுத்துக்கு மிக நேர்மையோடும், எழுதப்பட்டிருக்கின்றன. இவையே இந்த தொகுப்பை மிகச் சிறந்ததாக ஆக்குகின்றன.

ஒரு ஒப்பந்தத் தொழிலாளியின் கடிதம்

அந்தோனியா ஜசிந்தோ

ஆங்கிலம் வழி தமிழில் லாவண்யா



அன்பே,
உனக்கொரு கடிதமெழுத விரும்பினேன்
ஒரு கடிதம்
உன்னைக் காணவிரும்பும்
என் ஏக்கத்தை
உன்னை இழந்துவிடும்
என் பயத்தை
நான் விரும்புவதைவிட ஆழமான ஒன்றை
என்னைத் தொடரும் பெயரற்ற ஒரு பயத்தை
என் வாழ்வில் பிணைந்துள்ள துயரத்தை
உன்னிடம் சொல்ல

உனக்கொரு கடிதமெழுத விரும்பினேன்
அன்பே
அந்நியோன்யமான ரகசியங்கள் நிறைந்த கடிதம்
உன் நினைவுகள் நிறைந்த கடிதம்
உன்னைப் பற்றிய
இங்கு நான் காண்பவைகளைவிட உயர்வான
தவலா பழத்தைப்போல் சிவந்த உன் உதடுகளைப் பற்றி
திலோவா மீன்களைவிடக் கருப்பான உன் கூந்தலைப்பற்றி
மென்மை நிறைந்த உன் கண்களைப் பற்றி
மபோக் பழங்களையொத்த
கெட்டியான உன் முலைகளைப் பற்றி
உன் மென்னிடையைப் பற்றி
உன் முத்தங்களைப் பற்றி
உனக்கொரு கடிதமெழுத விரும்பினேன்
அன்பே
நாமிருவருமிணைந்து இரகசியத் தேடல்களில்
கழித்த நாட்களை

நீண்டபுற்களில் இழந்த இரவுகளை
உன் கால்களின் நிழல்களை
எண்ணற்ற பேரீச்சை மரநிழ்களினூடே
பொழிந்த தெளிவான நிலாவாளியை
நம் காலலின் பைத்தியக்காரத்தனத்தை
நம் பிரிவின் கசப்பை நினைவுறுத்துகிற
கடிதமொன்றை உனக்கெழுத விரும்பினேன்

என் அன்பே
அழாமல் படிக்கமுடியாத
உன் தந்தை போம்போவிடமிருந்து
நீ மறைத்து வைக்கக்கூடிய
உன் தாய் கீசாவிடமிந்து
நீ ஒளித்து வைக்கிற
மறதியென்னும் அசிரத்தையின்றி
நீ படிக்க
கிலோம் போவில் அனைத்தையும் மதிப்பிழக்கச்செய்யும்
கடிதமொன்னை உனக்கெழுத விரும்பினேன்

உனக்கொரு கடிதமெழுத விரும்பினேன்
என் அன்பே
காற்று கொண்டு தருமாறு ஒரு கடிதம்
முந்திரிமரங்களும் காபி மரங்களும்
ஹைனாக்களும் எருமைகளும்
ஆற்று மீன்களும் கேட்குமாறு
செடிகளும் மிருகங்களும்
நம் கூர்மையான துயரத்துக்கிரங்கி
ஒவ்வொரு பாட்டையும்
ஒவ்வொரு துயரத்தையும்
ஒவ்வொரு மூச்சையும் பெருமூச்சையம்
உன்னிடம் தந்து செல்லும்
தூய்மையான வெப்பமான எரிகிற
துயரமிக்க சொற்கள் நிறைந்த
ஒரு கடிதம் உனக்கெழுது விரும்பினேன்

நான் உனக்கு ஒரு கடிதமெழுத விரும்பினேன்
என் அன்பே ஏனெனத் தெரியவில்லை
ஏன்? ஏன்? ஏன்? என் அன்பே
ஆனால் உனக்கு படிக்கத் தெரியாது
நான் - ஓ - என்ன பயன்
எனக்கு எழுதத் தெரியாது

அந்தோனியோஜசின்டோ 1924ல் லுவாண்டவில் பிறந்து 1991ல் அங்கேயே இறந்தவர். பதினான்கு வருடங்கள் சிறைவாசம் அநுபவித்தார். MPLA என்னும் அங்கோலாவின் விடுதலைப் போராட்ட இயக்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர். ஆயுதமேந்திப் போராடியவர். அந்தோணியோ அகஸ்டினோ நெட்டோவின் (சுதந்திரத்திற்குப் பின்னான) அரசில் பணிபுரிந்தவர், மூன்று கவிதைத் தொகுதிகளும், மற்ற பிரசுரங்களில் கவிதைகளும் பிரசுரமாகியுள்ளன

எ. அய்யப்பன் கவிதைகள்



தமிழில்

என்.டி. ராஜ்குமார்

என்மேல் கல்லெறியாதீர்கள்

அந்தி சாய்ந்துவிட்டது
இனி நமக்கு பிரிந்து போகலாமென்று
அவள் சொன்னாள்

அந்திதான் எனக்குப் பிடிக்கும்
வண்ணங்களில் நீராடலாம்

அந்தியென்பது வண்ணங்களின் கூட்டம்
இருட்டுப் போர்வைக்குள் தூங்கலாம்

இன்று எனக்கு கனவுகள் முழுவதும்
நஷ்டப்படும்

பால்யகாலத்தில் நிர்வாணத்தின் நிறம்
தொட்டிலில் தூங்கும்போது சட்டையின் நிறம்

தந்தை இறந்த போது மூடியது
சிவப்புத்துணியால்

பூமியிலிருந்தொரு அசரீரிகேட்கிறது
நான் வானவில்லில் உறங்குகின்ற தடாகம்
என்மேல் கல்லெறியாதீர்கள்

தேதிகள் வற்றிப்போன நாட்காட்டி

அர்த்தங்கள் கேட்டு
அறிந்து கொள்ளவேண்டாம் குழந்தைகளே
இது எழுத்துப்பிழையுள்ள புத்தகம்
கடந்து போன வரலாற்றின் நாட்காட்டியில்
உதிர்ந்து வீழ்வதற்கு ஒரு பூவுமில்லை
பறந்து செல்ல ஒரு பட்சியுமில்லை
கோபாவேசம் நிறைந்த நீர்நிலை
தாகமெடுத்தவனின் கண்ணீருக்காய் காத்துக் கிடக்கிறது
எனது விரூபத்தை கட்டிப்பிடித்து
அழுதும் சிரித்தும் கடந்துபோன் சௌந்தர்யமே
உன்னைப் பார்த்தபடி நிற்கிறேன்
கழுகு கொத்தித் தின்கிறது அடிவயிறை.

பல்

பாம்பாட்டியிடம் பாம்பு
இணக்கம் கொள்வதும் வசப்படுத்துவதும்
அதற்கு விசப்பல் இல்லாத காரணத்தால்தான்

பூனைக்குட்டியை கொன்ற வீட்டு நாய்க்கும்
தவறு செய்தவளுக்கும்
வெண்ணையில் விசம் கலந்து கொடுக்கப்பட்டது.

மரணத்தை வென்றவனோ
அரவம் தீண்டி இறந்துபோனான்
இன்று கொத்த வந்த பாம்பு நண்பன்
பாம்பாட்டிக்கோ மகுடி ஊதினால் போதும்
சர்ப்பம்தான் சதிராடி சோர்ந்து போகின்றது.
தெற்றிப்பூசிவந்த காட்டிலிருந்துதான்
இந்த பாம்பு வந்தது
பாம்பு தீண்டி காட்டின் நிறம்
கரும்பச்சையாகின்றது

கிண்டிக் காண்பித்தால்
விரல் நஷ்டப்பட்டுப்போகும் காலமிது

கூடேறித் திளைக்கும் தூறில்
நடனமாடுகின்றன தற்ப்பை முகம்

தேவதைகளின் கூட்டிசையோ
வானத்திலிருந்து பொழியவில்லை

பாம்பிற்கு வயதாகின்றது
பாம்பாட்டியோ வேறொருபாம்பைத் தேடுகிறான்

அவன் காலடிச் சத்தம் கேட்டு
காதுகளை கூர்மையாகக்குகின்றன
புற்றுகள்

முழு உருவம்

முதலில் கிடைத்த விளையாட்டுப் பொருள்
ஒரு குட்டிப்பாவை
கிடைத்த மாத்திரத்தில் அதன் கழுத்தை நெரித்து
வேதனைப்படுத்தினேன்
பாவை அழுதது

ஒரு பல்லியைப் போல்
தும்பியின் பின்னால்
மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்தேன்
மண்ணில் விழுந்து துடித்த கௌளியைப் பார்த்து
கைத்தட்டிச் சிரித்தேன்

உயரத்தில் ஆடிய கிளிக்கூடோ
கைகளுக்கு எட்டவில்லை
இவன் செய்த பாவங்களை அறிந்த கிளி
ஆனந்தத்தில்
பரிகாசத்தோடு சிரித்தது

மரம் வளர்ந்தும்
மரக்குதிரை தனது இருப்பிடம் வந்து சேரவில்லை
உணவு மறந்துபோனது
முலையும்மறந்து போனது
ஒரு பம்பரத்தின் அதிவேகத்தில்
கண்கள் குத்தியது
வேகம் குறைய
பம்பரம் தளர்ந்து விழுந்தது
அது அவனது ஜீவிதமென்று அவன் உணரவில்லை
பட்டம் நூலை அறுத்துக் கொண்டு
திசைதவறி காற்றில் எங்கோ பறந்து போய்விட்டது
இனி உள்ளயாத்திரை
இதுவென்றா தெரியவில்லை

இரண்டு

காலச்சக்கரம் ஏறி
காயம்பட்ட முகத்தோடு
ஒரு ஓரத்திலிருந்தான்
அவனுக்கு பசியெடுத்தது
சர்ப்பம் கொடுத்த பழத்தை வாங்கினான்
அது புழுக்களின் கூடாயிருந்தது
அது
அவன் அவளுக்குக் கொடுத்தது.

மூன்றாம் உலகின் வாசனை: சல்மான் ருஷ்டி

மோகன ரவிச்சந்திரன்



ருஷ்டி பொதுவாக ஒரு எழுத்தாளர் என அறியப்பட்ட போதும் அவர் எப்படி பிரபலமடைந்தார் என்று சொல்வது கடினம் — அவருடைய படைப்புகள் மூலமாகவா அல்லது கோமெனியின் 1989 ஃபத்வா மூலமாகவா அல்லது அவருடைய சிக்கலான காதல் வாழ்வு வழியாகவா என்பது தெளிவாக இல்லை. எண்பதுகளில் அவருடைய மூன்று புத்தகங்கள், நடுயிரவுக் குழந்தைகள் (1981), அவமானம் (1983) மற்றும் சாத்தானின் கவிதைகள் (1988) வெளி வந்தன. நடுயிரவுக் குழந்தைகள் பின்-காலனிய அல்லது காமன்வெல்த் நாடுகளின் அல்லது மூன்றாம் உலகப் புனைகதையின் அடையாளப் பிரதி எனவும் புதுயுகத்தின் குரல் எனவும் போற்றப்பட்டது. இந்த நாவல் ருஷ்டிக்கு புக்கர் விருதைப் பெற்றுத் தந்தது. பிரிட்டனில் வாழும் ஆங்கில எழுத்தாளர்களின் ஒரு நிகர்சனமான குறியீட்டுத் தருணத்தை இந்த நாவல் பிரதிநிதித்துவப்படுத்தியது.

ருஷ்டியின் எழுத்துக்களில் உள்ள குறிப்பிடத்தக்க பிரத்யேகங்களில் ஒன்று அதன் சுய-பிரக்ஞை, அதாவது கலாச்சாரச் சூழலின் ஆய்வைப் பிரதிபலிக்கும் உத்வேகம். ருஷ்டி, இந்தியன் என்கிற ஒற்றைப் புறத் தோற்றம் வாயிலாக மட்டுமே பேசுவதை விரும்பியதில்லை. அப்படிப் பேசுவது எந்த விதத்திலும் சாத்தியமில்லை என நம்பினார். எளிதற்றவற்றை எளிதாக்குவதை மறுக்கும் அவருடைய கலாச்சார ஆளுமையின் கலவையான உணர்வுகளை முன்னிறுத்தும் ருஷ்டியின் படைப்புகளின் தகுதிப்பாடு சிலருக்கு சினமூட்டக்கூடும் அல்லது கோட்பாட்டுரீதியான இயலாமையை உறுதிப்படுத்தும். ருஷ்டி, எழுத்தை ஒரு தினசரி நடைமுறை ஒழுங்காகக் கொண்டிருந்தார். அதனால் தான் அவருக்கு வரலாற்றுரீதியான மெய்யியல்வாதம் வாய்க்கப் பெற்றது. கிரஹாம் ஹாகென் சுட்டுவது போல விளிம்பு நிலையைப் பகிரங்கப் படுத்துவது ருஷ்டியின் ஆளுமையாக உள்ளது.

ருஷ்டியின் அரசியல் முகம், கோஷ்டிக்களத்துடன் முரண்படுவதாகவே இருப்பதற்குக் காரணம் அவருடைய அணுகுமுறையே. அதாவது நடைமுறை இயல்பை உள்ளது உள்ளவாறே எழுத்தில் செதுக்கத் துணியும் அவருடைய வரலாற்றுச் சிந்தனையே காரணம். 1960-களில் மாணவப் பருவத்தில் கோட்பாட்டுரீதியான அடிப்படையிலிருந்து கிளர்ச்சி பெற்றதும் வியட்நாம்

போர் மற்றும் விடுதலை இயக்கங்களில் புடம் பெற்றதும் எழுபதுகளில் தமது எழுத்துப் பயணத்தைத் தொடங்க அடித்தளமாக இருந்ததாகச் சொல்லும் ருஷ்டி, உலகுடனும் அதன் அதிகாரங்களுடனும் முரண்படுவது புனைகதைச் செயல்பாங்கின் ஒரு வடிவம் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருப்பதாகக் கூறுகிறார். அதன் காரணமாகவே அவர் எதிர் நிறுவனவாதியாகவும் படிம அழிப்புவாதியாகவும் மாற வேண்டியிருந்தது. உலகின் தடித்த பெரும் துண்டுகளைக் கடித்து மெல்லுவதற்குத் தயார்படுத்தப்பட்ட ஒரு எழுத்தாளன் தான் என்பதைப் பகிரங்கப்படுத்தினார்.

ருஷ்டியின் அரசியல் நிலைப்பாடு அவர் எடுத்துரைக்கத் தேர்ந்தெடுத்த உள்ளீட்டுப் பொருள் என்பதைப் பதிவு செய்வது மட்டுமல்லாமல், அவருடைய அரசியல் விவாதங்கள் அவருடைய கருத்தியல்புகளிலிருந்தும் கலைச் செயல்பாடுகளிலிருந்தும் பிரிக்க முடியாதவை. எனவே தான் அவருடைய அரசியல் மாற்றீட்டுக்கான தேடல், ஒரு சிந்தனையின் ஆக்கப்பூர்வ வழியாக உருப் பெற்றது. ருஷ்டிக்கு அரசியல் என்பது அவருடைய கலைப்படைப்பின் மையம், அதே சமயத்தில் கலை என்பது அவருடைய அரசியலின் மையம். ருஷ்டியின் பார்வையில் அரசியலிலிருந்தோ அல்லது வரலாற்றிலிருந்தோ கலையைப் பிரிக்க முடியாது. ஏனெனில் கலை என்பது சமூக, அரசியல் வெற்றிடத்திலிருந்து வருவது அல்ல. உலகை விவரிப்பது என்பது அரசியல்ரீதியான செயல்தான், ஆனால் உலகை மறுவியாக்கியானம் செய்தல் என்பது உலகை மாற்றுவதற்கான தேவையான முதல் அடி என்று பிரெண்டன் எப்பவருக்குப் பதில் கூறுகையில் விவாதிக்கிறார் ருஷ்டி. அரசியலை நேரடியாகக் கையாள்வதால் மட்டுமே ஒரு நாவல் அரசியல்ரீதியானதாக மாறி விடாது; அதிகார மையத்தினால் வழங்கப்படும் கொள்கைகளை மறுதலிக்கும் வகையில் உலகை விவரிக்கும் போதே ஒரு நாவல் அரசியல்ரீதியானதாக மாற வாய்ப்புள்ளது. இந்த வகையான விவரிப்பும் மறுவியாக்கியானமும் அரசியல் மதிப்பைப் பெறும். இந்த வழியில் தான் நாம் இந்த உலகை விவரிக்கவும் புரிந்து கொள்ளவும் முடியும்.

ருஷ்டி தமது அரசியல் பார்வையை டெர்ரி கில்லியம்மின் புனைவுச் சித்திரமான பிரேசில் (1985) என்ற திரைப்பட விவாதத்தின் போது முன் வைக்கிறார்: ஒரு படைப்பிற்கு அரசியல் வலிமையைத் தரக் கூடிய தனிச்சிறப்பு வாய்ந்த, விநோதமான, சர்ரியலிச விளைவுகளை உபயோகப்படுத்துவதற்கான ஒரு புனைகதை ஆசிரியரின் தகுதிப்பாடு அது என உறுதியளிக்கிறார். கவிதையை பொதுவாக இலக்கியத்தை வரையறை செய்வது பிரபல அந்நியத்துவத்தைப் படைக்கக் கூடிய படைப்பின் தகுதிப்பாடுதான். பிரபல அந்நியத்துவத்தைப் படைக்கும் செயல்பாடு கலைக்கு அதன் இயக்கமிக்க எதிர்நிலையான, அரசியல்ரீதியான செயல்திறனைத் தருகிறது என மற்றவர்களைப் போல, குறிப்பாக ப்ரெக்டைப் போல ருஷ்டியும் வாதிடுகிறார். கனவு காணுதல் என்பது அதிகாரத்தைப் பெறும் ஆசை தான் என்கிறார் ருஷ்டி.

ருஷ்டியைப் போன்ற எழுத்தாளர்கள் (குந்தர் கிராஸ் மற்றும் காப்ரியல் கார்சியா மார்க்வெஸ் ஆகியோரையும் சேர்த்துக் கொள்ளலாம்) கையாளக்கூடிய மாய மெய்யியல் அல்லது குறைந்த பட்சம் அரசியல்ரீதியான வரலாற்றுரீதியான அடிப்படையைக் கொண்ட மாய மெய்யியல், ஒரு எழுத்தின் அடிப்படை வடிவமாகப் புரிந்து கொள்ளப்பட்டது. ஏனெனில் அது புனைகதையின்

செயல்திறனை வளர்த்தெடுக்கிறது. அதில் உலகின் ஏற்றுக்கொள்ளப்பட்ட (நிதர்சனமான) பிரதிநிதித்துவம், இயல்புநிலை மற்றும் அறிவுவாதச் சொல்லாடல்களால் கட்டுப்படுத்தப்பட்ட வடிவங்களின் நேரடித் தாக்குதல்களால் கட்டுடைக்கப்படுகிறது.

நேர்மை நோக்கமுள்ள ஒரு கலைப்படைப்பு மீது தணியாத காதல் கொண்டிருந்தார் ருஷ்டி. கலைப்படைப்பு ஒரு வெற்றிடத்தில் நிகழ்வதில்லை என நம்பினார். தாக்கம் என்ற வார்த்தை குறித்து சொற்பிறப்பியலின் குறிப்பிட்டபடி கவித்துவ எண்ணத்துடன் ருஷ்டி ஜாலவித்தை புரிகிறார். அதாவது, ஒரு எழுத்து தெளிவடைதலும் நீரோட்டம் போலவும் கற்பனை கலந்து இயங்க வேண்டும். கற்பனையின் பார்வை ஒரு கண்டம் போலவோ, ஒரு கடல் அலையிற்கோ கருதவில்லை என்கிறார் ருஷ்டி. ருஷ்டி கையாண்ட படிமம் என்ற புனைகதை உத்தி, மேலோட்டமாக ரோலண்ட் பார்த் குறிப்பிட்ட எழுத்தாளனைத் துறந்த படைப்பு எனும் கோட்பாட்டில் வழங்கப்பட்ட பிரதியியல் மற்றும் உட்பிரதியியலின் விவரிப்பை நினைவூட்டுகிறது. பார்த்துக்கும் கூட ஒரு பிரதி என்பது பன்முகப் பரப்பை உள்ளடக்கியது, பல்வேறு எழுத்துக்களை உள்ளடக்கியது; அவற்றில் ஒன்று கூட மெய்மையானது இல்லை; இணக்கமில்லை; முரணுமில்லை. பார்த்தின் கூற்றுப்படி, ஒரு எழுத்தாளன் ஒரு சைகையை அது போலச் செய்கிறான். ஆனால் ருஷ்டிக்கோ ஒரு எழுத்தாளன் கலாச்சாரரீதியான, வரலாற்றுரீதியான, அரசியல்ரீதியான ஒப்பற்ற கணிப்புடன் கதைசொல்லலின் முந்தைய வடிவங்களைக் கலந்து வெளிவேறுதலுக்கு ஒத்ததாக இல்லாத மூன்றாவதாக ஒன்றை உருவாக்குகிறான்.

பார்த்தின் உட்பிரதியியல் கோட்பாட்டுக்கும் ருஷ்டியின் ஆளுமைக் கோட்பாட்டுக்கும் இடையே மேலும் ஒரு வித்தியாசத்தைக் காணலாம். பிரதியின் உள்ளீட்டுச் செயல்பாடு பற்றிய பார்த்தின் பார்வை, அது கலாச்சார, தத்துவார்த்த முக்கியத்துவத்தைப் பெற்றிருந்த போதும், மொழியின், மொழியியல் அமைப்பின் அரூபக் கோட்பாட்டைச் சார்ந்துள்ளது. இதற்கு முரணாக, பிரதியின் உள்ளீட்டுச் செயல்பாடு பற்றிய ருஷ்டியின் பார்வை கலாச்சாரங்கள் எதிர்வினையாற்றும் போக்குகள் பற்றி விவரிப்பதற்கு ஏதுவாக வெளிப்படையாகத் தயார்படுத்தப்பட்டது. இந்த வகையில் ருஷ்டியின் உட்பிரதியியல் பற்றிய கருத்தாக்கம் வெகு நெருக்கமாக கலப்பினக் கருத்தாக்கத்துடன் கட்டுண்டு கிடக்கிறது. ஒரு நாவலில் பிரதிகளும் பிரதியியல் தன்மைகளும் ஒன்று கலப்பது ஒரு சமூகத்தில் கலாச்சாரங்களின் கலவைக்கான ஒரு முரண்.

ஜூலியா கிறிஸ்தெவா மற்றும் பார்த்தின் பின்-அமைப்புவாத உட்பிரதியியல் கோட்பாடுகள் கலாச்சாரரீதியான புரிதல்களைத் தவிர்க்கவில்லை என்றாலும் கூட, மொழியியலின் தளங்களை விட மொழியியலின் அமைப்புகள் மீதான அவர்களுடைய பார்வை கலாச்சார, வரலாற்றுக் குறிப்புகளை ஒன்றிணைக்கவே விழைகிறது. அதேபோல ஜூலியா கிறிஸ்தெவாவின் குறியியல் ஒழுங்கு பற்றிய ஆய்வு, அதீதமான அரூபப் பதங்களுக்கும் பிரதி மற்றும் பிரதியியலுக்கும் சாதகமான மாறுபட்ட உள்ளீட்டைத் தவிர்ப்பதாகத் தோன்றும் மொழியில் குறைந்த அளவேனும் வெளிப்படவில்லை.

ருஷ்டி செயல்படும் சிக்கல் மிகுந்த பகுப்பாய்வு பற்றி தெளிவான வெளிப்பாட்டைத் தருவது கடினம். மொழியில் பூடகமாக உள்ள அதிகார அமைப்புகளை அடையாளம் காணும் பகுப்பாய்வு அது. பிரதித்துவ உறவுகளின் இந்த கலாச்சார ரீதியான புரிதல்கள், பின்நவீனத்துவத்தின் சலிப்பூட்டக்கூடிய வடிவங்களிலிருந்து ருஷ்டியின் எழுத்துக்களை வித்தியாசப்படுத்திக் காட்டுகின்றன. ருஷ்டியின் புனைகதை, விவரணை செயல்பாங்காக பின்நவீனத்துவத்தைக் கையாள்கிறது. ஆனால் அவருடைய பின்நவீனத்துவம், பிரதியியலின் அல்லது மொழியின் படைப்பு மட்டும் அல்ல, அது ஒரு கலாச்சாரக் கலவை. அதில் இலக்கியப் பிரதியுடனான குறிப்பான்களின் சுதந்திர உணர்வு பிரவகிக்கின்றது. ஏனெனில் அது வரலாற்றுரீதியாக செல்லுபடியாகக் கூடியது. மார்க்சியக் கோட்பாட்டாளரான பிரட்ரிக் ஜேம்சன் விமர்சிக்க விழைந்த பின்நவீனத்துவ வடிவங்களில் உள்ள குறிப்பான்கள் வெகுவான சுதந்திர உணர்வு கொண்டவை. ஏனெனில் அவை குறிப்புத்திறன்களின் நிலையான ஒழுங்குடன் இணைக்கப்படவில்லை. ருஷ்டியின் படைப்புகளில் உள்ள குறிப்பான்களும் சுதந்திர உணர்வு மிக்கவை. வரலாறும் காலனியமும் அக்குறிப்பான்களைச் சுதந்திரமாக உலவ அனுமதிக்கின்றன.

ருஷ்டியைப் போன்ற எதிர்-காலனிய எழுத்தாளர்கள் பலரும் நுட்பமாக உபயோகப்படக் கூடிய சொல்லாடலின் கூறுகளைப் புனைந்தவாறு, ஆனால் போதுமான துல்லியமற்றதும் அரசியல்ரீதியான கையாலாகத்தனத்தை நிரூபிக்கத் திராணியற்றதுமான சொல்லாடல் கூறுகளைப் புறந்தள்ளியும் இதே போன்ற உந்துதலைக் கையாண்டார்கள்.

பெண்ணியல் பற்றிய ஐயப்பாடுகளை அவதானிக்கும் பொழுது ருஷ்டியின் முதன்மையான அரசியல் வேகம் முரண்பாடற்ற உள்ளீடுகளின் தேவையற்ற அரசியல் செயல்பாட்டின் ஒரு வடிவத்தை இனம் காண உதவுகிறது.

காலனியச் சொல்லாடல்களும் இனவாதமும் முன்பு சார்ந்திருந்த அடையாளத்தின் புரிதல் மற்றும் தன்வயப்படுத்தும் கருத்துக்களின் வடிவங்களை ஒருங்கிணைத்தல் மீதான தாக்குதலை அங்கீகரிக்கும் எல்லை வரை ருஷ்டிக்கு பின்நவீனத்துவம் உபயோகமானதாக உள்ளது. சமகால பன்முகக் கலாச்சார ஏற்பாடுகளிலும் பின்காலனிய சமூக மெய்யியலிலும் கிளர்ந்தெழுந்த வேர்களை ஆளுமையாகக் கொண்ட தொடர்ச்சியற்ற அடையாளங்கள் மற்றும் சிதிலமடைந்த சுயங்கள் போன்றவற்றின் ஆய்வுகளைத் தூண்டிக்கும் பொழுது ருஷ்டிக்கு இது பெரும் கடினமான கோட்பாடாக மாறுகிறது.

உதாரணமாக லியோடார்ட் பரிந்துரைத்த விளக்கம் தரத்தக்க அனைத்து மெட்டா விவரணைகளின் விமர்சனமும் பூக்கோ விவரித்த அமைப்புகளின் ஆற்றலால் வடிவமைக்கப்படும் அறிவொழுங்குப் போக்கின் ஆய்வுகளும் ருஷ்டியின் பொருண்மையாக நிலைநிறுத்தப்பட்ட ஒப்பந்தங்களைச் சிறப்பாகப் புரிந்து கொள்ள உதவுகின்றன. உண்மையில் பின்நவீனத்துவம் பற்றிய ருஷ்டியின் விளக்கங்கள் பெரும்பாலும் சொல்லாடல் பற்றிய போத்திரியாரின் வடிவங்கள் மீதே நேரடியாகவும் முதன்மையாகவும் நிலைகொண்டுள்ளதாகவே தோன்றுகிறது. அவை ஒரு எழுத்தாளரின் படைப்புக்கும் எழுத்தாளருக்கு அப்பாற்பட்ட உலகத்திற்கும் இடையே உள்ள ஒரு குறிப்புத் தொடர்பை மறுக்கவே விழைகின்றன.

பிரிட்டிஷ் காலனியாதிக்கம் இந்தியாவுக்குக் கொடையாகத் தந்த ஒரு வடிவம் போன்ற மரபார்த்த நாவலுக்கு சவால் விடும் வகையில் ஒரு நாவலைப் புனையவே ருஷ்டி முயல்கிறார். நிச்சயமாக இது ஒரு வடிவத்துடன் ருஷ்டி செயல்படும் ஒரு பாங்கு. ஆனால் ருஷ்டியின் புனைகதை ஒரு நாவலுக்கு எதிராகச் செயல்படவில்லை. அது ஒரு நாவல் செயல்படும் போக்கின் வெளிப்படையான கூறு. உண்மையில் அதுதான் நாவலை ஒரு வகைமைப்பாடாக வரையறுக்கிறது.

நாவலைப் பாதுகாப்பது குறித்து ருஷ்டி எழுதுகிறார்: "இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, ஸ்பெய்ன் மற்றும் இத்தாலி இலக்கியங்கள் எதுவும் இந்தப் புவியில் ருசிகரமாக இல்லையே என ஒரு முழுக் கலை வடிவம் குறித்து மேற்கத்திய ஐரோப்பிய அறிவுவாதிகள் புலம்புவார்கள். பின்காலனியத்தின் முதல் அரை நூற்றாண்டில் மட்டுமே நாவலின் போக்கு சரிந்ததை இலக்கியப் படைப்புகள் நிரூபிக்கின்றன. ஒரு புதிய வகைப் பின்காலனிய நாவல், மையமற்ற நாவல், நிலைமாற்றமடைந்த நாவல், மொழிகளின் ஊடுபாவான நாவல், கலாச்சாரக் கலவையான நாவல், ஒரு புதிய உலக ஒழுங்கில் அல்லது ஒழுங்கற்ற வடிவத்தில் அவ்வளவு எளிதாகத் தோன்றி விடாது. சமகால நாவலின் ஆரோக்கியம் குறித்து ஒரு சிறந்த வியாக்கியானத்தை நாம் கண்டுபிடிக்க வேண்டும்."

அழகியலை ருஷ்டி வரையறுத்ததற்கு எதிரான ஒரு வடிவம் இது. இயல்பானதும் நாம் பகிர்ந்து கொண்டதுமான ஒரு உலகத்தை ஒற்றைப் பரிமாணத்தில் காணும் ஒரு மாயையைப் படைக்க விழையும் மெய்யியல் பிரதி அது.

ஒரு கருவை அனுபவமாக மாற்றும் ஒரு கற்பனையான பதிவை உருவாக்க ருஷ்டி தமது பெற்றோரிடமிருந்து கற்றுக் கொண்டிருக்கிறார். ஆனால் அது ஒரு கருவை ஒரு புனைவாக, இயல்புக்கு மாறான ஒரு விநோதமாக உருமாற்றுகிறது. ருஷ்டியின் நடுயிரவுக் குழந்தைகள் இந்தியப் பிரிவினைக்கு வழி வகுத்த அரசியல் ரீதியான சமரசத்தின் விமர்சனத்தைச் சற்று உயர்த்திப் பிடிக்க விரும்புகிறது.

ருஷ்டி தனது பதினைந்தாவது வயதில் கடவுள் மீதான நம்பிக்கையைக் கைவிடுகிறார். சாத்தானின் கவிதைகளில் ஒரு சாண்ட்விச்சை உண்பதில் இந்த நிகழ்வைப் பதிவு செய்கிறார். அவரது அணுகுமுறை ஒரு மதச்சார்பற்ற சிந்தனையாளராக அவரை மாற்றிய போதும் அவரது நாவல்களில் மதம் ஒரு நிலையான உட்பிரிவைத் திரும்பத் திரும்ப பதிந்த வண்ணம் இருக்கிறது.

வரலாற்றின் தாக்கம் ருஷ்டியின் படைப்புகளில் ஒரு பதிவின் குறிக்கோளாக மாறியதற்கு அவர் கேம்பிரிட்ஜில் வரலாறு பயின்றதும் ஒரு காரணமாக இருக்கிறது. அவர் ஒரு நடிகராக குறுகிய காலமே தொடர முடிந்ததற்கு நடிப்பு ஒரு வரையறுக்கப்பட்ட எதிர்காலத்தையே பெற்றிருப்பதாக ருஷ்டி நம்பினார்.


நடுயிரவுக் குழந்தைகளின் வெற்றிக்குப் பிறகு, உடனே தனது அவமானம் நாவலை எழுதத் தொடங்கினார். அது அப்போதைய பாகிஸ்தானின் வரலாற்றைப் புனைகதையாக்கியது. அவமானம் நாவலுக்குப் பிறகு சாத்தானின் குழந்தைகள் நாவலை எழுதுகிறார். அப்போது ஜனவரி 1988-ல் மரியன்னே விக்கின்ஸை மணக்கிறார். சாத்தனின் கவிதைகளை மரியன்னே விக்கின்ஸுக்கு சமர்ப்பணம் செய்கிறார். இந்த சமர்ப்பணம் பின்வந்த

பதிப்புகளில் மரியன்னேவின் பாதுகாப்பு கருதி நீக்கப்பட்டது. சாத்தானின் கவிதைகள் எழுதும் பொழுது ருஷ்டியின் தந்தை புற்று நோயால் இறந்து போகிறார். அந்த நாவலின் முடிவு இதன் காரணமாக மாறுதலடைந்தது. இந்த இறுதி நேர மாறுதல் ருஷ்டியின் படைப்புகளின் உணர்ச்சி வேகக் காட்சிகளுக்கு ஆதாரமாக உள்ளது. இதன் மூலம் நாவல் அதன் பொருண்மையிலிருந்து விலகி ஒரு கேலிச்சித்திர இடைவெளியைப் பெறுகிறது. சாத்தானின் கவிதைகள் நாவல் கலப்பின சுயங்களுக்கான ஒரு காதல் பாடல் என ருஷ்டி குறிப்பிடுகிறார்.

ஃபத்வாவுக்குப் பிந்தைய புனைகதைகள் ருஷ்டியின் அனுபவங்களைச் சற்றேனும் பக்குவப்படுத்தியது என்றால் அது ஆச்சர்யமில்லை. மூரின் கடைசி மூச்சு ஒரு விதத் தீவிரத்துடன் அச்சமூட்டும் காட்சியுடன் இருள் மூடிய மரணத்துடன் தொடங்குகிறது. ருஷ்டியின் ஏழாவது நாவலான அவள் காலடியில் பூமி, ஃபத்வாவின் பாதிப்புகளை மேலும் வெளிப்படையாக்குகிறது. அந்த நாவல் 1989-ம் வருடம் காதலர் தினத்தன்று வாழ்வை மாற்றுகின்ற, உலகை மறு வடிவாக்கம் செய்கின்ற ஒரு நிலநடுக்கக் காட்சியுடன் துவங்குகின்றது.

1990-ல் ருஷ்டி பிரிட்டனிலிருந்து அமெரிக்காவுக்கு இடம் பெயர்கிறார். இந்த இடப் பெயர்தல் இந்த நாவலை மேலும் செறிவுபடுத்துகிறது. மும்பை, லண்டன், நியூயார்க் என ஒரு முக்கோண நகரங்களின் தாக்கம் நாவலை முற்றிலும் ஒரு புதிய அமைப்பு நோக்கி நகர்த்துகிறது. இந்த நிலைமாற்றம் ருஷ்டியின் எட்டாவது நாவலான ஃப்யூரியையும் சாதித்தது எனச் சொல்லலாம். இந்த நாவலில் வரும் நீலா தான் ருஷ்டியின் மூன்றாவது மனைவியான பத்மா லட்சுமி. க்ளாரிசா லுவார்ட், ருஷ்டியின் முதல் மனைவி சாத்தானின் கவிதைகளில் பமீலா லவ்லேசாவாக வருபவர். இரண்டாவது மனைவி மரியன்னே விக்கின்ஸ், மூரின் கடைசி மூச்சில் உமாவாக வருகிறார்.

மாய நிலவு நோக்கிச் செல்லும் ஒரு இயந்திரப் பறவையின் பயணத்தையும் விஞ்ஞானப் புனைகதையாகச் சொல்கிறார் ருஷ்டி. ஒரு மெய்மையை நசுக்கிப் பிழிந்து ஒரு மாயையைப் படைக்கும் வித்தையையும் இவரால் சொல்ல முடிகிறது. ஒரு நிச்சயமின்மையின் இழப்பைப் பன்முகப் பதிவாக்க முடிகிறது. வரலாற்றுரீதியான அல்லது கலாச்சாரரீதியான வன்மத்தை ஒரு மாய நிகழ்வாகக் கட்டமைக்க முடிகிறது. இதன் மூலம் ஒரு வரலாற்றை எவ்விதச் சமரசமுமின்றிக் கூறிவிட முடிகிறது. இது புனைகதையின் வெற்றி.



(ஆன்ட்ரூ டேவர்சன் எழுதிய "சல்மான் ருஷ்டி" (2010) நூலை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரை.)

ஊர்சுலா ராகவ் கவிதைகள்

பொறுப்பற்ற குடும்பம்

(யவனிகாவுக்கு)

நான்கு வழிச்சாலையில்
அனேகம் பேர் தற்கொலை செய்துகொள்கிறார்கள்
எனது ஆகச்சிறந்த
நண்பனென சொல்லிக்கொண்டலையும் தந்தையை
அம்மா ஓயாது தேடுகிறாள்
என்னை ரகசியமாகவும்
தந்தையை பகிரங்கமாகவும்
காதலிக்கத் தெரிந்து வைத்திருக்கிறாள் அவள்
நானோ
நெடுநாளைய தோழியொருத்தியின்
கோபத்திற்கு ஆளானதை
எனதறையின் வானத்தில் பரப்பியிருந்தேன்
ரூபாய்தாள்களின் மதிப்பு அறியாத
அம்மாவிடம் சில கவிதைகளை
திருடிக்கொண்டிருக்கும் தந்தையுடன்
பொறுப்பற்று திரியும் நானும்
நான்குவழிச் சாலையில் அரளிகள்
கொலைகளையும் செய்துவிடுகிறதெனக் கூறி
அதன் மலர்களைப் பறிக்கும்
இளம்பெண்ணை ரசித்தவாறு
ஏதோ நண்பர்களைப்போல் புகைத்துக் கொண்டிருந்தோம்

அனுதினமும்
பெண்களைப் பற்றியோ
அல்லது
அவர்களின் உறுப்புகளை பற்றியோ
ஏதோவொரு கணத்தில்
பேசிவிடுகிறோம் நாம்
மேசைகள் நிறைந்த
அதுவொரு மதுக்கூடம்
வட்ட மேசையிலிருந்து
சுழற்சியில் பெண்கள் ஒரு அற்புதமென
ஒருவன் கோப்பையை உயர்த்துகிறான்
மெல்லிய சிகரெட் புகையினூடே
ஒருவனின் காதலி
முக்கோண மேசையின்
பொதுவில் வைக்கப்படுகிறது
செவ்வக மேசையில்
அல்குல் வாசனை கசிய
சதுரத்தில் விளம்பரத்தில்
ஒருவள் மேலாடையை கழற்றுகிறாள்
மேசைகள் எல்லாம் கிளர்ச்சியடைய
அந்தரத்தில் நாம் உறங்கவும்
கனவுகள் மென்று விழுங்குகின்றன
அப்பொழுது நாம்
ஆதித்தாயின் மடியில் கிடக்கிறோம்



புலம்பெயர் இலக்கியம்

கலாச்சாரம்/எதிர்க்கலாச்சாரம்



(முத்தம்மாள் பழனிசாமி, நாடு விட்டு நாடு, யுனைடெட் ரைட்டர்ஸ், சென்னை, மு.ப ஏப்.2007)

இரமேஷ் சுப்பிரமணி

தமிழ் மொழியின் செவ்வியல் தன்மை குறித்து இன்று உலக அரங்கில் பேசப்படுவதற்கு புலம்பெயர் இலக்கியமும் காரணமாக இருக்கின்றன. புலம்பெயர் இலக்கியம் பற்றிப் பேசுவதற்கு முன்பு, புலம் பெயர்ந்தவர்கள் குறித்தும் இன்று பேச வேண்டியுள்ளது. காலம் காலமாக ஒரு நிலப்பரப்பில் வாழ்ந்த ஒருவருக்கு, அந்த நிலப்பரப்பே அவருக்குச் சொந்தமான *புலம்* எனப்படுகிறது. தாம் இதுவரை வாழ்ந்த வாழ்விடத்தில் தொடர்ந்து வாழமுடியாத அக, புற நெருக்கடிக்குள்ளாகி வலுக்கட்டாயமாக அங்கிருந்து வெளியேறுகிறவரை/வெளியேற்றப்படுகிறவரை புலம் பெயர்ந்தவராகக் கருதலாம்.

நிலநடுக்கம், வெள்ளப்பெருக்கு, கடும் வறட்சி, போதிய வளமின்மை போன்ற இயற்கைப் பேரழிவுகள் காரணமாகவும் போர்ச்சூழல் காரணமாகவும் மக்கள் தங்களது வாழ் நிலங்களை விட்டுப் பெயர்ந்து, புதிய நிலங்களை நோக்கி நகர்வது இன்றளவும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை புலம்பெயர்தல் என்பது பெரும்பான்மை வளமின்மைக் காரணமாகவே நடைபெற்றுள்ளது. இனி தன் நிலத்தில் வாழமுடியாது என்ற சூழ்நிலையில், மலேசியாவில் இரப்பர் வடிப்பதற்கும் இலங்கையில் தேயிலைக் கிள்ளுவதற்கும் கயானாவில் கரும்பு வெட்டுவதற்கும் பர்மாவில் மூட்டைத் தூக்குவதற்கும் புலம்பெயர்கிறார்கள். இவர்கள் புலம்பெயர்ந்து அடிமையான வரலாறு சோகத்தின் உச்சம். புலம்பெயர்ந்த தமிழர்களின் உழைப்பை அட்டைப்பூச்சியாக உறிஞ்சி வளர்ந்த நாடுகள் பல. இவர்களில் ஒரு சிலர் மட்டுமே தங்களின் இருப்பை அந்தந்த நாடுகளில் உறுதிபடுத்தி நிலைகொண்டுள்ளனர்.

காலனியாட்சியாளர்கள் இந்திய மக்களை, குறிப்பாகத் தமிழர்களை தமது உள்நாட்டுத் தேவைகளுக்காக இடம் பெயர்த்துச் சென்றதோடு நில்லாது, தமது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கும் தீவுகளுக்கும் கொண்டுபோய் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொண்டனர். அவ்வாறு கொண்டுசெல்லப்பட்ட தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில்/தீவுகளில் தற்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்கிற புரிதல் இன்று தேவையான ஒன்றாக இருக்கிறது. தமிழர்களின் வரலாறு என்பது புலம்பெயர்ந்தவர்களையும் சேர்த்ததுதான்.

தமிழில் புலம்பெயர் இலக்கியம் என்றதும் நமக்கு உடனடியாக நினைவுக்கு வருவது இலங்கைத் தமிழர்களின் எழுத்துக்கள்தான் என்பதைத் தவிர்க்க முடியாது; தமிழ்நாட்டிலிருந்து வாழ்வாதாரங்களைத் தேடி இயல்பாகவும் நெருக்கடியின் காரணமாகவும் புலம்பெயர்ந்துச் சென்ற தமிழர்களின் கலை இலக்கிய செயல்பாடுகளையும் வாழ்கை அனுபவங்களையும் மொத்தமாகத் தொகுக்கும்போதுதான் *புலம்பெயர்* இலக்கியம் என்பது முழுமை பெறும். ஈழத்

தமிழர்களின் எழுத்துகள் முன்னிறுத்தப்படும்போது பிற நாடுகளில் புலம்பெயந்துள்ள தமிழர்களின் எழுத்துகள் மறைக்கப்படும் அபாயம் உள்ளது. தங்களுக்கு அந்நியமான நிலத்துக்குப் புலம்பெயர்ந்துச் சென்ற தமிழர்கள், கொஞ்சம் கொஞ்சமாகத் தங்களின் ஆதி நிலத்தின் மொழி, இனம், கலாச்சாரத்திலிருந்து அந்நியப்பட்டுச் செல்வதை ஏற்றுக்கொள்கின்றனர். புதிய நிலம், இனம், மொழி, கலாச்சாரத்தோடு சேர்ந்து ஒரு புதிய அடையாளத்தை உருவாக்குகின்றனர். இவர்களின் உணர்வுகள், அனுபவங்கள், துக்கங்கள், மகிழ்ச்சிகள் முற்றிலும் புதிய பார்வையில் படைப்புகளாக வலம் வருகின்றன.

'இன்றைய மலேசிய மக்கள் தொகையில் 10 சதவீதம் பேர் (சுமார் 17 லட்சம்) தமிழர்களாக இருந்தபோதிலும் அவர்கள் அம்மண்ணில் இறங்கி 188 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் அந்நாட்டின் மொத்த சொத்துமதிப்பில் 1.5 சதம் மட்டுமே அவர்களுக்குரியதாக இருக்கிறது. புலம்பெயர் தமிழர் என்றதும் வரலாற்று ரீதியாக உழைப்புச் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் ஆளான இந்த மலேசியத் தமிழர்கள், நம்மில் ஒருவரது நினைவுக்கும் எட்டுவதில்லை என்பதே உண்மை. குறைந்த அல்லது நடுத்தர வருமானத்துடன் மலேசியாவின் தோட்டப்புறங்களிலும் புறநகர்ப்பகுதிகளிலும் வாழ்ந்துகொண்டிருக்கிற இவர்களைப் பற்றிய இலக்கியப் பதிவுகள் தமிழ்மண்ணை எட்டியுள்ளனவா என்பதை இவ்விடம் நின்று கேட்டுக்கொள்வோம்' என்ற ஆதங்கத்தை ஆதவன் தீட்சண்யா (www.keetru.com) வெளிப்படுத்தியுள்ளார். தென்னிந்தியாவிலிருந்து ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் புலம்பெயர்ந்த தோட்டத் தமிழர்களின் நாட்டுப்புறப் பாடல்களே மலேசியத் தமிழ் இலக்கியத்தின் முதன்மைத் தரவுகளாக விளங்குகின்றன. அவர்கள் அநாசயமாகப் பாடும் நாட்டுப்புறப் பாடல்கள்தான் அவர்களின் வரலாற்றை கட்டமைக்க உதவுகின்றன. இரா. தண்டாயுதம் தொகுத்துள்ள *மலேசிய நாட்டுப்புறப் பாடல்கள்* மலேசியத் தோட்டத் தமிழர்களின் துயரம் மிகுந்த ஆவணமாக உள்ளது.

புலம்பெயர் எழுத்தையும் தமிழ்மொழி உள்வாங்கிக்கொள்ளும்போது அதன் தளம் மேலும் விரிகிறது. உலக அளவில் தமிழ்மொழி ஓர் அடையாளத்தைக் கோருகிறது. இவ்வாறு சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிக்கப்படாத கோவை மாவட்டத்தில் உள்ள *இலுப்பைக் கிணறு* என்ற சிறு கிராமத்தில் இருந்து தோட்டக் கூலியாக மலேசியாவிற்குப் புலம்பெயர்ந்த குடும்பத்தின் கதைதான் *'நாடு விட்டு நாடு'* என்ற தன்வரலாற்றுப் புனைகதை. மலேசியாவிற்குப் புலம்பெயர்ந்த குடும்பத்தின் இரண்டாம் தலைமுறையைச் சார்ந்த திருமதி *முத்தம்மாள் பழனிசாமி* இப்புனைவை உருவாக்கியுள்ளார். கொங்கு வேளாளர்களின் பண்பாட்டை உணர்த்தும் மிக முக்கியமான ஆவணமாக இப்புனைவு உள்ளது. கொங்கு நாட்டின் பண்பாட்டை மலேசியாவில் பரப்பிய விதத்தில் இப்புனைவு மிகுந்த கவனம் பெற்றுள்ளது.

மலேசியாவில் தமிழ்ப்பண்பாட்டைக் கட்டமைக்கும் ஆவணமாக உள்ள இந்தத் தன்வரலாற்று நூல், ஐந்து தலைமுறைகளின் வரலாற்றையும் அவர்கள் கட்டியெழுப்பிய தமிழக-மலேசிய பண்பாட்டையும் நகைச்சுவையோடு பதிவு செய்கிறது. சுதந்திரத்திற்கு முந்தைய மலேசிய நாட்டின் வரலாற்றையும் சுதந்திரத்திற்குப் பிறகான மலேசிய நாட்டின் வரலாற்றையும் புரிந்துகொள்வதற்கு இந்த தன்வரலாற்று நூல் உதவுகிறது. ஐந்து குழந்தைகளுக்கு மூத்தவராகப் பிறந்த பழனிசாமியின் தந்தையார் குப்பண கவுண்டர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சூழ்நிலைக் காரணமாக நரிக்குறவன் ஒருவனைக் கொலை

செய்ய நேரிடுகிறது. குப்பண கவுண்டருக்கு 'கைது வாரண்ட்' பிறப்பிக்கிறது ஆங்கிலேய அரசு; குப்பண கவுண்டர் தலைமறைவாகிறார். குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு பழனிசாமியை வந்து சேர்கிறது. இனி இந்த நிலத்தில் வாழமுடியாது என்ற நிலையில் பிழைப்புத் தேடி மலேசிய மண்ணுக்குப் புலம்பெயர்கிறார்.

இந்தத் தன்வரலாற்று நூல் நிறைய இடங்களில் தன்னை ஒரு தேர்ந்த புனைவாக வெளிப்படுத்திக்கொள்கிறது. இந்நூலாசிரியர் முத்தம்மாள் பழனிசாமி *'FROM SHORE TO SHORE'* என்ற என்ற பெயரில் முதலில் ஆங்கிலத்தில் எழுதினார்; நூல் மிகுந்த வரவேற்பு பெற்றதனால் அவரே இதனைத் தமிழ்ப்படுத்தினார். 2005-ல் முதற்பதிப்பாக வந்த இந்நூல், விரிவாக்கப்பட்டப் பதிப்பாக 2007-ல் வெளிவந்தது.

பினாங்கு துறைமுகத்தில் கப்பலைவிட்டு இறங்கிய பழனிசாமி, பேரா மாநிலத்தில் உள்ள ஓர் இரப்பர் தோட்டத்தில் வேலைக்குச் சேர்க்கப்படுகிறார். ஓய்வின்றி உழைத்து தோட்ட வேலைகள் அனைத்தையும் கற்றுக்கொள்கிறார். சிறிது காலத்திற்குப் பிறகு சொந்த ஊருக்கு வந்து சகோதரர்கள் இருவரையும் மலேசியாவுக்கு அழைத்து வருகிறார்; இவர், வேறொரு தோட்டத்தில் கங்காணியாகச் சேர்கிறார். தமிழ்நாட்டிலிருந்து தோட்ட வேலைக்கு ஆட்களை அழைத்துவரும் பணி இவரிடம் வருகிறது. இதற்கிடையில் பழனிசாமி, தாயார் விருப்பப்படி *வள்ளியம்மாள்* என்பவைத் திருமணம் செய்துகொள்கிறார். தன் இனத்து மக்களை அதிக அளவில் அழைத்து வந்து, கொங்கு வேளாளர்களின் மத்தியில் ஆதர்ச தலைவனாகத் தன்னை முன்னிறுத்திக் கொள்கிறார். அவரை அனைவரும் *'பெரிய தண்டல்'* என்று அழைக்கின்றனர்.

இளம் வயதில் கணவனை விட்டு விலகிய, *பழனியம்மாள்* என்கிற பெண்ணின் குடும்பம் பிழைப்பு தேடி மலேசியா வருகிறது. அவர்களுக்கு ஆதரவு தருகிறார் பழனிசாமி. சிறிது காலம் கழித்து அந்தப் பெண்ணை அவரின் பெற்றோர் விருப்பத்தோடு மனைவியாக அரவணைத்துக் கொள்கிறார். இருவருக்கும் தனித்தனியாக வீடு அமைத்துக் கொடுக்கிறார். இவரின் குடும்பம் மலேசிய மண்ணில் ஓர் ஆலமரமென தழைத்து வளருகிறது. 1939-களில் 150 ஏக்கருக்கு மேல் இரப்பர் தோட்டம் வாங்கி, மலேசிய தேசத்தில் தன்னை நிலை நிறுத்திக் கொள்கிறார். ஒரு கட்டத்தில் குடும்பத்துடன் தமிழ்நாட்டுக்கு வருகிறார். மீண்டும் மலேசியாவுக்குத் திரும்பும் தருவாயில் இரண்டாம் உலகப்போர் ஆரம்பிக்கிறது.

இரண்டாம் உலகப்போர் பழனிசாமியின் வாழ்க்கையைப் புரட்டிப் போடுகிறது. மலேசியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான கப்பல் மற்றும் கடிதப் போக்குவரத்து முற்றிலும் நிறுத்தப்படுகிறது. ஏறக்குறைய ஏழு வருடப் போராட்டத்திற்குப் பிறகு மீண்டும் மலேசியா புறப்படுகிறார். போரின்போது மலேசியா ஜப்பானியர்களின் கட்டுப்பாட்டில் வருகிறது. இக்காலகட்டத்தில் மலேசியா மிகப்பெரும் சீரழிவைச் சந்திக்கிறது. மீண்டும் பழனிசாமி தன்னுடைய கடும் உழைப்பின் ஊடாக மலேசிய தேசத்தில் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் எவ்வாறு காப்பாற்றிக் கரைசேர்த்தார் என்பதுதான் *'நாடு விட்டு நாடு'* என்கிற தன்வரலாற்றுப் புனைகதை வெளிப்படுத்தும் வரலாறு.

பிற ஆசிய/ஆப்பிரிக்க நாடுகளில் குடியேறிய தமிழர்கள்போல் மலேசியத் தமிழர்கள் தங்களுடைய இன அடையாளங்களான மொழி, பண்பாடு மற்றும் சமயம் சார்ந்த நம்பிக்கைகளை இன்னும் முழுமையாகத்

தொலைத்துவிடவில்லை என்பதை இந்நூல் நிறுவிச் செல்கிறது. பழனிசாமி தம்முடைய பிள்ளைகள் அனைவருக்கும் கொங்கு வட்டாரப் பெயர்களான பொன்னம்மாள், வீரம்மாள், முத்தம்மாள், தெய்வானை என்று மரபார்ந்த பெயர்களையே வைக்கிறார். இந்நிலை ஒருசில மாற்றங்களை உள்வாங்கிக்கொண்டு இன்று வரையில் தொடர்வதைப் பார்க்கமுடிகிறது. தமிழ்ப் பண்பாட்டின் மிக முக்கியமான அடையாளங்களில் ஒன்று சிறுதெய்வ வழிபாடு; ஏறக்குறைய நான்கு தலைமுறைகளாக தங்களின் தாய் தெய்வ வழிபாட்டை பழனிசாமியின் குடும்பம் தொடர்வதைப் இப்புனைவு வழி அறியமுடிகிறது.

"வழியில் காட்டுப் பகுதியில் ஒரு பெரிய மரம் இருந்தது. அந்த மரத்தடியில் கல் ஒன்றை வைத்து அங்கு வேலை செய்வோர் முனியாண்டி சாமியைக் கும்பிடுவார்கள். நாங்களும் அங்கு காட்டுப் பூவைப் பறித்து வைத்துக் கும்பிடுவோம், எங்களைக் குரங்குகளிடம் இருந்து காக்கச் சொல்லி. இன்னும் நானும் என் பிள்ளைகளும் பேரப் பிள்ளைகளும் அங்கு சென்று கடவுளை வணங்குவோம். அறுபத்தைந்து வருடங்களுக்கு மேல் ஆகிறது. இன்னும் அந்த மரத்தடிக் கோவில் உள்ளது". (பக்.35) என்று குறிப்பிடுகிறார் முத்தம்மாள்.

பேயோட்டுதல், சாமியை வரவழைத்து கேட்டல், மரங்களில் சாமி இருப்பதாக நம்புதல் போன்ற மூடநம்பிக்கைகளும் மலேசியாவில் தொடர்வதைப் பார்க்க முடிகிறது. தமிழர்களின் இந்த நம்பிக்கைகள், சீனர்களிடமும் மலாய்க்காரர்களிடம் தொற்றிக்கொண்டு தீவிரமடைகின்றன; தமிழர்களின் பாரம்பரிய ஆட்டங்களில் ஒன்றான காவடியாட்டம் சீனர்களின் விழாக்களில் பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது (பக்.229). தமிழ்க் கடவுளான முருகப்பெருமான், மலேசியர்களின் முக்கியத் தெய்வங்களில் ஒன்றாகப் பார்க்கப்படுவதற்கு புலம்பெயர்ந்தத் தமிழர்களின் பங்கு முக்கியமானது.

தொடக்கக் காலத்தில் வணிகத் தொடர்புகளின் பொருட்டுதான் தமிழர்கள் தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்துள்ளனர். கடாரத்தில் பூசாங் நதிக்கரையில் குடியிருப்புகளை அமைத்தனர். வந்தவர்கள் சைவர்கள் என்பதால் பூசாங்கில் சிவாலயங்களையும் கட்டினர். அவ்வாலயங்களின் எச்சங்கள் இன்றும் இருக்கின்றன. அவை தமிழன் வரலாற்றைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. மேலும் தமிழர்களிடம் இருந்த நம்பிக்கை சார்ந்த சில சடங்குகள், சீனர்களிடமும் மலாய்க்காரர்களிடமும் பரவியதைப்போன்று சீனர்களிடம் இருந்த சில நம்பிக்கைகள் இந்தியர்களிடம்/தமிழர்களிடம் ஒட்டிக்கொண்டதாகவும் குறிப்பிடுகிறார். குறிப்பாக அதிர்ஷ்ட எண்களைத் தேர்ந்தெடுத்து லாட்டரி சீட்டு வாங்கும் நம்பிக்கை சீனர்களிடம் அதிகமாக இருந்ததாகவும் நாளடைவில் இந்த நம்பிக்கை இந்தியர்களுக்கும் பரவியதாகக் குறிப்பிடுகிறார் (பக்.203).

புலம்பெயர்ந்த தமிழர்களுடன் ஏற்பட்ட தொடர்பின் காரணமாக மலேசிய நாட்டு மக்களும் பல நன்மைகளைப் பெற்றுள்ளதை இந்நூல்வழி அறியமுடிகிறது. காடாகக் கிடந்த நிலத்தை விவசாயம் செய்ய தமிழர்கள் பல்வேறு நிலைகளில் உதவி புரிந்துள்ளனர். பாசன முறைகளை வரைமுறைப் படுத்தியதில்கூட தமிழர்களின் பங்கு அளப்பரியது. தமிழர்களைப் போன்று பருத்தி மற்றும் பட்டாடைகளை நெசவு செய்து அணியும் பழக்கமும் தமிழர்களின் தொடர்பால் ஏற்பட்டது. தமிழ் இசை கற்றல், நடனம் பயிலுதல், கதைப்பாடல்களைப் படித்தல்/நாடகமாக நிகழ்த்துதல் போன்ற செயல்பாடுகளை மலேசிய மக்கள் தங்கள் கலைகளோடு பிணைத்துக் கொண்டதையும் இந்நூல்வழி அறிய முடிகிறது. இராமாயணம், அல்லி அரசாணிமாலை, தேசிங்கு

ராஜன் கதை போன்ற தமிழகத்தின் மிக முக்கியமான கலை வடிவங்களை உலகம் முழுக்கக் கொண்டுபோய் சேர்த்ததில் புலம்பெயர் தமிழர்களின் பங்கு குறிப்பிடத்தகுந்தது. திருவிழாக் காலங்களில் நாடகக் குழுக்களை வழவழைத்து நாடகங்களை நிகழ்த்தும் வழக்கமும் (பக்.126) இன்றுவரை மலேசியாவில் தொடர்கிறது. அக்கால கட்டத்தில் *ரத்தினப்பா நாடகக்குழு* மிகவும் பிரபலமாக இருந்ததாக நூலாசிரியர் குறிப்பிடுகிறார். தமிழ் நடிகர் எஸ்.எஸ்.இராஜேந்திரன் அக்கால மலேசியத் தமிழர்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்பதையும் அறிய முடிகிறது.

பொதுவாகப் பண்பாடு என்பது இலக்கியம், இசை, கோயில்கள், சடங்குகள், நம்பிக்கைகள், தொழில்கள் போன்ற முக்கியக் கூறுகளை உள்வாங்கியவையாக அமைகின்றன. காலமாற்றத்தில் நிலம் விட்டு நிலம் பெயரும்போது மேற்கண்டக் கூறுகள் சில மாற்றங்களைச் சந்திக்கும். இதன்காரணமாக இதுவரை பின்பற்றிவந்த பண்பாட்டு விழுமியங்கள் சில மாற்றங்கள் அடைவதைத் தவிர்க்க முடியாது. *'பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம், முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும்'* என்பது புகழ்பெற்ற மானிடவியலறிஞர் எட்வர்ட் பர்னட் டைலரின் பண்பாடு குறித்த வரையறை என்று பக்தவத்சலபாரதி (பண்பாட்டு மானிடவியல்.பக்.152) குறிப்பிடுகிறார். புலம்பெயர்ந்த மலாய் தமிழர்களின் பண்பாடும் ஒருசில மாற்றங்களைச் சந்திக்கின்றது.

இந்தியப் பெண்கள் இரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும்போது, இந்தியப் பண்பாட்டின் அடையாளமாகக் கழுத்தில் தொங்கும் ஒரு பெண்ணின் தாலி, இளம் இரப்பர் செடியில் மாட்டி செடி ஒன்று ஒடிந்துவிடுகிறது. தோட்டத்தைக் கண்காணித்து வந்த ஐரோப்பியன், 'இந்தியப் பெண்கள் அனைவரும் நாளை முதல் தாலியைக் கழட்டிவிட்டு வேலை செய்யவேண்டும்' என்று ஆணை பிறப்பிக்கிறான். *"இந்தியப் பெண்கள் யாவரும் தாலியைக் கழற்ற வேண்டுமானால் அத்தனை ஆண்களும் மடியவேண்டும். இது அவருக்குத் தெரிய ஞாயமில்லை"* (பக்.44) என்று பதிவு செய்கிறார்.

காலம், தாலி குறித்த இந்தியப் பண்பாட்டு விழுமியத்தை மாற்றியமைக்கிறது. *"அம்மா என்னை மன்னித்துவிடு. உன்னிடம் எப்படிச் சொல்வதென்று தெரியவில்லை. எத்தனையோ நாள் சொல்ல நினைத்தேன். பயம் என்னைத் தடுத்தது. சொல்லித்தான் ஆகவேண்டும். அம்மா எனக்கு ஒரு ஆண் குழந்தை இருக்கிறது. பிறந்து மூன்று மாதங்கள் ஆகிறது. ஆஸ்ருன் குடும்பத்தினருக்கு அதில் கவலையில்லை. அவர்கள் கலாச்சாரப்படி திருமணத்திற்குமுன் குழந்தை பெறுதல் சகஜம். பெரும்பாலானோர் திருமணத்தை முக்கியமாகக் கருதுவதில்லை".* (பக்.248) என்று முத்தம்மாள் பழனிசாமியிடம் கூறுகிறான் அவரது மகன் கண்ணன். எந்தவித எதிர்ப்பையும் வெளிப்படுத்தாமல் மகனின் கோரிக்கையை ஏற்றுக் கொள்கிறார். பழனிசாமியின் மூன்றாவது மற்றும் நான்காவது தலைமுறை மேலை நாட்டு கலாச்சாரத்தை உள்வாங்கிய புதிய கலாச்சாரத்தைக் கட்டமைப்பதை உணரமுடிகிறது. ஒரு சில வருடங்களுக்குப் பிறகு அதே மகன் விவாகரத்துக் கோரிக்கையை முன்வைக்கிறான். *"மேலை நாட்டுக் கலாச்சாரத்தை ஏற்றுக் கொள்ளவும் முடியாமல், விடவும் முடியாமல் இந்தியக் கலாச்சாரத்தில் ஊறிப்போனவனான கண்ணன் தடுமாறினான்"* (பக்.256)

என்று மாற்றுக் கலாச்சாரத்தினை ஏற்றுக்கொள்வதில் உள்ள சிக்கலைப் பதிவு செய்கிறார். கொங்கு வட்டாரப் பெயர்களை வாரிசுகளுக்கு வைக்கும் பழக்கமும் ஆட்டம் காண்கிறது. கண்ணன் தன்னுடைய மகனுக்கு *'உல்வுர்'* என்று பெயர் வைக்கிறார். கொங்கு வட்டாரம் ஐஸ்லாந்தோடு இனக்கலப்பு செய்துகொள்கிறது.

1400களில் 'மலாக்கா' எனும் நகரம் பரமேசுவரன் என்ற மன்னனால் மலாயாவில் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. இவருடைய அரச தலைமுறை 110 ஆண்டுகள் மலாக்காவை ஆட்சி செய்ததாகவும் கூறப்படுகிறது. தென்கிழக்கு ஆசியாவில் *மலாக்கா* தலைசிறந்த வணிக நகரமாக இருந்தபோது மீண்டும் வணிக நோக்கத்திற்காகத் தமிழர்கள் மலேசியாவுக்கு வந்திருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் உள்நாட்டு பெண்களை மணந்துகொண்டு இங்கேயே தங்கிவிட்டனர். இவர்களின் தலைமுறை இன்று தங்களின் மொழி, இன, சமய, பண்பாட்டு அடையாளங்களை மாற்றிக்கொண்டு வாழ்கின்றனர். மலாய் மொழியின் பண்பாட்டுடன் ஏற்பட்ட கலப்பின் காரணமாக இப்போது புதிய இனம்போல மாறியிருக்கின்றனர். இவர்கள் *'மலாக்கா செட்டிமார்கள்'* என்று இன்றைய மலேசியாவில் அடையாளப்படுத்தப் பட்டுள்ளனர்.

மலாக்கா செட்டிமார்கள் தமிழர் பரம்பரையில் வந்தவர்களாக இருந்தாலும் மலேசியத் தமிழர்களிடமிருந்து தனித்தே இருக்கின்றனர். நடை, உடை, மொழி யாவற்றிலும் மலாய்க்காரர்கள். ஆனால் மதம் மட்டும் இந்துமதம். அதை மாற்றிக்கொள்ளவில்லை. *'மலாக்கா பாபாஸ்'* என்ற சீன சமூகம்கூட இருக்கிறது. அவர்களும் நடை, உடை, மொழியால் மலாய்க்காரர்கள். அவர்களது சமயம், புத்த சமயம் (பக்.218) என்ற இனமாற்ற வரலாறுகளை பதிவு செய்கிறார். இந்த கலாச்சார மாற்றங்களைத் தவிர்க்க முடியாது என்பதற்கு முத்தம்மாள் பழனிசாமியின் குடும்பமே சான்று. முத்தம்மாள் ஓர் ஐரோப்பியனைத் திருமணம் செய்துகொள்கிறார்; இவரது மகனுக்கு ஐஸ்லாந்து நாட்டைச் சார்ந்த கிறுத்துவமதப் பெண்ணைத் திருமணம் செய்து வைக்கிறார். *'என் தங்கைகள் யாவரும் கவுண்டர் அல்லாதாரை மணந்தார்கள்'* (பக்.200) என்கிறார்.

'நாடு விட்டு நாடு' என்ற இந்நூலை கூர்ந்து அவதானிக்கையில், மலேசியத் தமிழர்களின் அடுத்து வருகின்ற தலைமுறைகளில் பண்பாட்டு ரீதியில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும் என்பதைத் தெளிவாக்குகிறது. தங்களின் வாழ்வியல் அடையாளங்களான மொழி, இனம், சமயம், கலை, பண்பாடு, சடங்குகள், வரலாறு ஆகிய அனைத்தையும் படிப்படியாக இழக்கவேண்டிய நிலை ஏற்படும். புதிய மலேசிய சமூகமாக உருமாற்றம் கொள்ளக்கூடிய நிலைமை வந்தாலும் வியப்பதற்கில்லை.

இப்புனைவு இந்தியப் பண்பாடு குறித்து, குறிப்பாகத் தமிழ்ப் பண்பாடு குறித்து சில எதிர்க் கதையாடல்களையும் முன்வைக்கிறது. முத்தம்மாள், தந்தையின் இரண்டாவது மனைவி பழனியம்மாளுக்குப் பிறந்தவர். பழனிசாமி-பழனியம்மாள் தம்பதியினர் கடைசிவரை தாலி கட்டிக்கொள்ளாமலேயே ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழ்கின்றனர். இதில் முதல் மனைவிக்கு எந்தச் சிக்கலும் இல்லை; ஆனால் அவரின் உறவினர்கள் பண்பாட்டுக் காவலர்களாக நடந்துகொள்கின்றனர். பழனியம்மாளுக்குப் பிறந்த எட்டு பிள்ளைகளையும் பழனிசாமியின் வாரிசுகளாக ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். ஒரு கட்டத்தில் பழனிசாமி இறந்துபோகிறார். அவரது இறுதிச் சடங்கில் பங்கேற்க கலாச்சாரக் காவலர்களால் தடை விதிக்கப்படுகிறது. இந்த நிகழ்வைப் பின்வருமாறு எழுதுகிறார்: *"என் சுற்றத்தாரில்*

ஒரு சிறு கூட்டம் இன்று வரையில் அம்மாவைப் பற்றிப் பேசும்பொழுது அவளை 'முண்டை' என்றுதான் குறிப்பிடுவார்கள். அதாவது கைம்பெண் எனப் பொருள்படும். நாங்கள் எட்டுப் பிள்ளைகளும் சட்டப்படி அய்யனுடைய பிள்ளைகள் அல்ல என்றும் முத்திரை குத்திவிட்டார்கள். யாரோ ஒருவர் அய்யன் இறந்தபோது, 'இந்நேரம் இந்தியாவில் கிராமமாக இருந்தால் எட்டுப் பிள்ளைகளையும் தாயுடன் உயிருடன் கொளுத்தி விடுவோம்' என்று மார்தட்டிப் பேசினாராம். மலாயாவாக இருந்ததால் நாங்கள் பிழைத்தோம்." (பக்.188-89) கடைசி வாக்கியத்தை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது.

தமிழர்கள் இரப்பர் தோட்டத்தையே நம்பி வாழ வேண்டிய சூழ்நிலையில் தோட்டத்தில் மக்களுக்கு வேண்டிய சில அடிப்படை வசதிகளை ஐரோப்பிய நிர்வாகம் செய்து கொடுத்திருந்தது; குடியிருக்க வீடு, குடிநீர், கூத்துமேடை குறிப்பாக கள்ளுக்கடை. கள் விற்பனையும் கள்ளச்சாராய விற்பனையும் தமிழர்கள் மத்தியில் சிறப்பாக நடைபெற்றது. சீனர்கள் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களாகவும் தமிழர்கள் அதனை வாங்கிக் குடிப்பவர்களாகவும் இருந்திருக்கின்றனர். கடல் கடந்து சென்றும் இந்தப் பழக்கம் தமிழர்களை விட்டுப் போகவில்லை. தமிழர்கள் இப்பழக்கத்திற்கு அடிமையாக இருப்பது ஐரோப்பியர்களுக்கு சாதகமாக இருந்தது. தமிழர்களின் குழந்தைகள் கல்வி கற்பதில் ஐரோப்பியர்களுக்கு அவ்வளவாக விருப்பமில்லை. அவர்கள் படித்து வேறு வேலைக்குச் சென்றுவிட்டால் தோட்ட வேலை பாதிக்கப்படும் (பக்.36) என்று நினைத்தனர்.

பொருளாதாரத்தில் தமிழர்களைவிட சீனர்களே முதலிடத்தில் இருந்தனர். கள் குடித்த காரணத்தாலேயே தமிழர்கள் மிகவும் பின்தங்கி இருந்தனர் (பக்.156) என்று வேதனையோடு குறிப்பிடுகிறார் முத்தம்மாள். ஆனால் பழனியம்மாள், 'பட்டினி கிடந்தாலும் பரவாயில்லை, பிள்ளைகள் படிக்கவேண்டும்' என்ற எண்ணம் உடையவராக இருந்திருக்கிறார். பழனியம்மாள் அடுத்தத் தலைமுறையை, படித்தத் தலைமுறையாக உருவாக்கியிருக்கிறார். மகள் முத்தம்மாளை ஆசிரியராகவும் மகன் இராமசாமியை மலேசிய தேசியப் பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளராவும் உருவாக்கியதில் இருந்தே இதனைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

இத்தன்வரலாற்றுப் புனைவை வாசிப்பதன் ஊடாக மலேசியத் தமிழ்ப் பண்பாடு குறித்து சில புரிதல்கள் நமக்குக் கிடைக்கின்றன.

கிக்கிஜிரோவும் ஒரு தட்டானும் - சிறு குறிப்பு

சாகிப்கிரான்

சமீபத்தில் ஜப்பானிய இயக்குநர் டகாசி கிடானோவின் கிக்குஜிரோ என்ற படத்தைப் பார்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதை ஏற்கனவே பலமுறை பார்த்திருந்தாலும் ஒரு சில விஷயங்களை நினைவுப்படுத்திக் கொள்ள அல்லது தக்க வைத்துக் கொள்ள மீண்டும் பார்க்க வேண்டியிருந்தது.

அதற்கு முன் இங்கே நாம் தெளிவுப்படுத்திக் கொண்டாக வேண்டியவை

1. **சினிமா என்பது என்ன?**
2. **சினிமாவின் சாத்தியங்கள் எவை?**
3. **நம்மிடமிருந்து சினிமா எதை எடுத்துக் கொள்கிறது?**
4. **நவீன சினிமா எதை வடிவமைக்கிறது?**
5. **ஒரு தட்டான் சினிமா பார்க்குமா?**



சினிமாவை காட்சிகளின் தொகுப்பாக்கும் ஒரு வறட்டுத் தன்மையே அதை கலை வடிவமாக்கும் தன்மையிலிருந்து விலக்கி வைக்கிறது. நமது சினிமா அனுபவம் அளப்பறியது. அது தன்னுள் கொண்டிருக்கும் அனுபவ படிவுகள் மிக மேலோட்டமான. மனப்பரப்புகளற்ற வெட்டவெளியின் வெற்று சாயங்களாகவே இருக்கின்றன.

நாம் சிலவற்றை நம்புகிறோம். அவை இயல்பினில் சினிமாவைப் போல வேறொன்றாகவே இருக்கின்றன. இங்கே ஒரு கதையைச் சொல்ல வைப்பதே நமது ஆகச் சிறந்த செயல்பாடாக வலுப் பெற்றிருக்கிறது. ஆனால் சினிமாவின் சாத்தியமானது, உணர்வுகளின் வழியாக ஒரு கதையை அல்லது ஒரு தரிசனத்தை மையப்படுத்தவதாக இருக்கிறது. தரிசனம் என்பது மனிதனின் ஒரு மனநிலையை, அதாவது மன ஒழுங்கின் கட்டமைப்பை சாத்தியமாக்குவதன் தீவிரத் தன்மைக்கு அவனையறியாமல் கொண்டு செல்லும் ஒரு செயல்பாட்டைக் குறிக்கிறது.

சினிமா ஒரு வர்த்தகத் தயாரிப்பாகி, இலக்கியத்தை, கலையை இரண்டாமிடத்திற்குத் தள்ளிவிட்டிருக்கிறது. அல்லது அது தனது சாதகத்தை இந்த இரண்டாமிடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள இயலும் என நம்ப வைத்திருக்கிறது. எனவே நாம் வாழ்க்கையிலிருந்து சினிமாவை எடுக்காமல், சினிமாவிலிருந்து வாழ்வை அடைந்து கொண்டிருக்கிறோம்.

இத்தகைய பிற்போக்குத்தனமாக சினிமா, வன்முறை, சிதைவுற்ற உறவுகள், பாலியல் பிறழ்வுகள், அரசியல் சாக்கடைத்தனம், கொஞ்சமும் தேவையற்ற நீதியன்ற தராசுகள், முற்றிலும் இயல்புணர்வை மறுக்கும் தன்மையை அடைந்திருக்கும் புரிதலற்ற மனோநிலையை வடிவமைப்பதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

ஆனால் இதிலிருந்து தமிழ் சினிமா தப்பிவிட்டது என்னும் ஆடம்பரக் கூச்சல்கூட மேலே குறிப்பிட்ட வகைமைகளின் ஒன்றாக அமைந்துவிடுவதே மிகப்பெரிய அபத்தமாக நமது சினிமாவில் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது.

ஒரு தட்டான் சினிமா பார்க்குமா?

கிக்குஜிரோவில் ஒரு தட்டான் சினிமா பார்க்கிறது.

கதை இதுதான். மசாவோ, ஆரம்பப்பள்ளியில் படிக்கும் சிறுவன், பாட்டியுடன் ஒரு நகரத்தில் வசிக்கிறான். அப்பா இல்லை. அம்மா தொலைதூர நகரத்தில் இவனுக்காக வேலை செய்து கொண்டிருக்கிறாள். இதுவே அவனுக்கு சொல்லப்படும் தகவல். ஒரு கோடை விடுமுறையில் எப்படியும் அம்மாவை அந்த நகருக்குச் சென்று பார்த்துவிட வேண்டும் என்று முடிவெடுக்கிறான். அவனுக்கு பக்கத்து வீட்டு பெண்மணி உதவுகிறார். செலவுக்கான பணத்தை கொடுத்து, தனது கணவரையும் அவன்கூட அனுப்புகிறார். அவர் சூதாடும், சில்லறைத் திருட்டுகளில் ஈடுபடும் ஒரு நடுத்தர வயதுக்காரர். ஒருவகையான கோமாளித்தனமான போக்கிரி. அவர்தான் இயக்குநர் டகேசி கிடானோ. நகரை விட்டு கிளம்பும் முன்னமே ஜப்பானின் பிரபலமான சைக்கிள் பந்தயத்தில் எல்லா பணத்தையும் இழந்துவிடுகிறார்.

ஆனால் அந்தத் தொலைதூர நகரத்திற்குச் செல்வதற்கான ஒரே வழி, ஆங்காங்கே கிடைக்கும் இலவச சவாரிகளில் போய்ச் சேருகின்றனர். சில வாகனங்கள் அவர்களை அழைத்துச் செல்ல மறுக்கவும் செய்கின்றனர். அவனிடம் அவனும் அவன் அம்மா பாட்டியுடன் இருக்கும் ஒரு புகைப்படமும் ஒரு முகவரியும்தான் இருக்கின்றன.

தெருமுனையிலேயே சிறுவனை நிற்கவைத்துவிட்டு, அவர் அந்த முகவரியுள்ள வீட்டை நெருங்குகிறார். அங்கே அவள் மற்றொருவருடன் ஒரு பெண் குழந்தையுடன் சிரித்தபடி வெளியே வருகிறாள். அவர் அதிர்ச்சியடைந்தபடி பையனிடம் ஓடிவருகிறார். அவன் அழுகிறான். அவள், புகைப்படத்திலுள்ள பெண் இல்லை. உன் அம்மா வேறு முகவரியில் இருப்பார். தேடுவோம் என்று திரும்புகின்றனர். இவ்வாறு அந்த விடுமுறை கழிந்து பள்ளி ஆரம்பிக்கிறது.

இந்த ஒற்றை நரம்புக் கதை படத்தின் ஒரு இழைதானே தவிர, அது கதையாக இருப்பதில். இந்த பயணத்ினூடே அவர்கள் கடக்கும் மனிதர்களின் வழியாகவே அவர்களின் செயல்பாட்டு உணர்வுகளின் வழியாகவே படம் விரிகிறது.

படத்தில் சலனமற்ற காமிரா, சுவாரஸ்மற்ற தன்மையுடன் அல்லது ஒரு தீர்க்கமான பார்வையுடன் காட்சிகளை விவரிக்கிறது. காட்டப்படும் ப்ரேம்கள் விரிந்த கோணத்தில், அவன் உணரும் தனிமையை நமக்கு பூடகமாக, இயல்பின் ஒரு சிறு கோடும் கழிந்துவிடாமல் கையாளப்படுகிறது. ஒளிப்பதிவு, கட்சுமி யனாகிஷிமா.

படத்தில் இசையானது, மிக நுட்பமாக, காட்சிகளை தனது கட்டுப்பாட்டில் கொள்ளாமல், காட்சிகளின் பிம்பங்கள் உருவாகும் அடிப்படை உணர்வின் மேலே படியும் இயல்புணர்வாக நீள்கிறது. அதாவது சினிமாவின் துவக்க காட்சிகளில், மசாவோவும் அவன் நண்பனும் வீடு திரும்பும்போது அவர்களின் ஓட்டத்திற்கு இயைந்து செல்லும் அது, ஒரு வாயிலைக் கடந்ததும் நண்பர்கள் வேறுவேறு திசைகளில் பிரிந்தவுடன், அங்கே இசையானது மௌனித்துவிடுகிறது. இது அவனது தனிமையை மிக வலுவான ஒரு நிலையில் விவரிப்பதாக மாறிவிடுகிறது. அதே போல அவன் தனது அம்மாவை வேறு ஒரு நிலையில் கண்டு திரும்பும் கனமானது, துக்கமும், யாராலும் மீட்டுத்தர இயலாத ஒரு தனிமையுணர்வை நுட்பமான இசைப்படிமங்களால் மிகைப்படுத்தாமல் பிரமிக்க வைக்கிறது. அது பிரமாண்டமாக இல்லாமல், மிக எளிய ஒரு சிம்பொனியாக விரிகிறது. இசையானது படத்தை நகர்த்தாமல் படம் இசையை கையாள்கிறது. இது நவீன சினிமாவிற்கு பெரும் சவாலாக விரியும் ஒன்று. இசை ஜோயி ஹிஷெய்ஷி.

மசாவோ, எதற்கும் உடனே பதிலளித்துவிடக் கூடாதவனாக, தனிமையும் துயரமும் பெருக்கிய உள்முகப் பார்வை கொண்டு, எல்லாவற்றிற்கும் உம் என்று மட்டும் பதில் வைத்திருக்கும் ஒரு சிறுவன். படமானது ஒரு ஓவியத்தில் கண்களில் இருக்கும் தேவதை உருவத்தை விரித்துக் காட்டும் விதமாகவே ஆரம்பிக்கிறது. குழந்தைகளுக்கான ஜப்பானிய பழங்கதை வடிவமொன்று அக்குழந்தையின் ஆழ்மனத்தில் தனது அம்மாவை அப்படி கற்பித்துக் கொள்வதாக மாற்றம் கொள்வது படம், ஒரு குழந்தையின் பார்வைப் பக்குவத்தில் நகர்வதை அறிவுறுத்துகிறது. அவனுக்கான தனிமையை அந்தப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் விளையாட தெரியாத கால்பந்துடன் அகண்ட ஒரு கோணத்தில் சொல்லும் விதம், அவனது இறுதி முயற்சியாக, அந்தத் தனிமையை சமன்படுத்தும் ஒரு செயலாகவும் விரிகிறது.



சைக்கிள் பந்தையத்தில் கிட்டானோ தேர்ந்தெடுத்து பணம் கட்டும் எண்கள், மசாவோவிடம் கேட்கப்பட்ட எண் ஜோடிகள். ஒவ்வொருமுறையும் புதிய உற்சாகத்துடன் அவர் கேட்பதும் அவன் தனது குழந்தைத்தனமான எண் ஜோடிகளைச் சொல்வதும் இந்த விளையாட்டின் அபத்தத்தையும் அது விளைவிக்கும் படு அபத்தமான லாஜிக்குகளையும்

கட்டமைவதை விவரிக்கிறது. ஒரு கட்டத்தில் பணம் அனைத்தும் இழக்கும் நிலை வரும் போது, அவனைக் கோபத்துடன் தலையில் அடிப்பதாக ஒரு காட்சி வருகிறது. மறுகணம் வேறொரு நகரும்போது வலியாக சுற்றி வைக்கப்பட்டிருக்கும் மசாவோவின் தொப்பியை அவர் அடிப்பது புரியும். அதேபோல் தங்கும் விடுதியிலிருந்து ஒரு பெரிய விவாதத்திற்குப் பிறகு அவர்கள் கிளம்பும் போது அவர் தலையில் அடித்துக் கிளம்பச் சொல்லும் சிறுவன் மசாவோ இல்லை. வேறு ஒருவன். இந்த காட்சியானது ஒரு அதீதக் காட்சியாகவே வருகிறது. அடிப்படையில் மசாவோவின் மனநிலையில் காட்சிகள் நகர்த்தப்படுவதால் அவன் தனக்கான எந்த, வன்முறையையும், தன்னிலிருந்து விலக்கியே வைக்கிறான்.

அதாவது மசாவோவை பாலியல் வன்முறைக்கு வற்புறுத்தும் ஒரு வழிப்போக்கன் தொடர்ந்து அவனது கனவில் வந்து கொண்டே இருப்பான். அவன் ஜப்பானிய பாரம்பரிய உடையணிந்து ஜப்பானிய மரபுவழி நடனமொன்றை ஆடுகிறான். அங்கே அவன் அம்மாவும் இருப்பதாக வரும். ஆனால் வழிப்போக்கனின் ஒவ்வொரு அசைவையும் அந்தக் குழந்தை உள்ளம் ஒரு ஜாலியாகவே பார்க்கிறது. அதாவது மசாவோ, தனது மனநிலையிலிருந்தே படத்தை, தன் உணர்வு நிலைக்கு ஏற்றபடி நகர்த்துகிறான். குழந்தைகள் தங்கள் கைகளுக்கு எந்த நெருப்பும் சுடாது என கற்பித்தவோடு எதையும் செய்யத் துணிவதைப் போல படம் முழுக்க ஒரு செய்கையின் உணர்வு நிலையே மேலோங்கி நிற்கிறது. அதன் உச்சக்கட்டமாக, அவர்களை ஏற்றிச் செல்லாத ஒரு ட்ரக் ஓட்டுநருக்கும் கிட்டானோவுக்கும் நடக்கும் கைகலப்பை மிக தொலைதூர காட்சியாகக் காட்டப்படுகிறது. வீடுகளில் நடக்கும் சிறு சண்டைகளைக்கூட தாங்கும் இயல்பற்ற குழந்தைகள் கண்களில் மிரட்சியுடன் சண்டையின் அவசியமற்ற வன்முறையை விளங்கிக் கொள்ள இயலாது, அவர்களின் புரிதலுக்கு அப்பால் இருக்கும் அத்தகைய ஒரு நிகழ்வு, படத்தில், லாங்ஷாட்டில் புரிந்து கொள்ள இயலாத தோற்றத்துடன் காட்டப்படுவது, பார்வையாளனிடம் ஒரு குழந்தையின் உணர்வு தளத்தை வேண்டுவதே. அல்லது அத்தகைய ஒரு புரியாத் தன்மையைச் சாத்தியப்படுத்துவதே.

மசாவோவும் கிட்டானோவும் தங்களது பயணத்தின் நீட்சியில் சந்திக்கும் ஒவ்வொரு வழிப்போக்கரும் மேலே சொன்ன அந்த உணர்வுநிலையில் நகர்த்தப்படும் காட்சிகளே. காரில் வந்து அவர்களை கொஞ்ச தூரத்திற்கு கூட்டிச் செல்லும் இளம் ஜோடி ஒன்று, நடமாடும் நூலகமொன்றைத் தன்னுடனே வைத்திருக்கும் அந்த ஆர்னி வேன் கவிஞன், இருசக்கர வாகனத்தில் வரும் திடகாத்திர உடல் எடை கொண்ட ஹிப்பி வழிப்போக்கர்கள், அவர்கள் தங்கும் ஹோட்டல் வரவேற்பாளன் என எல்லோருமே மசாவோவை சந்தோஷப்படுத்தும் வகையில் நடந்து கொள்வது மேலே சொன்ன மைய கதாபாத்திரம், தனக்கான உணர்வு தளத்திற்கு படத்தின் ஒவ்வொரு பிரேமையும் வடிவமைப்பதில் அமைகிறது.

அந்த இளம் ஜோடி, மசாவோவை, அவன் தனது முதுகில் சுமந்துவரும் பையில் இருக்கும் இறகுகள், தேவதையைப் போல பறக்க, அவர்களை சுற்றிவர அனுமதிப்பது, இருசக்கர வாகன ஹிப்பி வைத்திருக்கும் தேவதை சாவிக்கொத்து, இரவு ஒரு ஏலியனாக அவனை வியப்புற வைக்கும் கவிஞன் எல்லோரும் குழந்தை

மனநிலைக்கு வருகிறார்கள். அல்லது குழந்தைக்காக குழந்தையாக மாறுகின்றனர். ஆனால் இந்த நிலை மாற்றமடைகிறது. கோவில் பொருட்காட்சியில் கதாநாயகனாக நடிக்கும் கிட்டானோ அடிவாங்குவது, அதற்காக அவன் மருந்துகள் வாங்கச் செல்வது முதல் அவர்களுக்குள் மிக அந்தரங்கமான ஒரு உறவு உருவாகிறது. அது பெரியவர்களும் குழந்தைகளும் இந்த உலகை எவ்வாறு எதிர்கொள்கின்றனர் என்பதை தெளிவுப்படுத்துவதாக இருக்கிறது. இதை படத்தின் ஆரம்பக் காட்சிகளிலேயே ஒரு சிறிய நிகழ்வின் மூலமாக காட்டப்படுகிறது. மசாவோவும் அவன் நண்பனும் ஓடிவரும் வழியில், பாரம்பரிய உடையணிந்து பொம்மைகளின் தலையில் தங்கள் தலையைப் பொருத்த இயலாது தம் வழியில் செல்லும்போது ஒரு ஆடவன் வெகு இயல்பாக அந்த பொம்மையின் தலையாக கண நேரம் நின்றுவிட்டு செல்வது, குழந்தைகளின் உள்ளம் அல்லது அவர்களது எண்ணம் உருவாக்கப்பட்ட ஒரு கட்டுக்குள் என்றுமே இருப்பதில்லை. அது தேடல் நிறைந்த, முன்முடிவுகளற்ற ஒரு மணல்பரப்பாக இருக்கிறது என்பதை வெல்லமுடியாத ஒரு காட்சி வடிவில் சொல்ல முயல்கிறது.

மசாவோ தனது அம்மாவை பார்க்க இயலாமல், ஊருக்குத் திரும்பும் வழியில் கிட்டானோ, தனது அம்மாவின் ஞாபகம் வர வழிப்போக்கனின் வசம் மசாவோவை விட்டுவிட்டு, ஒரு மனநல காப்பகத்திற்கு செல்கிறார். அங்கே அவரது அம்மா நிலைக்குத்திய பார்வையுடன் இருப்பதைப் பார்த்துவிட்டு, எந்த ஒரு சலனமுமற்று இறுகிய முகத்துடன் திரும்புகிறார். அது ஒரு பார்வையாளன எதிர்ப்பார்க்காத ஒன்று. ஆனால் கிட்டானோவும் மசாவோவும் ஒத்தப் புள்ளியில் பயணம் செய்வது இந்த மையம்தான். இது படத்தின் முதல் காட்சிகளிலேயே உணர்த்தப்பட்டதாகும். அதாவது கிட்டானோவின் மனைவி அவரைத் திட்டும்போது ஓடிப்போன அவரது அம்மாவை நினைவுப்படுத்துகிறார். இந்த இடத்தில் படம் மசாவோவிடமிருந்து கிட்டானோவிடம் கைமாறுவது கூர்ந்து பார்க்கும் ஒரு பார்வையாளனால் உணர்ந்து கொள்ள இயலும்.

கிட்டானோவின் மனைவி, தனது பக்கத்துவீட்டு சிநேகிதியின் பேரனை அவனது அம்மாவைப் பார்க்க வெகு தொலைவிலுள்ள நகருக்கு அனுப்புவது, மறைமுகமாக தனது கணவனை, அவனது அம்மாவைப் பார்த்துவரச் செய்யும் ஒரு ஏற்பாட்டைப் போலவும் தெரிகிறது. இங்கேதான ஒரு தட்டானின் பார்வையில் படமானது கட்டமைக்கப்பட்டிருப்பது பார்வையாளனுக்குச் சட்டெனப் புரியும். ஒரு தட்டானானது, படத்தில் வரும் அந்த ஆம்னி வேனைத் தனது கூட்டுக்கண்களால் பாரப்பதாக ஒரு காட்சி வைக்கப்பட்டிருக்கிறது. இது எதேச்சையாக வைக்கப்பட்ட ஒன்றாக இல்லாமல், படத்தின் கதையற்ற தன்மையை ஒரு கூட்டுக் கண்ணானது எவ்வாறு எதிரிலிருக்கும் பொருளைப் புரிந்து கொள்கிறது என்பதில் தொடங்குகிறது.

படமானது ஒரு முடிவுக்கு வருகிறது. இருவரும் ஏறக்குறைய இலக்கை அடையும் செயலிலிருந்து திரும்பியிருக்கிறார்கள். விடைபிரியும் தருணம் வருகிறது. அடுத்த விடுமுறைக்கு மீண்டும் தேடுவோம் இப்போது போய்வா என கிட்டானோ மசாவோவிற்கு விடையளிக்கிறார். அவனும் சிரித்தப்படி புறப்படும் முன் ஒரு கேள்வியைக் கேட்கிறான்.

உங்க பேர் என்ன?

கிக்கிஜிரோ, ஓடு வீட்டிற்கு, டாமிட்..

இங்கே படம் முடிவடைவதில்லை. அவன் மேம்பாலங்கள் அடர்ந்த அந்த வழியாகக் கடந்து விடு செல்வதாக படம் முடிந்தாலும் அதன் கதையற்ற தன்மையாலது. ஆழமான பார்வையும் கூர்ந்த உணர்வனுபவமும் கட்டி எழுப்பும்



ஒரு விஷயம்தான் படத்தை இயல்புணர்வில் தொடர வைக்கிறது. மசாவோ தனது மன எழுச்சியின் வழியாக நகர்த்தப்படும் படத்தில், காட்சிகளின் உணர்வானது தங்களையும் ஒரு குழந்தை மனநிலைக்கு ஆட்படுத்திக் கொள்வதில் பொதிந்திருக்கிறது.

கிக்கிஜிரோ சகப்பயணியிடம் திருடும் உணவு, சோளக்காட்டில் திருடும் சோளக்கதிர்களை விற்பனைக்கு வைக்கும் ஆம்னி நூல்நிலைய கவிஞன், பொம்மைக்காக துப்பாக்கியால் சுடாமல் விளையாட்டு விதிமுறைக்கு முரணாக கல்லால் அடித்து பலூனை உடைப்பது, லிப்டிற்காக கண் தெரியாதவராக நடுபாதையில் நின்று காரில் அடிப்படுவது எல்லாமே, நல்லது - கெட்டது என்ற வரைமுறையற்ற, இயல்பான ஒரு குழந்தை அணுகுமுறையான இந்தச் செயல்கள் விளைவிக்கும் சகல தளங்களும், நிலையற்ற வாழ்வின் ஒழுங்கற்ற ஒரு விளைச்சலின் உணர்வு மேட்டில் கட்டப்பட்ட ஒரு தரிசனமாகவே தெரிகிறது.

அதாவது, அன்பு, வெறுப்பு, பிரிவு, சந்தோஷம் எல்லாமே நிரந்தரத் தன்மையில்லாத ஒரு குறிப்பிட்ட காலவரையறையற்ற உணர்வு நிலைகளாகக் காட்டப்படுகின்றன. அவை நிலையற்றதாக இருப்பதாலே நிலைத்தன்மையை நோக்கிய அவற்றின் பயணம் சாத்தியமாகிக் கொண்டிருக்கிறது. வாழ்வானது இத்தகைய பயணங்களில் அங்காங்கே இளைப்பாற நம்மை அனுமதிக்கிறது. மசாவோ தனது அம்மாவாக, கைக்கு அருகில் கிடைக்கும் வேறு ஒரு பெண்ணை கற்பித்துக் கொள்வதில்லை. தனது அம்மாவை, அடுத்த விடுமுறையில் தேடும் எண்ணத்துடன் பள்ளி

செல்லத் துவங்குகிறான். கிக்கிஜிரோ தனது அம்மாவை கட்டியழுவதில்லை. தொலைவிலிருந்து பார்த்துக் கொள்வதே அடுத்த அவரது வருகைக்கான ஆதாரமாகக் கருதுகிறார். வாழ்க்கை எத்தகைய இறுதி முடிவுகளையும் கொண்டிருப்பதில்லை. அது அவ்வாறு இருந்தால் அவ்விடமே மானுடத்தின் அல்லது உயிர்த்தொடர்ச்சியின் முடிவாக நின்றுவிடும்.

ஒவ்வொரு செயலும் அதற்கான நியாயத்தைக் கொண்டிருப்பதால், அன்பு மட்டுமே, எல்லாவற்றையும் இயல்புணர்விலிருந்து பார்க்கக் கற்றுத் தருகிறது. குழந்தைகளும் தேவதைகளும் அன்பை தமது உள்ளங்கையில் வைத்துக் காத்திருக்க, நாம் நம்பிக்கையுடன் தேவதைக்குரிய மணிகளை ஒலிக்கச் செய்கிறோம். அது சாத்தியப்படும்போது மனம் ஒரு தரிசனத்தை அடைகிறது. அந்த தரிசனமே ஆன்மாவை ஜீவித்திருக்க வைக்கிறது.

படத்தில் கடைசியாக ஒரு அகண்ட காட்சி படமாக்கப்பட்டிருக்கிறது. கடற்கரையின் மிக விரிந்த ஒரு பரப்பில் மசாவோ, கிக்கிஜிரோவையும் கவிஞனையும் கண்டுபிடி விளையாட்டில் தேடுகிறான். வெட்ட வெளியில், ஒரு பெரிய தகர ட்ரம்மில் ஒளிந்து கொள்ளும் கிக்கிஜிரோவை ட்ரம்முடன் நகர்த்தியபடி ஓடிக்கொண்டிருக்கிறான் கவிஞன். இறுதிவரை மசாவோ தானே அவர்களைக் கண்டடைவதில்லை. ஒரு கணத்தில் அந்த தகர ட்ரம் கீழே சாய்ந்துவிட, ஏற்படும் ஒலியில் அவனுக்குப் பின்னாலேயே ஒளிந்து கொண்டிருக்கும் அவர்களைக் கண்டடைகிறான். எந்த இருப்பும் என்றுமே கண்டடையப்படுவதில்லை. அதாவது அது தன்னை வெளிப்படுத்திக் கொண்டாலோழிய சாத்தியப்படுவதும் இல்லை.

வாழ்வின் மீதான இத்தகைய தரிசனத்தை, இவ்வளவு எளிய வடிவில் வேறு எங்கும் காணமுடிவதில்லை. இத்தகைய சாத்தியத்தை சினிமாவில் சாத்தியப்படுத்தியிருக்கும் டேகாசி கிடானோ இந்தப் படத்தை எழுதி, இயக்கி, கிக்கிஜிரோவாக நடித்திருக்கிறார்.

ஒரு தட்டானாக சினிமாவைப் பாருங்கள். நவீன சினிமா கூட்டுக் கண்களைத் தேடியபடியிருக்கிறது.



நீலகண்டன் கவிதைகள்

என் பிய்ந்துப்போன சூக்களை தூக்கி எறிய முடியாமல்
அணிந்துக் கொண்டிருக்கிறேன்
அதன் அருவருப்பு வாழ்க்கையைப் போல் மகிழ்விக்கிறது
கடவுள் உங்களுக்கு அழகான பறவைகளை
பரிசளித்திருக்கிறான் அப்பறவைகள்
உங்களுக்குள் இருந்து பறந்து கொண்டே இருக்கின்றன
நீங்கள் மேலேமேலே சென்று வீழ்ந்துகொண்டே இருக்கிறீர்கள்
நான் சாக்கடையில் புரளும் நாய்களை நேசிக்கிறேன்
அது
மலத்தை தின்கிறது மேலும் என்னைப் பரவசப்படுத்துகிறது
என் சூக்களின் மேல் புறத்தைப்போல்
அதன் தோலில் சொறிபிடித்திருக்கிறது
நான் அதை தழுவுகிறேன் முத்தமிடுகிறேன்
சிலிர்த்துப்போகிறேன்
அதன் நாற்றம் என்னை வசீகரிக்கிறது
பியந்துப் போன சூக்கள் மேலும் மேலும் என் வாழ்விற்கு
ஊக்கம் தருகிறது
உறவு நிறைவேறாத ஆசைகள் சந்தோசம் நம்பிக்கை
காதல் நட்பு இவற்றில் இருந்து
என் இதயம் விடுபட்டுக் கொண்டிருக்க

திரும்பிபார்க்க முடியாமல் செல்வதுதான்

அவள் குடிசை வீட்டின் தாழ்வாரத்தில்
தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தாள்
மடங்கி இருந்த கால்களின் விரல் நுனியில்
அதிர்ந்துக் கொண்டிருந்தது ஒரு பனித்துளி
எத்தருணத்திலும் கால் நீட்டி இருந்தாள்
உயிர் பிழைத்து இருக்கலாம்
தொன்னூற்றாறு வயதுமதிக்கதக்க முதியவள்
அதிகாலையிலேயே விழித்துவிடும் இக்கிராமத்தில்
ஒருவரும் விழித்திருக்க வில்லை
அவளின் இச்செயலை கண்டு கடவுள்
தூக்கில் தொங்குவதைப்போல் திடுக்கிடுகிறேன்
கூவமறந்த சேவல் விடியலை மறுத்து
கீழ்வானில் தன் சிவந்த சிறகுகளை
விரித்துக் கொண்டிருக்கிறது
மரணம் என்பது வேறொன்றும் இல்லை
திரும்பிப் பார்க்க முடியாமல் செல்வதுதான்

அத் தருணம் நிகழாமலே போகிறது

ஏதோ ஒரு கலக்கமுற்ற நேரத்தில்
கண்களை மூடித் திறக்கும்போது
உனக்குள் ஓர் ஊர் உருவாகிறது
அந்த ஊர் உன்னுடையதா என்பதை
கவனிக்க மறந்து விட்டாய்
மறுபடியும் கண்களை மூடுகிறாய்
வேறு ஏதோ ஒன்று தோன்றுகிறது
தெளிவாக இல்லை அது உன் ஊர் இல்லை
என்பது மட்டும் தெளிவாகிறது
மேலும் மேலும் உன் ஊரை நினைவில் கொண்டு
கண்களை மூடுகிறாய் தோற்றுப்போகிறாய்
அந்தத் தருணம் நிகழாமலே போகிறது
சோர்ந்து போய் சிறிது நேரம் கண்களை மூடிவிடுகிறாய்
தெளிவற்ற நிலையில் பாதை உருவாகிறது அப்போது
அன்புகொண்ட பகல்நேரம் உன்னை ஆரவாரத்தோடு
அழைத்துச் செல்கிறது அம்மாவின் முந்தானை நிழல்
உன் சாலைமுழுக்க நீள்கிறது
குலுங்கு குலுங்கி அழுகிறாய்
உன் மேசையின் மீது கைப்பேசி ஒலிக்கிறது
எடுக்க ஏன் உன்கைகள் அவ்வளவு தயங்குகின்றன

நதியாக அலையும் அவன்

நெருப்பை முத்தமிட்ட அவன்
அதன் சூட்டில் சாம்பலாகவில்லை
நீராகிறான் நகர வீதியில்
நதியாக அலையும் அவன்
நம் கண்களுக்குப் புலப்படுவதில்லை
நகரத்தை கடக்கும் நாம்
நதியை கடந்ததாக உணரும்
அக்கணம்
நம் உடல் முழுக்க வியர்க்கையில்
பாரம் தொண்டு ஒருதுளி
உள் இறங்கும்போது
தீ பற்றி எரிகிறோம் நாம்

ந.பெரியசாமி

தீஞ்சுவை

தீண்டிக்கிடக்க விலக்குறும்
தீ பிரிந்த சாம்பல்
தொலைவிலிருக்கச் சுற்றும்
செக்குமாடனும்
கொடும் நோய்க்கூறின்
தீஞ்சுவை பருகும் நாளின்
இரவில் தவிப்படக்கியது
அவள் இருப்பிலிருந்த சில்லிடலை
என்னுள் கவிழ்த்த நிலா



ஊன் கல்

கடலின் கர்வம் காரணமாக
அதை கைவிட்டு வந்த காரணங்களை
என்னால் சொல்ல முடியவில்லை
மழை மண்டு மசியல்களை
நிலமெங்கும் கண்டடைந்தபின்
கல்லின்றி எந்த நீர் நிலையையும்
கண்டதில்லை
கல்
ஊற்று
ஒகேனக்கல்
குற்றலாம்
நீர்த்தடங்களின் ஊடாக
ஊன் உறையவைக்கும்
தாஜ்மகால்
பிரமிடுகள்
ஆற்றிடம் போராடி
கூழாங்கல் ஒன்றைப் பிடிங்கி
கடலில் வீசுகையில்
சர்வமும் செத்துப்போனது

கேட்டுக்கொண்டதின் பேரில்

தீவிரவாதிகள் எந்த Bunker களையும்
ஏற்படுத்தவில்லை
பாறைச் சிதிலங்களை உபயோகித்தனர்
அலோபதி மருந்துதான் இதற்குத் தீர்வு
கிராமங்களில் இருந்து
சித்த ஆயுர்வேத யுனானி மருத்துவர்களை
நாடு கடத்துவது பற்றி
தீவிரவாதிகள் யோசிக்கிறார்கள்
ஓலைச்சுவடிகள் வேப்பிலைகள்
நாடித்துடிப்புகள் வேசிகள்
பேய்ச்சிகள் அரவாணிகள்
அனைவரும் ஒரே வரிசையில் நிற்குமாறு
பணிக்கப்பட்டனர்
அவர்களுக்கு நியாயம் வழங்க
தங்களுக்கு இடம் கொடுங்கள் என
அவர்கள் கேட்டுக் கொண்டனர்
இந்த வரிசையில் எவ்வளவு நேரம்
நிற்பது
அக்குபங்ச்சர் வேதனை
பாறைச் சிதிலங்களில் இவ்வளவு
குறிப்புகள் கிடையாது இல்லையா
பச்சைப்பாசி பவளப்பாசி
வாங்கலையோ சுயாலோ

பேரரறிவின் சாத்தான்

பேரறிவின் சாத்தான்
ஒரு தேவகுமாரனின் தோற்றம் உடையவன்
தொலைதூரத்தில் ஒளிரும்
அவன் குரல் கேட்டு
நீங்கள் அவனை நோக்கி
முதல் அடியை எடுத்து வைக்கையில்
வாழ்வு
உங்களுக்கு எதிர்த்திசையில்
பயணிக்க துவங்குகிறது
திரும்பவியலா தூரம்
வந்ததும்தான் புரிகிறது
உங்கள் பயணத்தின்
திகில் நிறைந்த புதிர்மை
உங்கள் வீடு நுழையவியலா
இறந்த காலத்தில் புதைந்து போனது
போக வேண்டிய தூரமோ
முன்னிலும் அதிகமாகத் தெரிகிறது
ஆனால் இனி ஒன்றும் செய்வதற்கில்லை
மிக தாமதகமாகவே உணர்கிறீர்கள்
சில விஷயங்களை கற்றுக் கொள்ளாதிருப்பது
ஞானம்

ஏவாள்
இந்தக் கனியைப் பார்
எவ்வளவு வசீகரமாக உள்ளது
உன் கடவுளின் கண்களைப் போல
உன் கடவுளின் கண்கள்
உனக்கு வேண்டாமா?
கடவுளின் கண்களால்
இந்த தோட்டத்தின் பேரழகை
பார்த்திருக்கிறாயா?
ஒரு முறை
இந்த விலக்கப்பட்ட கனியைப் புசிப்பாயாக

முதிர்ந்த கோதுமை பயிர்கள்
காற்றில் அசையும் ஓசையை
தன் இசைக் கருவியில்
வாசித்தபடி
ஊருக்குள் வருகிறான் அவன்
கோதுமையின் வாசம்
நினைவில் துடிக்க
நிலத்தில் உதிர்ந்த

கோதுமை மணிகளை பொறுக்க
மூலை முடுக்கெங்கெங்கும் இருந்து
வருகின்றன எலிகள்
ஒன்று... பத்து... நூறு... இலட்சமென
அவன் நடக்க நடக்க
காற்றில் சடசடக்கின்றன கோதுமை பயிர்கள்
கோதுமை மணிகளை
நிலமெங்கும் தேடி
அவனைத் தொடர்கின்றன எலிகள்
மலையின் உச்சிக்கு
வந்ததும்
ஒரு இராட்சச பூனை உறுமுகிறது
மியாவ் - அஞ்சி
மலையிலிருந்து
பள்ளத்தில் தாவிக் குதிக்கின்றன
ஒன்று...பத்து...நூறு.. இலட்சம் எலிகள்

காஞ்சிரம்

காஞ்சிர மரத்தால் ஆன
நாற்காலி ஒன்று இருந்தது
அவன் வீட்டில்
ஒரு சமயம்
அதில் அமர்ந்து அவன்
உலகம் ஒரு பெரிய காஞ்சிரம்
என எழுதியதும்
அதன் இலைகள் சலசலத்தன
அந்தச் சொற்களில்
அது முதலாய்
அவன் எழுதும் ஒவ்வொரு சொல்லிலும்
அடர்ந்தது காஞ்சிரம்
நெஞ்செங்கும் நிறைந்த
காஞ்சரத்தின் சொற்களால்
அவனே ஒரு காஞ்சிர மரமானான்
காஞ்சிரித்து நண்பன் ஒருவனை வைய
அவன் கை, கால் வலித்து
நுரைதள்ளிச் செத்தான்
காஞ்சிரங்கள் அவனின் பகலான போது
உதிர்ந்ததொரு காஞ்சிர இலையாய்
திசையெங்கும் அலைந்தான்
காஞ்சிரங்கள் அவனின் இரவான போது
காஞ்சிரக் கனவுகளில் கசந்தான்
ஒருநாள் வனம் நுழைந்தவன்
காஞ்சிர மரம் தேடி
அதன் கிளைகளில் ஒரு காயென தொங்கினான்
கழுத்தில் சுருக்கிட்டு

ஒரு இரவல் காதல் கதை

இந்த வானத்தில் ஒரு நிலவுண்டு
பாதிநாள் வளர்வதும்
பாதிநாள் தேய்வதுமாய்
தன் பைத்தியத்தில்
அலைகளுக்குப்
பேய் பிடிக்கச் செய்யும்

இந்த ஊரில் ஒரு அக்கக்கா குருவியுண்டு
அக்கூ அக்கூ எனக் கதறி
காகத்தையும் உறவு சொல்லி
ஏமாந்து புலம்பும்

இந்த நிலத்தில் ஒரு மரம் உண்டு
கூடடையும் பறவைக்கு
தன் சதை பறித்து கனி திரட்டி
யாருமற்ற நேரத்தில்
பாம்பிற்கு முட்டை தரும்

இந்த நெஞ்சில் ஒரு முத்தமுண்டு
நிகழ்ந்த கணத்தின் பரவசத்தில்
மலர்ந்த பூக்களின் நறுமணத்தை
கனவில் எண்ணி
நீருலர்ந்த உதடுகளை வருடிக்கொள்ளும்

ஒரு இரவல் காதல் கதை -2

என்
காப்பிச் செடிகளின் வசந்தங்களை
நீ எடுத்துக் கொள்வாய் எனில்
காதலற்ற வாழ்வில்
கருத்திடுவேன்
உள்நாவில் ஒரு கசப்பென

என்
பாலைகளின் மழையை
நீ எடுத்துக்கொள்வாய் எனில்
செல்வமற்ற வாழ்வில்
இளைத்திடுவேன்
நிலமெங்கும் நகரும்
உடலற்ற வேனல்குளமென

என்
காளான்களின் வெயிலை
நீ எடுத்துக்கொள்வாய் எனில்
சுகமற்ற வாழ்வில்
வெளுத்திருப்பேன்
அற்ப காலத்தில் வெளியேறுபவன் என

என்
ஊமத்தைகளின் பனியை
நீ எடுத்துக்கொள்வாய் எனில்
அறிவற்ற வாழ்வில்
நஞ்சியிருப்பேன்
மலங்காடுகளில் தன்னந்தனியனென

மூலதனமாகும் மரபணுக்கள்

காப்புரிமை முன்வைத்து ஓர் பார்வை

மு. வெற்றிச் செல்வன்



உயிருள்ள செயற்கை செல்களை உருவாக்கியுள்ளதாக கடந்த மே மாதம் 2010ல் அறிவித்தது ஜே. கிரைக் வெண்டர் இன்ஸ்டியூட் என்கிற அமெரிக்க உயிரி தொழில்நுட்ப நிறுவனம். சுயமாக இனப்பெருக்கம் செய்யத் தக்க ஆற்றல் படைத்த செல் (Self Replicating Synthetic Bacterial Cell) என்று தங்களுடைய கண்டுபிடிப்பை வகைப்படுத்துகிறார் இதன் நிறுவன தலைவர் ஜே. கிரைக் வெண்டர். கணினியில் உருவாக்கப்பட்ட மரபணு பட்டியலைப் பயன்படுத்தி இந்த செயற்கை செல்களை உருவாக்கியுள்ளனர் இந்த நிறுவன விஞ்ஞானிகள். இந்த செல்கள் உயிர்வாழும் தன்மை கொண்டது. மற்றொரு செல்லை உருவாக்க வல்லது. செயற்கை முறையில் மனிதனை உருவாக்க இது முதல்படியாக அமையலாம். மேலும் இந்த செல் மூலம் புதிய எரிபொருளை உருவாக்கலாம் என்றும் அசுத்தமான தண்ணீரை சுத்தமாக்க சிறந்த வழிமுறைகளை உருவாக்கலாம் என்றும் தடுப்பூசி உள்பட பல புதிய மருந்துகளை கண்டுபிடிக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

கிரைக் வெண்டர் தன்னுடைய கண்டுபிடிப்பான செல்லுக்கு காப்புரிமை (Patent Right)[1] கோரி விண்ணப்பித்துள்ளார். அவ்வாறு காப்புரிமை கொடுக்கப்பட்டால் ஒட்டுமொத்த மரபணுமாற்று தொழில் நுட்ப ஆய்வுகளை கிரைக் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவார் என எச்சரிக்கிறார் மருத்துவத்திற்கான நோபல் பரிசு பெற்ற டாக்டர் ஜான் சல்ஸ்டன். இவர் மரபணு, செல் போன்ற உயிரின பாகங்களுக்கு காப்புரிமை கொடுக்கப்படுவதை தொடர்ந்து எதிர்த்து வருகிறார்.

உலகின் சமூக-பொருளாதார மாற்றங்களுக்கு அறிவியல் தொழில்நுட்பம் மிகப் பெரிய உந்து சக்தியாக இருந்துள்ளது. இன்றைய உலகமயசூழலில் அறிவியல் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டையும் மற்றும் அதன் கண்டுபிடிப்புகள் எந்த வழியில் உபயோகப்படுகிறது என்பதையும் விமர்சன ரீதியில் ஆய்வு செய்ய வேண்டி உள்ளது. அந்த வகையில் மரபணுக்கள் சார்ந்த உயிரி அறிவியல் தொழில் நுட்பம் மற்றும் அதனோடு தொடர்புடைய காப்புரிமை சட்டத்தையும் சற்று ஆராய்வோம்.

உயிரி தொழில் நுட்பமும் மரபணுக்களும்

புதிய கச்சாப் பொருளையும், புதிய உழைப்பு கருவிகளையும் புதிய பிழைப்புச் சாதனங்களையும் உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் கச்சாப் பொருட்களும், உழைப்புக் கருவிகளும்,அனைத்து வகையான பிழைப்புச் சாதனங்களும் அடங்கியதே மூலதனம் என்று வகைப்படுத்துகிறார் மார்க்ஸ்.[2] கச்சா எண்ணெய், கனிமவளங்கள் போன்றவற்றோடு மரபணுக்களையும் கச்சாப் பொருளாக மாற்றி உள்ளது உயிரி தொழில்நுட்பம். எப்படி இது சாத்தியமானது என்பதை காண்போம்.

நுண்ணுயிரான கிருமி முதல் மனிதன் வரை ஒவ்வொரு உயிரினமும் தனக்கே உரிய அரிய குணத்துடன் இருப்பதற்கான காரணம் மரபணுக்களே. மரபணுக்கள் தான் ஒரு உயிரின் குணாதியசியங்களை தீர்மானிக்கின்றன என்பது கண்டறிந்த பின் மரபணுவில் தேவைகளுக்கு ஏற்ப மாற்றங்கள் செய்யும் மரபணுமாற்று தொழில்நுட்பம் உருவாக துவங்கின. இத்தகைய மரபணுமாற்று தொழில் நுட்பங்கள் மூலம் சிறிதும் தொடர்பில்லாத இரண்டு மூன்று உயிரினங்களின் மரபணுக்களை இணைத்து புதிய உயிரினங்களை உருவாக்கத் துவங்கினர். இத்தகைய செய்முறைகள் மூலம் இயற்கை பண்புகள் மாற்றி அமைக்கப்பட்ட தாவரம் உள்ளிட்ட பல உயிரினங்கள் உருவாக்கப்படுகின்றன. இவை மரபணுமாற்று உயிரினங்கள் (Genetically Modified Organism) என்று அழைக்கப்படுகின்றன.

மருத்துவ துறையிலும் மரபணுமாற்று தொழில் நுட்பங்கள் சார்ந்த சிகிச்சை முறைகள் அறிமுகமாகி வருகின்றன. இவை பொதுவாக Gene Therapy என்று அழைக்கப்படுகின்றன. உணவு தயாரிப்பு துறையிலும் மரபணுமாற்று தொழில் நுட்பங்கள் மூலமாக மரபணுமாற்று பயிர்கள் அறிமுகமாகி வருகின்றன. மேலும் மருந்து தயாரிப்பிலும் மரபணுமாற்று தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. இப்படி இந்த தொழில் நுட்பங்களுக்கு அடிப்படையாக மரபணுக்கள் விளங்குவதால் மார்க்சின் வரையறைப்படி அவற்றை உற்பத்திக்கான கச்சாப் பொருளாக கருதலாம்.

கொள்ளையிடப்படும் உயிரினவகைகள்

எப்படிக் கிடைக்கின்ற இந்த மரபணுமாற்று தொழில் நுட்பவாதிகளுக்கு தேவையான கச்சாப் பொருளான மரபணுக்கள்? மூன்றாம் உலக நாடுகளில் இருந்து தான் பெரும்பாலும் தங்களுக்குத் தேவையான கச்சா மரபணுக்கள் பெறப்படுகின்றன என்கிற பதில் பலருக்கு வியப்பை அளிக்கலாம்.

இந்த நூலகம் பலவித அரிய உயிரினங்களை உள்ளடக்கியது. நூற்றாண்டுகளாக நம்முடைய மூதாதையர்கள் உயிரினங்களின் குணங்களை கண்டறிந்து காலகாலமாக பலவிதங்களில் பயன்படுத்தி வந்து உள்ளனர். பாரம்பரிய வைத்தியம் என்று அழைக்கப்படும் இவை பெரும்பாலும் எழுத்து வடிவில் இருப்பதில்லை. சொல் வடிவம் மூலமாக ஆண்டாண்டு காலம் நாம் இவற்றை பயன்படுத்தி வருகிறோம். உலகெங்கும் பழங்குடி மக்கள் இப்படி மூலிகைகள், மற்றும் பல உயிரினங்களின் மருத்துவ மற்றும் பிற பயன்பாடுகளை அறிந்து வைத்துள்ளனர். இத்தகைய அறிவை பாரம்பரிய அறிவாண்மை (Traditional Knowledge) என்று வகைப்படுத்துகின்றனர். இதுபோன்ற அறிவை மக்கள் நவீன அறிவியலுக்கு ஏற்ப ஆவணப்படுத்தி வைப்பதில்லை. இவை பெரும்பாலும் மக்களின் பொது சொத்தாக இருக்கின்றன.

இத்தகைய இயற்கை வளங்களின் மீது உயிர் தொழில்நுட்பம் போன்ற நவீன தொழில் நுட்பங்களை கொண்டு ஆராய்ச்சி மேற்கொண்டு அதன் மூலம் பெறப்படும் கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பெற்றுவிடுகின்றன பன்னாட்டு நிறுவனங்கள். அதன் மூலம் அவை தனியார் உடைமையாகிறது. இத்தகைய செயலை உயிரின-திருட்டு (Bio-Piracy) என்று அழைக்கின்றனர்.[3] மஞ்சள் வேம்பு, வேப்பிலை போன்றவற்றுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் காப்புரிமை கொடுக்கப்பட்டதை நாம் இங்கு நினைவில் கொள்ளலாம். ஆண்டு தோறும் நம் நாட்டைச் சேர்ந்த சுமார் 2000 பாரம்பரிய இயற்கை வளங்களுக்கு வெளிநாடுகளில் காப்புரிமை கொடுக்கப்படுவதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.

செடி கொடியோடு நிறுத்திவிடவில்லை இத்தகைய கொள்ளைகள். மனிதனின் மரபணுக்களும் திருடப்படுகின்றன. மனித இன தோன்றலை கண்டறிய Human Genome Diversity Project என்கிற ஆய்வு 1995ம் ஆண்டு துவக்கப்பட்டது. இந்த ஆய்வுக்காக பல நாடுகளில் உள்ள பூர்வகுடிகளிடம் இருந்து இரத்த அணுக்கள் சேகரிக்கப்பட்டு அவர்களின் மரபணுக்கள் ஆய்வு செய்யப்பட்டன. சில நேரங்களில் கட்டாயப்படுத்தியும் இவை சேகரிக்கப்பட்டன. இத்தகைய ஆய்வில் மருத்துவ குணமிக்க மரபணுக்களும் கண்டுபிடிக்கப்பட, அவற்றுக்கு பல நிறுவனங்கள் காப்புரிமையும் பெறத் துவங்கின. இதனை எதிர்த்து இத்திட்டத்தில் இருந்து வெளியேறினார் நோபல் பரிசு பெற்ற ஜேம்ஸ் வாட்சன்.

இத்தகைய கொள்ளைகள் ஒருவித சட்ட பாதுகாப்போடு தான் நடந்தன, நடக்கின்றன. ஒரு நபரிடம் இருந்து திருடப்படும் மரபணுக்களுக்கு அந்த நபர் உரிமை கோர முடியாது என்று அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஒரு நபரின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட எந்த ஒரு உறுப்பின் பாகத்தை கொண்டு அந்த நபருக்கு தெரிவிக்காமல் மருத்துவ ஆராய்ச்சி செய்து அதன் மூலம் கண்டறியப்படும் மருத்துவ அம்சம் கொண்ட பொருட்களுக்கு யார் உரிமை கோர முடியும்? உடலுக்கு உரியவரா? அல்லது ஆய்வு செய்தவரா? என்கிற கேள்வி எழுந்தது அந்த வழக்கில். அதற்கு அறிவுச் சொத்துரிமை அடிப்படையில் புதிதாக கண்டறியப்பட்ட அந்தப் பொருளுக்கு ஆராய்ச்சியாளரே முழு உரிமையுடையவர், உறுப்பின் உடைமையாளர் இதில் எவ்வித உரிமையும் கோர முடியாது என்று 1990 ல் அமெரிக்க உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.[4]

இப்படி கொள்ளையிட்டு பெறப்படும் மரபணுக்கள் மூலதனமாக மாறுவதோடு ஏகபோக உரிமையாகவும் மாறிவிடுகின்றன. உலக வரலாறு நமக்கு உணர்த்துவது சட்டத்தின் ஆட்சி மூலமே மக்கள் சுரண்டப்படுகின்றனர் என்பது தான். தொழில் புரட்சி காலம் தொட்டு வளர்ச்சியுற்ற அறிவு சொத்துரிமை சட்டத்தின பிரிவான காப்புரிமை சட்டம் நிறுவனங்கள் தங்களுடைய ஏகபோக தன்மையை காத்து கொள்வதற்கு ஏற்ற வகையில் புதிய வடிவம் பெற்றுள்ளது.

மேற்கு உலகிற்கும் நம்மைப் போன்ற கீழ்திசை நாட்டிற்கு உள்ள ஓர் முக்கிய கலாச்சார வேறுபாடு இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கை முறையே. தொழில் புரட்சி காரணமாக எல்லாவற்றையும் கச்சாப் பொருளாகவும் உற்பத்தி பண்டமாகவும் காண்கின்ற மேற்குலகு, வேளாண் உற்பத்தி பொருட்களையும் அப்படியே பார்த்தது. இதனை 1883ல் Paris Convention for the Protection of Industrial Property என்கிற பாரிஸ் மாநாட்டில் அறிவிக்கவும் செய்தது.[5] பின்பு தாவரங்களை பொருள் உற்பத்திக்கான கச்சாப் பொருளாக கண்ட அமெரிக்க Plant Patent Act என்கிற சட்டத்தை இயற்றியது. பின்பு 1980 களில் மரபணுமாற்று உயிரினம் என்கிற வகையில் நுண்ணுயிர் ஒன்றுக்கு காப்புரிமை அமெரிக்காவில் வழங்கப்பட்டது. ஆனந்த மோகன் சக்கரவர்த்திக்கு மரபணுமாற்று நுண்ணுயிருக்கு காப்புரிமை கொடுத்து வழங்கிய அந்த தீர்ப்பு காப்புரிமை சட்ட போக்கையே மாற்றி அமைத்தது.[6]

ஐரோப்பிய நாடுகளும் இதுபோன்ற சட்டங்களை இயற்றத் துவங்கின. இதன் மூலம் இயந்திர-நகரமய சூழலில் மேற்கு நாடுகளில் தாவரங்கள் கச்சாப் பொருட்களாக மாறின. வர்த்தகம் பரவ இது போன்ற கச்சாப் பொருட்களை தேடி அலைந்தன மேற்குலகு. கீழ்திசை நாடுகளில் உள்ள இயற்கை வளங்கள் தங்கள் இயந்திர உற்பத்தி பசியை தீர்க்கும் என்று எண்ணிய மேற்நாடுகள் காலனிய கால நடவடிக்கைகளில் மீண்டும் ஈடுபடத் துவங்கின. அவற்றுக்குத் துணையாக தொழில்நுட்பங்கள் இருந்தன. தொழில் நுட்பத்தின் வளர்ச்சி போக்கு தாவரம் என்று இல்லாமல் உயிரின மூல கருவான மரபணுக்கள் போன்றவற்றையே கச்சாப் பொருளாக மாற்றலாம் என்கிற வித்தையை மேறகு உலகிற்கு அருளியுள்ளது.

சோவியத் சிதைவு துவங்கிய காலமான 1990-களில் உலகமய சந்தை பொருளாதார படையெடுப்பு உலகெங்கும் பரவத் துவங்கி புதிய தொழில் நுட்பங்களுக்கும், அவற்றை மேற்நாடுகளே கையில் வைத்துக் கொள்ள ஏற்ற சட்டங்களும் உலக வர்த்தக கழகத்தின் மூலம் பரவ ஆரம்பித்தன.

குறிப்பாக அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்கள் ஒரு புதிய அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தத்தை இயற்றி 1986ல் துவங்கிய உருகுவே சுற்று (Uruguay Round) என்று அழைக்கப்படும் காட் ஒப்பந்த பேச்சுவார்த்தையில் முன்வைக்க அமெரிக்க அரசை வலியுறுத்தின. அதன்படி இந்த மாநாட்டில் அமெரிக்க அரசு வணிகம் தொடர்பான அறிவு சொத்துரிமைக்கான ஒப்பந்தம் (Trade - Related Intellectual Property Rights Agreement) என்கிற புதிய ஒப்பந்தத்தை முன் வைத்தது. பின்பு இந்த ஒப்பந்தம் 1995 ஆம் ஆண்டு இந்தியா உள்ளிட்ட மூன்றாம் உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ள வைக்கப்பட்டன.

புதிய தொழில் நுட்பங்களை ஏழ்மை நாடுகளுக்கு பரவாமல் தடுக்கும் வகையில் இயற்றப்பட்ட இச்சட்டம் மரபணுமாற்று உயிரினங்களுக்கு உறுப்பு நாடுகள் காப்புரிமை கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.[7] இதனை ஏற்ற இந்திய காப்புரிமைச் சட்டமும் மாற்றப்பட்டு மரபணுமாற்று உயிரினங்களுக்கு காப்புரிமை கொடுக்கப்படுகிறது.[8] இப்படி இந்தியாவில் மரபணுமாற்றப்பட்ட சோளத்திற்கு மான்சான்டோவும்[9] மரபணுமாற்றப்பட்ட பருத்தி[10] மற்றும் மரபணுமாற்றப்பட்ட அரிசிக்கும் பேயர்[11] நிறுவனம் காப்புரிமை பெற்றுள்ளன. மேலும் மரபணுமாற்றப்பட்ட மீன்களுக்கு தாய்வான் நிறுவனமும்[12] பி.டி. கத்திரி, பி.டி. பருத்தி போன்றவற்றை உருவாக்க தேவையான பேசில்லஸ் தூரிஞ்சியன்ஸிஸ் என்கிற நுண்ணுயிருக்கு சைஜெண்டா நிறுவனம்[13] காப்புரிமை பெற்றுள்ளன. அதே போல மருத்துவ துறையில் பல்லுயிரினம் சார்ந்த காப்புரிமையும் இந்தியாவில் வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக மனித உடலில் உள்ள திரவங்களில் இருந்து செல்களை பிரித்தெடுக்கும் முறைக்கு பிட்ஸ்பேர்க் பல்கலைக் கழகம்[14] காப்புரிமை பெற்றுள்ளது. செல்களின் எண்ணிக்கையை பெருக்கத்தக்க ஆற்றலுடைய செய்முறைக்கு ஸ்டெம் செல் நிறுவனம் காப்புரிமை பெற்றுள்ளன.[15]

ஏகபோகமாக

காப்புரிமை மூலம் தொழில் நுட்பங்களை தங்கள் கட்டுப்பாடுக்குள் கொண்டு வந்த பின்பு ஏகபோக வர்த்தகத்தை துவங்குகின்றன நிறுவனங்கள். இவற்றின் ஏகபோக வியாபாரம் நம் மனித இனத்தில் சுதந்திர இருப்பையே கேள்விக்குள்ளாக்கி உள்ளது. உதாரணமாக ஓர் நிகழ்வு உடா (Utah University) என்கிற அமெரிக்க பல்கலைக் கழகத்துக்கு கடந்த 1994ம் ஆண்டு மார்பு மற்றும் கருப்பையில் புற்றுநோயை உருவாக்கும் BRCA-1, மற்றும் BRCA-2 ஆகிய இரு மரபணுக்களுக்கான காப்புரிமை வழங்கப்பட்டது. பின்பு அதனை மிரியாட் ஜெனடிக்ஸ் (Myriad Genetics) என்ற தனியார் நிறுவனத்திற்கு விற்பனை செய்தது. இதன் பலனாக பெண்களின் உடலில் மார்பக புற்றுநோயை உருவாக்கும் இந்த மரபணுக்கள் இருக்கிறதா என்பதை கண்டறியும் சோதனை செய்வதற்கான உரிமை, அந்த மரபணுக்களை பயன்படுத்தும் உரிமை, அந்த மரபணுக்களை கொண்டு மார்பக புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடிப்பது உட்பட அனைத்து ஆய்வுகளையும் செய்யும் உரிமை ஆகிய மிரியாட் ஜெனடிக்ஸ் அங்கீகாரம் பெற்ற ஆய்வகங்களில் மட்டுமே சோதனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் மூலம் ஏகபோக லாபம் அடைந்தது அந்நிறுவனம். பின்பு American Civil Liberties Union என்கிற மனித உரிமை அமைப்பு தொடுத்த வழக்கின் மூலமாக மேற்கூறிய காப்புரிமை திரும்பப் பெறப்பட்டது.

இறுதியாக

அறிவியல் தொழில் நுட்பம் என்பது ஆய்வு மற்றும் கண்டுபிடிப்பு நடவடிக்கைகளை உள்ளடக்கியது. அறிவியல் தொழில் நுட்பம் சமூக இயக்கத்தில் வர்த்தக மற்றும் உற்பத்தி துறையோடு மிகவும் தொடர்புடையதாக இன்று இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இதன் காரணமாக இன்று எந்த ஒரு அறிவியல் தொழில் நுட்ப ஆராய்ச்சியும் அதன் வளர்ச்சியும் அறிவியல் மட்டுமே தெரிந்த சாதாரண ஒரு நபரால் மேற்கொள்ள முடியாது என்கிற நிலை உருவாகியுள்ளது. அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சி மற்றும் ஆய்வு என எல்லாவற்றுக்கும் முதலீடு செய்ய நிறுவனங்களை நம்பி இருக்க வேண்டிய நிலை

இன்று உள்ளது. அறிவியல் தொழில் நுட்பங்களை தொடர்புடைய வர்த்தகப் பொருட்களை நிறுவனங்கள் உருவாக்க துவங்கிய பின்பு இயற்கையோடு நாம் அந்நியப்பட்டு போயுள்ளோம். மரபணுமாற்றப்பட்ட பருத்தி பாரம்பரிய பருத்தை வகைகளை முற்றிலுமாக அழித்துவிட்டது. இயற்கையோடு ஒட்டிய பலவித பாரம்பரிய பொருட்கள் புறக்கணிக்கப்பட்டு அழகு சாதனபொருட்கள் அறிமுகமாகி வருகின்றன. இவை தங்கள் வர்த்தகத்திற்கு நிறுவனங்கள் எதையும் செய்யும் என்பதை நமக்கு விளக்குகிறது. சட்டங்களும் அதற்கு துணைப்போகின்றன.

குறிப்புகள்

1. காப்புரிமை என்பது ஒருவகையான எதிர்மறை உரிமையாகும். (Negative Right) அதாவது இவை உரிமை பெற்றவரைத் தவிர்த்து மற்ற அனைவரையும் சில/பல செயல்களை செய்யத் தடைவிதிக்கிறது. காப்புரிமை என்பது அறிவியல் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்ற வாதத்தின் மூலம் வழங்கப்படுகிறது. அதாவது ஒரு பொருளுக்கு காப்புரிமை பெற்ற ஒருவர், பிறர் அந்த பொருளை உற்பத்தி / விற்பனை செய்வதைத் தடுக்கும் உரிமையைப் பெறுகிறார். இதன் மூலம் போட்டி உருவாகும் என்றும், அதன் மூலம் புதிய பொருட்களை கண்டுபிடிக்க மக்கள் போட்டியிடுவர் என்றும், அதன் பயனாக அறிவியல் தொழில் நுட்பம் வளர்ச்சியடையும் என்றும், இதற்கு காப்புரிமை வழி செய்யும் என்றும் வாதிடப்படுகிறது. இவ்வாறு அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு காப்புரிமை வழிவகுத்ததாக எந்தவித நடைமுறை ஆதாரமோ புள்ளி விவரமோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2. கார்ல்மார்க்ஸ் கூலி உழைப்பும் மூலதனமும்

3. இது போன்ற மூன்றாம் உலக நாடுகளின் இயற்கை வளங்கள் காப்புரிமை போன்ற சட்டங்கள் மூலம் கொள்ளை போவதை தடுப்பதற்கும், இயற்கை வளங்கள் மீதான ஆராய்ச்சிகளை முறைப்படுத்தவும் 1992 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அவை சார்பில் மாநாடு ஒன்று நடைபெற்றது. ஒரு நாட்டின் இயற்கை வளங்களை மற்றொரு நாடு ஆராய்ச்சிக்காக பயன்படுத்துகின்ற போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் உள்ளடங்கிய பல்லுயிர் பரவலுக்கான ஒப்பந்தம் (Convention For Biodiversity) ஒன்று அந்த மாநாட்டில் வரையறுக்கப்பட்டது. பல் உயிரின ஒப்பந்தத்தின் அடிப்படையில் இயற்கை வளங்களையும் மூதாதையர்களின் பாரம்பரிய அறிவாண்மையும் பாதுகாத்திட, பல்லுயிர்ப்பரவல் சட்டத்தை (Biological Diversity Act, 2002) இந்தியா இயற்றியது.

4. ஜான் மோர் தொடுத்த அந்த வழக்கின் விவரம் ஜான் மோருக்கு ஏற்பட்ட லுக்கோமியா நோய்க்கான சிகிச்சை பெற UCLA Medical Center என்கிற மருத்துவமனைக்கு சென்றுள்ளார். அங்கு டேவிட் கோல்டே என்கிற மருத்துவர் அவருக்கு சிகிச்சை அளித்துள்ளார். சிகிச்சைக்கு வந்த மோரிடம் இருந்து மருத்துவர் டேவிட் இரத்தம், விந்தணுக்கள், தோல் மற்றும் திசு போன்ற பலவற்றை மருத்துவ சோதனைக்காக என்று கூறி எடுத்துக் கொண்டார். பின்பு அந்த மருத்துவர் மோரின் செல்களில் உள்ள அபூர்வ மருத்துவ குணாம்சம் சில நோய்களுக்கு தீர்வாக இருக்கும் எனக்

கண்டறிந்தார். அதற்கு உடனே காப்புரிமை கோரியும் மனுவும் செய்தார். அவ்வாறு காப்புரிமையும் பெற்ற அதனை Genetics Institute என்னும் நிறுவனத்திற்கு $330,000 டாலருக்கு விற்றுவிட்டார். இதனை அறிந்த மோர் வழக்கிட மேற்கூறிய தீர்ப்பு வழங்கப்பட்டது. Moor vs. Regents of the University of California.


5. அறிவு சொத்துரிமை என்கிற கருத்தாக்கம் உருவாவதற்கு முன்பாக காப்புரிமை மற்றும் வணிக குறியீடு ஆகியவை தொழில் வள சொத்துகள் (Industrial Property) என்று அழைக்கப்பட்டு வந்தன. பின்பு பதிப்புரிமையும் அவற்றோடு சேர்த்து அறிவு சொத்துரிமை என்று வழங்கப்படலானது.

6. Diamond vs. Chakrabarty

7. TRIPS ஒப்பந்ததின் 27.3 b-வது ஷரத்து நுண்ணுயிர்கள் (Micro-organism) உயிரி சாராத முறை (Mon Biological Process) மற்றும் நுண்ணுயிரி முறை (Micro-Biological Process) போன்றவற்கு காப்புரிமை வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இவை மூன்றும் மரபணுமாற்று தொழில் நுட்பத்தை சார்ந்தவையாகும். உயிரினத்தின் இயற்கையான போக்கில் அமையாமல், மனித செயல்பாடுகள் மூலம் ஏற்படும் மாற்றங்களை உயிரி சாராத முறை என்று வகைப்படுத்துகின்றனர்.

8. இந்திய காப்புரிமை சட்டம் சுமார் 16 பிரிவுகளில் பல துறைகள் சார்ந்த கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை கொடுப்பதில்லை என்று கூறுகிறது. இதனை தவிர்த்து மற்ற எல்வா அறிவியல் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் அனைத்தும் காப்புரிமை பெறத்தக்கவையே. அந்த வகையில் TRIPS ஒப்பந்தத்திற்கு பின் பல மாற்றங்கள் செய்யப்பட்ட இந்திய காப்புரிமை சட்டம் தாவரம், விதைகள், பயிர்வகைகள், மற்றும் இன்றியமையா உயிரி முறை போன்றவைகளுக்கு மட்டுமே (Essentially Biological Process) என்ற சட்டப்பிரிவின் கீழ் காப்புரிமை கொடுப்படமாட்டாது என்று கூறுகிறது. இதன் மூலம் உயிரி சாராத செய்முறை மற்றும் நுண்ணுயிரி செய்முறை என்னும் அடிப்படையில் மரபணுமாற்று தொழில் நுட்பம் சார்ந்த பல்வேறு கண்டுபிடிப்புகள் போன்றவற்றுக்கு காப்புரிமை பெறத்தக்கவை என்பது தெளிவாகிறது.

9. காப்புரிமை எண். 214292, 10. காப்புரிமை எண் 215970, 11. காப்புரிமை எண். 210743, 12. காப்புரிமை எண். 220758, 13. காப்புரிமை எண்.209197, 14. காப்புரிமை எண். 233368, 15. காப்புரிமை எண். 229924



சிக்மண்ட் ஃப்ராய்டு

காத்ரினா

STUDIES ON HYSTERIA

தமிழில் - வர்த்தமான மகாவீரன்

189-வது வருஷத்தின் கோடை விடுமுறையில் எனது மருத்துவத்தை குறிப்பாக நரம்பியல் வைத்தியத்தின் பாரத்தை மறக்க ஹோகிதார்ன் (கிழக்கு ஆல்ப்ஸ் மலையில் உள்ள மலைத்தொடர்) மலைக்கு நான் சுற்றுலாப் பயணம் மேற்கொண்டேன். முக்கால்வாசி தூரம் சென்றடைந்த நான் பிரதான சாலையிலிருந்து பிரிந்து தனித்து ஒதுங்கி நின்ற ஒரு குன்றின் மீது ஏற முயன்றபோது அதன் ரம்யமான காட்சிகளும் அங்கிருந்த பயணியர் குடில்களும் என்னைக் கவர்ந்தன. சிரமப்பட்டு உச்சியை அடைந்து இளைப்பாறினேன். அதன் தூரத்து அழகில் சற்றே என் நெஞ்சை பறிகொடுத்து ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருந்தபோது, 'ஐயா, நீங்கள் மருத்துவர் தானே!' என்ற வார்த்தை காதில் விழுந்த போது என் நினைவுகள் கலைந்தன. ஒரு பதினெட்டு பிராயம் மதிக்கத்தக்க சிடுசிடுப்பான எனக்கு உணவு பரிமாறிய பெண்தான் இப்படி கேட்டாள். வீட்டு எஜமானி கூப்பிட்டதை வைத்து அவள் பெயர் காத்ரினா என்று தெரிந்துகொண்டேன். அவளது உடையும் யாரையும் ஈர்க்கும் எடுப்பான தோற்றமும் அவள் வேலைக்காரி அல்ல சந்தேகத்துக்கு இடமின்றி விடுதிக்காரியின் மகள் அல்லது சொந்தக்கார பெண்ணாக இருக்கவேண்டும் என்று தீர்மானித்தேன்.

சுயபிரக்ஞையடைந்த நான் ''ஆம், நான் மருத்துவர்தான். அது எப்படி உனக்குத் தெரிந்தது'' என்று பதில் சொன்னேன்.

''தங்குவோர்களின் பதிவேட்டில் உங்கள் பெயரை எழுதி யிருந்தீர்கள். ஐயா, ஒரு சில நிமிஷங்கள் எனக்காக ஒதுக்கு வீர்கள் என்று நினைக்கிறேன். என் உடல் நிலை மோசமடைந்து ஃஎன்ற இடத்தில் டாக்டரிடம் சென்று காட்டினேன். சிகிச்சையில் சில மருந்து மாத்திரைகள் கொடுத்தும் பலனளிக்காமல் இன்னும் உடல் நிலை சீரடையாமல் அப்படியேதான் இருக்கிறது.

ஆக அங்கும் நரம்பு வைத்தியத் தொழில் விடாது என்னை பின் தொடர்ந்தது. ஆறாயிரம் அடி உயரத்தில் வாழ்ந்த அந்த கட்டுடம்பும் கவர்ச்சித்தேவதை போன்ற தோற்றமும் கொண்ட இளநங்கையின் துயரப்பார்வை அவளுடைய நரம்புக் கோளாறு வியாதி பற்றி அறியும் ஆவலைத் தூண்டிவிட்டது. மேலும் அவளை குடைந்துகுடைந்து கேள்விக்கணைகள் தொடுத்ததில் அந்த நோயாளி அழகியின் வார்த்தைகளை மாற்றாமல் இருவருக்குமிடையில் நடந்த உரையாடல்களை அப்படியே என் நினைவிலிருந்து பதிவு செய்கிறேன்:-

''நல்லது, உனக்கு என்ன தொந்தரவு?''

''எனக்கு ஒரேயடியாக மூச்சுத்திணறுகிறது. என்றாலும் அடிக்கடி ஏற்படுவதில்லை. விட்டு விட்டு எப்போதாவது தொடர்வதால் என் உயிருக்கு ஆபத்து வருமோ என்று பயமாக இருக்கிறது''

நரம்பு மண்டல வியாதியின் அறிகுறியாக இது எனக்கு தோன்ற வில்லை. ஒருவேளை அடங்கா காம இச்சையின் ஆரம்ப முயக்கமாக இருக்கலாம் எனப்பட்டது. ஏதோ ஒரு எதிர்பாராத சம்பவத்தின் தாக்குதலில் அவளுக்கு

'ஒரு டாக்டரிடம் எதையும் மறைக்காமல் சொல்லவேண்டும்'

நல்லது. அப்போது என் மாமா - அதாவது நீங்கள் இப்போது சந்திக்க என் அத்தையின் புருஷன் கோஹன் என்ற மனைவியை [illegible] வந்தார். இப்போது என்னைத்தான் அவர்கள் [illegible] ஏனென்றால் ஃப்ரான்சிஸ்கா கர்ப்பம் தரித்திருக்கும் விஷயம் வெளியாக நானே காரணமானேன்.

''எப்படி அதை கண்டுபிடித்தாய்?''

'இப்படித்தான். இரண்டு வருஷங்களுக்கு முன் ஒரு நாள் சில கனவான்கள் மலைக்கு பயணம் வந்து உணவுக்கு வழி செய்யுமாறு கேட்டார்கள். அப்போது அத்தை வீட்டில் இல்லை. சமையல்காரியான ஃப்ரான்சிஸ்காவும் என் மாமாவும் கூட எங்கும் அச்சமயம் காணவில்லை. அலோய்ஸ் என்ற என் மாமன் பையன் ஃப்ரான்சிஸ்கா தந்தையின் அறையில்தான் இருக்க வேண்டும் என்று சொன்னான். இருவரும் சிரித்துக் கொண்டே எதையும் தவறாக எடுத்துக்கொள்ளவில்லை.

மாமாவின் அறை பூட்டப்பட்டிருந்ததை இருவரும் சென்று பார்த்தோம். எனக்கு ஒரே ஆச்சர்யம். நடைக்கட்டு வழியாக இருந்த ஜன்னல் வழியே உள்ளே பார்க்க முடியும் என்றான் அலோய்ஸ். அங்கே பயத்தால் அலோய்ஸ் பார்க்கவில்லை. 'சீ குறும்புக்கார பையனே, நான் பயப்படமாட்டேன்.' - என்று மனதில் ஏதும் விகற்பமில்லாமல் எட்டிப் பார்த்தேன். அறையின் இருட்டில் என் மாமா ஃப்ரான்சிஸ்கா மேல் படுத்திருந்ததை பார்த்தேன். இறங்கி சுவற்றில் படபடப்புடன் சாய்ந்த அன்றிலிருந்து இன்றுவரை மூச்சுத்திணறல் ஏற்படுகிறது. எல்லாம் வெற்றிடமாக கண்கள் மூடி தலையும் வெடிப்பதுபோல் ஆகிவிடுகிறது.

''உன் அத்தையிடம் அதை அன்றே சொல்லிவிட்டாயா?''

'ஓ, இல்லை. எதுவுமே சொல்லவில்லை.'

'பின் ஏன் அவர்கள் ஒன்றாய் படுத்திருந்தபோது நீ மிகவும் [illegible] விட்டாய்? உனக்கு அது என்னவென்று புரிந்ததா? என்ன நடந்தது என்று உனக்கு தெரியுமா?'

''அச்சமயம், எனக்கு எதுவும் புரியவில்லை. வயசு அப்போது எனக்கு பதினாறு. அந்த அறியாப் பருவத்தில் எதற்காக பயந்து கொண்டேன் என்றால் தெரியவில்லை. [illegible] அச்சமயம் [illegible] என்று இப்போது ஞாபகப்படுத்தி, [illegible] அது நன்மை பயக்கும். 'ஆம் என்னால் நினைத்துப் பார்க்க முடிகிறது. [illegible] உதறலில் எல்லாம் மறந்தும் விடுகிறது.'

'நீ முதலில் மூர்ச்சையடைந்தபோதும் இப்போதும் பயமுறுத்திக் கொண்டிருக்கும் அந்தமுகம் ஃப்ரான்சிஸ்காவுடையது தானா?'

'இல்லை, அவளுடைய முகம் அப்படி பயமுறுத்தவில்லை. பதிலுக்கு அந்த தலை ஒரு ஆண்மகனுடையது.'

'ஒருவேளை உன் மாமாவுடையதா?'

'அறையில் ஒரே இருட்டாக இருந்ததால் அவன் முகம் யாருடையதென்று தெளிவாக தெரியவில்லை. பிறகு தான் அந்த முகம் படு கோரமாக தெரிகிறது'

''நீ சொல்வது முற்றிலும் சரியானது''

(பாதை திடீரென்று முடிந்தது. ஒருவேளை அவள் கதையின் மீதியில் ஒரு புதிய திருப்பம் ஏற்படலாம்)

'அதற்குப் பின் என்ன நடந்தது?'

ஏதோ அரவம் கேட்டதில் அவர்கள் இருவரும் அரை குறையாக விழுந்தடித்து வெளியேறினார்கள். வெகுநேரம் வரை கெட்ட எண்ணங்கள் படர்ந்து நான் அச்சம்பவம் பற்றியே நினைத்திருந்தேன். இரண்டு நாட்களுக்குப்பின் ஞாயிறு அன்று வேலை இருந்ததால் நாள் முழுக்க அலைச்சல். அடுத்த திங்கட் கிழமை மீண்டும் நிறுநிறுப்பு ஏற்பட்டு நோய்வாய்ப் பட்டதில் தொடர்ந்து மூன்றுநாட்கள் எழுந்திருக்க முடியாமல் படுக்கையில் கிடந்தேன். (நாங்கள், (புருயரும் நானும்) அடிக்கடி இப்படி நரம்புத்தளர்ச்சி நோயின் அறிகுறிகளை ஒரு சிலர் நேரில் கண்டு சொன்ன காட்சிரூப எழுத்துக்களின் மூலம் உறுதி செய்தோம்)

'மூன்று நாட்கள் படுக்கையிலும் அறையில் கண்ட காட்சி உனக்குள் அருவருப்பாக நிழலாடியதா?''

'ஆம் நிச்சயம் வெறுக்கத்தக்க காட்சிதான் அது'

- என்றாள் ஏதோ சிந்தித்தவாறு.

'எதனால் அப்படி அருவருப்பு ஏற்பட்டது என்று சொல்ல முடியுமா?'

'நிர்வாண நிலையில் எதாவது பார்த்தாயா? எந்தக் கோலத்தில் அவர்கள் கிடந்தார்கள்?'

'கும்மிருட்டில் எதும் புலனாகவில்லை. மேலும் இருவரும் உடையணிந்திருந்தார்கள்.

என்னால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. ஆனால் நடந்தவை எல்லாம் ஒன்றுவிடாமல் விபரமாக சொல்லும்படி வற்புறுத்தினேன். அவள் சரியாக சொன்னால் என் முடிவும் சரியான ஒன்றாக இருக்கும் என்ற நம்பிக்கை இருந்தது.

அவள் விவரித்துக் கொண்டே சென்றாள். தான் கண்ட காட்சியை இறுதியாக அத்தையிடம் சொல்லி விட்டது தெரிந்தது. அவள் மாறியிருப்பதில் ஏதோ ரகஸ்யத்தை மறைப்பதாக அத்தை முடிவுக்கு வந்தாள். அதற்குப்பின் அவள் அத்தைக்கும் மாமனுக்கும் இடையில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடந்தேறியதில் சிறுசுகள் கண்டு ஆச்சர்யப்படும் சில விஷயங்களை அவர்கள் கேட்கக்கூடாதது நல்லதாகப்பட்டது.

கடைசியில் அத்தை குழந்தைகள் மற்றும் சகோதரன் பெண்ணுடன் மாமனை விலக்கிவிட்டு தற்போதுள்ள தங்கும் விடுதிக்கு குடிபெயர ஃப்ரான்சிஸ்கா முழுகாமலிருந்தாள். இதற்குப்பின் இந்த சிக்கலான முடிச்சை ஒதுக்கிவிட்டு நான் வியக்கும் விதத்தில் இரண்டு மூன்று வருஷங்களுக்கு முந்தி அவளுடைய மலரும் பருவத்தில் கண்ட இருஜோடி கதைகளை விவரித்தாள். முதலாவதில் அவளுக்கு பதினாலு வயசு நடந்த போது இதே மாமன் அவளை பாலியல் பலாத்காரத்துக்கு இழுக்க முயன்றது சம்பந்தப்பட்டது. ஒரு சமயம், ஒரு குளிர்பருவத்தின் போது கீழே இருந்த சமவெளிக்கு அவனுடன் பயணம் சென்று விடுதியில் இரவு தங்கநேர்ந்தது. அவன் பார்லரில் மது அருந்தி சீட்டு விளையாடியபோது அவளுக்கு தூக்கம் கண்ணைச் சொருகியதில் மேலடுக்கிலிருந்த ஒன்றாக தங்கும் அறையின் படுக்கையில் விழுந்தாள். அவன் மேலேறி வந்தபோது அவள் முழுவதுமாக உறங்கிவிடவில்லை. நன்றாக தூங்கி மீண்டும் விழித்துக் கொண்டபோது படுக்கையில் அவள் மீது அவன் தேகம் உரசியதை திடீரென்று உணர்ந்தாள். குதித்தெழுந்து அவனை ஆக்ஷேபித்தாள். 'மாமா, என் மேலே படுக்கிறீர்கள். உங்கள் படுக்கைக்கு ஏன் போகவில்லை?' அவளை சமாதானம் செய்ய முயற்சித்து:-

'பேசாமல் அப்படியே இரு குறும்புக்கார பெண்ணே. இந்த இனிய சுகத்தைப்பற்றி உனக்கு ஒன்றுந் தெரியாது'.

'உங்கள் 'இன்ப' சுகம் எனக்கு வேண்டாம். நிம்மதியாக என்னை தூங்கக்கூட விடமாட்டீர்களா?' கதவோரமாக வெகுநேரம் நின்று வாரந்தாவில் படுத்துக்கொள்ள நினைத்தவள் அவன் ஒருவழியாக தூங்கியதும் தன்படுக்கையில் காலை உதயம் வரை நன்றாக உறங்கினாள். அவள் தன்னை காத்துக் கொள்ள சொன்ன விதத்திலிருந்து அவளுக்கு பாலியல் தாக்குதலின் அறிகுறி பீறிட்டுவிட்டது தெரியவில்லை. அவன் உன்னை என்ன செய்ய முயற்சித்தான் தெரியுமா? என்று நான் கேட்டதற்கு 'அப்போது எனக்குத் தெரியாது' என்றாள். புரிந்து கொண்டு பின்னால் அவள் சொன்னாள்: 'அது இன்பமானது அல்ல' என்றும் மேலும் ஒருவர் தூக்கத்திற்கு அது கெடுதி விளைவிக்கும் என்றாள்.

பின்வரும் நிகழ்வுகளின் முக்கியத்துவம் கருதி இதன் முழு விபரத்தை அவள் தந்ததற்கு நான் கடமைப்பட்டுள்ளேன். அதற்குப்பின் நிகழ்ந்த சில அனுபவங்களையும் அவள் கக்கினாள். முட்டக் குடிபோதையில் ஒரு தங்கும் சத்திரத்தின் அறையில் அவன் மேலும் ஒரு தடவை நெருங்க முயற்சித்ததில் தப்பித்துக் கொண்டதையும் அதுபோன்ற இதர சம்பவங்களையும் சொன்னாள். அச்சமயங்களில் அவளுக்கு பின்னால் பாதிக்கப்பட்ட மூச்சுத் திணறல் தொல்லை ஏற்பட்டதா என்று கேட்டதற்கு ஒவ்வொரு தடவையும் யாரோ பின்னாலிருந்து கண்களைக் கட்டி நெஞ்சை அமுக்கும் ஸ்பரிஸம் தவிர முதன்முதலில் கண்ட அதிசய உணர்வு ஏற்படுவதில்லை என்றாள்.

முதல் சம்பவங்களின் ஞாபகங்களை சொல்லி முடித்ததும் இரண்டாவதின் தொடர்ச்சியை வரிசைப் படுத்தினாள். அது அவள் மாமன் - ஃப்ரான்சிஸ்கா இருவர் சம்பந்தப்பட்டது. ஒருதடவை குடும்பம் முழுவதும் மாடியின் கூரை அறையில் தங்க நேர்ந்தது. ஃப்ரான்சிஸ்காவுக்கும் காத்ரினாவுக்கும நடுவில் படுத்திருந்த மாமன் ஊர்ந்து ஃப்ரான்சிஸ்கா மேல் படுத்துக் கொண்டதில் சப்தம் கேட்டு எழுந்து பார்த்திருக் கிறாள். இன்னொருதடவை ந - என்ற கிராமத்தின் சத்திரத்தில் இரவு வாசம் செய்தார்கள். அவளும் அவளுடைய மாமனும் ஒரு அறையிலும் - ஃப்ரான்சிஸ்கா பக்கத்து அறையிலும் உறங்கினார்கள். நடுராத்திரியில் தூக்கம் கலைந்து பார்த்ததில் ஒரு நெடிய வெள்ளை உருவம் தாழ்ப்பாளைத் திறந்தது:- 'மாமா, நீங்களா? இந்நேரத்தில் கதவுக்கருகில் எதற்கு நிற்கிறீர்கள்?' என்றேன். 'பேசாமல் இரு ஒன்றைத் தேடிக் கொண்டிருக்கிறேன். தவறு செய்துவிட்டேன். ஒருவேளை அது வெளிக்கதவருகில் கிடக்குமா என்று பார்க்கிறேன் ......' என்று அவன் நிலைமையை ஜமாய்த்தான்.

'அச்சமயம் ஏதாவது சந்தேகப்பட்டாயா?' என்றதற்கு பார்த்ததைத் தவிர அதைப் பற்றி பின்னால் நினைத்தது கூட இல்லை என்றாள். 'அத் தருணங்களில் பய உணர்ச்சி கவ்வியதா' என்று துருவிக்கேட்டபோது அதைப்பற்றி துல்லியமாக ஏதும் அவளால் சொல்ல முடியவில்லை.

இந்த இரு தொடர்சம்பவங்களை ஞாபகப்படுத்தி சொல்லி முடித்த போது அவள் வேறொருத்தியாக உருமாற்றமடைந் திருந்தாள். எடுப்பான உடலத்தின் பூரிப்பற்ற முகத்தில் விழிகள் மலர்ச்சியடைந்து தற்போது புத்துயிர் பெற்றன. இதனிடையில் அவளது நோய் சரித்திரம் எனக்கு பூரணமாக புரிந்தது. அவள் என்னிடம் சொன்ன பின் பகுதி முதலில் பார்த்த காட்சியின் போது நடத்தை மாறுதல் அடைந்ததை மறைக்க திட்டவட்டமாக வேறுபாணியில்

வேண்டுமென்றே உத்தியாக திட்டப்பட்ட கதை. முதல் காட்சியை பார்ப்பதற்கு முன்னமே இந்த இரண்டு சம்பவத் தொடர்களும் நிழல்போல் தொடர்ந்திருப்பதை அவள் ஞாபகத்திலிருந்து உணரவில்லை. ஜோடிகளின் உடலுறவை நேரில் பார்த்ததுமே இந்தப் புதிய - அதே சமயத்தில் பழைய இரண்டு சம்பவக்கோர்வைகளையும் இணைத்துப் பார்த்து ஞாபகவீதியில் ஒதுக்கியும் தள்ளியிருக்கிறாள். இடைப்பட்ட நிலையான இந்த 'அடையாளம்' உந்துசக்தி ஒழுக்கம் மற்றும் உடலியலான யாந்திரமாக பதிலிப்பாற்ற வேலை செய்திருக்கிறது. இப்படியாக இப்புதிரை விடுவிக்கலாம்.

இரவின் முதல் உடலுறவுக்காட்சியில் அவள் அதிர்ச்சிப்பட வில்லை - பதிலுக்கு பழைய ஞாபகங்களின் தாக்குதலில் கூடுதலாக உந்துதல் பெற்றிருக்கிறாள். எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்க்கும் போது அவளது மாமன் அவள்மீது பறிக்க எத்தனித்ததின் ஞாபகத்தாக்குதலே அந்த முதல்காட்சியில் கிளர்ந்த உணர்வு.

எல்லாவற்றையும் கக்கி முடித்ததும் அவளிடம் நான் சொன்னேன் :- நீ அறையை பார்த்த போது என்ன நினைத்தாய் என்று எனக்குத் தெரியும்- "நீ நினைத்தது இதுதான்- மற்ற சமயங்களிலும் அந்த ஒரு இரவிலும் உன்னிடம் அவன் என்ன செய்ய நினைத்தானோ அதை அவளிடம் செய்து முடித்துக் கொண்டான்." அவன் உடல் நள்ளிரவில் உன்னை தீண்டிய போது ஏற்பட்ட கனவே நிறைவேறாததால் அருவருப்பாக நிலைமாறிவிட்டது"

'நிச்சயம் அப்படி இருக்கலாம்' என்றவள் அந்த அந்த தீர்க்கப்படாத சுகத்தை நான் வெறுப்பாக பாவித்ததே அந்த அந்த என் நினைப்பாக இருக்கலாம்...' என்று மழுப்பி ஒத்துக் கொண்டாள். 'மேலும் இன்னொரு சமாச்சாரம். இப்போது நீ பேதையல்ல வளர்ந்து ஆளான குமரிப்பெண் என்பதால் சகலமும் உனக்கு அத்துபடியாகி இருக்கும்....'

'ஆம். நான் இப்போது பெரியமனுஷிதான்' 'ஒன்றை மட்டும் மறைக்காதே. அவன் உடம்பின் எந்த உறுப்பை நீ அந்த இரவில் நீ உணர்ந்தாய்?'

அவள் நேராக பதிலிறுக்கவில்லை. பதிலுக்கு குறும்பான ஒரு புன்னகையை உதிர்த்து கையும் களவுமாக பிடிபட்ட குற்றவாளிபோல் ஆனாள். அடிப்படை விஷயம் சிக்கிவிட்டது. அவளில் பொங்கிய இன்பக்கிலேசத்தை நான் கற்பனித்தது அவள்பின்னால் கொடுத்த விளக்கத்துக்கு சரியாக ஒத்துப் போனது. என் யூகம் பொருத்தமானது என்பதை அவள் முகபாவம் வெளிப்படுத்தியது. மேலும் அவளை துளைக்காமல் இதுவரை மனந்திறந்துபேசியதற்கு நன்றி சொன்னேன். எனது நகர வைத்தியத் தொழிலின் அனுபவத்தில் நாகரீகமான நாரீமணிகள் என்று பீத்திக்கொள்ளும் பட்டணத்து ஸ்திரீகள் பலபேர் தங்கள் போலி கவுரவத்திற்காக வெட்கப்பட்டுக் கொண்டு இயற்கையாக சொல்லவேண்டியதை கூட மறைப்பதற்கு இவள் எவ்வளவோ பரவாயில்லை.

இப்படியாக இந்த வழக்கு தெளிவாகிறது- ஆனால் ஒரு நிமிஷம் நிற்கவும். அவளுடைய முதல் காமமுதிர்ச்சியி லிருந்து இன்றுவரை தோன்றி பயமுறுத்தும் அந்த பிரம்மை முகம் யாருடையது? எங்கிருந்து வந்தது? அவளிடம் தொடர்ந்து கேட்டதற்குதன் அறிவுபூர்வமான பதிலை உடனடியாக சொன்னாள்.

'ஆம்- இப்போது எனக்குத் தெரியும். அந்த சிரசு என் மாமாவுடையதுதான்- இப்போது அடையாளம் தெரிகிறது. ஆனால் அப்போது தெரியவில்லை. எப்படியெல்லாம் வசியப் படுத்தியும் தூண்டியும் எந்த

இச்சைக்கும் நான் மசியாததால் என் மாமா என்மீது கண்மூடித்தனமாக சினந்து கொண்டார். என்னால்தான் எல்லாம் என்று தூஷித்தார். என் வீண்வம்பு களால்தான் விஷமம் முற்றி விவாகரத்தும் நேரிட்டது. என்மீது கைவைக்க மிரட்டிக் கொண்டிருந்தார். அவரது அவலஷ்ண முகம் கைகளை நீட்டிக் கொண்டு என்னை கசக்க நெருங்குவது போல் அவர் உருவம் தூரத்தில் தெரியும் போதே எனக்கு அச்சமாக இருக்கும். அவரைக் கண்டால் பார்வையில் படாமல் ஓடி ஒளிந்துகொள்வேன். என்னையறியாமல் அவரிடம் ஒரு நாளைக்கு சிக்கி விடுவேனா என்ற பதற்றத்தில் உழல்கிறேன். அவருடை சீற்றமான முகம்தான் என்முன் நிரந்தரமாக நெளிந்து பீதியை கிளப்பிக் கொண்டிருக்கிறது.

அவளுடைய முதல் நரம்புக்கோளாறு நோயின் சின்னமான வாந்திபேதி நீங்கியதற்கான அறிகுறியாக இத்தகவல் எனக்குப் பட்டது. இரண்டாவதான காமமுகிழ்வு தாக்குதல் இன்னும் நீங்கவில்லை. தன் அத்தையிடம் தான் முதலில் கண்ட காட்சியை விரைவில் சொல்லி விட்டதால் மனஅழுத்தத்தின் பாரம் கொஞ்சம் வீர்யம் குறைந்திருக்கிறது.

உன் மாமன் உன்னை உடன்பட வைத்து ருசிக்க நெருங்கிய மற்ற கதைகளை அத்தையிடம் பகர்ந்துவிட்டாயா?

'ஆம். உடனடியாக இல்லை. சற்று காலதாமதமாக - விவாகரத்து பேச்சு அடிபட்டபோதுதான் சொன்னேன்.' ''நாம் அதை மனசில் மட்டும் வைத்திருப்போம். நீதிமன்றத்துக்கு சென்று தொல்லை கொடுத்தால் அப்போது அதையும் குற்றமாக சாட்டிவிடுவோம் அங்கேயே என்றாள் அத்தை.

அடுக்கடுக்கான அதிர்ச்சிதரும் குடும்ப பிரச்னைகளினால் அவளுடைய மனநிலை அத்தையுடன் சேர்ந்து கலங்கிப்போயிருக்கும் கட்டத்தில் அவள் இதயம் ஊசலாடிக் கொண்டிருக்கும் இழுபறி நிலையில் இயங்கிக் கொண்டிருப்பதை நான் துல்லியமாக புரிந்து கொண்டேன்.

அவளுடைய சிறுவயசிலேயே சீண்டப்பட்ட பாலியல் கொந்தளிப்பு எங்களுடைய வெளிப்படையான சம்பாஷனை களின் மூலம் சற்று தணிந்திருக்கும் என்று எனக்கு நம்பிக்கை துளிர்த்தது. அதற்குப்பின் அவளை நான் எங்கும் பார்க்கவே இல்லை.

அடிக்குறிப்பு பல வருஷங்களுக்குப்பின் காத்ரீனா, விடுதிக்காரியின் சகோதரன் புதல்வி அல்ல சொந்த மகள் என்ற உண்மை எனக்கு தெரிந்தது. பெற்ற தகப்பனே அவளை பாலியல் வக்கிரத்துக்கு இழுத்தால் அவளுக்கு நோய் கண்டது.

ஆதி மூலம் ஜெமினியைப்பற்றி உறங்காப்புலிக்குச் சொன்னது

பா. வெங்கடேசன் எழுதிக்கொண்டிருக்கும் நாவலிலிருந்து...

ஜெமினியை நாங்கள், நாங்களென்றால் நான், கிருஷ்ணமூர்த்தி, பாஸ்கரன், ஹரிதாஸ் வெங்கடபதி ஆகிய நால்வரும், முதலில் பார்த்தது பனஸ்தலி வித்யாபீடத்தின் வண்ண ஓவியப் பயிற்சி வகுப்பறையில் சிறப்பு உரையாளராக. ஆனால் அவர் அங்கே பேசியது வண்ண ஓவியங்களைப் பற்றி அல்ல. கோடுகள் மற்றும் வண்ணக் கோடுகளைப் பற்றி. அவர் ஒரு தமிழர் என்று, நான்கு நாட்களுக்குப் பிறகு அவர் தன்னை எங்களிடம் அவ்வாறு அறிமுகப்படுத்திக்கொள்ளும்வரை, எங்களுக்குத் தெரியாது. இத்தனைக்கும் பழங்குடிகளின் வண்ணத் தேர்வையும் அதன் பின்னணியிலிருக்கும் பிரகிருதி சார்ந்த அவர்களுடைய, புன்னகையாலோ ஆச்சரியத்தாலோ கேட்பவரின் உதடுகளை மெலிதாக விரியச் செய்யும் புதிரான புரிதல்களையும்பற்றி. மழையைக் கருவறுத்தலோடு நேரடித் தொடர்புடையதாக அவர்கள் உணர்ந்தால் கருவுறுதலோடு நெருங்கிய தொடர்புடைய சிவப்பு வண்ணத்தை அவர்கள் வழக்கமாக ஒதுங்கும் அந்தக் குடிசைகளின் உட்புறச் சுவர்களிலும் எந்தக் காட்சியைக் குறிக்கும் கோட்டுச் சித்திரத்திலும், ஒரு மரத்தையோ பறவையையோ யானையையோ குறிக்கக்கூட பயன்படுத்தத் தவறுவதில்லை என்றும் பீம்பேத்கா இதற்கு ஒரு உதாரணம் என்றும், அவர் எங்களிடையே ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பாளரின் உதவியோடு வங்காள மொழியில்; மைதிலி என்றும் சொன்னார்கள். எனக்கு இரண்டுமே தெரியாதென்பதால் அது எது என்பதைப்பற்றி யோசித்து அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. உரையாற்றியபோது அவருடைய பழுப்புநிறத் தோலிலும் முகச் சுளிப்புகளிலும் தென்பகுதிச் சாயல் இருப்பதாக எங்களுக்குள் பேசிக்கொள்ளக்கூட செய்தோம். ஆனால் பாண்டவ புத்திரர்களைப்போல நாங்கள் நால்வரும் எங்கு சென்றாலும் ஒன்றாகவே போவதும் வருவதும் பாலைக் குடிப்பதால் வரும் இடைஞ்சல்களை, உதாரணமாக ஜூண்ட்தாத் என்று அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்லச் சொல்ல வெறுக்கத்தெல்லாம் மாட்டுப்பால் என்கிற நிச்சயத்துடன் சரிதான் சரிதான் என்று சொல்லிக்கொண்டே ஒட்டகப் பாலைக் கோப்பைக் கோப்பையாகக் குடித்துத் தீர்த்தோம். அவர்கள் பரிமாறிய பதார்த்தங்களில் லட்டுவைத் தவிர வேறெதையும் எங்களால் வாயில் வைக்க முடியாத நிலையில் பின் பசிக்கு வேறென்ன செய்வது. பிறகு சிறப்பு அனுமதி பெற்று நானே அறையில் சமைக்கத் துவங்கிய நாளில், இந்தியாவின் வடக்குமல்லாத தெற்குமல்லாத, புதிய திசைச் சமையல் என்றும் என்றாலும் ஒட்டகப்பாலைக் காட்டிலும் நல்லது என்றும் சொல்லி அதை என் நண்பர்கள் சகித்துச் செரித்துக்கொண்டார்கள். சுவாரஸ்யமான அனுபவங்களாக்கிச் சிரித்துப் பகிர்ந்துகொள்ள ஒருவருக்கொருவர் துணையிருப்பதும், சில சமயங்களில் மொழிப் பிரச்சினையை நாங்கள் எங்களுக்குச் சாதகமாகக்கூட எடுத்துக் கொள்வதுமாக இருந்ததால், புஷ்கருக்குப் பிரயாணத்தின்போது எங்களெதிரேயிருந்த ஒரு அழகான வடக்கத்திப் பெண்ணின் முன் நான் பாடிய தமிழ்த் திரைப்படக் காதல் பாடல்களைக் கேட்டுவிட்டு பாவை

புரியாத நிலையிலேயே அவள் என்னை மோகனப் பார்வைப் பார்த்துச் சிரித்துக்கொண்டேயிருந்தாள். பாஷை புரியாமையை ஒரு பெரும் மன அழுத்தமாயும் அதைத் தவிர்ப்பதற்காக வலிந்து யாரேனும் ஒரு வடக்கத்திக்காரரை நண்பராக்கிக் கொள்வதை ஒரு நிர்பந்தமாயும் நாங்கள் உணரவில்லை. எனவே ஜெமினியை ஒரு தென்னிந்தியராக எங்கள் மனங்கள் உணர்ந்தாலும் அதை ஊர்ஜிதப்படுத்திக்கொள்ளவோ அதற்காக அவரை அணுகவோ நாங்கள் மெனக்கெடவில்லை. ஆனால் பெயர்ப்பட்டியலிலிருந்து நாங்கள் மெட்ராஸைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்த கணம் முதலாகவே அவர் எங்களைக் கவனித்துக் கொண்டுதானிருந்திருக்கிறார். எங்களுடன் பேச விரும்பியுமிருக்கிறார். அவர், பிறகு சொன்னார் நீங்கள் ஐந்துபேரும் தமிழ்நாட்டிலிருந்து வந்திருப்பதாக அறிந்துகொண்ட அந்தக் கணத்தில் நான் சிறுவயதில் வீட்டைவிட்டு ஓடிவந்தபிறகும் நெடுங்காலமாக உணராதிருந்த பிரிவேக்கத்தை அதன் முழுவீச்சோடு மூச்சையிழுத்து அனுபவித்தேன். நீங்கள் என்னை அடையாளம் கண்டுகொண்டு ஒரு புன்னகையாவது செய்யவேண்டுமென்கிற ஆசையை என்னால் கட்டுப்படுத்தவே முடியவில்லை. ஆனால் நீங்கள் இளைஞர்களானதால் அலட்சியத்தினாலோ அல்லது மரியாதையினாலோ என்னை அணுக முயற்சிக்கவில்லை. பிறகுதான் நானே முன்வந்து என் கையை நீட்டுவது என்கிற முடிவிற்கு வந்தேன். நான்கு நாட்களுக்குப்பின் ஒரு கல்லூரிப் பணியாள் மூலமாக அவர் எங்களை அவருடைய அறைக்கு கூப்பிட்டனுப்பினார். நாங்கள் அதை எதிர்பார்க்கவில்லை. போதும் வழியில்கூட, ஓவியத்துறையில் கிட்டதட்ட முப்பது வருட அனுபவமுள்ள ஒரு பழுத்த மனிதரென்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த அவரை ஈர்க்குமளவிற்கு நாங்கள் அப்படியென்ன விசேஷத் திறமையைப் பயிலரங்கத்தில் நிகழ்த்திக் காட்டிவிட்டோமென்றும் ஒருவேளை திடீரென்று முடிவு செய்யப்பட்ட, வகுப்பிற்கு வெளியிலான, சிறு கலந்துரையாடல் எதற்கேனும் பல்கலைக் கழக நிர்வாகமோ அல்லது மூத்த ஓவியர்கள் கூடிப் பேசியோ ஏற்பாடு செய்திருக்கலாமோவென்றும்தான் நாங்கள் ஒருவர் மாற்றி ஒருவர் ஊகித்துப் பேசிக்கொண்டே சென்றோமேயொழிய அது எங்களுக்கேயான பிரத்யேக அழைப்பாக இருக்கலாமென்றோ அதற்கு நாங்கள் ஐவரும் தமிழர்கள் என்கிற ஒரே தகுதிதான் காரணமென்றோ அடுத்த மூன்று மணி நேரங்கள் நாங்கள் முழுக்க முழுக்கத் தமிழில்தான் அவருடன் உரையாடிக்கொண்டிருக்கப் போகிறோமென்றோ, அந்த உரையாடல் தனிப்பட்ட முறையில் ஓவியங்களைப்பற்றிய எனது பார்வையில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தப்போகிறது என்றோ நாங்கள் நினைத்துப் பார்த்திருக்கவில்லை. கொஞ்சம் மிகையாகச் சொல்வது போலத் தோன்றினாலும், இப்போது நினைத்துப் பார்க்கிறபோது, உண்மையிலேயே ஜெமினி என்கிற ஒரு மனிதரை, அப்படி ஒரு, ஓவியரை நாங்கள் குறைந்தபட்சம் நான், அன்று சந்தித்தேனா என்றுகூட என்னால் நிச்சயமாகச் சொல்லமுடியவில்லை. ஒருவேளை கோடுகள் மீதான என்னுடைய புரிதலிலும் ஆளுமையிலும், சதா பெண்களின் இருப்பால் என் யவ்வனத்தின் மீது அதிர்ந்துகொண்டேயிருந்த. பனஸ்தலி நாட்கள் ஏற்படுத்தியிருந்த பாதிப்பு, அதற்கு நான்கு வருடங்களுக்குப்பிறகு என்னுடைய, இன்றுவரையிலான, மிகச் சிறந்த ஓவிய வெளிப்பாடென்று நான் கருதும், மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியினுடைய கோட்டுச் சித்திரங்களாகக் காகிதங்களில்

கடுமையாகச் சிதறடித்தபடியேதானிருந்தது. அன்று அவர், பரவசமும் நெகிழ்ச்சியும் மிகுந்த உசாவல்களுக்கும் ஊர்ப் பிரதாபங்களுக்கும் பால்ய கால நினைவுகூரல்களுக்கும் பின்னர், அவருடைய குடும்பப் பின்னணியைப் பற்றி அவர் என்ன கூறினார் என்பது எனக்கு இப்போது நினைவில்லை. சிறப்பாகக் கோட்டுச் சித்திரங்களைப்பற்றித்தான் எங்களுடன் பேசிக்கொண்டிருந்தார். மனித மூதாதையர்களினுடைய குகை ஓவிய முயற்சிகள் யாவும் கோட்டுச் சித்திரங்களாகவே இருப்பதை நினைவுப்படுத்திய அவர் நவீன யுகத்திலும் கூட ஒரு தாளில் குறுக்கும் நெடுக்குமாக, சில வேளைகளில் கவனக் குறைவாகக் கூட இழுக்கப்படும் கோடுகள் ஒரு நுண்ணுணர்வுமிக்க பார்வையாளனை அவனுடைய குகை நாட்களை நோக்கிக் காலவெளியில் நகர்த்திச் சென்றுவிடக்கூடிய வல்லமை கொண்டவை என்றார். என்னுடைய நண்பர்கள் வண்ணங்களின் பிரயோகம் காலப்பிரச்னையற்ற பிரகிருதியின் நித்திய இருப்பை நோக்கிய கலைஞனின் பயணமாக ஏன் இருக்கக்கூடாது என்கிற ரீதியில் அவருடன் நட்புணர்வுடன் கூடிய நீண்ட விவாதத்தில், அதை ஜெமினி தமிழைத் தன் காதுகள் திகட்டத் திகட்டக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்பதற்காகவே தேவைக்கதிகமாக இழுக்கா என்றுகூடத் தோன்றும் விதத்தில், ஈடுபட்டிருந்தார்கள். அவர்களுக்கு மட்டுமல்ல, அறுபதுகளின் துவக்கத்தில் நான் மெட்ராஸ் ஓவியக் கல்லூரியில் என்னுடைய எதிர்காலத்தை வரைந்து கொள்ள முயற்சித்துக் கொண்டிருந்தபோது அநேகமாக என்னுடன் ஓவியம் பயின்றுகொண்டிருந்த அனைவருக்குமே. அவர்களில் பலபேர் தங்கள் ஓவியத் திறமையை வெளிப்படுத்துவதற்குச் சரியான இடமாகத் திரைப்படத்துறையைக் கனவு கண்டு கொண்டிருந்தார்கள். அதற்கு உறுதியளிப்பதைப் போல அது திரைப்படங்கள் கறுப்பு வெள்ளையிலிருந்து வண்ணத்திற்கு வேகவேகமாயும் அதிக எண்ணிக்கையிலும் மாறிக்கொண்டிருந்த காலக்கட்டமாயும் இருந்தது. வண்ணங்களின் மீது ஒருவித மயக்கம் இருக்கத்தான் செய்தது. குறிப்பாக எப்போதுமே ஒன்றுக்கு மேற்பட்ட உணர்வோட்டங்களுடனேயே வளைய வரும் மனித உருவங்களையும் பல்வேறு காட்சிப் படிமங்களை ஒரே சமயத்தில் வாரியிறைக்கும் பிரகிருதியையும் வண்ணங்களால் அல்லாமல் வேறு வகையில் ஓவியங்களாகப் பதிவாக்குவது அசாத்தியம் என்று, ஒருவகையில் துரோகம் என்றுகூட அவர்கள் நினைத்தார்கள். ஆனால் எனக்கு ஏற்கனவே கோடுகளில் அதிகமான ஈடுபாடு ஒருவேளை கோடுகள் சக மனித நேயத்தின் குறியீடுகள் என்பதாக என் காதுகளில் விழுந்திருந்த அந்த அநாமதேயக் குரலின் தாக்கத்தினால்கூட இருந்திருக்கக்கூடும். விழுந்திருந்தது. உலக நடப்பான அரசியலில் எனக்கு அப்போதும், இப்போதுமேகூட அத்தனை ஈடுபாடு கிடையாதென்றாலும், வீட்டைவிட்டு வெளியேறி எனக்கான பிரத்யேக உலகத்தில் நான் கண் திறந்த ஐம்பதுகளின் பிற்பகுதியிலிருந்து ஓவியப் படிப்பை முடித்துவிட்டுக் கல்லூரியிலிருந்து வெளியேறிய அறுபதுகளின் நடுப்பகுதிவரை நடந்து கொண்டிருந்த போர், புதிய இந்தியாவின் வரவுசெலவுத் திட்டங்களினுடைய வெற்றி தோல்விகள், பஞ்சம், திராவிட இயக்கங்களின் தனித்துவமிக்க போராட்டங்கள், கட்சிகளின் பாரம்பரியச் செல்வாக்குகளைத் தலைகீழாகப் புரட்டிப்போட்ட தேர்தல்கள், காலாவதியாகிக்கொண்டிருந்த காந்தியக் கொள்கைகளின் மீதான பிரிவேக்கம், தீவிரமடைந்துகொண்டிருந்த பொதுவுடைமைவாதக் கொள்கைகளின் மீதான கிளர்ச்சி ஆகியவற்றின் மீதான

பொதுப்புத்தி சார்ந்த அறிதல்கூட ஒரு கலைஞன் என்கிற முறையில் சக மனிதன் மீது அக்கறை கொள்வதை என்மேல் நிர்பந்திப்பதற்கும் அதன் அடையாளமாகக் கோடுகளைத் தேர்ந்தெடுப்பதை நியாயப்படுத்துவதற்கும் எனக்குப் போதுமானதாயுமிருந்தன. ஓவியக் கல்லூரி வகுப்பறைகளில் ஐரோப்பிய ஓவிய மேதைகளின், சிறப்பாக பிகாஸோ, பால்க்ளீ, வான்கா மற்றும் எடுவர்டு மன்ச் ஆகியவர்களின், வண்ண ஓவியங்களைப் பார்க்கும்போதெல்லாம் சரியாகவோ தவறாகவோ அவர்கள் வண்ணங்களைக் கோடுகளுக்குப் பின்னால்தான், அல்லது கோடுகளின் மொழிப்புரையாகத்தான், நிறுத்திவைக்கிறார்கள் என்பதாயும் ரவிவர்மா மற்றும் தாகூர் போன்றவர்களைப் போல கோடுகளை வண்ணச் சேர்க்கைகளின் இழை விளிம்பில் மங்கலாக்கிச் சித்திரங்களைச் சாதாரண, யதார்த்த நிகழ்வாக்குவதில், கண்டிப்பாக ஓவிய உருவம் அதன் யதார்த்த மாதிரியும் வெவ்வேறு உலகத்தைச் சார்ந்தவை, அவர்களுக்கு உடன்பாடில்லை என்பதாயும்தான் அவர்களை நான் அர்த்தப்படுத்திக்கொண்டிருந்தேன். காலம் வயதின்மேல் இடும் சுருக்கங்களையும் களைப்பு கண்ணிமைகளின் கீழ் சுழற்றும் இருள் வரிகளையும் கருணை இதழ்களின் ஓரத்தில் இழுக்கும் மங்கிய ரேகைகளையும் அதிகாரம் உறுப்புகளின் விரைப்பில் சேர்க்கும் இழுவிசையையும் கோடுகள் வெளிப்படுத்துமளவிற்கு வண்ணங்களால் சாதிக்க முடியாதென்றே பிகாஸோ தன் நீலவண்ணக் காலத்து கிதார் வாசிக்கும் கிழவனாலும், வான்கா தன் திரும்பத் திரும்ப வரையப்பட்ட சுயவுருவச் சித்திரங்களாலும் மன்ச் தன்னுடைய அலறல் சித்திரத்தாலும் வலியுறுத்தியதாக எனக்குப் பட்டது. வண்ணம் தீட்டப்படாத கோவில் கற்சிற்பங்களின் மீது நாளின் மாற்றங்கள் கொண்டு வரும் கருப்பு மற்றும் சாம்பல் நிழல்களுக்கு இணையான உணர்வு வெளிப்பாடு வண்ணமயமான கோபுரச் சிற்பங்களில் இல்லையென்றும் நான் நினைத்தேன். ராய் சௌத்ரியின் உழைப்பின் பெருமிதம், நடக்கும் காந்தி மற்றும் மனிதத் தலை ஆகிய சிற்பங்களிலும் மடிப்புக் கோடுகள் கொண்டிருந்த வீச்சும் ஆற்றலும் முதன்மையும் என்னை மேலும் மேலும் அதுபற்றிய சிந்தனைகளுக்குள் ஆழ்ந்துபோகச் செய்திருந்தன. நிறைவான கோட்டுருவங்களுக்கு தமிழ்நாட்டில் மிகச் சொற்பமான உதாரணங்களே அப்போது இருந்தன. சில்பி. ஆனால் சில்பியின் கோடுகள், என்னைப் பொறுத்தவரையில், சிக்கல் மற்றும் அடர்த்தி என்பதற்கு மாறாக நுணுக்கம் மற்றும் விவரணையையே அடிப்படையாகக் கொண்டவையாக இருந்தன. ஒரு புகைப்படத்தின் தத்ரூபம், அதிலும் மின்விளக்குப் பளிச்சிடும் புகைப்படக் கருவி, அவருடைய கோடுகளை முக்கியத்துவமற்றதாக்கியதாக எனக்கு பட்டது. காரணம் சில்பி இருட்டின் உலகிற்குள் காண முடிவதும் காணப்படாததுமாக இருக்கும் நிலையில் கருவறை உருவங்களும் கோபுரப் பொம்மைகளின் அடர்த்தியும் உருவாக்கும் ஒருவித மயக்க நிலையை நுண்ணிய, சிக்கலற்ற, கோடுகளின் மூலம் வெட்டவெளிச்சத்திற்குக் கொண்டு வந்து சிதறடித்து விடுகிறவராக இருந்தார். இது அவருடைய கோடுகளின் உலகத்திற்குள்ளிருந்து வௌவால்களை புறாக்களை அவற்றின் எச்ச மணத்தை சாயங்காலக் குருவிகளின் சிறகடிப்புகளை மனிதர்களின் மெல்லிய முணுமுணுப்புகளை சிற்பங்களின் நிலை குத்திய விழிகளிலிருந்து தெறிக்கும் உக்கிரத்தை, சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் அந்த சித்திரங்களில் உறைந்து நிற்கும் காலத்தை, கடத்தி வெளியேற்றிவிடுவதாக நான் உணர்ந்து

கொண்டிருந்தேன். சிலையின் கோடுகள் எதுவாக ஆகியிருந்தால் அந்தச் சித்திரங்களின் அலைவரிசையும் வந்து தங்கியிருந்திருக்குமோ அந்த, நவீன ஐரோப்பிய ஓவிய மேதைகளால் நிராகரிக்கப்பட்ட, பண்பட்ட, ஒழுங்கற்ற, கோடுகளைக் கைப்பற்றுவதிலேயே என் கல்லூரிக் காலம் கழிந்ததென்றும் சொல்லலாம். எங்கள் சொந்தமான சிறுவூர் பெருந்தலைவர் கோவில் சப்பரக் கிரகத்திலுள்ள நான் பார்த்திருந்த தஞ்சாவூர் பாணி ஓவியங்களும் துறையூரில் நான் வேலை செய்த மளிகைக்கடை சரக்கறையில் தட்டி உணர்த்திக்கொண்டிருந்த அசேதனப் பொருட்களின் விதை மனத்துடன் கூடிய வடிவ வெளிகளும் மற்றும் அய்யனார் உருவங்களின் மீசையும் தொப்பையும் அவருடைய வாகனக் குதிரைகள் மற்றும் காவல் நாய்களின் அதீதமான பாய்ச்சலும் விழிகளும் ஒழுங்கின்மையைச் சிறுவயதுமுதலாகக் கையாளும் தைரியத்தையும் தொழில் நுட்பத்தையும் இயல்பாகவே எனக்குக் கொடுத்திருந்ததாக நான் நம்பினாலும் மனித சுபாவத்தின்படி என் உள்மனதின் குரலை ஆமோதிக்கும் அல்லது பிரதிபலிக்கும் ஒரு வெளிக்குரலைக் கண்டுபிடிக்கும்வரை என் விருப்பத்தைச் சித்தாரியோ தாளியோ கொண்டு வந்து நடைமுறைப்படுத்தும் துணிச்சல் எனக்கில்லாதிருந்தது. ஜெமினியுடன் என் நண்பர்கள் விவாதித்துக்கொண்டிருந்த நேரம் முழுவதிலும், அவர்களை அவ்வப்போது சுருக்கமாயும் சிறு சிறு தலையசைப்புகளினாலும் ஆமோதித்தும் மறுத்தும் கவனித்துக் கொண்டிருந்தேனேயொழிய, நான் அதிகமாக அவருடன் பேசவில்லை. பல ஆண்டுகளாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த என் உள்குரலின் எதிரொலியைச் செவியுற்றுக் கொண்டிருந்ததாக நான் அப்போது உணர்ந்து கொண்டிருந்ததுதான் அதற்குக் காரணமாய் இருந்தது. ஜெமினியும் கோடுகளின் மீது அதிகப் பிரேமை கொண்டவராகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். ஆனால் அவர் துண்டுபடாத, மென்மையற்ற, கனமான நீண்ட, கச்சிதமாகப் பூர்த்தியடையும் நிச்சயமான கோடுகளைப் பரிந்துரைப்பவராக இருந்தார். கோடுகள் ஒரு வகையில் இந்த உலகில் பெண்களின் இருப்பை பிரதிநிதித்துவம் செய்வதாக இருக்கின்றன என்றும், நான் இன்றுவரை கேள்விப்படாத ஒரு கருத்தைச் சொன்னார். அப்போது, அதாவது நாங்கள் சந்தித்துக்கொண்ட காலக்கட்டத்தில், கலம்காரி மற்றும் மதுபானி வகையிலான திருத்தமுறாத காட்டுக்குகைச் சித்திரங்களுக்கும் கலை வடிவமாக்கப்பட்ட, நகர்புறம் சார்ந்த, திரைச்சீலை ஓவியங்களுக்கும் இடைப்பட்ட கிராமப்புறப் பெண்களால் உட்புறச் சுவர்களில் ரகசியமாக வரையப்படும் வீட்டோவியங்கள் அவ்வளவாகப் பிரபலமாகியிருக்கவில்லையாதலால், எங்களால் அவர் பரிந்துரைத்த கோடுகளின் தன்மையை, அது ஆமோதிக்கத்தக்கதாகவே பட்டாலும், முழுமைத்துமாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவரும் அந்த ஓவிய வகை மாதிரிகளின் பெயர்களைச் சொல்லித் தன் தரப்பை விளக்கவைக்கும் ஆர்வமோ சித்தமோ இல்லாதவராகவே இருந்தார். எனவே அவை திரும்பத் திரும்பப் பார்த்து, விவாதித்து, புரிந்துகொள்ளவேண்டிய கருத்துக்களாக இருக்குமென்று நாங்கள் எங்களைச் சமாதானப்படுத்திக்கொண்டோம். ஆனால் கோடுகளையும் பெண்களையும் தொடர்புபடுத்தி அவர் சொன்னது பொதுவாக எங்களை, எங்கள் வயதை, ஈர்ப்பதாக இருந்தது. அதுபற்றி மேலும் விளக்கவேண்டுமென்று நாங்கள் அவரைக் கேட்டுக் கொண்டபோது வண்ணங்கள் உறைவையும் கோடுகள் இயக்கத்தையும் குறிக்கின்றன என்றும் உறைவு மற்றும் இயக்கம் என்பவை

முறையே சிவம் மற்றும் சக்தி, அதாவது ஆண் மற்றம் பெண் ஆகியவற்றால் உருவகப்படுத்தப்பட்டிருக்கின்றன என்றும் அந்த வகையில், ஓவியக் கலைக்கான வார்த்தைகளில் சொல்வதாயிருந்தால், இந்த உலகத்தை ஒரு பெண் கோட்டோவியமாகத்தான் பார்க்கிறாள் என்றும் அவர் கிட்டத்தட்ட பிரணவ மந்திரத்தை ஒதுவிக்கிற தொனியில், எங்களுக்குப் பதிலளித்தார். நான் முதலில் அவர் சொன்னதை ஒரு பெண்ணின் உருவத்தை வரையச் சிறந்த வழி கோடுகளின் வழியே அதை உருவாக்குவதுதான் என்பதாக அர்த்தம் எடுத்துக்கொண்டுவிட்டேன். அதில் அவர் அதிருப்தியும் சிறிது பதற்றமும் அடைந்துவிட்டார். சிறந்த கோட்டோவியங்கள் பெண்களின் உருவங்களாகத்தான் இருக்கவேண்டமென்பதில்லை. ஆனால் ஒரு சிறந்த கோட்டோவியம் ஒரு பெண் அல்லது ஒரு பெண்ணாகத் தன்னை உணரும் கலைஞனால்தான் வரையப்பட முடியும். பெண் இந்த உலகை வண்ணமாகப் பார்க்கவேண்டுமானால் கோடுகளின் அசைவை வண்ணங்கள் தங்களின் திப்பித்திப்பியான பரப்பில் சாத்தியமாக்கவேண்டும் என்றார் அவர் தொடர்ந்து. நான் பிறகு, அதற்குப் பிறகும் எங்கள் உரையாடல் நீண்டுகொண்டு தானிருந்ததென்றாலும், அதிகம் பேசவில்லை. ஆனால் அத்தனை பேச்சுக்கிடையிலும், சிறிது கோபத்தைக் கிளறிவிட்ட என்னுடைய அபத்தமான கேள்வியைத் தாண்டியும், அவர் என்னைத் தன்னுடைய மனவோட்டத்திற்கு நெருங்கியவனாக மௌனமாக உணர்ந்தபடியேதானிருந்திருக்கிறார். இதை அவர் வாய்விட்டுச் சொல்லவில்லையாயினும் சில மாதங்கள் கழித்து மெட்ராஸில் அவர், அவருடன் அதிகம் பேசிக்கொண்டிருந்த மற்றைய நண்பர்களையெல்லாம் விட்டுவிட்டு என்னைத் தேடி வந்ததற்கு வேறு காரணத்தை என்னால் சொல்ல முடியவில்லை. ஜெமினியின் அறையிலிருந்து திரும்பியபிறகு அவரைப்பற்றி நாங்கள், ஒரு தமிழனாக அன்னியப் பிரதேசமொன்றில் தன்னைத் தொடர்ந்து அடையாளம் கண்டுகொண்டபடியேயிருப்பதில உள்ள சிரமங்களைப் பற்றியும் ஏக்கங்களைப்பற்றியும் அவ்வப்போது பேசிக் கொண்டதற்குமேல், அதிகமாக நினைவுகூறவில்லை. பிறகும், இரண்டொரு முறை அவரை எங்கள் வகுப்பறையில் பேச்சாளராக சந்தித்தபோதும், நாங்கள், அவரும் சரி நாங்களும் சரி, இன்றையொரு நீண்ட உரையாடலைத் துவக்கும் மனநிலையில் இருக்கவுமில்லை. ஒரு புன்னகையும் அடையாளம் கண்டுகொண்ட தலையசைப்புமே ஒருவரை மற்றவரிடமிருந்து மரியாதையுடன் பிரித்துக்கொள்ளப் போதுமானதாயிருந்தது. அவருடன் என் நண்பர்கள் நடத்திய விவாதம், அதன் முடிவை நான் என் சொந்தக் குரலைச் செவியுறும் புளகாங்கித உணர்வில் அப்போது இருந்ததால், கவனிக்கவில்லையாதலால், அவருக்கு மனக் கசப்பு எதையேனும் தந்திருக்குமோ என்று கூட நான் எண்ணினேன். அதைப்பற்றி அவர்களிடம் பிரஸ்தாபித்தபோது அவர்கள் அதற்குப் போதுமான முக்கியத்துவம் கொடுத்துப் பேசவில்லையென்பதும் எனக்கு நினைவிருக்கிறது. நாங்கள் பனஸ்தலியைவிட்டுக் கிளம்புவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே ஜெமினி, எங்களிடம் விடைப்பெற்றுக்கொள்ள வராமலேயே அல்லது அதற்காக எங்களைத் திரும்பவும் கூப்பிட்டனுப்பாமலேயே தன் பணியை முடித்துக்கொண்டு கல்கத்தாவுக்குக் கிளம்பி போய்விட்டார். நாங்களும் அதோடு அவரை மறந்துவிட்டோம். அதாவது நான் அப்படி நினைத்துக் கொண்டிருந்தேன். பனஸ்தலியிலிருந்து மெட்ராஸ்

திரும்பி வந்த அடுத்த வருடம் அதுவரையில் சக ஓவியர்களின் படைப்புகளின் மத்தியில் என்னுடையவைகளையும் நிலைக் கண்காட்சிகளுக்கும் அனுப்பிக் கொண்டிருந்த நான், முதல் முதலாக பெட்டாலிங் ஜெயாவில் என்னுடைய தனி ஓவியக் கண்காட்சியை நடத்தினேன். அதிக அளவில் இடம்பெற்றன என்று சொல்ல முடியாவிட்டாலும் நகலியலில் என் மனதில் பதிந்துபோயிருந்த கோடுகள் காகிதங்களில் வெளிப்பட்டிருந்தவிதம் பலருடைய கவனத்தை ஈர்த்துப் பாராட்டுகளை எனக்குப் பெற்றுத் தந்தது. தினமும் இரவு அரங்கத்திலிருந்து வெளியேறிய பிறகு கையோடு கொண்டுவந்திருக்கும் கருத்துப் பதிவேட்டில் விதவிதமான கோட்டு வடிவங்களாக நிரம்பிக் கிடக்கும் பலதரப்பட்ட கையெழுத்துக்கள் எனக்குச் சொல்லும் அறிவுரைகளையும் வியப்புரைகளையும் ஆலோசனைகளையும் விமர்சனங்களையும் மணிக்கணக்கில் படித்துக் கொண்டிருந்துவிட்டுத்தான் உறங்கப் போவேன். பிற்காலத்தில் எத்தனையோ முக்கியஸ்தர்களிடமிருந்து என் ஓவியங்கள் எத்தனையோ பாராட்டுகளைப் பெற்றிருக்கின்றன. ஆனால் அவற்றில் எதுவும் என் முதல் கண்காட்சியரங்கக் குறிப்பேட்டில் கிறுக்கப்பட்டிருந்த வாசகங்களுக்கு ஈடாகமாட்டா. ஏனென்றால் பிற்காலத்தில் என் ஓவியங்களுக்குள் பார்ப்பவர்களின் புத்திப் பரப்பிற்குள் அகப்பட்டுவிடாத சாரீரத்திற்கும் சாதகத்திற்கும் அப்பாற்பட்ட ஞானமாக நல்ல இசையிலிருந்து வெளிப்படும் நெகிழ்ச்சியைப் போன்ற, உணர்வார்ந்த, மேதமையொன்று அவர்கள் பாராட்டுகளிலிருந்து அவர்கள் திணறும் வண்ணம், என்னுடைய அடுத்த படைப்பை நோக்கித் தப்பித்துக்கொண்டேயிருக்கிறது என்கிற கர்வத்துடனும் அது எனக்கு மட்டுமே வசப்படக்கூடியது என்கிற நிச்சயத்துடனும் தான் அவற்றை நான் எதிர்கொண்டிருக்கிறேன். ஆனால் என்னுடைய தனிக் கண்காட்சியின்போது எனக்குக் கிடைத்த பாராட்டுரைகள் அப்படிப்பட்டவையல்ல. அவை என்னை நோக்கித் தங்கள் நேசத்தையும் அக்கறையையும் மலர்த்தியபோது அவர்கள் அவற்றில் கண்டுபிடித்துச் சொல்லிக்கொண்டேயிருக்கிறவற்றை நானே என் முதலில் அடையாளம் கண்டுகொள்ளவில்லை என்கிற ஆதங்கமும் வியப்பும் அவர்கள் பாராட்டுகிற ஆகிருதியை என்கிற நபர் நான்தானா, இந்தக் கைகள்தான் அவற்றை வரைந்தன என்கிற அதிசயமும் என்னைச் சந்தோஷத்திற்கும் சந்தேகத்திற்குமிடையில் அலைக்கழித்துக் கொண்டிருந்தன. நான் அவற்றை ஆசையுடனும் சில சமயங்களில் அழுதுகொண்டும் திரும்பத் திரும்பப் படித்தேன். பல சமயங்களில் நான் உறங்கிவிட்ட பிறகும் என் மனம் அவற்றைத் தொடர்ந்து வாசித்தபடியே இருந்தது. கடைசியாக, ஒரு வாரத்திற்குப் பிறகு, கண்காட்சியின் இறுதி நாளன்று மற்றுமொரு எதிர்பாராத இன்ப அதிர்ச்சியும் எனக்காகக் காத்திருந்தது. அன்று மாலை முடிந்ததும் ஓவியங்களை என் அறைக்குக் கொண்டுவந்து சேர்த்துவிட்டுப் பெரியதொரு விடுதலை உணர்வுடனும் சாதித்த களைப்புடனும் அன்றைய பார்வையாளர் குறிப்புகளை நான் வாசிக்கத் தொடங்கியபோது குறிப்பேட்டின் பக்கங்களுக்கிடையில் அதன் பின்பக்கத்திலிருந்தே தனியாகக் கிழித்தெடுக்கப்பட்ட ஒரு தாளில், அதன் இரண்டு பக்கங்களிலும் நெருக்கமான கையெழுத்தில் ஆங்கிலத்தில் அவசரமாக எழுதப்பட்ட பின்னாளில் இந்த மாதிரியான கையெழுத்தினை ஆதி வடிவமாகத்தான் சோழர்காலக் கோவில்களின் சுவர்களில் பொறிக்கப்பட்டிருக்கக் கண்டபோது நான் அடையாளம் கண்டேன். குறிப்பு ஒன்று

குறிப்பு என்று சொல்வதைவிட கடிதம் என்று அதைச் சொல்வது பொருத்தமாக இருக்கம். இதன் இறுதியில், ஜெமினி என்கிற தமிழ்க் கையெழுத்துடன் இரண்டாக மடித்து சொருகப்பட்டிருந்தது. என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. கடிதத்திற்குள் உடனே போகத் தோன்றாமல் நான் அந்தக் கையெழுத்தையே நெடுநேரம் திரும்பத் திரும்பத் தடவிப் பார்த்துக்கொண்டிருந்தேன். உன்னத இலக்கியங்களின் தனிச்சிறப்பு அவற்றின் பல வரிகள் வாசிப்பவனுடைய வாழ்வின் பல்வேறு அனுபவங்களோடு கூடவே வருவது என்பார்கள். ஜெமினியின் கையெழுத்தைக் கண்டபோது எனக்குத் தாஸ்தாயெவ்ஸ்கியின் இடியட் புதினத்தில் மிஷ்கின் நீண்ட நாட்களுக்குப் பிறகு அவனுடைய காதலியிடமிருந்து வரும் கடிதத்தைப் பிரித்துப் படிக்கத் தோன்றாமல் உறையின் மேலிருக்கும் அவளுடைய கையெழுத்தையே ரசித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் காட்சிதான். அவர் அப்போது சொல்லுவார், கடிதம் யாரிடமிருந்து வந்திருக்கிறது என்பதுதான் முக்கியம். உள்ளே எழுதப்பட்டிருப்பவை அனாவசியம் என்று, நினைவிற்கு வந்தது. நானும் ஜெமினியின் கையெழுத்தைக் கண்ட கணத்தில்தான் பல மாதங்களுக்குப் பிறகு அந்தக் கிழவரால் நான் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறேன் என்பதையும் அவரை, அவர் என் ஓவியங்களைப் பார்வையிட வந்திருந்தார் என்பதை ஒரு ஆச்சரியமாகவேதான் உணர்ந்தேனென்றாலும், ஏனோ என் கண்காட்சியில் எதிர்பார்த்திருக்கிறேன் என்பதையும் தெரிந்து கொண்டேன். ஆனால் அவர் ஏன் என்னைப் பார்க்காமலே சென்றுவிட்டார் என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை. அதைவிட ஆச்சரியம் அவரை நான் என் பார்வையிலிருந்து தவறவிட்டிருந்தேன் என்பது. ஆனால் ஓவியங்களைப் பார்வையிட வருபவர்களின் அசைவுகளை, பல சமயங்களில் இருந்த இடத்திலிருந்தே கவனிப்பதும் அவர்கள் தங்கள் முகங்களைக் கல்லைப்போலக் கடினமாக வைத்துக்கொள்ளப் பயிற்சி பெற்றிருந்தார்களென்றபோதும், ஊகித்துக்கொள்ள முயற்சிப்பதும், அந்த ஊகமே பல சமயங்களில் பெற்றிருந்தார்களென்றபோதும், ஊகித்துக் கொள்ள முயற்சிப்பதும், அந்த ஊகமே பல சமயங்களில் அவர்களுடன் நேரடியாகப் பேசவோ அவர்களுடைய குறிப்புகளைப் படிக்கவோ அவசியமில்லாதபடி நான் எதிர்பார்க்கும் திருப்தியை எனக்குத் தந்துவிடும். நான் வளர்ந்த பிறகு என்னையறியாமலேயே என்னுள் வளர்த்துக்கொண்ட, வித்யாகர்வம் சார்ந்த, ஒரு பழக்கம். ஆனால் துவக்கக் காலங்களில், சரியாகச் சொல்லவேண்டுமானால் ஏழு ஓவியர்களின் கண்காட்சிக்காக ஆஸ்திரேலியாவிற்கு நான் சென்றுவந்த வருடம் வரை, கண்காட்சிக்கு வருபவர்களைக் கவனிப்பதைவிட ஒவ்வொரு பார்வையாளருடைய முதுகிற்குப் பின்னாலும் போய் நின்றுகொண்டு அவருடைய பார்வையிலிருந்து என்னுடைய ஓவியங்களை நானே மறுபடி மறுபடி பார்த்து அவர் நினைப்பதை ஊகிக்க முயலும் பழக்கம்தான். அது மிகவும் இயற்கையானதும் ஆரோக்கியமானதுமான ஒன்று என்றுகூட என் நண்பர்கள் என்னிடம் சொன்னார்கள். என்னைத் தொற்றிக்கொண்டிருந்தது. எனவே ஜெமினி என் கண்காட்சிக்கு வந்து சென்றதை நான் கவனிக்கவில்லையென்றால் ஒரு வகையில், அந்த வயதில், அது ஓரளவு எதிர்ப்பார்த்திருக்கக்கூடிய ஆச்சரியம்தான். ஜெமினியின் கடிதத்தை, அது என் படைப்புகளைத் தாண்டி என் படைப்பு மனநிலையை நோக்கிப் பிரத்யேகமாக எழுதப்பட்டிருந்தது என்பதனாலோ அல்லது அவரைத் தனியாகத் சந்தித்துப் பேசும் வாய்ப்பு என்னை

மிக நெருங்கி வந்திருந்தும் அதைத் தவறவிட்டுவிட்டேனென்கிற குற்றவுணர்வினாலோ அல்லது அது சுமந்து செல்ல வசதியாக ஒரு கிழித்தெடுக்கப்பட்ட காகிதத்தில் எழுதப்பட்டிருந்தாலோ, நான் பிறகு என் சட்டைப் பையிலே வைத்து பல நாட்கள், ஒரு இரண்டு வருட காலம் இருக்கலாம். தோன்றும்போதெல்லாம் எடுத்துப் படிப்பதைப் பழக்கமாக்கிக் கொண்டிருந்தேன். மடிப்புகளின் விளிம்புகள் நைந்து அது கிழியத்தொடங்கிய போது பால்க்ளீயின் ஓவியப் புத்தகத்திற்குள் அதைப் பாடம் பண்ணி வைக்க முயன்று திருமணத்திற்குப் பிறகோ நெசவாளர் பணி மையத்தில் வேலைக்குச் சேர்ந்த வருடத்திலோ, அப்போதுதான் என் உடைகளை என் விருப்பத்திற்கு அணிய முடியாது என்கிற சூழ்நிலை உருவானது. அல்லது வீடு மாற்றியபோதோ அதை அந்தப் புத்தகத்தோடு எங்கோ தொலைத்துவிட்டேன். அல்லது அந்தப் புத்தகத்தையே அதனுள்ளே ஜெமினியின் கடிதம் இருந்ததை மறந்துபோய் யாருக்கேனும் பரிசாகக் கொடுத்திருக்கக்கூடும். தெரியவில்லை. ஆனால் அதை இப்போது ஒரு பெரிய இழப்பாகத்தான் நான் உணர்கிறேன். ஏனென்றால் என்னைப் பொறுத்தவரையில் ஜெமினி ஒரு கற்பனை மனிதன் அல்ல என்பதை, மற்றவர்களுக்கில்லாவிட்டாலும் எனக்கு நானேயாவது உறுதிப்படுத்திக்கொள்ள என்னிடமிருந்த ஒரே சான்று அந்தக் கடிதமாகத்தான் இருந்தது. அல்லது நான், இப்போது நம்பத் தொடங்கியிருப்பதைப்போல, ஜெமினி என் மனதின் குரலேயன்றி வேறல்ல என்பதை நான் உறுதிப்படுத்திக்கொள்வதற்காகவே அது தொலைந்துபோகவேண்டும் என்று விதி இருந்ததோ என்னவோ. மேலும், அந்தக் கடிதத்தை நான் பல மாதங்கள், பல தருணங்களில் முதல்தடவை அதைக் கண்ணுற்றபோது உண்டான நெகிழ்வும் ஆச்சரியமும் பெருமிதமும் கொஞ்சமும் வடியாத உணர்வுடனேயே பலமுறை வாசித்திருந்தும் கூட அது தொலைந்துபோய்விட்டதென்று தெரியவந்தபோது, பிறகு அதை அப்படியே இன்னொரு தாளில் எழுதிவைத்துக் கொள்ள நான் முயன்றபோது, அதிலிருந்தே வரிகளைக் கோர்வையாக என்னால் நினைவுபடுத்திக்கொள்ளவே முடியவில்லை. அதன் சாராம்சம் மட்டுமே, வறண்ட படுக்கையில் எஞ்சியிருக்கும் நதி நீரின் தடத்தைப் போல என் நினைவில், இன்று தங்கியிருக்குமளவிற்கே தங்கியிருந்தது. அந்த வகையில் இப்போது என்னால் சொல்லப்படுவது ஜெமினியின் அசல் கடிதமல்ல, மாறாக அவர் எழுதியிருந்ததாக நான் உணரும் மற்றொரு கடிதம். கண்காட்சிக்கு ஜெமினி தன் மகனுடன் வந்திருந்தார் என்பதை, தனக்குக் கோர்வையாக கடிதங்கள் எழுதி பழக்கமில்லையாதலால் கடிதத்தின் வாக்கியங்கள் தன்னால் தமிழில் சொல்லப்படத் தன் மகனால் மொழிபெயர்த்து எழுதப்படுகிறது என்கிற அவருடைய குறிப்பு தெரிவித்திருந்தது. மனைவி மற்றும் ஒரே மகனுடன் கல்கத்தா நகரிலிருந்து குடிபெயர்ந்து தன் சொந்த ஊரான மதுரையை நோக்கித் தான் சென்றுகொண்டிருப்பதாயும், போகும் வழியில் மெட்ராஸிலிருந்து புகைவண்டி மாறியாக வேண்டிய நிலையில் எதிர்பாராதவிதமாக கிடைத்த சில மணிநேர அவகாசத்திற்குள் மகனின் உதவியுடன், முன்பு பரிச்சயமாகியிருந்த சில ஓவியர்களைத் தொடர்புகொண்டு அவர்கள் மூலமாக என்னைக் கண்டுபிடிக்க முயற்சித்ததாயும், அதன் வழியே என்னுடைய ஓவியக் கண்காட்சியைப்பற்றியும் அது நடக்கும் முகவரியையும் அறிந்து கொண்டதாயும் பிறகு அதையே புகைவண்டி நிலையச் சுவற்றில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டி மூலமாக

உறுதிப்படுத்திக்கொண்டதாயும் அவர் தெரிவித்திருந்தார். என்னைப் பிரத்யேகமாகத் தன் மனது நினைவு வைத்துக்கொண்டிருந்ததையும் மெட்ராஸில் இறங்க நேர்ந்ததை என்னைப் பார்க்கக் கிடைத்த வாய்ப்பாக அது எண்ணத் தலைப்பட்டதையும் அவரும் ஒரு ஆச்சரியமாகவேதான் சொல்லியிருந்தார். பனஸ்தலியில், அவருடைய அறையில் சிந்தனையைத் தூண்டும் வகையிலான அத்தனை நீண்ட உரையாடல்களுக்கிடையில், அவரை நான் கேட்ட அபத்தமான கேள்வியும் பிறகு அவர் முகத்தை மட்டுமே கவனித்தபடி நான் கடைபிடித்த மௌனமும், அப்போது அவரை எரிச்சல்கொள்ளச் செய்தாலும், யோசித்துப் பார்த்தபோது, ஒரு கலைஞனுக்கு மிக இன்றியமையாத தேவை என்று கருதிய, பெண்மைக்கே உரித்தான, சிருஷ்டிபூர்வமான, கர்வமில்லாமல் சட்டென எதன்மேலும் வியப்படையத் தன்னை அனுமதித்துக்கொள்ளும் வெகுளித்தனமும், அது அறியாமையல்ல, லஜ்ஜையற்ற அபத்தமான புரிதல்களால் வடிவங்களின் அந்தரங்கத்தை நேரடியாகத் தொட்டுவிடும். தன்னுணர்வற்ற, இயல்பான மேதமையும் அதில் இருந்ததாக அவருக்குத் தோன்றியிருக்கிறது. மொண்ணையான தத்ருபங்களை நுணுக்கமான கோடுகளாக்கும் இந்த அபத்தப் புரிதலை துஸாத் இனப் பெண்ணொருத்தியிடமிருந்து, அவர் அப்படிக் குறிப்பிட்டிருந்தது அவருடைய மனைவியைப்பற்றிதான், சமீப காலமாக மதுபானி வகை ஓவியங்கள் அனைவரும் அறியும்படியாகப் பிரபலமாகிவிட்ட நிலையில் அவர் ஏன் அவற்றை முதலில் உலகிற்கு அறிமுகப்படுத்திய பிராமணப் பெண்களின் வகை மாதிரிகளான பூஜையறை அரிசி மாவுச் சித்திரங்களையும் மணவறை சாணச் சித்திரங்களையும் சொல்லாமல் விட்டுவிட்டார் என்பதை, அப்போதில்லாவிட்டாலும் இப்போது, என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. பிராமணப் பெண்களுடையவையும் துஸாத்துகளின் கேருக் கோடுகளைக் கிட்டதட்ட ஒத்தவைதான் என்றாலும் அவர்களுடைய பாணி புராணிகங்களை, அதாவது கதைகளின் மூலமாக ஏற்கனவே கலையாக மாற்றப்பட்டுவிட்ட ஒரு சிருஷ்டியைக் கோடுகளின் மூலமாகச் செழுமைப்படுத்துவதாகவே இருக்கிறது. இதற்கு மாறாக துஸாத்துகள் தங்கள் அன்றாடங்களிலிருந்து பிறருடைய முகஞ்சுளித்தலுக்கு ஆளானவையும் கரடுமுரடானவையும் இன்னும் சொல்லப்படாதவையுமான, கச்சாவான யதார்த்தத்தைத் தங்கள் கோடுகளின் வழியே கலைமயப்படுத்திக் கொண்டிருந்தார்கள். இது இயல்பாகவே ஜெமினியின் பார்வையில் கலையென்பது வடிவங்களை அபத்தமாக, அதாவது புதிதாக புரிந்து கொள்வது என்கிற கோட்பாட்டிற்கு மிக நெருக்கமாக வரக்கூடிய ஒன்றுதான், கிட்டதட்ட முப்பது முப்பதைந்து வருடங்களாக கற்றுக் கொண்டேயிருக்கிறவரென்கிற முறையில் என்னுடைய புரிதல் முறையின் பின்னே வலுவான, எதிர்பார்க்க முடியாத, கோடுகளின் சிருஷ்டிக்குச் சாத்திமாயிருக்கிறது என்றும் கண்காட்சியில் இடம்பெற்றிருந்த ஓவியங்கள் அவ்வகைப்பட்ட புரிதலின் வெளிப்பாடுகள் அல்லவென்றாலும் அவை யாவும் விரைவிலேயே தீர்க்கமான கோடுகளாகக் கனியவிருக்கின்றனவாகவே தங்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். கடிதம் முழுவதிலும் இந்த வகையில் மிகுந்த நம்பிக்கை தரும் வரிகளையே ஜெமினி எழுதியிருந்தாலும் தன்னைப்பற்றியோ தன் குடும்பத்தைப்பற்றியோ எந்தவொரு தகவலையும் அதில் குறிப்பிட்டிருக்கவில்லையானாலும், ஏனோ, ஒரு சோகத்தையும் விரக்தியையும்

அந்த வரிகளில் அடங்கியிருந்த. அந்தக் கடிதத்தின் மொத்தச் சாராம்சத்திலிருந்து என்னால் உணர முடிந்தது. ஒருவேளை என்னைப்போலவே ஓவியங்களின் மீதான வெறித்தனமான ஈடுபாட்டின் காரணமாக வீட்டைவிட்டுச் சொல்லிக்கொள்ளாமல் ஓடிவந்தவனென்று பனைதலியில் தன்னைப்பற்றிப் பெருமையாகச் சொல்லிக்கொண்ட அவர். ஆனால் என்னுடைய என் வீட்டாருடைய என் எதிர்காலம் பற்றிய அக்கறையுடன் கூடிய அணுகுமுறை அனுமதியுடனான வருகை ஆகியவை திருப்தியளிப்பதாகக் கடிதத்தில் எங்கேனும் குறிப்பிட்டிருந்தாரோ, கடிதத்தின் சாராம்சத்தை மரணப்படுக்கையிலிருந்து தன் சொத்துக்களை வாரிசுகளுக்குக் கையளித்துவிட்டுச் செல்லும் ஒரு தகப்பனின் இறுதி வாசகங்களைப் போலவோ அல்லது தன் வித்தையைச் சீடனுக்குத் தாரை வார்த்துவிட்டு மரணிக்கவிருக்கும் குருவினுடைய பிரியாவிடையைப் போலவோ நான் உணர்ந்ததற்கு அந்த வரிகள்தான் காரணமோ. ஆனால் அப்படியான வரிகள் அதில் எழுதப்பட்டிருந்ததாக என்னால் நிச்சயமாகக் கூற முடியவில்லை. கடிதத்திலிருந்தவை ஜெயினுடைய சிந்தனைகளாயிருந்தாலும் அதை எழுதிக்கொண்டிருந்தவர் அவருடைய மகன் என்கிற நிலையில் கண்டிப்பாக அப்படிப்பட்ட அமங்கலமான இறுதி வரிகளை எழுத அவர் ஒத்துக்கொண்டிருக்க மாட்டார் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ஒருவேளை அத்தனை மெனக்கெடலுக்குப் பிறகு அவர் என்னைச் சந்திக்காமலேயே சென்றுவிட்ட நிகழ்வு என்னுள் கிளர்த்தியிருந்த வியப்பும் துயரமும்தான் அப்படியான வரிகள் அதில் இருந்ததாக என்னை உணரத் தூண்டியதோ. தெரியவில்லை. கடிதம் தொலைந்துவிட்டது. வருடங்கள் ஓடிவிட்டன. நினைவுகள் மங்கி அவற்றோடு, இப்படித்தான் இருந்தது என்கிற நிச்சயத்தைவிட இப்படித்தான் இருந்திருக்கவேண்டும் என்கிற கணிப்புச் சார்ந்த கற்பனைகளும் பிரமைகளும் கலந்துவிட்டன. ஜெயினைப் பிறகு நான் பார்க்கவில்லை. ஆனால் பார்க்க விரும்பினேன். மதுரையிலிருக்கும் என் நண்பர்கள் மூலமாக அவருடைய இருப்பிடம்பற்றி, அவர் தன் கடிதத்தில் முகவரி எதையும் தெரியப்படுத்தியிருக்கவில்லை, அறியக்கூடக் கொஞ்சக் காலம் முயற்சித்துக்கொண்டிருந்தேன். பிறகு அம்முயற்சியைக் கைவிட்டுவிட்டேன். ஆனால் பனைதலியில் எங்களை வலிந்து வரவழைத்துப் பரிச்சயப்படுத்திக் கொண்ட அவர் பிறகு கல்கத்தாவில் பிரத்யட்சமாகி என்னைச் சந்திக்க முடியாமலே சென்று மறைந்துவிட்ட நாளைவிட அவருடைய கடிதம் தொலைந்துபோனது நினைவொன்று என் பிரக்ஞையில் உறைத்த பிறிதொரு நாளில்தான் அவருடைய செயல்களின் புதிர்த்தன்மை அதிகமாகக் கனப்பதாக எனக்குத் தோன்றிய போது அதை நான் தீவிரமாகத் தேடத் துவங்கினேன். இன்றுவரை அது என் கைகளுக்குக் கிடைக்கவேயில்லையென்றாலும் அதில் நான் அடைந்த ஏமாற்றத்திற்குப் பதிலாக அந்தத் தேடல் நான் எதிர்பாராதவகையில் எனக்கு வேறு சில அனுபவங்களைக் கொடுத்தது. முதலில் நான் அந்தக் கடிதத்தை ஜெயினின் மீது எனக்கிருந்த உணர்ச்சிக்கனிவினாலேயே தேடிக் கொண்டிருப்பதாகத்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் சில நாட்கள் சென்றபிறகுதான் குறிப்பாக நான் அதை ஒவ்வொரு முறையும் ஒரு காதல் கடிதத்தைத் தொலைத்துவிட்டதைப் போன்ற பதற்றத்துடனேயே தேடத் துவங்கியிருக்கிறேனென்று அனிதா பாதிக் கேலியும் பாதி எரிச்சலுமாகச் சுட்டிக்காட்டிய ஒரு நாளில்தான் அதை தேடும்போதெல்லாம் அதை எழுதியவருடன் நெருக்கமாக

இருக்கும். அவருடன் உரையாடிக்கொண்டிருக்கும் ஒரு அந்தரங்க உணர்வை நான் அடைகிறேனென்பதையும் அந்த உணர்வு ஒரு நாட்பட்ட போதை வஸ்துவைப்போல என்னுள் ஆழ இறங்குகிறது என்பதையும் அந்த லஹரியில் திளைப்பதற்காகவே நான் முடிவிலியான அந்தச் செயலைத் திரும்பத் திரும்ப, ஒருவேளை அது என் கைகளுக்குக் கிடைத்துவிடக்கூடாதென்கிற இரகசியமான பிரார்த்தனையுடனேயே கூட, செய்துகொண்டிருக்கிறேன் என்பதையும் ஆச்சரியத்துடன் தெரிந்துகொண்டேன். மெய்யாகவே அந்த நாட்களில்தான் பனஸ்தலி வித்யாபீட அறையின் மஞ்சள் விளக்கொளி சிருஷ்டித்த நிழலினுள் என் பார்வையின் மேற்பரப்பிலிருந்தது, ஆனால் கவனிப்பின் ஆழ்களத்திலிருந்தல்ல, தப்பிவிட்டிருக்கக்கூடிய ஜெமினியினுடைய உருவ அமைப்பின் தனித்தன்மைகள் அவருடைய கடிதம் மற்றும் அவருடைய விநோத நடவடிக்கை ஆகியவற்றின் ஸ்தூல வெளிப்பாடுகளாக என் ஞாபகங்களில் படிப்படியாகத் துலங்கத் துவங்கின. அதே நாட்களில்தான் சட்டைப்பைக்குள் அடங்க மறுக்கும் வார்த்தைகளையும் கண்காட்சி சாலைகளில் தாமதிக்க முடியாமல் தப்பித்துச் செல்லும் இருப்பையும் தன் ஆளுமையாகக் கொண்டிருக்கும் ஒரு மனித உயிரியை அபத்தமான கோடுகளின் மூலமாக கச்சிதமான சித்திர வெளிப்பாடாக உருவாக்கவேண்டுமென்கிற தீர்மானமும் என் மனதில் விதையாக விழுந்து வளர்ந்துகொண்டேயிருந்தது. அறுபத்தெட்டாம் வருடத்தின் நடுப்பகுதியில் தோன்றி இரவுகளைத் தின்னும் விதமாக என்னுள் வளரத் தொடங்கிய இந்த சிந்தனைத்தான் அறுபத்தொன்பதாம் வருடம் முழுவதும் என்னுடைய பிரக்ஞைபூர்வமான, முதலாவதும் பிரபலமானதுமான, கோட்டுச் சித்திரத் தொகுப்பாக மாறி வரைபரப்புகளைத் தொடர்ந்து நிரப்பிக்கொண்டேயிருந்தது. அதே வருடத்தின் அக்டோபர் மாதத்தில் அவற்றை நான் பார்வையாளர்களுக்காகக் கண்காட்சியில் வைத்தேன். சுருக்கங்களினால் பிடிவாதத்தையும் நிழலினால் தப்பித்தலையும் சட்டையற்ற உடலினால் நினைவுகளோடான நெருக்கத்தையும் கோடுகளினால் மனித நேயத்தையும் அந்த மனித உருவம் வெளிப்படுத்திக் கொண்டிருப்பதாகக் கூறி அவர்கள் அவற்றைப் பாராட்டினார்கள். அது அவர்களுக்கு மிகவும் பரிச்சயமான உருவமாக இருந்தது என்பதைவிட அந்த உருவம் தங்களுக்கு ஏற்கனவே பரிச்சயமான ஒன்று என்று சொல்லிக்கொள்வதால் அடையக்கூடிய பெருமித உணர்வே அதற்கு ஒரு பொதுவான பெயரை வைக்க அவர்களைத் தூண்டியதாக எனக்குத் தோன்றியது. பார்வையாளர்கள் என்னை என் சிறுவயதுமுதலான ஓவியப் பிரக்ஞையாய் அலைக்கழித்துக் கொண்டேயிருந்த அந்தக் கோட்டுருவச் சித்திரங்களின் தொகுப்பை மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்றழைத்தார்கள். நான் அதை மறுக்கவில்லை.

பனஸ்தலியில் ஆதிமூலமும் நண்பர்களும் தங்கியிருந்த சரியான தேதி, மாதம், வருடம்?

பனஸ்தலியில் அவர்கள் தங்கியிருந்த இடம்? அறை? அறையெண்?

பனஸ்தலி விஜயத்திற்கு முன்னால் ஆதிமூலம் வரைந்த ஓவியங்கள்?

முதல் தனிப்பட்ட ஓவியக் கண்காட்சி நடைபெற்ற இடம்? தேதி, மாதம், வருடம்

தனபால் வீட்டிலிருந்து அடுத்து குடிபெயர்ந்த இடம்?

அதற்கடுத்த குடிபெயர்ந்த இடம்?

திருமணமான வருடம்? தேதி? மாதம்?

முதல் தனிப்பட்ட கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த சித்திரங்களின் மாதிரிகள்?

நசீம் ஹிக்மத் கவிதைகள்



ஆங்கிலம் வழி தமிழில்


இளங்கோ கிருஷ்ணன்


வாதாமரம்

என் தலை ஒரு மென்பஞ்சு மேகம், உள்ளும் புறமும் நான் கடல்
நானொரு வாதாமரம் இஸ்தான்புல்லின் குல்ஹேன் பூங்காவில் உள்ள
ஒரு வயதான, கிளைமுறிவு-அடையாளங்களும் தழும்புகளுமுள்ள வாதாமரம்
உங்களுக்கோ காவல்துறைக்கோ இது தெரியாது

குல்ஹேன் பூங்காவில் உள்ள நானொரு வாதாமரம்
என் இலைகள் மின்னுகின்றன நீரில் மீன் என
என் இலைகள் படபடக்கின்றன பட்டுக் கைக்குட்டையென
அதில் ஒன்றைக் கிள்ளி என் அன்பே உன் கண்ணீரைத் துடைத்துக்கொள்
என் இலைகள் என் கைகள், எனக்கு நூறு ஆயிரம் கைகளுண்டு
இஸ்தான்புல்லே உனை நான் தொடுகிறேன் நூறு ஆயிரம் கைகளால்
என் இலைகள் என் கண்கள் அதில் காண்பவைகளை கண்டு நான் அதிர்கிறேன்
நான் உனைக் காண்கிறேன் இஸ்தான்புல்லே ஒரு நூறு ஆயிரம் கண்களால்
என் இலைகள் துடிக்கின்றன, துடிக்கின்றன நூறு ஆயிரம் இதயங்களோடு

குல்ஹேன் பூங்காவில் உள்ள நானொரு வாதாமரம்
உங்களுக்கோ காவல்துறைக்கோ இது தெரியாது






என் கவிதை குறித்து

என்னிடம் வெள்ளிப் பூனுள்ள குதிரை கிடையாது
மூதாதையர் வழிச் செல்வம் கிடையாது வாழ
பணக்காரனோ நிலச்சுவாந்தாரரோ கிடையாது
ஒரு பானைத்தேன் மட்டுமே உண்டு
நெருப்பைப் போல் சிவந்த
ஒரு பானைத் தேன்

என் தேனே என் எல்லாமும்
நான் பாதுகாக்கிறேன்
என் செல்வத்தை, என் பெருநிலைத்தை
என் தேன் பானையை
ஒவ்வொரு நுண் பூச்சிகளிடமிருந்தும்
சகோதரா, பொறு
எப்போது என் பானையில்
தேனை நான் பெறுவேனோ
அப்போது முதல்
தேனீக்கள் வருகின்றன
திம்புக்து நகரிலிருந்து

நம்பிக்கைவாத மனிதன்

ஒரு குழந்தையாக அவன் ஈக்களின் சிறகுகளை பிய்த்தெறிந்தவன் இல்லை
பூனைகளின் வாலில் டின்களை கட்டிவிட்டதில்லை
அல்லது வண்டுகளை தீப்பெட்டிகளில் அடைத்ததில்லை
அல்லது பூச்சிகளின் மண் புற்றுகளை மிதித்தோடியதில்லை
அவன் வளர்ந்தான்
பிறகு இது அனைத்தும அவனுக்குச் செய்யப்பட்டது
அவன் இறக்கும் போது நான் அவன் முன் இருந்தேன்
எனக்கொரு கவிதையை வாசி என்றான்
சூரியனைப் பற்றியும் கடலைப் பற்றியும்
அணுசக்தி பற்றியும் செயற்கை கோள்கள் பற்றியும்
மேலும் மானுடத்தின் மகத்துவங்களைப் பற்றியும்





உலகின் மிக விநோதமான ஜந்து

நீ ஒரு தேளைப் போன்றவன், என் சகோதரனே
ஒரு தேளைப்போல் கோழைத்தனத்தில் இருளில் வாழ்பவன்
நீ ஒரு குருவியைப் போன்றவன், என் சகோதரனே
எப்போதும் ஒரு குருவியைப் போல் படபடத்து பறந்து விடுபவன்
நீ ஒரு மெளத்தைப் போன்றவன், என் சகோதரனே
மௌனத்தைப் போல் மூடுண்டவன் உள்ளுறைந்தவன்
நீ நடுங்குகிறாய், என் சகோதரனே
விரைந்து உடையும் ஒரு எரிமலையின் வாயைப் போல
ஒன்றல்ல.....
ஐந்தல்ல...
துரதிர்ஷ்டவசமாக நீ மில்லியன் கணக்கானவனாய் இருக்கிறாய்
நீ ஒரு ஆட்டைப் போன்றவன், என் சகோதரனே
இடையன் குச்சியை உயர்த்தியதும் நீ விரைந்து சென்று மந்தையுடன் இணைகிறாய்
மேலும் ஓடுகிறாய், கிட்டதட்ட பெருமிதமாகவே ஓடுகிறாய். அறுப்பு ஆலைக்கு
நீ இந்த உலகின் மிக விநோதமான ஜந்து
மீனை விடவும் விநோதமாக ஜந்து
நீருக்காக அது கடலைத் தேடுவது இல்லை
இவ்வுலகின் ஒடுக்குமுறைகள் எல்லாம்
உனக்கு நன்றி அறிவிக்கின்றன.
மேலும் நாம் பட்டினி கிடக்கிறோம், சோர்ந்திருக்கிறோம் இரத்தத்தால்
தோய்ந்திருக்கிறோம் எனில் அது உன்னுடைய தவறே
நான் இதை சொல்வதற்கு சிரமமாக உள்ளது
ஆனாலும், பெரும்பாலான தவறுகள் என் சகோதரனே, உன்னுடையதே

நான் உன்னைக் காதலிக்கிறேன்

நான் உன்னைக் காதலிக்கிறேன்
ரொட்டியை உப்பில் தொட்டு உண்பதைப் போல
நள்ளிரவில் கொதிக்கும் காய்ச்சலில் கண் விழித்தல் போல
குழாயில் வாய் பொருந்த நீர் பருகுதல் போல
அஞ்சல்காரர் தந்த கனமான தபால் ஒன்றை
அது என்னவென தெரியாமல் பிரித்தல் போல
படபடப்புடன், மகிழ்ச்சியுடன், சந்தேகத்துடன்
நான் உன்னைக் காதலிக்கிறேன்
கடல் மேல் முதல் முறை விமானத்தில் பறத்தல் போல
இஸ்தான்புல் மேல் இருள் மெல்லக் கவிகையில்
என்னுள் ஏதோ ஊர்வது போல
நான் உன்னைக் காதலிக்கிறேன்
வாழ்வதன் பொருட்டு கடவுளுக்கு நன்றி சொல்லல் போல





நான் உன்நினைவிலேயே இருக்கிறேன்

நான் உன்நினைவிலேயே இருக்கிறேன்
மேலும் என் தாயின் வாசனையை உணர்கிறேன்
என் தாய். எல்லோரை விடவும் மிக அழகிய என் தாய்

எனதுள் நிகழும் திருவிழாவின் கடை நாட்டலத்தில் நீ இருக்கிறாய்
உன் துணிகளை மடிக்கற்றைகளைக் கழுவி விடுகிறாய்
மெழுகின் விறாடகளை உணவை உன் முகம் எனக்கு வெடப்புகற்றும் இடப்புகளுடை
எனை காரணம்.
நான் ஏன் உன்னை நினைவு கொள்கிறேன், இதயத்தின் ஒரு காயம் என
ஏன் காரணம் நீ வெகு தொலைவில் இருக்கும் போதும் உன் குரலைக் கேட்கிறேன்
மேலும் என் என்னால் உற்சாகமாக இருக்க இயலவில்லை

நான் மண்டியிட்டு உன் கால்களைப் பார்க்கிறேன்
உன் கால்களை தொட விரும்புகிறேன்
ஆனால் முடியவில்லை
நீ கண்ணாடிக்குப் பின்புறம் இருக்கிறாய்
அப்போ அந்த நாடகத்தில் மங்கலான வெளிச்சத்தில்
நடித்துக் கொண்டிருக்கும் நான் ஒரு குழம்பிய பார்வையாளன்

வாழ்வு குறித்து

வாழ்வதென்பது நகைப்பிற்குரிய விஷயம் அல்ல
நீங்கள் மிகவும் தீவிரமாக வாழ வேண்டும்
உதாரணமாக ஒரு அணிலைப் போல
அதாவது, வாழ்வதற்கு மேல், அதைக் கடந்து வேறொன்றையும் தேடாமல்
அதாவது, வாழ்வது மட்டுமே உங்கள் அனைத்து கடமையாகவும் இருக்கவேண்டும்
வாழ்வதென்ப நகைப்பிற்குரிய விஷயம் அல்ல
நீங்கள் அதை தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும்
மேலும் மேலும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தீவிரமாக
உதாரணமாக உங்கள் கை பின்புறமாக கட்டப்பட்டு,
நீங்கள் சுவற்றில் கட்டப்பட்டிருப்பதைப் போல
அல்லது ஆய்வுக்கூடத்தில் உங்கள் வெள்ளை அங்கியுடனும்
பாதுகாப்பு கண்ணாடிகளுடனும் இருப்பதைப் போல
உங்களால் மக்களுக்காக சாக முடியும்
நீங்கள் ஒரு போதும் காணாதவர்கள் அவர்கள் என்ற போதும்
உங்களுக்குத் தெரியும் வாழ்வது மட்டுமே மிக உண்மையானது, மிக அழகானது
என்ற போதும்
உங்களால் மக்களுக்காக சாக முடியும் என்பதைப் போல
அதாவது நீங்கள் வாழ்வதென்பதை மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும்
அதாவது உங்கள் எழுபதாவது வயதிலும், உதாரணமாக, நீங்கள் ஒரு ஆலிவ்
மரத்தை நடலாம்
அது உங்கள் குழந்தைகளுக்காக இருந்தாலும் இல்லாவிட்டாலும்
ஆனால் நீங்கள் அஞ்சுகிறீர்கள் மரணத்திற்கு, நீங்கள் அதை நம்பாவிட்டாலும் கூட
ஏனெனில் வாழ்வதென்பது அதை விடவும் மேலானது எனவே...





நீயே என் குடிபோதை

நீயே என் குடிபோதை...
நான் குடியை விடப்போவதில்லை. அது என்னால் முடியும் என்றாலும்
எனக்கு வேறு எதுவும் வேண்டாம்
எனக்கு தலைவலிக்கிறது. என் மூட்டுகள் எங்கும் தழும்புகளாக உள்ளன
என்னை சுற்றிலும் சகதியாக உள்ளது
நான் போராடிக் கொண்டிருக்கிறேன் உன் அசிரத்தையான ஒளியை நோக்கி வர

பாபா சாகேப் படம் எடுத்தேன்
ஜாப்பர் பட்டேல்

தமிழில் **சேனானி**



டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் சினிமாவை எடுக்கும் எண்ணம் மனதில் கருக் கொண்டதே ஒரு தனி அனுபவம். ஆரம்பத்தில் வெறும் கனவாக மட்டுமே இருந்த கரு வளர்ந்து நிஜத்தில் நனவானபோது அதில் நானே வாழ்ந்திருப்பதையும் கண்டேன். இந்தியாவின் தொலைநோக்குடைய மாபெரும் தலைவர்களின் வாழ்க்கையை மறுபடியும் உண்டாக்குவது என்பது ஒருவருக்கு அமையும் வாழ்நாள் அனுபவம்தானே.



தேசியத் திரைப்படப் பிரிவிற்கென 1989ல் நான் எடுத்த ஆவணப்படத்தில்தான் இந்த பெருமரத்தின் வேர்கள் இருந்தன. இந்த ஆவணப்படத்தின் ஒரு சில பகுதிகள் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் எடுக்கப்பட்டன. அது மட்டுமல்ல டாக்டர் அம்பேத்காரை அறிந்த உண்மையாகவே அவருடன் நேரிடையாகத் தொடர்பு கொண்டிருந்த மனிதர்கள் பலருடன் கலந்து அவர்களின் அளப்பரிய பெருமைமிகு நினைவுகள் பலவற்றை நெகிழ்ச்சியுடன் பகிர்ந்ததைக் கண்டபோது நான் நினைத்தேன் இம்மாமனிதரைப் பற்றி இம்மக்களைப் பற்றி ஒரு பெரிய வாழ்க்கைச் சித்திரத்தை வெள்ளித்திரையில் தீட்டுவதைவிட உண்மையான அஞ்சலி வேறெதுவாக இருக்க முடியும் என்று

டாக்டர் அம்பேத்கரின் நூற்றாண்டுக் கொண்டாட்டங்களுக்கென ஒரு விழாக்குழு அப்போதைய மகாராஷ்டிரா முதல்வர் சரத்பவார் தலைமையில் 1991

1992ல் அமைக்கப்பட்டது. இப்பெருமாத்தின் விதையை அதில் ஊன்றியவர் திருமதி. மிருணாள் கோரே - அவர்தான் என் கனவை அக்குழுவில் எடுத்துச் சொன்னவர். என் கனவு நனவாக ரூபாய் ஒரு கோடி ஒப்பளிக்கப்பட்டது. பிரதமர் சந்திரசேகர் தலைமையிலிருந்த விழாக்குழு இந்திய அரசாங்கம் ரூபாய் ஐந்து கோடி வழங்கியது. பிறகு என் தேடல் தொடங்கியது.

டாக்டர் பி.டி. பாட்கேவின் திறன் மிகுந்த வழிகாட்டலில் மிகக் கடுமையான உழைப்பை ஐந்தாண்டுகளுக்கும் மேலாக ஆய்வுகள் மேற்கொண்டிருந்த நிலையில் ஆகச் சிறந்த மூன்று எழுத்தாளர்களின் கைவண்ணத்தால் வசனங்கள் உருப்பெற்றன - மறைந்த தயாபவார், அருண்சாது மற்றும் சூரி தாராபூர்வாலா ஆகியோர்களே அவ்வசனகர்த்தாக்கள். இந்திய அரசு அமைத்திருந்த வசனக் குழு - தகுதி வாய்ந்த பெரும் வரலாற்றாய்வாளர்களையும் முக்கியமான அம்பேத்கரியவாதிகளையும் கொண்டிருந்தது அது - அந்த வசனத்திற்கான குழு இறுதியாய் இயக்குநரான எனது படைப்புதிறனை நம்பி சுதந்திரமாய் இயங்க அங்கீகரித்தது.

கடந்த காலத்தை இங்கும் வெளிநாட்டிலும் படப்பிடிப்பிற்காக உருவாக்குவது என் முன்நின்ற ஒரு பெருத்த சவால். நியூயார்க் கொலம்பியா பல்கலைக்கழகம் லண்டன் பொருளியல் பள்ளி போன்ற டாக்டர் அம்பேத்கர் படித்த நிறுவனங்கள் முழுமனதுடன் ஒத்துழைப்பு தந்ததுடன் இலவசமாக படப்பிடிப்பு நடத்திக் கொள்ளவும் இசைந்தன. அரங்குகளில் மேற்கொண்டவை சொற்பம்தான். பழைய பம்பாயை எங்களுக்குத் தேவையான 1900 காலத்தை ஒட்டிய கட்டிடங்களையே படப்பிடிப்பு தளங்களில் நிர்மாணிக்க வேண்டியிருந்தன.

அம்பேத்கர் பாத்திரமேற்று நடிக்க மம்முட்டியைத் தேர்ந்தெடுத்தது மிகப்பொருத்தமாக அமைந்தது. நூற்றுக்கணக்கான தலித்துகள் உணர்ச்சிப் பெருக்குடன் முன்வந்து படிப்பிடிப்பில் பங்கெடுத்தனர். மேலுமவர்கள் மனமிளகி கண்கள் தளும்ப மம்முட்டியை அணுகியது அந்த தேர்ந்த நடிகனின் நடிப்பை பெரு வெற்றி பெறச் செய்துவிட்டது.

சர்வதேசதரத்தில் தொழில் நுட்பத்தில் மேம்பட்டதாய் அமைந்து உலக நாடுகளிலும் படம் திரையிடும் நிலைக்கு ஏற்ப உழைப்பை தொழில் நுட்ப உதவியாளர்கள் நல்கினர். தொழில்நுட்ப ரீதியில் வெற்றி பெறுவதற்கான சிறுசிறு தடங்கல்களை அகற்றுவதில் படபிடிப்புக் குழுவினர் தளராது பாடுபட்டனர். அவைதாம் படம் காண வந்தவர்களிடம் நிரூபணமானது. காமிராத் திறம். தனித்த தேர்ந்த இசை, சற்றும் குறையாத டோல்பி டிஜிட்டல் ஒலியமைப்பு ஆகியன சர்வதேசத்தரத்தை சாத்தியமாக்கின.



ஆங்காங்கே திரையிடப்பட்ட பிரத்யேக சிறப்புக் காட்சிகளில் பலதரப்பட்ட மக்கள் திரண்டு பெருத்த வரவேற்பைத் தந்தனர். கலை, இலக்கியம், சட்டம், அரசியல் என பல தளங்களைச் சார்ந்த வல்லுநர்களும் இவற்றுள் அடங்குவர். அவர்களின் ஏற்பு மனத்திருப்தியுடன் இருந்தது. மேலும் டாக்டர் அம்பேத்கரை அறிந்தவர்கள் கண்டு களித்த நெஞ்சைத் தொட்டதுடன் பனித்த கண்களுடன் கரம் பற்றி நெகிழ்ந்தது தவிர வெறெந்த வெளிப்பாட்டையும் காட்டவில்லை. பிரதமர் வாஜ்பாயி, எல். கே. அத்வானி, சரத்பவார் ஆகியோர் இப்படத்தைப் பார்த்து அற்புதம் என்றனர். குடியரசுக் கட்சித்தலைவர்களான மாயிசாகேப் அம்பேத்கர், பிரகாஷ் அம்பேத்கர், மறைந்த தாதா சாகேப் ரூப்வதி, திரு. ஆர்.எஸ். கவாய் ஆகியோர் படம் பார்த்துப் போற்றினர். இலக்கியவாதிகள் விஜய் தெண்டுல்கர், பிரிதீஷ் நந்தி கலைஞர்களான ஸ்ரீகரம் லாலா, சத்யதேவ் துபே, அடூர் கோபாலகிருஷ்ணன், சேகர் கபூர், மாதுரி தீட்சித், நானே ஆகியோரும் கண்டது மட்டுமின்றி இந்திய சமூக வரலாற்றின் சில அத்தியாயங்களை மீள எழுதுவதாக படத்தைக் காண்பது இருக்குமென்று பேசி ஒவ்வொரு இந்தியனும் பார்க்க வேண்டிய படம் என்றனர்.



பாராட்டுக்கள் ஒரு பக்கத்தில் மட்டுமிருந்து அல்ல பதினெட்டிலிருந்து முப்பது வரை வயதுள்ள இளைய தலைமுறையிடமிருந்து வெளிப்பட்டது. அதுவும் குறிப்பாக டாக்டர் அம்பேத்கர் பற்றி வெறுப்பும் காழ்ப்பும் கொண்டவர்களிடமிருந்து இப்படத்தைப் பார்த்த பின்னாதான் உயர் கல்வித் தகுதியும் மேதமையையும் தாண்டி அம்பேத்கர் அனுபவித்த தீண்டாமை வன்கொடுமையைப் பற்றி உணர்ந்ததாகக் கசிந்தனர். இந்திய சமூக வரலாற்றில் அம்பேத்கருக்கு உரிய இடம் தரவேண்டும் என்பதையும் தாங்கள் இதுவரை கொண்டிருந்த கருத்துக்களை மாற்றவும் மறு மதிப்பீடு செய்யவும் இப்படம் உதவியதாகக் கூறினர். மேலும் ஒரு எதிர்பாராத தரப்பிலிருந்து பெருத்த ஆரவாரம் பொங்கியெழுந்தது. அது பெண்கள் பகுதியிலிருந்து.

பெண்களின் நிலைமையை மேம்படுத்த இந்து சட்டம் பற்றி அம்பேத்கர் கொண்டு வர முயற்சித்ததை இளைப்பின்று ஆணுக்கிணையாக வாழவேண்டி தங்களுக்காக உழைத்த ஒரு மனிதனைப் பற்றி பாராட்டியது - படம் எதற்காகத்

தயாரிக்கப்பட்டதோ அறிவுக்கும் பொருத்தமாக அதே சமயம் உணர்ச்சிப் பெருக்கத்தில் அமிழவுமான சூழலை அமைத்தது. வசனம், காட்சி அமைப்புகள், அலங்கார ஜோடனைகள், இசை மிகச்சிறந்த தொழில் நுட்பம் இயல்பான நடிப்புடன் வரலாற்றை நேர்மையாக மறுபடைப்பாக்கம் செய்ததைப் பார்த்தனர்.

படம் வெளிவந்து பல லட்சம் மக்களை சென்றடைந்தது. நாடெங்கிலும் இந்தியாவின் மூலை முடுக்கெங்கிலும் என்றே சொல்லவேண்டும். ஆனாலும் பட விநியோகத்தில் சரியான விளம்பரங்களாலும் திரையிட வேண்டிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதிலும் தக்க வழிமுறை வேண்டும் என்பது தேவையாகத் தான் இருக்கிறது இன்னும்.

திருத்துவேன்

துன்மார்க்க சண்டாளன்



தன் ஆய்வேட்டின் முடிவுகளைத் திருத்த எடுத்துவரும் இளம் ஆய்வறிஞன் அம்பேத்கர் திருத்துவேன் திருத்துவேன் என்று இருபொருள்பட சொல்லலிருந்து ஒரு பெரும் மனிதனின் அயராத வேறு விழலில் வீணாகாத கல்வி போராட்டவானாக மாற்றமடைந்ததைக் காட்டுகிறது. கல்வி என்பது உலகை அறிவது மட்டுமல்ல. உலகை மாற்றுவதும் கூட. அதனால்தான் பொருளாதார சமூக சுதந்திரங்களோடு தன் சொந்தங்களின் அரசியல் சுதந்திரத்திற்காகப் காந்தி போராடிக் கொண்டிருந்த போது சமூகப் பொருளாதார சுதந்திரங்களும் வேண்டும் வெறும் எஜமான் மாற்றம் மட்டும் போதாது என்று அம்பேத்கரின் போராட்டக்களம் எவ்வளவு பெரியது என்றும் 1948ல் காந்தியின் போராட்டம் ஏறத்தாழ அவதார நோக்கம் முடிந்துவிட்டதும் 2011 லும் அம்பேத்கரின் போர் அவரின்றி இன்றும் தொடர்வதை இருவேறு அண்ணல்களைப் பாகுப்படுத்தப்பேச எளிதாக அமையும். அம்பேத்கர் ஒரு மகர் என்பதை மகாத்மா நம்ப முடியாமல் முற்போக்கான ஒரு பூனா பிராம்மணன் என்றல்லவா நினைத்தேன் என மகாதேவதேசாயிடம் முனகுவது எல்லோரைச் சுற்றியுள்ள இருள் ஒளிவட்டம் கொண்ட மனிதரையும் சுற்றியிருந்ததைக் காட்டும் அபாரம். " நரசிமேத்தா காந்திக்கென்றால் கபீர்தானே அம்பேத்காருக்கு காந்தி கடவுளுடன் போகிறார் அம்பேத்கார் கடவுள் யாரென்று கடைசி வரை சொல்லாமல் மௌனம் சாதித்த இந்தியப் அறிவுப் புரட்சியின் முதல் குழந்தை புத்தனிடம் சேர்கிறார். மகாத்மாக்கள் மனதில் என்ன இருக்கிறது என்று சாதாரணமானவர்கள் அறிய முடியுமா, என்று கேட்பதும் மகாத்மாக்கள் சாதாரண மனிதர்கள்தான் என்று பறக்கும் கால்களை பூமியில் பதியச் செய்யும்

வசனங்களாக வெடித்து வருகின்றன. அதற்காக அந்த மனிதனிடம் வெறுப்பைக் காட்டாத பண்பட்ட மனிதனால் மட்டுமே உண்ணாவிரதம் என்ற ஆயுதத்தை அடிக்கடிப் பயன்படுத்தாதீர்கள். நீங்கள் இந்த நாட்டிற்குத் தேவை என்று சொல்லும் போது எனக்கு தேசமென்று ஒன்று இல்லை என்ற மனிதனின் மனப்புண்ணிலிருந்து இரத்தம் பெருக்கும் ஆறாத ரணம் கொண்டிருப்பதை பச்சைப் புண்ணாக இன்னும் கிடப்பதைப் படம் பார்ப்பவர் அறிந்து துயரம் கொள்ள முடியும். தலித் தலைவராக மட்டுமே குறுக்கப்பட்டுவிட்ட இத்தேசத்தின் மறக்கப்பட்ட தவப்புதல்வன் பற்றி கோடு காட்டும் சித்திரமே இத்திரைப்படம்.

தான் கொண்ட பணிக்கு பதவி தடை என்றால் அதை உதறவும் எவரும் செய்ய இயலாததை தலைமேற்கொள்ளவும் தன் பணியை அறிந்து உழைப்பதும் வெறும் இலட்சியவாதம் என்று மட்டுமே ஒதுக்கிவிட முடியாது.

சில காட்சிகள் இன்னும் நேர்த்தியாகச் செய்திருந்தால் படம் கலைப்படமாகி இருக்கலாம் என்று சொல்லலாம். மரணப்படுக்கையில் பண்டரிபுரம் போக நினைக்கும் மனைவியின் ஆசையை கணக்கும் இதயத்துடன் பொறுமையாகக் கணவன் புரியும்படி விளக்குவது காவியம்தானே. மழைநாளில் மணமானதும் மழை நாட்களில் குழந்தைகள் பிறப்பதும் மழைநாளில்மரணம் வரும் வாசனையை கூறும் ரமாபாய் காட்சிகள் காவிய ரசமான சினிமாக் காட்சிகள். முழுநீள அரசியல் முக்கியத்துவமுள்ள போராட்டக் கனவை உயிராகக் கொண்டுள்ள படத்துடன் பொருந்த ஒட்டி உயர்திருப்பதுதான் வெற்றி என்று சொல்ல வேண்டும். அம்பேத்கர் இசை பயில்வதும் கபீர்தாஸ் பாடல்கள் காவியத் தன்மை காட்டுகின்றன.

வசனங்கள் உங்களை அறைந்து எழுப்பும் வலிமை கொண்டவை. அவ்வளவு கூர்மையுடன் செதுக்கப்பட்டுள்ளது. தூய தமிழ் உரையாடல் தொடக்கத்தில் தரும் நெருடல் சில காட்சிகளில் படத்துடன் ஒன்றலில்






மறைந்துவிடுகிறது. மூன்று தேசிய விருதுகள் வென்ற 1999ன் சிறந்த படம் பத்தாண்டுகளுக்குப் பின்னர்தான் பார்க்கக் கிடைப்பது எவ்வளவு பெரும் காத்திருப்பு. அரசுகள் தயாரித்த படத்திற்கே இக்கதி. வர்ணாசிரம படிநிலையை கைகளால் காட்டி தலைகீழாக வர்ணிப்பதும் காந்தி துறவி என்று யார் சொன்னது. நேரத்திற்குத் தகுந்த மாதிரி மாறும் சந்தர்ப்பவாத அரசியல்வாதி என்று சொல்லும் போதும் மாடிப்படிகள் இல்லாத பலதள கட்டிடம் பற்றிய படிமம் காந்தியை அறியாத தலைமுறை வந்துவிட்ட நாட்களில் இதுவரை அம்பேத்காரை அறியாத தலைமுறைகளும் தேட நிறையவே இருக்கிறது.

தமிழ்நாட்டில் இந்தப்படம் திரையிடப்பட ஏற்படும் தடங்கல்களை கையாலாகத்தனம் என்றே சொல்லவேண்டும். அதையே நாம் நமது தவக்குறை என்றும் குமைவோம். அரசு நடுநிலைப்பள்ளிகளில் கூட அனைவருக்கும் கல்வி இயக்கத்தால் வழங்கப்பட்டுள்ள LCD Projector களும் மடிகணிணிகளும் கிடைக்கும் நாளில் அரசு DVDயாக இலவசமாக விநியோகிக்க வேண்டும். செம்மொழிப்பாடல் குறுந்தகடு போனது போல அல்லாமல் பொக்கிஷமாய் எல்லோரும் போற்றி பத்திரப்படுத்துவிடவும் கூடும். மத சாதி அபின் மயக்கத்தில் கிடப்பவர்களைத் தட்டுங்கள். நிஜமான சமூக பொருளாதார சுதந்திரத்திற்காகப் போராடிய மனிதன் உங்கள் உணர்வில் நிற்பதைப் பாருங்கள்.

தமிழில் வசனப்படுத்தியவர்கள் ஆரத் தழுவிப் பாராட்டுவோம். ஜாப்பர், மம்முட்டி உங்களுக்கு நன்றி பாராட்டுவது எப்படி? இமையிதழ்கள் எம்மை மீறி பூசலிடும் போது.



அஞ்சலி



டாக்டர். எஃப். ஆர். அல்ச்சின் (1923-2010)

தொல்லியல் அறிஞர்

Piklihal (1960), Utnur (1963), The Birth of Indian Civilisation (1968), The Archaeology of Afghanistan (1978), The Rise of Indian Civilisation in India and Pakistan (1982), The Archaeology of Early Historic South Asia (1995) மேற்கண்டவை மிக முக்கியமான படைப்புகளாகும். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் கொண்டு வந்த தென்னிந்திய சாம்பல் மேடுகளைப் பற்றிய நூல் இன்றளவும் பேசப்படும் ஒன்றாகும். எல்லாவற்றுக்கும் மேலாக துளசிதாஸரின் கவிதாவளி என்ற கவிதை நூலை யுனெஸ்கோவிற்காக ஆங்கிலத்தில் ஆக்கிக் கொண்டு வந்த அறிஞர்.

இசைமேதை




பண்டிட்
பீம்சேன் ஜோஷி

சிறுகதையாளர்



ஆர். சூடாமணி


அஞ்சலி



பெனோத் மாண்டல் பிரோத்

கணிதவியலாளர் (1924 - 2010)

போலந்து நாட்டின் வார்சாவில் பிறந்தவர். Fractal Geometry கண்டறிந்தவர். கணிதத்தில் மட்டுமின்றி இயற்கை உட்பட எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது Fractal Geometry ஆகும். சுருக்கமாகச் சொன்னால் இயற்கையின் கைரேகையை கணிதத்தின் மூலம் கண்டுபிடித்தவர்.



கே.ஜி. கண்ணபிரான்

வழக்கறிஞர் (1930 - 2010)

மக்கள் நல்வாழ்வுக்காக சட்டத்தின் துணை கொண்டு அயராது பாடுபட்ட மனித உரிமைப் போராளி.



கலாவல்லி முதலான கதைகள் - இராகவன்
புது எழுத்து பத்தாமாண்டு கொண்டாட்ட வெளியீடு
ஈழத்து எழுத்தாளரின் முதல் சிறுகதை தொகுப்பு
விலை ரூ.100/-

சிறுபத்திரிகைகளுக்காக
தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்
வழங்கும் 2010 - 2011 ஆண்டிற்கான
முதல் பரிசினை புது எழுத்து
வென்றிருக்கிறது. பரிசுத்
தொகையிலிருந்து இனிவரும் இதழ்கள்
மொழிபெயர்ப்பு இணைப்பிதழுடன்
வெளிவரும்



மூன்றாம் உலக நாடுகளின்
ஆங்கிலப் புனைகதையாளன்



சல்மான் ருஷ்டி சிறப்பிதழ்

புது எழுத்து

2/205, அண்ணா நகர்,
காவேரிப்பட்டிணம் 635 112, கிருஷ்ணகிரி மாவட்டம்